வெளியீடு : 23-3-2007

Issued: 23-3-2007

764
03.02.07
6
3/7/07

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

புதன்கிழமை, ஆகஸ்ட் 23, 2006—தொகுதி 13—எண் 2

Wednesday, the 23rd August, 2006—Volume 13—No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

D
121, 31P06.
P66.B.2
227430

[Price Rs. 3.00

23–8–2006

**உள்ளடக்கம்**


| | |
|---|---|
| | *பக்கங்கள்* |
| **1. இரங்கற் குறிப்பு—** | |
| *முன்னாள் உறுப்பினர் மறைவு* | 369-370 |
| **2. வினாக்கள்—விடைகள் —** | |
| *உறுக்குறியிட்ட வினாக்கள்* | 370-401 |
| **3. தகவல் கோரல் —** | |
| *(அ) சேலம் மத்திய சட்டக் கல்லூரி மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது* | 401-406 |
| *(ஆ) உறுப்பினர்கள் *கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்* | 407-409 |
| **4. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்) —** | |
| *தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006* | 407,409-410 |
| **5. மானியக் கோரிக்கைகள், 2006–2007, விவாதமும் வாக்கெடுப்பும்**—*தொடர்ச்சி* | |
| *(அ) கோரிக்கை எண் 27 - தொழில் துறை*<br>*(ஆ) கோரிக்கை எண் 31 - தகவல் தொழில்நுட்பவியல் துறை* | 410-544 |
| ** மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி* | 410,430,443,451, 509-528 |

| | பக்கங்கள் |
| --- | --- |
| 5. மானியக் கோரிக்கைகள், 2006–2007, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி | |
| திரு. டி. ஜெயக்குமார் | 424-425,440, 443-451,528-529, 535,542 |
| திரு. ப. ரங்கநாதன் | 452-458 |
| * திரு. டி. சுதர்சனம் | 458-465 |
| திரு. கி. ஆறுமுகம் | 425,433,465-468, 470-475,535,539 |
| * திரு. சி. கோவிந்தசாமி | 442,476-482,543 |
| * திரு. க. குணசேகரன் | 427,482-487,536 |
| * திரு. மு. அப்பாவு | 487-494 |
| * திரு. கே. கோபிநாத் | 495-502 |
| * திரு. ஞா. செந்தமிழன் | 502-508 |
| 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 544 |


# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஆவணி 7, விய – திருவள்ளுவர் ஆண்டு 2037

## 2006 ஆகஸ்ட் 23, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில், காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"தெரிதலுந் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்ல தமைச்சு"

ஒரு செயலைத் தேர்ந்தெடுத்தலும், அதனை நிறைவேற்றிட வழிவகைகளை ஆராய்ந்து எடுப்பதும், முடிவு எதுவாயினும் அதனை உறுதிபடச் சொல்லும் ஆற்றல் படைத்திருத்தலும் அமைச்சருக்குரிய சிறப்பாகும்.

## 1. இரங்கற் குறிப்பு

### முன்னாள் உறுப்பினர் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரங்கற் குறிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினரான திரு. என். ராமசுவாமி உடையார் அவர்கள், 22-08-2006 அன்று மறைவுற்ற செய்தியினை, இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். ராமசுவாமி உடையார் அவர்கள், வாழப்பாடி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1962 முதல் 1967 வரை பாராட்டத்தக்கவகையில் பணியாற்றியுள்ளார்கள். இனிய பண்பும், எளிமையும், அடக்கமும் கொண்டு, கட்சிப் பாகுபாடின்றி அனைத்துக் கட்சியினரிடத்திலும் நட்புணர்வோடு பழகும் இனிய பண்பாளராவார். பொது வாழ்வில் அடக்கமுடன் சீரிய முறையில் பணியாற்றியது மட்டுமின்றி, தான் சார்ந்திருந்த அரசியல் இயக்கத்தில் சாதாரண தொண்டராக இருந்து, பல்வேறு பொறுப்புகள் வகித்தவர். கட்சித் தலைமையின்மீது அன்பும், நம்பிக்கையும், விசுவாசமும் கொண்டவர்.

இம்முன்னாள் உறுப்பினரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன். மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும்வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதிகாக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித் துளிகள் அமைதி காத்தனர்.)*

## 2. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 71, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ஞானதாஸ், மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

**71—**

### மின்மாற்றிகள்

***667—திரு. ஆர். ஞானதாஸ்:**

மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிவகாசி தொகுதி, துலுக்கன்குறிச்சி, பனையடிப்பட்டி போன்ற கிராமப் பகுதிகளில் பழமைவாய்ந்த மின்மாற்றிகளை மாற்றி, புதிய மின்மாற்றிகளைப் பொருத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** *பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை ஒன்றியத்தைச் சார்ந்த துலுக்கன்குறிச்சி மற்றும் பனையடிப்பட்டி கிராமத்திற்கு, வெம்பக்கோட்டை துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் விநியோகிக்கப்படுகிறது. மேலும், மேற்படி இரண்டு கிராமங்களிலும் உள்ள மின்மாற்றிகளும் நல்ல நிலைமையில் இருப்பதால், புதுப்பிக்கவோ, வேறு மின்மாற்றியை அமைக்கவோ தே[illegible]*

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227430
சென்னை-600 008



**திரு. ஆர். ஞானதாஸ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கிராமப் பகுதிகளில் மாலை 4.30 அல்லது 5.00 மணிக்கு tube light-களை, on செய்தால்தான், இரவு நேரத்திலே அவை ஒளிர்கின்றன. 5.00 மணிக்குமேலோ அல்லது 6.00 மணிக்குமேலோ, அந்த tube light-களை அந்தக் கிராமப் பகுதிகளில் போட்டால், tube light-கள் எரிவதில்லை. காரணம் கேட்டால், மின் வாரிய ஊழியர்கள், transformer-ல் பழுது உள்ளது என்று அடிக்கடி கூறுகிறார்கள். எனவே, அவற்றை மாற்றித்தர அரசு முன்வருமா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே சில இடங்களிலே transformer-களிலே குறை இருப்பதைக் கண்டுபிடித்துதான், மின் வாரியத்தால் 14,000 புதிய transformer-கள் வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு, ஏற்கெனவே 4,000 transformer-கள் பொருத்தப்பட்டிருக்கின்றன. மீதியுள்ள 10,000 transformer-களை, மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுகின்ற இடங்களில் எல்லாம் பொருத்துவதற்கு வாரியம் ஏற்பாடு செய்யும்.*

*முற்பகல் [illegible]*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசசேகரன்.*

**திரு. எஸ். இராசசேகரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் transformer-கள் அதிகமாகப் பழுதடைந்து, பழமையாக உள்ளன. இதை மாற்றித் தருவதாக அரசு அலுவலர்கள் கூறுகிறார்கள். இதுவரையில் அதற்கான ஏற்பாடுகள் எதுவும் கிடையாது. அதிக அளவில் transformer-கள் கெட்டுப் போயிருக்கின்றன. ஆகவே, அவற்றை மாற்றித்தர இயலுமா என்பதை உங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** *பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சி பொறுப்பேற்றுக்கொண்டவுடன், முதற்கட்டமாக, 4,000 transformer-களை வாங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு, அந்த 4,000 transformer-களும் மாவட்டவாரியாகப் பிரித்து அனுப்பப்பட்டு, ஆங்காங்கே பொருத்தப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்வதைப்போல, மேலும் பல இடங்களிலே புதிய transformer-கள் பொருத்த வேண்டியது அவசியமாக இருக்கிறது. அதை மனதிலே கொண்டு, tender கோரப்பட்டிருக்கிறது. Tender முடிவு செய்யப்பட்டு, transformer-கள் வந்து சேர்ந்ததும், தமிழ்நாடு முழுவதும் இப்படிப்பட்ட குறைகளே இல்லாத அளவிற்கு மின் வாரியம் நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ளும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரிப்பட்டினம் சட்டமன்றத் தொகுதியில், நெடுங்கல் கிராமத்தில் அரசு உயர்நிலைப் பள்ளி ஒன்றுள்ளது. அந்தப் பள்ளியின் மைதானத்தில் மாணவர்கள் விளையாட முடியாதவகையில் transformer ஒன்று, மத்தியில் அமைந்துள்ளது. அதனை அரசு எடுத்து மாற்றியமைக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த transformer-ஐப் பொருத்தும்போதே அந்தப் பள்ளி ஆட்சேபணை தெரிவித்திருக்குமானால், அந்த மையப் பகுதியிலே அதை நிறுவியிருக்கமாட்டார்கள். இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தைப் பரிசீலனை செய்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நேரடியாக அந்தப் பள்ளிக்கு அனுப்பி, அது மையப் பகுதியிலே இருக்குமானால் மாற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 72, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன். மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**72—**

## மின் விநியோகம்

***1678— திரு. ப. ரங்கநாதன்:**

மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, புறநகர்ப் பகுதிகளில் மின் விநியோகத்தைச் சீரமைக்கக் கூடுதலாக மின்மாற்றிகள் மற்றும் மின் கம்பங்கள் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) பெரம்பூர் மற்றும் வியாசர்பாடி பகுதிகளில் கூடுதலாக 6 மின்மாற்றிகள் அமைப்பதற்கும் மற்றும் 57 மின் கம்பங்கள்





மாற்றுவதற்கும், 16 புது மின் கம்பங்கள் அமைப்பதற்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அஜீஸ் நகர்ப் பகுதியில், குறைந்த மின்னழுத்தத்தைச் சரிசெய்வதற்காக, ஒரு 100 கே.வி.ஏ. மின்மாற்றியும், வி.ஆர்.டி. நகர்ப் பகுதியில், குறைந்த மின்னழுத்தத்தைச் சரி செய்வதற்காக, ஒரு 100 கே.வி.ஏ. மின்மாற்றியும் அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது. இப்பணிகள், செப்டம்பர் மாதம் 2006-க்குள் முடிவடையும். கே.கே. கார்டன், எம்.எம்.டி.ஏ., வி.எஸ்.மணி நகர்ப் பகுதி மற்றும் விநாயகபுரம் பகுதிகளில் குறைந்த மின்னழுத்தத்தைச் சரிசெய்வதற்காக, நான்கு 100 கே.வி.ஏ. மின்மாற்றிகள் அமைக்கும் பணி, வரும் டிசம்பர் 2006-க்குள் முடிவடைய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 20 ஆம் தேதி ஆங்கில நாளேட்டிற்குப் பேட்டி அளித்துள்ளார்கள். மின்சாரத் துறையிலே புதிய அந்நிய முதலீடுகள் வெகுவிரைவில் வர இருப்பதாகவும், தனியார்த் துறையின் மூலமாக, மின்சார உற்பத்தியைத் தொடங்கவுள்ளதாகவும், அதையொட்டி ஜெயங்கொண்டம் பகுதியில் N.L.C. மூலமாக புதிய மின்சார உற்பத்திப் பிரிவும் தொடங்கவுள்ளதாகவும் குறிப்பிட்டிருந்தார்கள். அதைக் கருத்திற்கொண்டு, சென்னை, சென்னைப் புறநகர்ப் பகுதிகளின் மையமாக இருக்கின்ற பல்வேறு இடங்களில் புதிய தொழிற்சாலைகள், I.T. Industries, Automobile Industries-கள் எல்லாம் வருகின்ற காரணத்தால், மேலே செல்லுகின்ற கம்பிமூலமாகச் செல்லுகின்ற மின்சாரம் சீராகச் சென்றடைவது சிரமமாக உள்ளது; ஆதலால், பூமிக்கடியிலே cable மூலமாக மின்சாரத்தை வழங்குகின்ற திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், அவருடைய தொகுதியைச் சேர்ந்த சில பகுதிகளிலே மின் குறைபாடுகள் இருப்பதைச் சுட்டிக்காட்டினார். அவையெல்லாம் இந்த ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள்ளாகச் சரிசெய்யப்படும் என்று நான் சொன்னேன். புதிதாக மின் உற்பத்தியாளர்கள் தமிழ்நாட்டிலே வருவதைப்பற்றி ஒரு கேள்வி கேட்டார். அது ஏற்கெனவே 20 ஆம் தேதி 'இந்து' பத்திரிகையிலே விவரமாக வந்திருக்கிறது. அதை மீண்டும் சொல்லி நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. இருந்தாலும், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், மின்சாரப் பற்றாக்குறை

இப்போது கிடையாது. ஆனால், பலர் மின் உற்பத்தி செய்வதற்காக இன்று தமிழகத்தை அணுகிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களை அனுமதித்து, tender மூலமாக விண்ணப்பங்கள் வரவழைக்கப்பட்டு, யார் குறைந்த விலையிலே மின்சாரம் தர முன்வருகிறார்களோ, அவர்களை இந்த அரசு அனுமதிக்கும். மற்றும், மேலே கம்பிகள் போவதாலே விபத்துகள் ஏற்படுகின்றன; அவை பூமிக்கு அடியிலே புதைக்கப்படுமா என்று கேட்டார்கள். ஏற்கெனவே, கடந்த வாரம் பதில் சொல்லும்போது "முதலில் மாநகராட்சிகளிலும், அடுத்து நகராட்சிகளிலும் underground cable போடுவதற்கான நடவடிக்கைகளை ஏற்கெனவே மின்சார வாரியம் மேற்கொண்டிருக்கிறது" என்று சொல்லியிருக்கிறேன். அந்த அடிப்படையிலே, அந்தப் பணிகள் இன்னும் இரண்டாண்டு காலத்திற்குள்ளாக தமிழகத்திலே எல்லா பகுதிகளிலேயும் முடிவடையும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுயநிதி மின் திட்டத்தில், இலவச மின்சாரம் பெற்ற திருச்செங்கோடு தாலுகாவிலுள்ள 11 நீரேற்றுப் பாசன விவசாயச் சங்கங்களுக்கு இலவச மின்சாரம் வழங்கியதைப்போல, கரூர் சட்டமன்றத் தொகுதியில் உயர் மின்னழுத்தத் திட்டத்தில் மின் இணைப்பு பெற்ற வெள்ளியம்பாளையம் சிறுகுறு விவசாயிகள் காவிரி நீரேற்றுப் பாசனச் சங்கம், ஓலப்பாளையம் சிறுகுறு விவசாயிகள் நீரேற்றுப் பாசனச் சங்கம், பொங்கோடை சிறு விவசாயிகள் நீரேற்றுப் பாசனச் சங்கம், வேட்டமங்கலம் சிறு விவசாயிகள் காவிரி நதி நீரேற்றுப் பாசனச் சங்கம், புகளூர் நதி நீரேற்றுப் பாசனக் கூட்டுறவுச் சங்கம், ஓரத்தை திட்டம், புஞ்சை புகளூர் திட்டம், நடையனூர் திட்டம் ஆகிய ஏழு சங்கங்கள் 1,612 விவசாயிகளைக் கொண்டு, 3,209 ஏக்கர் விவசாயம் செய்துகொண்டிருக்கின்றனர். இவர்கள் unit ஒன்றுக்கு 50 பைசா வீதம் மின் கட்டணம் செலுத்தி வருகின்றனர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** கேள்விதான் Sir, ஒவ்வொரு விவசாயியும் தலா இரண்டு ஏக்கர் மட்டுமே விவசாயம் செய்து வருகின்றனர். இந்தச் சிறுகுறு விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியம், ஏற்கெனவே கடந்த பல ஆண்டுகளாக மின்சார வசதி பெற்றுவந்த மின் இணைப்புகளுக்கு, விவசாயிகள் 16 இலட்சம் பேர்களுக்கு, இப்போது இலவச மின்சாரத்தைக் கொடுத்துக்கொண்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டதைப்போல, 2,40,000 சுய உதவி மின் திட்டத்தின்கீழ் ரூ.10,000, ரூ.25,000, ரூ.50,000 என்று கட்டி, யார் யார் மின்சாரம் பெற்றார்களோ, அந்த விவசாயிகளுக்கும் இப்போது இலவச மின்சாரத்தை வழங்கிக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவது, கூட்டுறவுச் சங்கங்கள்மூலமாக உடனே மின் இணைப்பு பெறுவதற்காக, அவர்கள் அப்படிப்பட்ட அமைப்புகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு மின் இணைப்பு கொடுப்பதற்கு ஏறக்குறைய மின்சார வாரியத்திற்கு 50,000 ரூபாயிலேயிருந்து, 1,20,000 ரூபாய்வரை செலவாகிறது. ஏற்கெனவே முதலமைச்சரே 2,40,000 சுய உதவி மின் திட்டத்தின்கீழ், மின் இணைப்பு பெற்றவர்களுக்கு இலவச மின்சாரம் அளித்ததற்குப் பிறகு, கூட்டுறவுச் சங்கங்கள்மூலமாக ஏற்கெனவே unit ஒன்றிற்கு 50 பைசா செலுத்திக்கொண்டு வருகின்ற அந்த விவசாயிகளுக்கும் நாம் இலவசமாக மின்சாரம் கொடுப்பது என்று சொன்னால், தமிழ்நாட்டிலே மிச்சம் இருக்கின்ற ஐந்து இலட்சம் விவசாயிகளும் சங்கங்கள் ஏற்படுத்திக்கொண்டு, உடனே மின் இணைப்பு பெற்றுக்கொண்டு, மின்சார வாரியத்திற்குப் பெரிதும் இழப்பு ஏற்படுத்துவார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்க முடியாத நிலையிலே அரசு இருக்கிறது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே மிக அதிகமாக, 6300 காற்றாலைகள் தமிழகத்திலே இயங்குகின்றன. அதிலும் மிக அதிகமான காற்றாலைகள் திருநெல்வேலி மாவட்டம், என்னுடைய சட்டமன்றத் தொகுதியில் ராதாபுரம், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ஆரல்வாய்மொழி, கயத்தாறு போன்ற பகுதிகளில் இயங்கிக்கொண்டிருக்கின்றன. அவ்வாறு காற்றாலைகள்மூலம் பெறுகின்ற மின்சாரத்தைக் கொண்டுசெல்வதற்கு, grid கம்பியில்லாமல் இருக்கின்ற காரணத்தினால், பல நேரங்களில் காற்று அதிகமாக இருந்தும், உற்பத்தி பாதியாக இருக்கிறது. இந்த நிலையை மாற்றிட, தற்போது கூடங்குளம் அணு மின் நிலையத்தில் புதிதாக உற்பத்தி செய்கின்ற current ஐ,

[2006 ஆகஸ்ட் 23

national grid மூலம் கொண்டுசெல்வதற்குப் பாதை அமைக்கின்ற பணி ஆரம்பமாகும் நிலையில் இருக்கிறது. ஆகவே, அவற்றோடு இந்தக் காற்றாலைகள் மூலம் உற்பத்தி செய்கின்ற மின்சாரத்தையும் அந்த national grid–ல் இணைப்பதற்கு அரசு ஏதேனும் திட்டம் வைத்துள்ளதா; அவ்வாறு செய்வதற்கு வருங்காலத்தில் முன்வருமா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.*

*முற்பகல் 9–45*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடங்குளம் அணு மின் நிலையம் அடுத்த ஆண்டுதான் மின்சார உற்பத்தி செய்ய இருக்கிறது. அதற்குத் தனியாக ஒரு grid அமைக்கப்பட்டு வருகிறது. அதுவரையிலே, காற்றாலைகள்மூலம் உற்பத்தி செய்கின்ற மின்சாரத்தை, grid-லே இணைப்பதற்குக் காத்துக்கொண்டிருப்போமேயானால், அவர்கள் உற்பத்தி செய்கின்ற மின்சாரம் வீணாகப் போய்விடும். எனவே, இப்போதே அங்கே உற்பத்தி செய்துகொண்டிருக்கின்ற காற்றாலைகள்மூலம் வருகின்ற மின்சாரத்தை, grid மூலம் இணைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 73, மாண்புமிகு உறுப்பினர், திரு ம.அ. கலீலுர் ரஹ்மான், மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

**73—**

### பின்தங்கிய பகுதி

***1007—திரு. ம.அ. கலீலுர் ரஹ்மான்:**

*மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அரவக்குறிச்சி தொகுதி மிகவும் வறட்சிப் பகுதியாக இருப்பதால், இதனைப் பின்தங்கிய பகுதியாக அறிவிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரவக்குறிச்சி தொகுதியைப் பின்தங்கிய பகுதியாக அறிவிப்பது என்பது, அரசின் கொள்கை சார்ந்த முடிவாகும்.*



2006 ஆகஸ்ட் 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், திரு ம.அ. கலீலுர் ரஹ்மான்.*

**திரு. ம.அ. கலீலுர் ரஹ்மான்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரவக்குறிச்சி தொகுதி, தமிழகத்திலேயே நிலப் பரப்பில் மிகப் பெரிய தொகுதி. அங்கு மழை மிகவும் குறைவாகப் பெய்கிறது. குறிப்பாக, கடந்த 10 ஆண்டுகளாக மழை மிக மிகக் குறைவாக பெய்துள்ளதால், விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனது தொகுதியில், எந்த ஒரு தொழிற்சாலையும் இல்லை. இருந்த ஒரு கூட்டுறவு நூற்பாலையும் மூடப்பட்டுவிட்டது. விவசாயிகள் மற்றும் ஏழையெளிய மக்களின் காவலராகத் திகழ்கின்ற நமது முத்தமிழ் அறிஞர், மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும், வெகுவிரைவிலே, அரவக்குறிச்சி தாலுகாவை, மிகவும் பின்தங்கிய தாலுகாவாக அறிவித்து, எங்கள் பகுதியை மிகவும் பின்தங்கிய வறட்சிப் பகுதியாக அறிவித்து, எங்கள் பகுதி மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கனிவோடு வேண்டுகின்றேன் என்பதைத் தங்கள்மூலமாக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரவக்குறிச்சி தொகுதிக்குட்பட்ட இரண்டு வட்டங்களிலே, அரவக்குறிச்சி வட்டம் ஒன்று; கரூர் வட்டம் ஒன்று. கரூர் வட்டத்திலே, 8 கிராமங்கள் இருக்கின்றன. கரூர் வட்டத்திலே இருக்கின்ற தொழிற்சாலைகளிலே, தொழிலாளர்கள் நிறைய பேர் வேலைகளிலே ஈடுபட்டு இருக்கின்ற காரணத்தால், அரவக்குறிச்சி பகுதியைப் பிற்படுத்தப்பட்ட தொகுதியாக அறிவிக்க முடியாது. அதேசமயத்திலே, அரவக்குறிச்சி வட்டத்தைப் பொறுத்தளவில், அங்கே மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியதைப்போல, அங்கே தொழிற்சாலைகள் இல்லை. எந்தத் தொழிற்சாலையும் இல்லாத காரணத்தால், அரவக்குறிச்சி வட்டத்திற்கு வேண்டுமானால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்தால், நிச்சயமாகப் பரிசீலிப்பார்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம்.*

**திரு. வை. சிவபுண்ணியம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் வறட்சிப் பகுதியாக அறிவித்துப் பல்வேறு*

[2006 ஆகஸ்ட் 23

சலுகைகள் வழங்கப்படுவது வழக்கமான ஒன்று. குறிப்பாக, காவிரி டெல்டா பகுதியாக இருக்கின்ற தஞ்சாவூர், திருவாரூர், நாகை மாவட்டங்கள் மிகப் பெரிய வறட்சிக்கு இலக்காகி பாதிக்கப்பட்டன. அதற்கான வகையிலே, நம்முடைய அரசும் நில வரி தள்ளுபடி செய்து, விவசாயிகளுக்குப் பல்வேறு சலுகைகள் வழங்கி, கடன் சலுகைகளையும் செய்து, மகத்தான சாதனை படைத்திருக்கிறது. அப்படிச் சாதனை படைத்திருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்--வறட்சியால் பாதிக்கப்பட்டு, குத்தகை செலுத்த இயலாத நிலையிலே விவசாயிகள் இந்த ஆண்டுகளிலே இருக்கிறார்கள்; இது தனியார் நிலங்களிலேயும் இருக்கிறது; கோயில் மடத்து நிலங்களிலேயும் இருக்கிறது; அதனால் நில வெளியேற்றம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது--அந்த நில வெளியேற்றத்தைத் தடுப்பதற்கான முயற்சியையும், வறட்சிக் காலங்களிலுள்ள குத்தகையைத் தள்ளுபடி செய்வதற்கான முயற்சியையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டு, அந்த விவசாயிகளைப் பாதுகாப்பதற்கான முயற்சியை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குத்தகைப் பாக்கி சம்பந்தமாக, வெள்ளம், வறட்சி ஏற்பட்ட காலங்களிலே சலுகை வழங்க வேண்டுமென்று கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை குறித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே கலந்தாலோசித்து தக்க நடவடிக்கையை அரசு எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 71, மாண்புமிகு உறுப்பினர், திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**74—**

## கோட்டாட்சியர் அலுவலகம்

***2028—திரு. ப. டில்லி பாபு:**

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், அரூர், பாப்பிரெட்டிபட்டி வட்டங்களை உள்ளடக்கி, அரூரில் கோட்டாட்சியர் அலுவலகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



2006 ஆகஸ்ட் 23]

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டில்லி பாபு.

(முற்பகல் 9-50

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றுபட்ட மாவட்டமான தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி, தருமபுரி என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டு, நான்கு ஆண்டுக் காலம் முடிந்தது. ஐந்து வட்டங்கள் உள்ளடக்கிய தருமபுரியில், ஒரே ஒரு வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகம் மட்டுமே உள்ளது. ஏறக்குறைய, 14 இலட்சம் மக்கள் தொகை கொண்ட அந்த மாவட்டத்திற்கு, ஒரேயொரு வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகம்தான் உள்ளது. அங்கு ஃபைல்கள் என்பது, ஓராண்டுக் காலம், இரண்டாண்டுக் காலம் ஆன மனுக்கள்கூட, இன்றைக்கும் அப்படியே தேங்கியுள்ளன. தமிழக அரசு, ஒரு கோட்டத்தை, உட்கோட்டத்தை உருவாக்க வேண்டுமென்று சொன்னால், அது விதித்திருகக்கூடிய பல்வேறுபட்ட அம்சங்களில், நான் குறிப்பிட்டுள்ள இடம் அதற்கு ஏதுவாக இருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

ஏறக்குறைய, 2,500-க்கும் மேற்பட்ட சதுர கிலோ மீட்டர் பகுதிகளை உள்ளடக்கியுள்ளது அந்தப் பகுதி. அதேபோல, இரண்டு தாலுகாக்கள் இருக்க வேண்டும்; அரூர், பாப்பிரெட்டிப்பட்டி என இரண்டு தாலுகாக்கள் உள்ளன. 5 இலட்சத்து 20 ஆயிரம் மக்கள் தொகை உள்ளது. 50 கிலோ மீட்டர் தூரம், 100 கிலோ மீட்டர் தூரம் சென்று, ஏறக்குறைய 7, 8 மணி நேரம் பயணம் செய்தால்தான், வருவாய்க் கோட்டாட்சியரைச் சந்திக்க வேண்டும் என்ற நிலைமையில், கடந்த 10, 20 ஆண்டுக் காலமாக, அந்த மக்கள் படாதபாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவேதான், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும், அரூர், பாப்பிரெட்டிப்பட்டி ஆகிய இரண்டு வட்டங்களை மையப்படுத்தி, அரூரிலே கோட்டாட்சியர் அலுவலகம் அமைப்பதற்கு முன்வர வேண்டும். மாவட்ட நிர்வாகத்தால்கூட முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு, இடத்தைக்கூட பார்ப்பதற்காகச் சில ஆலோசனைகள், அந்தச் சம்பந்தப்பட்ட துறையிலே நடந்து கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன். இருப்பினும், இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே அதற்கான வாய்ப்புக் கிடைக்குமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அரூர் மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி வட்டங்களை இணைத்து, அரூரில் கோட்டம் அமைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்து, நீண்டநாட்களாக அது அரசினுடைய பரிசீலனையில் இருப்பதாகத் தெரிவித்தார்கள். 2003 ஆம் ஆண்டு ஜூன் மாதம், அரூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு கோட்டம் அமைக்க வேண்டுமென்று, மாவட்ட ஆட்சித் தலைவருடைய பரிந்துரை அரசுக்கு வந்திருக்கிறது. அதேநேரத்திலே, 2004 ஆம் ஆண்டு, நம்முடைய மத்தியத் தேர்தல் கமிஷனுடைய எல்லை வரையறை ஆணையம் விதித்திருக்கிற தடை இருக்கின்ற காரணத்தால்தான், அது தற்சமயம் நிலுவையிலே இருக்கின்றது. வருகின்ற காலத்திலே, அதுபற்றி அரசு கண்டிப்பாகப் பரிசீலித்து ஆவன செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. சுப்ரமணியன்.

**திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது குளத்தூர் தொகுதியில், இலுப்பூரில் செயல்பட்டுவரும் வருவாய் வட்டாட்சியர் அலுவலகம் இருக்கும் இடத்தில், சார்பதிவாளர் அலுவலகம் இல்லை. 30 கிலோ மீட்டர் தூரம் தள்ளியுள்ள கீரனூரில் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்திற்குச் சென்றுவருவதற்கு, பொதுமக்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும் மிகுந்த சிரமமாக உள்ளது. எனவே, வருவாய் வட்டாட்சியர் அலுவலகம் செயல்பட்டுவரும் இலுப்பூரிலேயே, புதிதாகச் சார்பதிவாளர் அலுவலகம் அமைத்திட அரசிடம் நடவடிக்கை உள்ளதா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பதிவுத் துறை அமைச்சருக்குத் தனி வினா எழுப்பவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் தொகுதியிலுள்ள திருப்போரூரை மையமாகக் கொண்டு, வட்டாட்சியர் அலுவலகம் அமைக்கப்படுமா? காரணம், இந்தத் தொகுதியில் செங்கல்பட்டில் மட்டும்தான் வட்டாட்சியர் அலுவலகம் உள்ளது. திருப்போரூர் தொகுதியிலுள்ளவர்கள், 40 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள செங்கல்பட்டிற்குச் செல்ல





வேண்டியுள்ளது. இதனால் பொதுமக்களுக்கு நேரமும், பணமும் விரயமாகிறது. எனவே, ஒரு இலட்சத்திற்கும் மேலான மக்கள் வசிக்கிற இடத்தில், திருப்போரூரை மையமாகக் கொண்டு, வட்டாட்சியர் அலுவலகம் அமைக்கப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியபடி, எல்லை வரையறை ஆணையத்தினுடைய தடை நீக்கப்பட்டவுடனே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை எல்லாம் அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 75. மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. பலராமன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**75—**

## குளம் சீரமைத்தல்

***434—திரு. பி. பலராமன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி, பொன்னேரி பேரூராட்சியிலுள்ள அருள்மிகு ஹரிகிருஷ்ண பெருமாள் திருக்கோயில் குளத்தைச் சீரமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி சிறப்பு ஊராட்சித் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ், மதிப்பீட்டுத் தொகை ரூ.2.5.50 இலட்சத்தில் அருள்மிகு ஹரிகிருஷ்ண பெருமாள் திருக்கோயில் குளத்தினைச் சீரமைக்க, மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது. அனுமதி கிடைத்தவுடன், குளத்தினைச் சீரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 9-55

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மழைக்காலம் நெருங்குகிறது. கடந்த காலத்தில் புரட்சித் தலைவி

அம்மா அவர்கள் கொண்டுவந்த மழைநீர் சேகரிப்புத் திட்டத்தால் பல திருக்கோயில்களின் திருக்குளங்கள் நிரம்பி வழிந்தன. அந்த நடைமுறைகளை நீங்களும் பின்பற்றி, திருக்கோயில்களின் திருக்குளங்களுக்கு மழைநீர் கொண்டு வர, மழைநீர் சேகரிப்புத் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்துவீர்களா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அவர்களுடைய அம்மா ஆட்சிக் காலத்திலேதான் அதற்கான பணி துவங்கப்பட்டது. அதுவும் பொன்னேரி சிறப்பு ஊராட்சிமூலமாக, பொதுமக்கள் 25 சதவீதப் பங்களிப்புடன் தன்னிறைவுத் திட்டத்தில், இப்பணி தொடங்க முடிவு செய்யப்பட்டது. ஆனால், பொதுமக்கள் அந்த 25 சதவீதப் பங்கினை இன்னும் செலுத்தாத காரணத்தால், இத்திட்டம் இன்னும் நிலுவையில் இருக்கிறது; விரைவுபடுத்தப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதி, சென்னிமலை முருகன் கோவிலில் வேங்கைமரத் தேர் நிகழ்ச்சி, வாரத்தில் ஒரு முறை ஏழு மணிக்கு இயக்கப்படுகிறது. இரவு ஏழு மணிக்குப் பிறகு, இரவுக் கால பூஜை, எட்டு மணிக்கு இருக்கிறது. அந்தத் தேர் இயக்கப்படுகிற நேரம் ஐந்து நிமிடங்கள். ஐந்து நிமிடங்கள் முடிந்தபிறகு, ஒரு மணி நேரம் பக்தர்கள் பூஜைக்காகக் காத்திருக்க வேண்டியிருக்கிறது. எனவே, 7.30 மணிக்கு மாற்றியமைக்க வேண்டுமென்கிற கோரிக்கையை அமைச்சரிடத்திலும் கொடுத்திருந்தோம். அதுகுறித்து அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் எஸ். சேகர், குளத்தைப் பராமரிப்பது சம்பந்தமாகத்தான் மூலக் கேள்வி,

**திரு. விடியல் எஸ். சேகர்:** இந்து சமய அறநிலையத் துறை என்கின்ற காரணத்தினாலேயே, கோயில் சம்பந்தமான கோரிக்கை வந்த காரணத்தினாலே...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் சேகர் அவர்கள், ஏற்கெனவே கடந்த வாரத்தில் இதைக் கோரிக்கைமூலமாகவும் கொடுத்திருக்கிறார்கள்; பரிசீலிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது; வெகுவிரைவில் வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறநிலையத் துறையின் சார்பாகக் கொண்டுவரப்பட்ட சட்டமுன்வடிவை நிறைவேற்றுகின்றபோது, அனைவரும் அர்ச்சகராகலாம் என்ற ஒரு ஷரத்து, சட்டமுன்வடிவிலேயிருந்து நீக்கப்பட்டதாகவும், அதனால் அந்தச் சட்டத்திற்கே முடக்கம் ஏற்பட்டதாகவும், சில பத்திரிகைகளிலே செய்தி வந்திருக்கிறது. அதைப்பற்றிய ஒரு impression—கருத்துகூட—மக்களிடையே அந்தச் சட்டம் நிறைவேற்றப்படுமா என்ற ஐயப்பாடு எழுந்துள்ளது. இதுகுறித்து அறநிலையத் துறை அமைச்சர் விளக்குவாரா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஏற்கெனவே அவையில் வைக்கப்பட்ட நிகழ்வு. அதுபற்றி விவரங்கள் வேண்டுமானால், உறுப்பினர் தனிக் கேள்வி எழுப்பினால், முறையாக பதில் அளிக்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 76, மாண்புமிகு உறுப்பினர் திரு. து. அமரமூர்த்தி, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**76—**

### நூலகம்

***1529—திரு. து. அமரமூர்த்தி:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) அரியலூர் தொகுதி, திருமானூர் ஒன்றியம், ஏலாக்குறிச்சியில் நூலகம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) அரியலூர் தொகுதி, திருமானூர் ஒன்றியம், ஏலாக்குறிச்சியில் நூலகம் அமைத்திட விண்ணப்பம் பெறப்பட்டு, கீழ்க்கண்ட நிபந்தனைகளை அவ்வூர் மக்கள் நிறைவேற்றித்தரும்பட்சத்தில், பகுதிநேர நூலகம் திறக்க இயலும்:

1. நூலகம் செயல்பட, வாடகையில்லா இலவசக் கட்டடம், நூலக ஆணைக் குழுவிற்கு வழங்கப்பட வேண்டும்.

2. தலா ரூ.1000/- வீதம் நன்கொடையாகச் செலுத்தி, 2 பேர் புரவலர்களாகச் சேர வேண்டும்.

3. நூலக உறுப்பினர், காப்புத் தொகை ரூபாய் 15-ம், ஆண்டுச் சந்தா ரூபாய் 5-மாக மொத்தம் ரூபாய் 20/- செலுத்தி, 200 பேர் நூலக உறுப்பினர்களாகச் சேர வேண்டும்.

4. ரூபாய் 2000/- மதிப்புள்ள தளவாடங்கள் இலவசமாக வழங்க வேண்டும்.

**திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஏலாக்குறிச்சி, வீரமாமுனிவர் அவர்கள் தமிழுக்குத் தொண்டாற்றிய இடம். வீரமாமுனிவர் அவர்கள் அங்கேதான் தேம்பாவணி, கலம்பகம் போன்ற நூல்களை இயற்றி, தமிழுக்கு அரிய பெரிய தொண்டுகளைச் செய்த இடம். ஆகவே, இந்த நிபந்தனைகளைத் தளர்த்தி, அங்கே நூலகம் அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடத்திற்கு இருக்கக்கூடிய தனிச் சிறப்பைப்பற்றி, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதை அரசு கருத்திலே கொண்டிருக்கிறது. நூலகம் இயங்க வேண்டுமென்று சொன்னால், அங்கு கட்டடம் ஒன்று அவசியமாகத் தேவை. எனவே, அதில் இருக்கக்கூடிய அந்த நிபந்தனைகளை நீங்கள் நிறைவேற்றித் தரக்கூடியபட்சத்திலே, இந்த ஆண்டு ஊர்ப்புற நூலகங்களைத் திறப்பதற்கு அரசு உத்தேசித்திருக்கக்கூடிய இடங்களில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைக்கு முன்னுரிமை அளித்து அரசு நிறைவேற்றித் தரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார்.

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கின்ற கிளை நூலகங்களிலே, சுமார் 100 ரூபாய்க்கு அதிகமான விலையுள்ள புத்தகங்களை, 'Reference புத்தகங்கள்' என்று பட்டியலிட்டு, அவற்றை எடுத்துச் சென்று படிப்பதற்கு அனுமதிக்காத நிலை இருக்கிறது. இன்றைக்கு 100 பக்க அளவிலான புத்தகம்கூட, 100 ரூபாய் விலை என்று வந்துவிட்ட காரணத்தினாலே, அதைத் தளர்த்தி, அந்தப் புத்தகங்களின் விலை, அங்கே ஒரு தடையாக இருந்தால், அந்த விலையை உயர்த்தி, சாதாரண புத்தகத்தைக்கூட எடுத்துச் சென்று படிப்பதற்கு வழிவகை செய்யப்படுமா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த Reference books-ஐப் பொறுத்தமட்டிலே, விலை என்பதைவிட, அதிலே இருக்கக்கூடிய விஷயங்கள், அந்தப் புத்தகத்தினுடைய பழமையான தன்மை, அந்தப் புத்தகம் இப்போது print-ல் இருக்கிறதா என்று, பல்வேறு நிலைமைகளை நாம் கருத்திலே கொள்ளவேண்டியிருக்கிறது. எனவே, விலையைப் பொறுத்தமட்டிலே, அதை ஒரு பெரிய விஷயமாக எடுத்துக்கொள்ளாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறைய தொழிற்சாலைகள் பெருகி வருகின்ற தமிழகத்தில், இந்த நூலகங்களுக்குக் கல்லிலான கட்டடங்களைக் கட்டுவதற்கு, தொழிற்சாலைகளிலே நலத் திட்டங்களுக்கென்று தொகைகளெல்லாம் இருக்கின்றபோது, அதை அரசு பயன்படுத்துவதற்கு, அவர்களைக் கேட்டுப் பெறுவதற்கு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

[2006 ஆகஸ்ட் 23

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதே அந்தத் திட்டம் நடைமுறையில் இருக்கிறது. ஒரு மாவட்ட மைய நூலகக் கட்டடத்திற்கு 5 இலட்சம் ரூபாய், நூலக ஆணைக் குழுவிற்கு அளிப்பார்களென்று சொன்னால் அல்லது அதற்கு ஈடான ஒரு காலி மனையை அளிப்பார்களென்று சொன்னால், அங்கே கட்டப்படக்கூடிய அந்தக் கட்டடத்திற்கு அவர்கள் பெயரை வைக்கலாம். அதைப்போல, கிளை நூலகங்களைப் பொறுத்தமட்டிலே, ஒரு இலட்சம் ரூபாய் அளிப்பார்களென்று சொன்னால், அவர்கள் பெயரை வைக்கலாம். அந்த அடிப்படையிலே தொழிற்சாலைகளை நடத்துபவர்கள் மாத்திரமல்ல, நூலக விஷயங்களிலே ஆர்வம் இருக்கக்கூடியவர்கள், செல்வந்தர்கள், இதிலே ஆர்வம் இருக்கக்கூடிய யாராக இருந்தாலும், அவற்றில் ஈடுபடுவதை அரசு வரவேற்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன்.

**திரு. அ. ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நகர்மன்ற உறுப்பினராக இருந்த காலகட்டத்தில், நாகர்கோவில் நகராட்சிப் பூங்காவின் உட்பகுதியில், அஞ்சுகம் அம்மையார் பெயரில், ஏராளமான நூல்களுடன் இருந்த நூலகம், கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு தீப்பிடித்து எரிந்துவிட்டது. இப்பொழுது மூடிக்கிடக்கும் அந்த நூலகத்தை, மீண்டும் புதுப்பொலிவுடன் திறந்திட, அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விஷயத்தை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்த மாண்புமிகு உறுப்பினருக்கு நன்றி. நிச்சயமாகப் புதுப்பொலிவுடன் அந்த நூலகம் செயல்படுவதற்கு, அரசு அதற்கான முயற்சிகளை உடனடியாக மேற்கொள்ளும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமத்திலே படித்துவிட்டு, வேலையில்லாத இளைஞர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். ஏற்கெனவே தலைவர் ஆட்சியிலே திறக்கப்பட்ட திருவள்ளுவர் நூலகங்களெல்லாம் மூடப்பட்டிருக்கின்றன. ஆகவே, அந்த நூலகங்களை நூலகத் துறையின்மூலம் ஏற்று, ஒவ்வொரு கிராமத்திலேயும், படித்து வேலையில்லாத இளைஞர்களுக்கு, படிக்கின்ற வாய்ப்பினை வழங்குகின்றவகையில், அந்த நூலகங்களை இயக்க நூலகத் துறை முன்வருமா என அறிய விரும்புகிறேன்.



2006 ஆகஸ்ட் 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 77, (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**77—**

## மலைக் குடியிருப்புப் பகுதி

***359—திரு. கோவை தங்கம்:**

*மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வால்பாறை குடியிருப்புப் பகுதிகளுக்கு யானைகள் வராமல் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) வால்பாறை குடியிருப்புப் பகுதிகளுக்கு யானைகள் வராமல் தடுக்க, யானைகள் விரும்பி உண்ணும் வாழை, சோளம், கரும்பு போன்ற பயிர்களைக் குடியிருப்புப் பகுதிகளுக்கு அருகில் பயிரிடாமல் இருக்க, துறையால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், துறையிடம் உள்ள கும்கி போன்ற யானைகளைக் கொண்டும், பட்டாசு சுடர் வெடித்தும் யானைகள் விரட்டியடிக்கப்படுகின்றன. இரவு நேரங்களில் துறையால் ரோந்துப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், யானைகள், குடியிருப்புப் பகுதிகளுக்கு வராமல் தடுக்க, 137.5 கிலோ மீட்டர் தூரத்திற்கு ரூ.220 இலட்சத்தில் சூரிய மின் வேலி அமைத்திட, மாநில அரசுத் திட்டத்தில், 2006-2007 ஆம் நிதியாண்டில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. வால்பாறை பகுதியின் குடியிருப்புப் பகுதிகளுக்கு யானைகள் வராமல் தடுக்க சூரிய மின் வேலி அமைக்க விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

*முற்பகல் 10-05*

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஜூன் மாதம் 5 ஆம் தேதி முதல் இப்போதுவரை, வில்லோனி,

ஹை ஃபாரஸ்ட், தோணிமுடி, அப்பர் பார்லி, அய்யர்பாடி, இப்படிப்பட்ட பகுதிகளில் யானைகள் தொடர்ந்து, சத்துணவுக் கூடங்களையும், பள்ளிக்கூடங்களையும் இடித்துவிட்டன. இன்று காலைகூட, புதுத்தோட்டம் பகுதியில், ஏழு யானைகள் குடியிருப்புப் பகுதியிலே இருக்கின்றன. தொடர்ந்து யானைகள் இதுமாதிரி குடியிருப்புப் பகுதியில் வந்து, மக்களைப் பீதியடையச் செய்கின்ற நிலை ஏற்பட்டிருப்பதாலும், பள்ளிக்கூடங்கள், சத்துணவுக் கூடங்களைத் தொடர்ந்து இடித்து வருவதாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், உடனடியாக இதில் தலையிட்டு, யானைகள், குடியிருப்புப் பகுதிக்கு வராமல் தடுப்பதற்கு, நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே என்னுடைய விடையில், இதுபோன்ற நிகழ்வுகள் நடக்காமல் இருப்பதற்குச் சூரிய மின் வேலி அமைக்கப்படும் என்று சொல்லியிருக்கிறேன். இந்த ஆண்டு 137.5 கிலோ மீட்டர் தூரத்திற்கு அமைக்கப்படும் என்பதிலே, கோவை மாவட்டத்திற்கு மட்டும் 30 கிலோ மீட்டர் என்று ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதைப்போல 12–வது நிதிக் குழுவிலே, 100 கிலோ மீட்டர் தூரம் அமைப்பதற்கு 1,64,00,000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதில் ஒரு 10 கிலோ மீட்டர் தூரமும் கோவை மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 'யானைகள் பாதுகாப்பு நிதி' என்று மத்திய அரசாலே 13.2 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அதில், ஒரு 8 கிலோ மீட்டர் கோவை மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே, 48 கிலோ மீட்டர் தொலைவு மின் வேலி அமைக்கின்ற திட்டத்தில், அந்தப் பகுதிகளுக்கு மின் வேலி அமைக்கப்படும் என்று சொல்லி, இதைப்போல மதம் பிடித்த யானைகளையெல்லாம் அடக்குவதற்கு, இந்த அரசு முன்வரும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன். (குறுக்கீடு) உட்காருங்கள் திரு. இராமகிருஷ்ணன், (குறுக்கீடு) என்ன? சொல்லுங்கள், சொல்லுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கமான பதிலுக்கு நன்றி. ஆனால், மின் வேலி மட்டும் அமைத்தால் போதாது. அகழிகள் ஏற்படுத்தவேண்டும். அதேசமயத்தில், யானைகள் ஒரே பாதையில்தான் வரும், ஒரே பாதையில்தான் திரும்பிச் செல்லும். அந்த வழித்தடங்களை அழிக்கவேண்டும். அப்பொழுதுதான், யானைகள் அந்த





வழித்தடங்களிலிருந்து, வேறு வழித்தடங்களில் செல்வதற்கு வாய்ப்பிருக்கிறது. ஆகவே, யானைகள் வருகின்ற வழியில், அந்த வழித் தடங்களை மறைத்து செடிகளை, பயிர்களைப் பயிரிட்டால்தான், வேறு வழியிலே செல்வதற்கு வாய்ப்பிருக்கிறது. மேலும், வால்பாறையிலே இருக்கின்ற தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள், யானைகளால் இறக்கின்ற நேரத்திலே, அவர்களுக்கு உரிய பாதுகாப்பிற்காக, Group Insurance திட்டம்—அவர்களுடைய உயிருக்கும், உடைமைக்கும் Group Insurance திட்டம்— ஏற்படுத்துவதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்பதைக் கேட்டுக்கொள்வதோடு, மேலும் மாநில அரசு 25 ஆயிரமும், மத்திய அரசு 75 ஆயிரமும், ஆக ஒரு இலட்சம் ரூபாய் வழங்குகிறார்கள். ஆனால், தேயிலைத் தோட்ட நிர்வாகம், அந்தத் தொழிலாளர்களுக்கு எந்தவிதமான உதவியும் செய்வதில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தேயிலைத் தோட்ட நிர்வாகத்தோடும் தொடர்புகொண்டு, அவர்களும் ஒரு உதவித் தொகை வழங்குவதோடு, இந்த ஒரு இலட்சம் ரூபாய் நிதி என்பதை உயர்த்தி, மத்திய, மாநில அரசுகள் இரண்டு இலட்சம் ரூபாய் வழங்க முன்வருமா என்பதைத் தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கையிலே, நான் அதற்கு எல்லாம் விளக்கமான பதில் சொல்லியுள்ளேன். நாட்டிலுள்ள யானைகளை எல்லாம் எடுத்துச்சென்று, அதற்கு ஓய்வு என்ற பெயராலே பல துன்பங்களை அந்த யானைகள் அன்று அனுபவித்தன. இன்று, மாண்புமிகு நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள், இதுபோன்ற பிரச்சினைகள் இருக்கின்றன என்ற காரணத்தாலேதான், 200 ஆண்டுகள்வரை, யாருக்குமே இல்லாத—இந்த வனத் துறை ஆரம்பித்து, 200 ஆண்டுகள் ஆகியும், யாருக்குமே இல்லாத சிந்தனையாக, தலைவர் கலைஞர் அவர்கள், இதுபோன்ற பாதைகள், காலப்போக்கிலே பயிரிடப்பட்டுவிட்டன என்பதை உணர்ந்து—யானைகள் ஒரு வழியிலேயேதான் செல்லும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள்—அந்தப் பாதைகளிலும் பயிரிட்ட காரணத்தால், அவை தடைப்பட்ட காரணத்தால், சிதறி ஓடுகின்ற நேரத்தில், இதுபோன்ற நிகழ்வுகள் வருகின்றன என்ற காரணத்தாலேதான், மேற்குத் தொடர்ச்சி மலையிலும், கிழக்குத் தொடர்ச்சி மலையிலும், நீலகிரி பகுதியிலே, ஜக்கனாரி பகுதிகளிலும், கல்லாறு பகுதிகளிலும் 393 ஏக்கர்களை 2,68,00,000 ரூபாயிலே, அவற்றையெல்லாம் அரசுடைமையாகக் கையகப்படுத்துவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிதி ஒதுக்கித் தந்திருக்கிறார்கள்.

எனவே, அதையே விரிவுபடுத்தி, உங்கள் பகுதியிலும் அதுபோன்ற பிரச்சினைகள் இருந்தால், அந்த நிலங்களைக் கையகப்படுத்தும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன். ஏற்கெனவே, இதைப்போன்ற நிகழ்வுகள் ஏற்படுகின்றவர்களுக்கு, பாதிக்கப்படுபவர்களுக்கு 25 ஆயிரம் ரூபாய் மாநில அரசின் நிதியாகவும், 75 ஆயிரம் ரூபாய் மத்திய அரசினுடைய நிதியாகவும் பெற்றுக்கொண்டிருந்ததை, இப்பொழுது உடனடியாக அவர்களுக்கு நிவாரணம் கிடைக்கவேண்டும் என்பதற்காகத்தான், மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஒரு இலட்சம் ரூபாயைத் தமிழ்நாடு அரசின் சார்பாக வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். இன்னொன்றையும் சொல்லியிருக்கிறார்கள், இதுவரை பயிர்ச் சேதங்களுக்கு, அவர்களுக்கெல்லாம் இழப்பீட்டுத் தொகை வழங்கப்படுவதில்லை என்று. அதுவும் சில இடங்களிலே யானைகளால் ஏற்படும் சேதங்களுக்கு மட்டும்தான் பயிர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டது. அதை மாற்றி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், விலங்குகளாலே, யானைகள் மற்றும் காட்டு மாடுகள், பன்றிகளாலே ஏற்படுகின்ற அந்த இழப்புகளுக்கும் இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். எனவே, உறுப்பினருடைய அத்தனை கோரிக்கைகளையும் இந்த அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோம்பை, புதுப்பட்டி பகுதிகளில், மக்னா என்ற யானை, விவசாயிகளுடைய பயிர்களை, தென்னை, வாழை, நிலக்கடலை போன்றவற்றைப் பெரும் நாசத்திற்கு ஆளாக்கியிருக்கிறது. அந்த யானை மூர்க்கத்தனமாக, மனிதர்களைக் கொல்லக்கூடிய ஒரு குணம் கொண்டது. இதுவரைக்கும் கோம்பையில் மூன்று பேரையும், புதுப்பட்டியில் 7 பேரையும் கொன்றிருக்கிறது. அந்த யானை, கொன்றுவிடும் என்ற அச்சத்தின் காரணமாக, தொழிலாளர்கள் வேலை செய்வதற்கு அஞ்சுகின்றார்கள். விவசாயிகள் அச்சத்தோடு இருக்கிறார்கள். ஆகவே, தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் பீதியையும், அச்சத்தையும் நீக்குகின்றவகையில், அந்த யானையை விரட்டுவதற்கு ஏதேனும் நடவடிக்கையை அரசு எடுத்திருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்கி போன்ற யானைகளை வைத்து அந்த யானைகளை விரட்டியடிப்பதற்கும், அதைப்போல பட்டாசு சரம் வெடித்து அவற்றை அகற்றுவதற்கும், விரட்டுவதற்கும், நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த அரசைப் பொறுத்தவரையில், நாட்டிலுள்ள மதம்பிடித்த யானைகளையும், காட்டிலுள்ள யானைகளையும் அடக்குவதற்கு எல்லாத் திட்டங்களும் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உதயசூரியன். (குறுக்கீடுகள்) யானையைத்தானே சொல்கிறார்! உங்களுக்கு என்ன?

**திரு. தா. உதயசூரியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயில் யானைகளுக்கு புத்துணர்வு ஊட்டக்கூடிய திட்டம், அரசின் செயற்குறிப்பில் உள்ளதா? அதையொட்டி நம்முடைய மாநிலத்தில் எத்தனை யானைகள் இருக்கின்றன என்ற எண்ணிக்கை அரசிடம் உள்ளதா? அவற்றில் மதம் பிடித்த யானைகள் எவ்வளவு? பயிர்களை நாசப்படுத்துகின்ற யானைகள் எவ்வளவு என்ற எண்ணிக்கையை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) அமைச்சர் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயில் யானைகளுக்குப் புத்துணர்வு ஊட்டும் திட்டம், அரசின் பரிசீலனையில் இல்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி. (குறுக்கீடுகள்) உட்காருங்கள், என்ன? (குறுக்கீடுகள்) கேள்வி பதில் நேரத்தில் என்ன இருக்கிறது உங்களுக்கு? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். Question hour ல் ஒன்றும் கிடையாது. மாண்புமிகு உறுப்பினர் திரு செ.ம. வேலுசாமி. (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள்.

***திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாட்டினுடைய, (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)

**திரு. சி.வி. சண்முகம்:** தலைவர் அவர்களே,..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேலுசாமி. (குறுக்கீடுகள்) சரிதான் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சரி, உட்காருங்கள், உட்காருங்கள், தெரியும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. சி.வி. சண்முகம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) கேள்வி நேரத்திலே ஒன்றும் பேச முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. வேலுசாமி, சொல்லுங்கள்.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாட்டினுடைய தேசிய பறவையான, மயில் இனம் படிப்படியாகக் குறைந்து வருவதாக...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள், அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள், அமைதியாக இருங்கள்.

**திரு. செ.ம. வேலுசாமி:** அழிந்து வருகிறது. அதைப் பாதுகாப்பதற்காக, உங்களுடைய அமைச்சரே மத்தியிலும் வனத் துறையில் இருக்கின்றார்கள். இந்த அரசு, தேசிய பறவையான மயில் இனத்தை, பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தெரிவித்துக்கொண்டு, ** என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்கின்ற அந்தச் சொற்றொடர் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) ** என்று சொல்வது, அது என்னது? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அமைச்சர், சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசைப் பொறுத்தவரையில்...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சரை அப்படிச் சொல்லக்கூடாது.

முற்பகல் 10-15

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** வனவிலங்குகள் அனைத்தையும் பாதுகாப்பதற்கு அத்தனை நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுகிறது. மயில்களைப் பாதுகாப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். ஒன்றை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன். மயில்களைப் பாதுகாப்பதற்கு எந்த அளவிற்கு முக்கியமான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதற்கு ஒரு நிகழ்வுமூலம் தெரிவிக்க விரும்புகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



11-8-2006-லே திருச்சி அருகிலே, பூலாங்குடி என்கின்ற பகுதியில் பிங்கிலி என்பவர், அந்த மயில்களுடைய கால்களையெல்லாம் பயன்படுத்தி, லேகியம் தயாரித்து, வெளிநாட்டிற்கு அனுப்புவதற்காக, அந்தத் தயாரிப்பு முறையிலே ஈடுபட்டிருந்த நேரத்தில், வனத் துறை அதிகாரிகளுக்கு அந்தச் செய்தி தெரிந்து, அவர்கள் அங்கு சென்று அவற்றையெல்லாம் பறிமுதல் செய்கின்ற நேரத்தில், பிங்கிலி என்பவர் தப்பித்துச் சென்றுவிட்டார். இருந்தாலுங்கூட, அவர் வைத்திருந்த மூன்று மயில் கால்கள், இரண்டு நாட்டுத் துப்பாக்கிகள் மற்றும் அதற்குப் பயன்படுத்தப்பட்ட ஒரு நரித் தலை இவற்றையெல்லாம் பறிமுதல் செய்து வந்திருக்கிறார்கள். எனவே, மயில்களுக்கோ அல்லது மற்ற வன விலங்குகளுக்கோ எந்தப் பகுதியிலேயும் மறைமுகமாகச் செய்யப்படுகின்ற, அந்த இன்னல்களையெல்லாம் போக்குவதற்கு, தலைவர் கலைஞருடைய இந்த அரசு எல்லா நடவடிக்கைகளையும், பாதுகாப்புகளையும் ஏற்படுத்தும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 78, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. இராமசுவாமி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வனத் துறை சம்பந்தமாக ஒரு கேள்வி கேட்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், முடியாது. (குறுக்கீடு) முடியாது, உட்காருங்கள். அமைச்சர் பதில் சொல்லுங்கள்.

**78—**

### மதிய உணவு

***1531—திரு. கே.பி. இராமசுவாமி:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ராசிபுரம் தொகுதியில் ஜவ்வரிசியை மதிய உணவுத் திட்டத்தில் சேர்த்திட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) உச்ச நீதிமன்ற ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள கலோரி மற்றும்...(குறுக்கீடு)

[2006 ஆகஸ்ட் 23

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொள்ளாச்சி ஜெயராமன், உட்காருங்கள். அமைச்சர், நீங்கள் பதில் சொல்லுங்களம்மா!

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) உச்ச நீதிமன்ற ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள கலோரி மற்றும் புரதச்சத்து அளவினைக் காட்டிலும் கூடுதலான கலோரி மற்றும் புரதச்சத்து நிறைந்த சத்துணவை ஏற்கெனவே நமது அரசு செம்மையாக வழங்கிக் கொண்டு வருகிறது. தற்போது மதிய உணவுத் திட்டத்தில் ஜவ்வரிசியைப் பயன்படுத்துவதில்லை. அதுபோன்ற திட்டமும் அரசின் பரிசீலனையில் இல்லை என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. இராமசுவாமி.

**திரு. கே.பி. இராமசுவாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜவ்வரிசி உற்பத்திமூலம் கிட்டத்தட்ட நம்முடைய தமிழகத்திலே 16 மாவட்டங்களிலே சுமார் 800 ஆலைகள் இருக்கின்றன. அவற்றிலே இரண்டு இலட்சம் தொழிலாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். அதனுடைய மூலப்பொருளான மரவள்ளிக்கிழங்கை, கிட்டத்தட்ட 16 மாவட்டங்களிலே பயிர் செய்து, ஒரு இலட்சம் விவசாயக் குடும்பங்கள் அதன்மூலம் பயன்பெற்று வருகின்றன. குறிப்பாக, மலைவாழ் மக்கள் இருக்கக்கூடிய போகமலை, கிடமலை, கொல்லிமலை, பச்சமலை, கல்வராயன் மலை போன்ற இந்தப் பகுதிகளிலே, கிழங்கு அதிகமான அளவிலே உற்பத்தி செய்யப்படுகிறது. அதுமட்டுமல்லாமல், வருடத்திற்கு 30 இலட்சம் மூட்டைகள் ஜவ்வரிசி உற்பத்தி செய்யப்பட்டு, வட மாநிலங்களில்தான் அதைப் பெரும்பாலும் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய சத்துணவிலே, குழந்தைகளுக்கு அதைச் சேர்ப்பதன்மூலம், அதிலே protein சத்தும், carbohydrate-ம் இருக்கின்ற காரணத்தால், அது எளிதில் ஜீரணமாகக்கூடிய உணவு என்பதால், நம்முடைய தமிழக முதல்வர், விவசாயிகளின்மேல் பற்றும் பாசமும் கொண்ட நம்முடைய கழக அரசு, அதைக் குழந்தைகளுக்கு வழங்குவதன்மூலம் சிறுவயதிலிருந்தே அதைச் சாப்பிடுவார்களேயானால், நிறைந்த ஊட்டச் சத்து கிடைக்கக்கூடிய வாய்ப்பு உள்ளது; ஆகவே, இதை அரசு, சத்துணவிலே சேர்ப்பதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.



2006 ஆகஸ்ட் 23]

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிய சத்துணவுத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் உணவுப் பொருட்கள், தமிழ்நாடு முழுவதும் ஒரே மாதிரியாக வழங்கப்பட்டு வருகின்றன. ஒரு குறிப்பிட்ட தொகுதியில் மட்டும் வழங்கப்படும் உணவுப் பொருட்களை மாற்றி வழங்குவது மற்றும் புதியதாகச் சேர்ப்பது என்பது இயலாது. எனினும், சட்டமன்ற உறுப்பினரின் விளக்கவுரையை நான் கேட்டறிந்து, ஊட்டச் சத்து நிபுணர்களைக் கலந்தாலோசித்து, அதைப் பரிசீலிக்க முயற்சி எடுப்பேன் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. இராமசுவாமி.

**திரு. கே.பி. இராமசுவாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் மட்டும் வழங்க வேண்டுமென்று நான் கேட்கவில்லை. தமிழகத்தில் உள்ள, அனைத்து மாவட்டங்களிலும் இருக்கின்ற, சத்துணவு சாப்பிடும் குழந்தைகளுக்கு இதை வழங்குவதற்கு அரசு பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 79, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. தாமோதரன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**79—**

### கால்நடை மருந்தகம்

***1915—திரு. செ. தாமோதரன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிணத்துக்கடவு தொகுதி, கோவில்பாளையம் கால்நடைக் கிளை நிலையத்தை, கால்நடை மருந்தகமாக நிலை உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், கிணத்துக்கடவு ஊராட்சி ஒன்றியத்தில் செயல்படும் கோவில்பாளையம் கால்நடை கிளை நிலையத்தை, கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்த அரசுத் தரப்பில் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

[2006 ஆகஸ்ட் 23

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. தாமோதரன்.

*முற்பகல் 10-20*

**திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கிணத்துக்கடவு தொகுதிக்குட்பட்ட கோவில்பாளையம் பகுதியிலே அமைந்திருக்கின்ற கால்நடைக் கிளை நிலையமானது, பொள்ளாச்சி, கோவை செல்கின்ற அந்த வழிகளிலே கிட்டத்தட்ட நெடுஞ்சாலைப் பகுதியிலே அமைந்திருக்கிறது. அந்த வழியாகத்தான், பொள்ளாச்சி கால்நடை சந்தைக்கு நிறைய கால்நடைகள், கால் நடையாகவும் மற்றும் வாகனம் மூலமாகவும் கொண்டுவரப்படுகின்றன. அப்படி அது கொண்டுவரப்படுகிற நேரத்திலே, அந்தக் கோவில்பாளையம் பகுதியிலேதான் 2, 3 மணி நேரம் அங்கே நிற்கவைத்த பிறகு கொண்டுவருகிறார்கள். அந்த நேரத்திலே அதற்கு மருத்துவ வசதி, தடுப்பூசி போன்ற இவையெல்லாம் செய்யப்படவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதோடுமட்டுமல்லாமல், அந்தக் கோவில்பாளையம் பகுதியைச் சுற்றியுள்ள சுமார் 20 கிராமங்களிலுள்ள கால்நடைகள், கால்நடை மருந்தகத்திற்குச் செல்லவேண்டுமென்றால், அந்தக் கோவில்பாளையம் பகுதியிலிருந்து சுமார் 10 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள பொள்ளாச்சி, பெரிய நெகமம், கிணத்துக்கடவு பகுதிக்குத்தான் செல்லவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதனால், அமைச்சர் அவர்கள் அதை மறுபரிசீலனை செய்து, அந்தக் கோவில்பாளையத்தைச் சுற்றியுள்ள பகுதியினுடைய மக்கள் வளர்க்கின்ற கால்நடைகளுக்கு உதவுகின்றவகையிலும், பொள்ளாச்சி கால்நடை சந்தைக்கு வருகின்ற கால்நடைகளுக்கு நல்ல மருத்துவ வசதி கொடுக்கின்றவகையிலும், இப்போது கிளை நிலையமாக இருக்கின்ற இடத்தை, மருந்தகமாக மாற்றுவதற்குப் போதுமான இடம் உள்ளது; ஏற்கெனவே அங்கே நல்ல கட்டடங்களையும் கட்டிக் கொடுத்திருக்கின்றோம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தாமோதரன், கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. செ. தாமோதரன்:** அதனால் மறுபரிசீலனை செய்து, அங்கே இந்த ஆண்டு ஒரு கால்நடை மருந்தகத்தையும் அமைத்து, அதற்குண்டான கட்டடங்களையும் கட்டிக் கொடுக்க முன்வருவாரா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.



2006 ஆகஸ்ட் 23]

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், கிணத்துக்கடவு ஊராட்சி ஒன்றியத்தில் ஏற்கெனவே நான்கு கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன. அரசு விதிமுறைகளின்படி ஒவ்வொரு ஒன்றியத்திலும் மூன்று கால்நடை மருந்தகங்கள்தான் செயல்பட்டு வருகின்றன. ஆனால், இந்த ஊராட்சி ஒன்றியத்தில் நான்கு மருந்தகங்கள் ஏற்கெனவே உள்ளன. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல, பொள்ளாச்சி சந்தைக்கு வரும் அந்தக் கால்நடைகளுக்கு மருத்துவ சிகிச்சை வழங்கவேண்டுமானால், அதற்கு இந்தத் துறை தகுந்த மருத்துவர்களை அனுப்பி உரிய ஏற்பாடுகளைச் செய்யும் என்று கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கபிலர்மலை தொகுதியிலுள்ள பரமத்திவேலூரில் கால்நடை மருத்துவமனை கட்டடம் ஒன்று முற்றிலும் பாழடைந்த நிலையிலே உள்ளது. அந்த மருத்துவமனைக்குள் யாரும் செல்ல இயலாத நிலையில் உள்ளது. எனவே, அந்த மருத்துவமனைக்குப் புதிய கட்டடம் கட்டும் திட்டம், அரசிடம் உள்ளதா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நபார்டு திட்டத்தின்கீழ் நிரந்தரக் கட்டடம் இல்லாத மருத்துவமனைகளுக்கெல்லாம் கட்டடம் கட்டுவதற்கு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறோம். வரும் நிதியாண்டில், பரமத்திவேலூர் கால்நடை மருத்துவமனைக்கும் நிரந்தரக் கட்டடம் கட்ட அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்தக் கால்நடை கிளை மருத்துவமனைகள், மருந்தகங்கள் பல்வேறு தொகுதிகளில், பல்வேறு பகுதிகளில் இயங்கி வந்தவையெல்லாம் கடந்தகால ஆட்சியில் மூடப்பட்டிருக்கின்றன. உதாரணத்திற்கு, என்னுடைய சொந்த கிராமத்தில் இருந்த, புலியூர் கால்நடை மருந்தகம், கடந்தகால ஆட்சியில் மூடப்பட்டிருக்கிறது. அதற்கான காரணம், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதுபோல, ஒரு ஊராட்சி

[2006 ஆகஸ்ட் 23

ஒன்றியத்திற்கு மூன்று கால்நடை கிளை மருத்துவமனைகள் இருக்க வேண்டும் என்று விதி இருக்கிறது. மாண்புமிகு முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய அரசை, ரேஷன் கடைகளிளெல்லாம் 150 கார்டுகள் இருந்தால் ஒரு பகுதிநேரக் கடை திறப்பதற்கு ஆவன செய்யுமா என்று கேட்டோம்; உடனடியாக, அமைச்சர் அவர்கள் பதிலுரையை வழங்கி இருக்கின்றார்கள். பல்வேறு நலத் திட்டங்களை வழங்குகின்ற அரசு, விவசாயத்தைச் சார்ந்து வாழ்கின்ற நம்முடைய தமிழகத்தில், குறிப்பாக, கால்நடைகளுக்கான மருத்துவம் பார்க்கவேண்டுமானால் 20 கிலோமீட்டர், 30 கிலோமீட்டர் தூரம் சென்று கால்நடைகளுக்கு மருத்துவம் பார்ப்பதற்கான சூழ்நிலை உள்ளது. ஆதலால், இந்த விதிகளைத் தளர்த்தி, தேவை ஏற்படுகின்ற, கால்நடைகள் அதிகமாக இருக்கின்ற ஊராட்சிப் பகுதிகளில், கூடுதலான கால்நடை கிளை மருந்தகங்களையும், மருத்துவமனைகளையும் திறப்பதற்கும், புதிதாக ஏற்படுத்துவதற்கும் இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1998 ஆம் ஆண்டு நம்முடைய தமிழக மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்ட 2166 கால்நடை பார்வைக் கிளை நிலையங்கள், அந்தந்தக் குக்கிராமங்களுக்கு கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிப்பதற்காகத் தொடங்கப்பட்டன. அந்த அனைத்துக் கால்நடை பார்வைக் கிளை நிலையங்களும், 5–8–2002 அன்று ஒரு அரசுக் கடிதத்தின்மூலம் மூடப்பட்டுள்ளன. அதுமட்டுமல்ல; பணியாளர்களும் நியமிக்கப்படவில்லை. ஆதலால், அனைத்துக் காலிப் பணியிடங்களும் நிரப்பப்பட்டபின், அந்தக் குக்கிராமங்களிலுள்ள கால்நடை பார்வைக் கிளை நிலையங்களிலெல்லாம் கால்நடை உதவி மருத்துவர்கள்மூலம் சிகிச்சை அளிக்க, அரசு உரிய நடவடிக்கை எடுக்க உள்ளது என்பதை உங்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன்.

(முற்பகல் 10–25

**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பாளையங்கோட்டை என்ற கிராமத்தில், கால்நடைக் கிளை நிலையம் அமைந்துள்ளது. அந்த நிலையத்திற்குத் தற்போது மருத்துவரும் வருவது



2006 ஆகஸ்ட் 23]

இல்லை; அதேபோல கால்நடை ஆய்வாளரும் வருவது இல்லை. மருத்துவமனை செயல்படாத நிலையில் உள்ள காரணத்தினால். அதைச் சீரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்துக் கால்நடைகளுக்கும் சிகிச்சை அளிக்க வேண்டும் என்ற இந்தத் துறையின் குறிக்கோளோடு செயல்படுவதற்காக, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எங்களைப் பணித்துள்ளார்கள், ஆணையிட்டுள்ளார்கள். நிச்சயமாக அனைத்துக் கிராமப்புற கால்நடைகளுக்கும் மருத்துவ வசதி கிடைக்க இந்த அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 80, மாண்புமிகு உறுப்பினர் திரு. உலகநாதன், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**80—**

**கூட்டுறவுச் சங்கம்**

***688–திரு. கே. உலகநாதன்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதியில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீதான நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பிரத்தியேகமாக 5 விரிவாக்க அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதியில் திருத்துறைப்பூண்டி நகரம், தாலுகா தலைநகரமாக உள்ளது. இங்கே ஏழையெளியோர்கள் உற்பத்தி செய்கின்ற பாலைத் தனியார்கள் குறைந்த விலையில் கொள்முதல்

[2006 ஆகஸ்ட் 23

செய்கிறார்கள். அந்தப் பணமும் முறையாக அவர்களுக்குக் கிடைக்கவில்லை. எனவே, திருத்துறைப்பூண்டி நகரத்தில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைத்தால் கொள்முதல் செய்வது உத்தரவாதப்படுத்தப்படும். அந்த ஏழையெளியவர்களுக்கும் பணம் முறையாகக் கிடைக்கும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த ஆண்டே பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் திருத்துறைப்பூண்டியில் தொடங்க பரிசீலனையில் உள்ளதா என்பதைத் தெரிவிப்பாரா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதியில் முதல் கட்டமாக 30 மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், 5 விரிவாக்க அலுவலர்களைப் பிரத்தியேகமாகவும் நியமித்து, திருத்துறைப்பூண்டி தொகுதியில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்கும் பணி, தற்போது நடைபெற்றுக் கொண்டு வருகிறது. மிக விரைவில், திருத்துறைப்பூண்டி தொகுதியில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து, அவர்களிடமிருந்து பாலைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்திலுள்ள கூட்டுறவு பால் உற்பத்தியாளர்களுக்கு, சேலம் மாவட்டத்தில் இருக்கக்கூடிய கூட்டுறவு பால் உற்பத்தியாளர்களுக்குக் கொடுக்கக்கூடிய விலையைவிட, ஒரு ரூபாய் குறைவாகக் கொடுக்கப்படுகிறது. ஆகவே, இதன்மீது அரசு உரிய நடவடிக்கை எடுத்து, சேலம் மாவட்டத்திலே கொடுக்கக்கூடிய விலையைப்போல, தருமபுரி மாவட்டத்திலும் கொடுக்க ஆவன செய்யப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தினைப்பற்றி அதிகாரிகளைக்கொண்டு விசாரணை செய்து, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.



2006 ஆகஸ்ட் 23]

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கிற அனைத்து மாவட்டங்களையும்விட, திருவண்ணாமலை மாவட்டத்தில் பால் உற்பத்தி அதிகமாக இருக்கிறது. எனவே, அதைப் பயன்படுத்தி, வட ஆற்காடு மாவட்டத்தில் இருக்கிற கூட்டுறவு பால் ஒன்றியத்திலேயிருந்து திருவண்ணாமலை மாவட்டத்திற்குத் தனியாக பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்தை அமைக்கும் எண்ணம், இந்த அரசிடம் உள்ளதா என்பதைத் தங்களின்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தக் கருத்துகளுக்கேற்ப அந்தத் திட்டம் கொண்டு வருவதற்குத் தற்போது நடவடிக்கையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடுகள்)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. தகவல் கோரல்

### (அ) சேலம் மத்திய சட்டக் கல்லூரி மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு... (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் டி. ஜெயக்குமார். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். அவ்வளவுபேரும் எழுந்து நின்றால் என்ன அர்த்தம்? திரு. டி. ஜெயக்குமார். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலத்தில் உள்ள தனியார் மத்திய சட்டக் கல்லூரி பிரச்சினையைப் பொறுத்தவரையிலே, அதன் அவசிய தன்மை கருதி, நேற்றைக்கே இந்த அலுவல்களையெல்லாம் ஒத்திவைக்க வேண்டுமென்று கோரி ஒத்திவைப்புத் தீர்மானம், நேற்றைக்கே எடுக்க வேண்டுமென்று கொடுத்திருந்தேன், இன்றைக்கு எடுத்தீர்கள். அதற்காகத் தங்களுக்கு என்னுடைய...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்று ஒரு மணிக்குக் கொடுத்தீர்கள். இன்றைக்கே எடுத்துக்கொண்டோம். எப்படி?

[2006 ஆகஸ்ட் 23

*முற்பகல் 10–30*

**திரு. டி. ஜெயக்குமார்:** நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த 10 நாட்களுக்கும் மேலாக, சேலத்திலுள்ள தனியார் மத்திய சட்டக் கல்லூரியின் அந்த நிர்வாகம், மாணவர்களை மிகுந்த கொடுமைக்கு உள்ளாக்குகின்ற அந்தச் சூழ்நிலையைக் கண்டித்தும், சில அடிப்படை வசதிகளைக் கோரியும், அதேநேரத்தில் டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் நிர்ணயித்த அந்தத் தொகைக்கு, கட்டணத்திற்கு மாறாக, கூடுதல் தொகையாக 17 ஆயிரம் ரூபாயைக் கட்டணமாக வசூலிக்கின்ற அந்தச் செயலைக் கண்டிக்கின்றவகையிலும், கடந்த 15 தினங்களாக அவர்கள் போராடிக்கொண்டு வருகின்றார்கள். இந்தப் பிரச்சினையின் அவசிய தன்மையை நாம் கருதவேண்டும். நேற்றைக்கு அவர்கள் இங்கே கோட்டைக்கு மனு கொடுக்க வந்தபோது, அவர்கள் கைது செய்யப்பட்டு, கொண்டித்தோப்பு காவல் நிலையம் அருகே, சமுதாயக் கூடத்திலே தற்போது அவர்கள் வைக்கப்பட்டிருக்கிறார்கள். இன்னும் அவர்களை விடுதலை செய்யவில்லை. இன்றைக்கும் மாணவர்கள், அவர்களுடைய கோரிக்கையை வலியுறுத்தி தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அரசு அவர்களை அழைத்துப் பேசி, கட்டணத்தைக் குறைத்து, மீண்டும் அடிப்படைத் தேவைகளையெல்லாம், மாணவர்கள் எதிர்பார்க்கின்றவகையில் செய்து கொடுத்து, மாணவர்கள் மகிழ்ச்சி பெறத்தக்கவகையிலே அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பிரச்சினையின் அவசிய தன்மையைக் கருதித்தான், நேற்றைக்கு ஒரு மாணவர்கூட இந்தக் கோட்டைக்கு அருகில் இருக்கிற விளக்குக் கம்பத்தின்மீது ஏறி, தற்கொலை முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார் என்றால், இந்தப் பிரச்சினையின் அவசிய தன்மையை அரசு புரிந்துகொண்டு, நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, இந்தப் பத்திரிகையை அவைத் தலைவரிடத்திலே கொடுக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

(மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார் அவர்கள், ஒரு நாளிதழை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் கொடுத்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சேலம், மத்திய சட்டக் கல்லூரியின் மாணவர்களின் போராட்டத்தைப்பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். குறிப்பாக, சேலம் மத்திய சட்டக் கல்லூரி மாணவர்கள், நேற்று காலை 11½ மணிக்கு அவர்களுடைய



2006 ஆகஸ்ட் 23] [திரு. இ. பெரியசாமி]

கோரிக்கையை வலியுறுத்தி, இங்கே போராட்டம் செய்ய வந்த நேரத்திலே, மாணவர் தலைவரை அழைத்துப் பேசுவதற்கு இந்த அரசு தயாராக இருந்தும், அவர்கள் வர மறுத்ததன் காரணமாக, நேற்று மாலை அனைவரும் விடுவிக்கப்பட்டார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்கள், சேலம், தனியார் சட்டக் கல்லூரியிலே அதிகக் கட்டணம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார், உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** வசூலிப்பதாக இங்கே கருத்துத் தெரிவித்தார்கள். 2004–2005 ஆம் ஆண்டிலே, நீதிமன்றத்திலே வழக்குத் தொடுத்து, அந்த வழக்கிலே, அரசின் சார்பாக, டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் சார்பாக நடத்தப்படுகின்ற செங்கல்பட்டு சட்டக் கல்லூரியிலே, அரசாங்கமே 17 ஆயிரம் ரூபாய் வசூல் செய்கின்றது; சேலம் மத்திய சட்டக் கல்லூரி, தனியார் சுயநிதிக் கல்லூரியாக இருக்கிற காரணத்தால், தங்களுக்கும் ரூ.17,000/– வழங்க வேண்டுமென்று உயர் நீதிமன்றத்திலே ஒரு வழக்குத் தொடுத்தார்கள். அந்த வழக்கிலே உயர் நீதிமன்றம், சென்னை மத்திய சட்டக் கல்லூரிக்கு, அரசே 17 ஆயிரம் ரூபாய் வசூல் செய்கின்ற காரணத்தால், அவர்களுக்கும் அந்த 17 ஆயிரம் ரூபாய் பொருந்தும் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. இது நம்முடைய மாண்புமிகு உறுப்பினருக்கும் நன்றாகத் தெரியும்.

அதுமட்டுமல்ல; அவர்களுக்கு இடஒதுக்கீடு செய்கின்ற நேரத்திலே, அவர்களுக்குக் கொடுக்கின்ற ஒதுக்கீடு கடிதத்திலே, இவ்வளவு பணம் கட்டவேண்டுமென்று, 17 ஆயிரம் ரூபாய் கட்டவேண்டுமென்று, அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தச் சம்மதத்தோடுதான் மாணவர்களும், கடந்த 2004–2005 மற்றும் 2005–2006 ஆம் ஆண்டுகளில், கடந்த அ.தி.மு.க. ஆட்சியிலே சேர்ந்திருக்கிறார்கள். அதற்குப் பின்னால், சில மாணவர்கள் உயர் நீதிமன்றத்திலே கடந்த 2005 ஆம் ஆண்டு இந்தக் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று, வழக்குத் தொடுத்த நேரத்திலே, தலைமை நீதிபதி, ஒரு நீதியரசரைக் கொண்ட, ஒருநபர் அமர்வு நீதிமன்றத்திலே, 12 ஆயிரம் ரூபாய் அவர்கள் கட்டணம் செலுத்தலாம் என்று தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். அதற்குப் பின்னால் Bench-க்குப் போனார்கள். தலைமை நீதிபதியிடம் போனவுடன், அவர்களும் அதையே உறுதி செய்திருக்கிறார்கள். 12 ஆயிரம் ரூபாய் அவர்கள் கட்ட வேண்டுமென்று சொல்லி உறுதி செய்திருக்கிறார்கள். ஆகவே, உயர் நீதிமன்றம் உறுதி செய்த கட்டணத்தைத்தான் மாணவர்கள் இன்று செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். தற்சமயம் அவர்கள் குறைக்கவேண்டுமென்று கேட்கிறார்கள். பல்வேறு வழக்குகள் அங்கே உயர் நீதிமன்றத்திலே நிலுவையிலே இருக்கின்றன.

இந்த அரசைப் பொறுத்தவரையில், தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிக்குவந்த 100 நாட்களுக்குள்ளாக, இங்கே சென்னையிலே இருக்கிற மூடப்பட்ட சட்டக் கல்லூரி திறக்கப்பட்டது. இது, இங்கே அவையில் இருக்கிற அத்தனை மாமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றாகத் தெரியும். ஏழையெளிய மாணவர்கள் படிப்பதற்குரிய வாய்ப்பு, கடந்த ஆட்சிக் காலத்திலே மறுக்கப்பட்டது. அதற்குப் பின்னால் ஆட்சிக்கு வந்தவுடனேயே, நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் என்னை அழைத்து, சென்னை சட்டக் கல்லூரியிலே, டாக்டர் அம்பேத்கர் சட்டக் கல்லூரியிலே, கூடுதலாக 400 மாணவர்கள் சேர்க்கப்பட வேண்டுமென்று சொன்ன காரணத்தால், இந்த அரசு உடனடியாக உயர்த்தியது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, ஏழையெளிய மாணவர்கள் படிக்க வேண்டும் என்பதற்காக, தமிழகத்திலே இருக்கிற அரசு சட்டக் கல்லூரியிலே படிக்கின்ற மாணவர்களுக்கெல்லாம், குறிப்பாக எல்லாக் கல்லூரிகளுக்கும், எந்தெந்தக் கல்லூரியிலே படிக்க விரும்புகின்றார்களோ, மதுரையாக இருந்தாலும் சரி கோவையாக இருந்தாலும் சரி அல்லது திருநெல்வேலியாக இருந்தாலும் சரி, சென்னையாக இருந்தாலும் சரி, எந்தக் கல்லூரிக்கும் அவர்கள் விரும்பினால் சென்றுகொள்ளலாம்.

முற்பகல் 10–35

குறிப்பாக, சென்னையிலே இருக்கிற மாணவர்களுக்கெல்லாம் திருச்சியிலே இடம் வழங்கப்பட்டது. திருச்சியிலே இடம் பெற்ற மாணவ, மாணவிகள், நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்களைச் சந்தித்து, தங்களுக்குச் சென்னைக்கு இடமாற்றம் வேண்டும் என்று கேட்டார்கள். உடனே உத்தரவிட எனக்கு ஆணையிட்டார்கள். தங்கள் வசதிக்காக எந்தக் கல்லூரியில் படிக்க வேண்டும் என்று விரும்பினாலும், இந்த அரசு அந்த வாய்ப்பை உடனே இன்றைக்கு வழங்கியிருக்கிறது.

செங்கற்பட்டு கல்லூரியிலே 17 ஆயிரம் ரூபாய் வசூல் செய்கிற காரணத்தால், குறைந்தபட்சம் அரசுக் கல்லூரியாக மாற்ற வேண்டும்; காரணம், அரசுக் கல்லூரியிலே, கட்டணம் 2 ஆயிரம்தான் வாங்குகிறோம்; ஆக, அந்த 2 ஆயிரம் ரூபாய் கட்டணத்தில், அரசுக் கல்லூரியாக மாற்றினால், ஏழையெளிய மாணவர்கள் படிக்க முடியும் என்பதற்காக, மாண்புமிகு முதல்வர் அவர்கள், நம்முடைய செங்கற்பட்டு சட்டக் கல்லூரியையும் இன்றைக்கு அரசுக் கல்லூரியாக மாற்றித் தந்திருக்கிறார்கள் என்பது, அனைத்து மாணவர்களுக்கும் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்திலே இருக்கிற ஒட்டுமொத்த சட்டக் கல்லூரி மாணவர்களும், நேற்றுகூட என்னை அறையிலே சந்தித்து நன்றி தெரிவித்திருக்கிறார்கள். முதல்வர் அவர்களுக்கும் நன்றி தெரிவிக்க வேண்டும் என்று என்னிடத்திலே கேட்டிருக்கிறார்கள்.





நம்முடைய, சேலம் சட்டக் கல்லூரியைப் பொறுத்தஅளவில், இந்த அரசு எந்தக் கோரிக்கை வைத்தாலும், மாணவர்களாக இருந்தாலும் சரி, எந்தப் பிரிவினராக இருந்தாலும் சரி, நிர்வாகத்தையும், மாணவர்களையும் அழைத்துப் பேச எந்த நேரமும் தயாராக இருக்கிறது. நேற்றுகூட நான் சொன்னேன், எந்த நேரம் வந்தாலும் பேசுவதற்குத் தயாராக இருக்கின்றோம் என்று.

நேற்றுகூட உயர் நீதிமன்றத்திலே இருக்கின்ற வழக்கறிஞர்கள், அதுவும் குறிப்பாக சங்கத்தினுடைய தலைவர்—Bar Association President—இன்னும் சில வழக்கறிஞர்கள் எல்லாம் மாணவர்களைச் சந்தித்து, அரசிடத்திலே பேசலாம்; நிச்சயமாக அரசு பரிசீலிக்கும் என்று சொன்ன நேரத்திலே, அவர்கள் மறுத்திருக்கின்றார்கள். மறுத்தாலும், இந்த அரசு நிச்சயம் அவர்களை அழைத்துப் பேசி இந்த நீதிமன்றத்திலே இருக்கிற வழக்குகள் ஒருபுறம் இருந்தாலும்கூட, தலைவர் கலைஞர் அரசு மாணவர்களுக்காக நிச்சயம் எந்த உதவியும் செய்வதற்குத் தயாராக இருக்கிறது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்றவை எல்லாம் (குறுக்கீடுகள்) நீங்கள் கொடுத்திருக்கிற மற்றவை எல்லாம் பரிசீலனையில் இருக்கின்றன. எல்லோரும் உட்காருங்கள். அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். (குறுக்கீடுகள்) திரு. அரி, உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். நாளைக்கு (குறுக்கீடுகள்) நாளைக்கு எடுப்போம். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சரி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நாளைக்கு எடுப்போம். பரிசீலனையில் இருக்கிறது. (குறுக்கீடுகள்) நாளைக்கு எடுப்போம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் பார்த்தாகிவிட்டது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. கோ. அரி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அரி, நீங்கள் என்ன சொன்னாலும் பதிவாகாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நாளைக்கு எடுக்கிறேன் என்று சொல்லிவிட்டேன் என்றால் உட்கார வேண்டும். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நாளைக்கு எடுக்கிறேன் என்று சொல்லிவிட்டேன் இல்லையா? நாளைக்கு எடுக்கிறேன் என்று சொல்லியாகிவிட்டது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மற்றவை எல்லாம் பரிசீலனையில் இருக்கின்றன. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) என்ன, திரு. ஜெயக்குமார்? உங்களுக்கு அமைச்சர் பதில் சொல்லியாகிவிட்டது. (குறுக்கீடுகள்) சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், மற்றவர்கள் எல்லாம் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள், (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. டி. ஜெயக்குமார்:** நான் இந்தப் பிரச்சினையை இங்கே எழுப்பியது..(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். உட்காருங்கள், திருமதி யசோதா, உட்காருங்கள்.

**திரு. டி. ஜெயக்குமார்:** நான் இங்கே பிரச்சினை எழுப்பியது... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்தான் கொடுத்திருந்தார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** சேலம் தனியாருக்குச் சொந்தமான மத்திய சட்டக் கல்லூரியைப் பொறுத்தவரையில் பிரச்சினையை எழுப்பினேன். ஆனால், அமைச்சர் அவர்கள் செங்கற்பட்டு Constituent College-பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். அந்த Constituent College-ஐப் பொறுத்தவரையில், எந்தப் பிரச்சினையும் இல்லை. மாறாக, இன்னொரு தகவலும் சொன்னார்கள். சென்னை சட்டக் கல்லூரி மூடப்பட்டது என்று. அது தவறான தகவல். அம்மா அவர்கள் International அளவிலே நம்முடைய B.A.B.L. (Hons.) course கொண்டுவர வேண்டும் என்பதற்காக அதை upgrade செய்து, அங்கே மாணவர்கள் படித்தார்கள். முதலாம் ஆண்டு படித்தார்கள். இரண்டாம் ஆண்டும் படித்தார்கள். 5 ஆண்டு course-களும் அங்கே நடத்தப்பட்டன. இதுதான் உண்மையான நிலை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார், அவர் தனியார் சட்டக் கல்லூரி பற்றிய விஷயமும் சொன்னார், பார்த்தீர்களா? நீங்கள் கவனிக்கவில்லை என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். சேலம் மத்திய சட்டக் கல்லூரிக்கு 17 ஆயிரம் ரூபாய் வசூல் பண்ணலாம் என்று போட்டதே மாண்புமிகு உறுப்பினர் ஆட்சிக் காலத்திலேதான்.





## 4. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன். (குறுக்கீடுகள்)

## 3. தகவல் கோரல்–தொடர்ச்சி

### (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பரிசீலனையில் இருக்கிறது. (குறுக்கீடுகள்) பரிசீலனையில் இருக்கிறது. (குறுக்கீடுகள்) எதுவும் எடுக்க முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அறிவிப்புக்

[பேரவைத் தலைவர்] [2006 ஆகஸ்ட் 23

கொடுத்தீர்கள். ஆய்விலே இருக்கிறது. நாளைக்கு எடுக்கிறேன் என்று சொன்னேன் இல்லையா? ஏன் அவசரப்படுகிறீர்கள்? (குறுக்கீடுகள்) சொல்லுங்கள், திருமதி யசோதா என்ன? (குறுக்கீடுகள்) உட்காருங்கள், திரு. ஜெயக்குமார், சும்மா உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. செங்கோட்டையன், உட்காருங்கள். பதிலை என்னுடைய அறையில் வந்து கேட்டுக்கொள்ளுங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், என்னுடைய அறையில் வந்து கேளுங்கள் என்று நான்தான் சொல்லிவிட்டேன் அல்லவா? எல்லாமே ஆய்வில் இருக்கின்றன; நாளைக்கு எடுக்கப்படும் என்று சொல்லிய பிறகு, திரும்பவும் அதை இதைச் சொல்லிக்கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? பதில் அதுதான். உட்காருங்கள். நீங்கள் சொல்லுங்கள், திருமதி யசோதா.

முற்பகல் 10–40

***திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கடந்த வாரம் தங்களிடத்திலே ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்தேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படும், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சரி, சொல்லுங்கள்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே ஒரு... (குறுக்கீடுகள்) ஏற்கெனவே நான் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கடந்த வாரத்திலே கொடுத்தேன். நீங்களும் அதற்கு நடவடிக்கை எடுப்பதற்காகக் கையெழுத்துகூட போட்டுக் கொடுத்தீர்கள். அது ஒரு சமுதாயப் பிரச்சினை, ஆதி திராவிடர் மக்களுடைய பிரச்சினை. அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை உடனடியாக நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அம்மா, நீங்கள் கொடுத்தது, சம்பந்தப்பட்ட துறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்ளப்படும். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறீர்கள். அதைப் பதிவு செய்தாகிவிட்டது. (குறுக்கீடுகள்) சொல்லுங்கள், சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** ஏன் பதிவு செய்யமாட்டேன் என்கிறீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள். (குறுக்கீடு) அவை முன்னவர் அவர்கள்.



2006 ஆகஸ்ட் 23]

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே தரப்படுகிற ஒத்திவைப்புத் தீர்மானமாக இருந்தாலும், கவன ஈர்ப்புத் தீர்மானமாக இருந்தாலும், அதை எடுத்துக்கொள்ள வேண்டிய அளவுக்கு அவைத் தலைவர் அனுமதித்தாலும்கூட, ஒரு கட்சியிலே ஒருவர் ஒரு தீர்மானத்தைக் கொடுத்து அதைப்பற்றிப் பேசிவிட்டால், மறுபடியும் அந்தக் கட்சியிலே உள்ளவர்கள், வேறு தீர்மானத்திற்கு அன்றைக்கே வலியுறுத்துவது வழக்கமில்லை. ஒரு தீர்மானம்தான், ஒரு கட்சியின் சார்பாக ஒரு நாளிலே எடுக்கப்பட முடியும். வேறு கட்சியாக இருந்தால், அவர்கள் குறையிருக்குமானால் தெரிவிக்கலாம். ஆனால், ஒரு தீர்மானம் எடுத்ததற்குப் பின்னர், மேலும், மேலும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள், அவரவரும் கையிலே ஒரு தீர்மானத்தை வைத்துக்கொண்டு, அதை எடுக்க வேண்டுமென்று கேட்பது, அவையினுடைய மரபல்ல என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு)

## 4. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், அவை முன்னவர் பதில் சொல்லிவிட்டார்கள், அதற்குப் பிறகு என்ன இருக்கிறது?

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** ஒரு தீர்மானத்திற்கு ஒரு கட்சிக்கு என்று அனுமதிக்கிறீர்கள்; அதற்கு நான் சொல்ல வரவில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாவது திருத்தச்) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்தவுடனேயே, நாங்கள் முதலிலே எதிர்ப்பதற்காக எழுந்தோம். ஆனால், அந்த வாய்ப்பை நீங்கள் அளிக்காமலேயே அடுத்த நிமிடமாக நீங்கள் பேசிக்கொண்டே இருக்கிறீர்கள்; அதுதான் எங்களுக்குக் கஷ்டமாக இருக்கிறது. அந்த வாய்ப்பை அளிக்க வேண்டும் எங்களுக்கு. அதுதான் கேட்டுக்கொள்கிறோம். அறிமுக நிலையிலேயே அதை எதிர்க்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய எதிர்ப்பு, பதிவு செய்யப்பட்டிருக்கிறது. உட்காருங்கள். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) சரி, எதிர்ப்பைச் சொல்லிவிடுங்கள். சொல்லுங்கள்.

***திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்கள் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருப்பதை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஆரம்ப நிலையிலேயே இதை நாங்கள் எதிர்க்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, பதிவு செய்யப்பட்டது. அவ்வளவுதானே? (குறுக்கீடுகள்)

## 5. மானியக் கோரிக்கைகள், 2006–2007, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 27 – தொழில் துறை

### (ஆ) கோரிக்கை எண் 31 – தகவல் தொழில்நுட்பவியல் துறை

---

### (அ) கோரிக்கை எண் 27 – தொழில் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006–2007 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 27 – தொழில் துறை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.68,00,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 1601, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறை தொகுதி தென்சங்கம்பாளையத்தில், கொப்பரைத் தேங்காய்மூலம் எண்ணெய் எடுத்தல், தேங்காய்ப் பூ தயாரித்தல் போன்ற தேங்காய்மூலம் கிடைக்கும் பலன்களைக் கொண்ட தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2387, திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6000, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ரிஷிவந்தியம் தொகுதி, திருக்கோவிலூர் ஒன்றியத்தில் புகளூரில் உள்ளதுபோல், கரும்புச் சக்கையிலேயிருந்து காகிதம் உற்பத்தி செய்யும் ஆலை ஒன்றினைத் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3269, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 479 திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவ அவர்களே, "காங்கேயம் தொகுதியில் புதிய தொழிற்சாலை தொடங் வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9385 திரு. து. செல்வராஜ்.

**திரு. து. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தூத்துக்குடி மாவட்டத்தில் பெரிய தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1922, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5468, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.



**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொள்ளாச்சி பகுதியில் வேலைவாய்ப்பை உருவாக்க ஒரு பெரிய தொழிற்சாலையைப் பொள்ளாச்சியில் ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2336, திரு. கே.வீ. ராமநாதன்

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பவானி தொகுதியில் புதிய தொழிற்பேட்டை அமைத்து வேலைவாய்ப்பினை உண்டாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3876, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் தொழில் வளர்ச்சியைச் சீரமைக்க, முதலீட்டாளர்களுக்குள்ள பல்வேறு கட்டுப்பாடுகளைக் களைந்து, முதலீட்டை ஊக்கப்படுத்த நடவடிக்கையும், தொழில் கட்டுப்பாடுகளை நீக்கியும், மேலும் வட்டி விகிதங்களைக் குறைத்தும், தொழிலாளர் துறை சீர்திருத்தமும், தகுந்த எரிசக்தி விலை நிர்ணயித்தும், தொழில்முறை காலவிரயத்தைக் குறைக்கவும், அடிப்படைக கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதில் பொதுத் துறை மற்றும் தனியார் துறை கூட்டாக இணைந்து செயல்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7484, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் தொழில் துறையில் உள்ள அரசின் திட்டங்கள் அனைத்தையும் அனைவரும் தெரிந்துகொள்ளும்வகையில் விளம்பரம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

*முற்பகல் 10–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8400, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதிய தொழில்களை ஆரம்பிப்பவர்களுக்குத் தடையில்லா சான்றிதழ்கள் வழங்குவதில் ஏற்படும் தாமதத்தினைப் போக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8537, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பண்ருட்டி தொகுதியில் பலாப்பழ ஜூஸ் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8637, திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்போரூர் சட்டமன்றத் தொகுதியில் அடங்கிய மறைமலை நகர் தொழிற்பேட்டையில், பெரும்பாலான தொழிற்சாலைகளில் வேலை செய்யும் ஊழியர்களை நிரந்தரம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2782, திரு. கே. மகேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3117, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டத்தில் புதிய தொழிற்சாலைகள் உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3415, திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3490, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில உள்ள அனைத்துத் தனியார் தொழிற்சாலைகளிலும் இட ஒதுக்கீட்டின்படி ஆட்களைத் தேர்வு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2644, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டிலுள்ள சிமெண்ட் ஆலைகளில் உற்பத்தியைக் கூட்டி, சிமெண்ட் விலையைக் குறைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8165, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல் தொகுதியில் ஜவுளி ஏற்றுமதி வளாகம், ஜவுளிப் பூங்கா அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2852, திரு. என்.ஆர். ரங்கராஜன்.



**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பட்டுக்கோட்டை பகுதியில் தென்னை சார்ந்த புதிய தொழிற்சாலைகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2798, திரு. எஸ். ஜெயபால்.

**திரு. எஸ். ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "படித்தவர்கள் அதிகமாக வாழும் குமரி மாவட்டத்தில் படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும்வகையில், இரப்பர் தொழிற்சாலை விரைவில் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2698, திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டம், தளி சட்டமன்றத் தொகுதி, கெலமங்கலத்தில் சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைத்து தொழில்கள் துவங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4833, திரு. ஆர். சாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6703, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதிய தொழில் துவங்க உரிய ஆலோசனைகள் வழங்குவது குறித்தும் நடைமுறையில் உள்ள சிக்கல்களைக் களைவதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5154, திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கரன்கோவில் தொகுதியில் அதிகமாக விவசாயிகள் உற்பத்தி செய்யும் பூக்களைக் கொண்டு, சென்ட் தொழிற்சாலை, அரசின்மூலம் துவக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் 2887, டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2485, திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே "தேனி நகரில், வேளாண்மைத் தொழில் சார்ந்த பெரிய தொழில் துவங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8217, திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மானாமதுரையில் மண் சம்பந்தமான பொருட்களை உற்பத்தி செய்ய தகுந்த மண் வளம் உள்ளது. அதனால் இங்கு மண் சம்பந்தமான அரசு சேம்பர் தொழில் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6931, திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கம்பம் தொகுதியில் தென்னை, திராட்சை சார்ந்த தொழிற்பேட்டை உருவாக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3340, திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டத்தில் இரப்பர் தொழிற்சாலை நிறுவி, படித்த, படிக்காத இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9158, முனைவர் கு. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8307, திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாரமங்கலத்தில் பட்டு நெசவுத் தொழிற்சாலையை சிட்கோமூலம் பத்து ஏக்கர் நிலத்தில் அமைத்துக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3435, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டத்தில் பால் உற்பத்தி அதிகமாகச் செய்யப்படுவதால், பாலில் இருந்து உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருட்கள் தயாரிக்கும் தொழில் தொடங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1993, திரு. பெ.சு. விஜயகுமார்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "போளூர் தொகுதியில் படித்த இளைஞர்கள் நிறைய உள்ளனர்; வேலைவாய்ப்பின்றியுள்ளனர். எனவே, இங்கு தொழில் பேட்டை துவக்கி இளைஞர்கள், தொழில் முனைவோருக்கு வாய்ப்பு அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5114, )ரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம் சென்னை நகரத்தை )ட்டி அமைந்துள்ளதால் பெருகிவரும் மக்கள் தொகைக்கு ஏற்பவும், வேலையில்லா தொழிற்கல்வி கற்றவர்கள் நிறைந்துள்ள காரணத்தாலும், பொருளாதாரத்தில் பின்தங்கிய படித்த இளைஞர்கள் நிறைய பேர் பசிக்கின்ற காரணத்தாலும், அரசு புதியதாக அமையவிருக்கும் தொழிற்சாலைகளைப் பொன்னேரி பகுதியில் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1556, திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியம், விக்கிரமங்கலம் பஞ்சாயத்து, கீழப் பெருமாள்பட்டி கல் உடைக்கும் தொழிலாளர்களுக்கு, வேலை கொடுக்க அருகில் உள்ள பாறையில் கல் உடைக்க அனுமதி வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2018, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நன்னிலத்தில் ஏற்றுமதி தரம் வாய்ந்த அரிசியில் தயார் செய்யும் உணவுப் பண்டங்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5886, திரு. ஆர்.கே. பாரதி மோகன்.

**திரு. ஆர்.கே. பாரதி மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம் திருவிடைமருதூர் தொகுதியில் எவ்விதத் தொழிற்சாலையோ சிறிய தொழிற்பேட்டையோ கிடையாது. விவசாயத்தை மட்டுமே நம்பி வாழும் மக்கள் நலன் கருதி, அரசு சார்ந்த தொழிற்பேட்டை அமைத்துத் தந்து, ஏழையெளிய மக்கள் பலன்பெறவும், வேலைவாய்ப்புகள் அதிகரிக்கவும் வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5990, திரு. ஞா. ஜான் ஜோசப்.

**திரு. ஞா. ஜான் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டத்தில் கனரக இரப்பர் தொழிற்சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9096, திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஓமலூரில் பட்டு ஜரிகை தயாரிப்பு தொழிற்சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5064, திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்தணி தொகுதி, திருத்தணி நகரத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் தொழிற்சாலைகள் தொடங்கி, வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4151, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரத்தில் அரசு நூற்பாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6881, திரு. க. இராஜேந்திரன்.

**திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, "ஜெயங்கொண்டம் பகுதி, முந்திரி சாகுபடி அதிகம் உள்ள பகுதி; அங்கு அரசு சார்பில் முந்திரி தொழிற்சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2135, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர், திருப்பத்தூர், ஆம்பூர், செய்யாறு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் சக்கைகளிலிருந்து அதிக மின்சாரம் தயாரிக்கும் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6499, திரு. செ. சின்னச்சாமி.

**திரு. செ. சின்னச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மருங்காபுரி சட்டமன்றத் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. எனவே, மருங்காபுரி தொகுதியில் ஒரு தொழிற்சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5749, திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வடசென்னையில் உள்ள எண்ணூர் பகுதி சிறப்புப் பொருளாதார மண்டலமாக அறிவிக்கப்பட்டு, இதுவரை இப்பகுதியில் தொழிற்சாலைகள் அமைக்கப்படவில்லை. வேலைவாய்ப்பைப் பெருக்குகின்றவகையில், வடசென்னை மக்கள் பெரிதும்



பயன்படக்கூடிய வகையில, இப்பகுதியில், Special Economic Zone அமைத்து, உடனடியாகத் தொழிற்சாலைகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5762, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. "செங்கற்பட்டு தொகுதியில் திருக்கழுக்குன்றம் வட்டத்தில் தொழிற்சாலையே இல்லாத இந்த வட்டத்தில், புதிய தொழிற்சாலைகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6025, திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கரூர் சட்டமன்றத் தொகுதியில் இயங்கிவரும் தமிழ்நாடு காகித ஆலை நிறுவனத்தில் (TNPL) பணிபுரியும் ஒப்பந்தத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினைகள் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1960, திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆலங்குடியில் வாழைக்காய் அதிகமாக விளைவதால், அதை மையமாகக் கொண்டு, பெரிய தொழிற்சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1306, திரு. மா. சந்திரகாசி.

**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், பரவாய் பகுதியில் அரசு பருத்தி ஆலை அமைக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8012, திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் மாவட்டம், புவனகிரி தொகுதிக்குட்பட்ட பரங்கிப்பேட்டை ஒன்றியப் பகுதிகளில் அதிகம் பயிரிடப்படும் மலர்களைக் கொண்டு, அப்பகுதியில் வாசனைத் திரவிய தொழிற்சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5360, திரு. சு. குணசேகரன்.



***திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகங்கை பகுதியில் கிடைக்கும் உலகத் தரம் வாய்ந்த கிராபைட் திட்டம் விரிவாக்கம் மற்றும் உபதொழில்கள் துவங்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6122, திரு. எஸ். ராஜகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7275, திரு. வீர. இளவரசன்.

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருமங்கலம் தொகுதியில் மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கக்கூடிய கல்லக்குடி ஒன்றியப் பகுதியில், தொழிற்சாலை ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5639, திரு. மா. தண்டபாணி.

**திரு. மா. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டம், குஜிலியம்பாறையில் ஒரு தொழிற்பேட்டை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5658, திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேட்டுப்பாளையம் தொகுதியில், விஸ்கோஸ் உட்பட அத்தனை பெரிய தொழிற்சாலைகளும் பல்வேறு காரணங்களால் மூடப்பட்டுவிட்டன. இதனால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்து தவிக்கின்றனர். எனவே, தொழிலாளர்கள் நலன் கருதி, மேட்டுப்பாளையத்தில் தொழிற்பேட்டை ஒன்று புதிதாக அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5570, திரு. செ.ம. வேலுசாமி.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கல்லுகுழி கிரஷர் தொழிலுக்கு ஜல்லி, மெட்டல் கொண்டு செல்லும் வாகனங்களுக்குக் கட்டணம் கட்டுவதைத் தவிர்த்து, செங்கல் சூளைக்குக் கொடுப்பதுபோல் ஆண்டுக் கட்டணம் நிர்ணயிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 769, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மோகனூரில் உள்ள சர்க்கரை ஆலையின் அரைவைத் திறனை அதிகரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5412, திரு. மா. ராஜசேகரன்.

**திரு. மா. ராஜசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தொட்டியம் தொகுதி மிகவும் வறட்சிப் பகுதி; இங்கு சிறுதொழில் அல்லது பெரிய தொழிற்சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4464, திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இராஜபாளையம் தொகுதியில் நலிவுற்ற நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பெற்ற கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8070, திரு. ஆர். ஞானதாஸ்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகாசி தொகுதியில் குடிசைத் தீப்பெட்டித் தொழிலுக்குத் தேவையான பாதுகாப்பு மூலப்பொருட்கள் தட்டுப்பாடின்றிக் கிடைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7926, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், கலசபாக்கம் தொகுதியில் உள்ள ஏழை எளிய மக்களின் வேலைவாய்ப்பைப் பெருக்கும்வகையில், புதிய தொழிற்சாலைகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

## (ஆ) கோரிக்கை எண் 31 – தகவல் தொழில்நுட்பவியல் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 31—தகவல் தொழில்நுட்பவியல் துறை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 784,42,93,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 2294, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் தகவல் தொழில்நுட்பவியலைக் கட்டாயப் பாடமாக ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.784,42,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9135, திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சோளிங்கர் தொகுதியில், தகவல் தொழில்நுட்பவியல் தகவல் மையம் அமைக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.784,42,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7384, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.784,42,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2854, திரு. என்.ஆர். ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பட்டுக்கோட்டை பகுதியில், புதிய தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.784,42,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3273, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.784,42,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4790, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தகவல் தொழில்நுட்பவியல் தொழில்கள் தமிழகத்தில் வர, முதல்வர் வெளிநாடு சென்று முயற்சி மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.784,42,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9388, திரு. து. செல்வராஜ்.

**திரு. து. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலியில் 'டைடல் பார்க்' அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.784,42,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2367 திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.784,42,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5022. திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், ஆற்காடு சட்டமன்றத் தொகுதியில், அரசுக் கணினிப் பயிற்சிக் கல்லூரி துவக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.784,42,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6204, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மென்பொருள்கள் ஏற்றுமதியை ஊக்குவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.784,42,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7139, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தகவல் தொழில்நுட்பவியல் துறையில், உயர் கல்வி முடிந்தவுடன் வேலைவாய்ப்பு, அரசு அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.784,42,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7368, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் தொகுதியில்

உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குக் கணினிப் பயன்பாட்டைப் பற்றிய பயிற்சி நடத்தவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.784,42,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

முற்பகல் 10–50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7475, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், மேட்டூர் அணை, தொழிற்சாலைகள் நிறைந்த நகரம். மேட்டூரில் தொழில் துவங்க அனைத்து வசதிகளும் உள்ளன. எனவே, மேட்டூரில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.784,42,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8371, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தகவல் தொழில்நுட்பவியல் மாணவர்களுக்குத் தமிழில் புத்தகங்கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.784,42,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8531, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பண்ருட்டி தொகுதி மாணவர்களுக்கு, இலவசமாகத் தகவல் தொழில்நுட்பப் பயிற்சி அளித்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.784,42,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2783, திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.784,42,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3110, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை, இலந்தைகுளம் மற்றும் காமராஜர் பல்கலைக்கழகப் பகுதியில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா மற்றும் 'டைடல் பார்க்' அமைக்க இடம் தேர்வு செய்தும், இன்னும் இப்பணியைத் துவக்காமல் உள்ளதை மாற்றி பணியை உடன் துவக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.784,42,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3852, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.784,42,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8825, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இணையதளத்தின்மூலம் சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோருக்கும், ஊரகப் பகுதிகளில் பணியாற்றுவதற்கும் 'எல்காட்' நிறுவனத்தின்மூலம் பயிற்சி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.784,42,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6706, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தகவல் தொழில்நுட்பவியல் பயிற்சி, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.784,42,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7250, திரு. பெ.சு. விஜயகுமார்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இலவச வண்ணத தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டத்தின்கீழ், போளூர் தொகுதியிலும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.784,42,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2147, திரு. சி. ஞானசேகரன்.



**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூரில் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.784,42,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7319, திரு. மா. சந்திரகாசி.

**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரம்பலூர் மாவட்டத்தில் கணினிப் பூங்கா (Computer Park) அமைக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.784,42,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8471, திரு. செ. பொன்னுதுரை.

**திரு. செ. பொன்னுதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெருந்துறை தொகுதியில் உள்ள சிப்காட்–ல், 'டைடல் பார்க்' (தகவல் தொழில்நுட்பப் பூங்கா) புதிதாக ஏற்படுத்தித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.784,42,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6140, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், பேரூர் தொகுதி, கோவை மாவட்டத்தில் 'டைடல் பூங்கா' அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.784,42,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6930, திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அனைத்து நடுநிலைப் பள்ளிகளுக்கும் கணினி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.784,42,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6019, திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கரூர் சட்டமன்றத் தொகுதி, textile வர்த்தகம், கொசு வலை, bus body கட்டுதல் போன்ற தொழில் நகரமாகும். ஆகையால், தகவல் தொழில்நுட்பப் பூங்கா கரூரில் அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.784,42,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5113, திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், தொழில் அமைதி நிறைந்த இடம். பொன்னேரி தொகுதியில், சென்னை–கொல்கத்தா தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி, பொன்னேரி, கும்மிடிப்பூண்டி, திருவள்ளூர் தொகுதி மக்களும், தகவல் தொழில்நுட்பவியல் கல்வி கற்கும் மாணவர்களும் பயன்பெறும்விதத்தில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.784,42,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5039, திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்தணி தொகுதி, திருத்தணி நகரைச் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த இளைஞர்கள் பயன்பெறுகின்றவகையில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா ஒன்றை அமைத்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.784,42,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2019, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தகவல் தொழில்நுட்பம் பற்றி இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.784,42,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3219, திரு. து. ரவிக்குமார்.

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாவட்டந்தோறும் B.P.O. மையங்கள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.784,42,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5747, திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வடசென்னையில் உள்ள எண்ணூர் பகுதியில் (Computer Hardware Industry) கணினி வன்பொருள் தொழிற்சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.784,42,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6869, திரு. ஏ.கே. போஸ்:

**திரு. ஏ.கே. போஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு அரசும், மத்திய அரசின் மென்பொருள் தொழில்நுட்பப் பூங்கா நிறுவனமும் இணைந்து, கோவையில் 'டைடல் பூங்கா' அமைக்கவிருப்பதைப் போன்று, மதுரையிலும் 'டைடல் பூங்கா' அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.784,42,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3316, திரு. ஆர். சாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9186, முனைவர் கு. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4860, திரு. எஸ்.வி. சேகர், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5156, திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கரன்கோவில் தொகுதியில் படித்த இளைஞர்களுக்கு அரசின்மூலம் கம்ப்யூட்டர் வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.784,42,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2895, திரு. கு. செல்வம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2707, திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டம், தளி சட்டமன்றத் தொகுதியில் கெலமங்கலத்தில் தகவல் மற்றும் தொழில்நுட்பவியல் பேட்டை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.784,42,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4131, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒவ்வொரு ஊராட்சிக்கும் ஒரு கணினி வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.784,42,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3810, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தர்மபுரி சோலைக்கொட்டாய் கிராமம் அருகில் 'செல்ஃபோன் டவர்' அமைக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.784,42,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5549, திரு. செ.ம. வேலுசாமி.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டத்தில் அரசு ஆரம்பிக்கவுள்ள தொழில்நுட்பவியல் பூங்காவைக் கருத்தம்பட்டியில் (பல்லடம் அருகே) ஆரம்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.784,12,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8709, திரு. சி. கோவிந்தசாமி.

***திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டத்தில் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.784,12,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9271, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டத்தில் அரசின் தகவல் தொழில்நுட்பவியல் துறையின்சார்பில் தொழிற் பூங்கா அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.784,12,93,000/-ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.



**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறை, தகவல் தொழில்நுட்பவியல் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள், தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சேற்றப்பெற்று, உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலுள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை" நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என் பதிலுரையிலே அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். எல்லா கட்சிகளினுடைய தலைவர்களும் பேச இருக்கிறார்கள். இதிலே எல்லோருமே பேசக்கூடியவர்கள். 10 நிமிடத்திற்கு மிகாமல் பேச வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம்செய்வோம், ஆலைகள் வைப்போம்" என்ற மகாகவி பாரதியின் கனவினை நனவாக்கும்வகையில், அம்மா அவர்களின் கடுமையான உழைப்பினாலும், நிர்வாகத் திறமையினாலும், தமிழ்நாடு, உற்பத்தித் துறை முதலீட்டில், இந்தியாவிலேயே முதல் மாநிலம் என்ற நிலையை அடைந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) உலகிலுள்ள முதலீட்டாளர்கள் விரும்பி, முதலீடு செய்து, தங்கள் தொழில் நிறுவனங்களைத் தொடங்க உகந்த மாநிலமாக, தமிழ்நாட்டைத் தேர்ந்தெடுத்தார்கள். சர்வதேசத் தரம் வாய்ந்த தொழில் நகரமாக, சென்னையை அம்மா அவர்கள் உருவாக்கிக் காட்டினார்கள். அதற்குப் பல காரணங்கள் உண்டு. ஆதரவான அரசுக் கொள்கைகள், உறுதியான உட்கட்டமைப்பு அடித்தளம், வசதியான ஆற்றலுள்ள நிலைமை, ஏராளமான திறமை பெற்ற மனித ஆற்றல், அமைதியான வாழ்க்கைச் சூழ்நிலை, வலிமையாகச் செயல்படுத்தப்பட்ட சட்டம்–ஒழுங்கு, முரண்பாடற்ற தொழில் உறவுகள். இவற்றோடு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவாற்றல், இடைவிடாத உழைப்பு, மற்ற மாநிலங்களைவிட தமிழ்நாட்டை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்ல வேண்டுமென்ற அளவிட முடியாத ஓர் அக்கறை, (மேசையைத் தட்டும் ஒலி) இவையெல்லாம் சேர்ந்து, அம்மா அவர்களின் ஆட்சியிலே தொழில் துறையிலும், தகவல் தொழில்நுட்பத் துறையிலும் தொழிலில் ஒரு மிகப் பெரிய புரட்சியே ஏற்பட்டது. இந்த உண்மையை

" 515 முதல் 611 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I மற்றும் II ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

நாங்கள் சொன்னால் கசப்பாக இருக்கும்; கடுப்பாகவும் உங்களுக்கு இருக்கும். உங்கள் ஆதரவுடன் நடைபெறும் மத்தியக் கூட்டணி அரசே, இதை ஒப்புக் கொண்டிருக்கிறது. 2005 ஆம் ஆண்டுக்கான மத்திய அரசின் பொருளாதாரக் கணக்கெடுப்பின் இடைக்கால அறிக்கையைப் புள்ளியல் மற்றும் திட்ட அமலாக்கத் துறையின் இராஜாங்க அமைச்சர் திரு. ஜி.கே. வாசன் அவர்கள் டெல்லியிலே வெளியிட்டார்கள். அந்த அறிக்கையில், தொழில் துறையில் தமிழ்நாடு முதலிடத்தில் இருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டில், சுமார் 44 இலட்சத்து 46 ஆயிரம் தொழிலகங்கள் இருப்பதாகவும், இது நாட்டின் மொத்த சதவிகிதத்தில் 10.56 சதவிகிதம் என்றும் கூறப்பட்டிருக்கிறது. தொழில் துறையில், மராட்டியம், மேற்கு வங்காளம் இரண்டாவது மற்றும் மூன்றாவது இடத்தில் இருப்பதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சுமார் 98,66,000 பேருக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தியிருப்பதன்மூலம் வேலைவாய்ப்பில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் இருப்பதாக அந்த இடைக்கால அறிக்கையிலே குறிப்பிடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது மத்திய அரசின் அறிக்கையில், மத்திய இராஜாங்க அமைச்சர் திரு. ஜி.கே. வாசன் வெளியிட்ட அறிக்கையில், கிராமப்புறங்களில் தொழில் துறை முன்னேற்றம் கண்டிருப்பதாகவும், அந்த இடைக்கால அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*முற்பகல் 10–55*

மாநிலத்தின் மொத்த உறபத்தி வளர்ச்சி. அதாவது, Growth of Gross State Domestic Product, 2000–2001–ல் 1,41,100 கோடி ரூபாயாக இருந்தது. 2004–2005–ல் 1,88,928 கோடியாக இருந்தது. அதாவது, அம்மா அவர்களின் ஆட்சியில், 2001–லிருந்து இப்போது 74.61 சதவிகிதம் அதிகரித்துள்ளது. என்பதை மகிழ்ச்சியோடு இங்கே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைத்தான் 'Business Standard' என்ற பத்திரிகையில், "Tamil Nadu has climbed from 5th to Top Spot in 2005 in terms of ease of doing business" என்று அன்றையதினம் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறது. FDI என்ற சர்வதேசத் தொழில் பற்றிய பத்திரிகை, ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது. உலகிலேயே அதிக வெளிநாட்டுத் தொழில் முதலீட்டை ஈர்க்கும் பகுதியாக ஆஸ்திரேலிய நாட்டில் உள்ள நியூ சௌத் வேல்ஸ் முதலிடத்தில் இருந்தது. அந்தப் பத்திரிகை FDI Magazine— Financial Times Group குறிப்பிடும்போது, 'Tamil Nadu wins the title Asian Region of the future 2005-2006 taking the first place in all important category of Best FDI potential' என்று தெளிவாகவே அந்த FDI



பத்திரிகை குறிப்பிட்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) 2005–2006–ல், அது இரண்டாம் இடத்திற்குத் தள்ளப்பட்டு, தமிழநாடு முதலிடத்தைப் பிடித்திருப்பதாக அந்தப் பத்திரிகையே ஆதாரபூர்வமாக செய்தி வெளியிட்டது. ஒரு மாநிலம், அது சார்ந்துள்ள நாட்டோடு போட்டி போடுவது இயற்கை; ஆனால் உலக நாடுகளோடு ஒரு மாநிலம் போட்டியிட்டு வெற்றி பெற்றிருப்பது, மாண்புமிகு அம்மா அவர்களின் சாதனைகளுக்கெல்லாம் சிகரம் வைத்தது போன்ற இமாலய, மிகப் பெரிய சாதனையாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

அம்மா அவர்களின் ஆட்சியில், தொழில் வளம் மேலும் மேலும் பெருகிட, உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டது. சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின்கீழ், 18 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் சென்னை மாநகரத்தில் சாலைகள், மேம்பாலங்கள், பூங்காக்கள் அமைக்கவும், குடிநீர் வசதியைப் பெருக்கவும் திட்டம் தீட்டி செயல்படுத்தப்பட்டது.

அம்மா அவர்களின் சிறப்புமிக்க தொழில் கொள்கையால், நாட்டிலேயே முதன்மையான மாநில அளவிலான நிதி நிறுவனமான, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், இந்தியத் தரக் கட்டுப்பாட்டுச் செயலகத்தில் இருந்து, "ISO 9001–2002" என்ற தரக் கட்டுப்பாட்டுச் சான்றிதழைப் பெற்றுள்ளது. 2001–2005 ஆகிய 5 ஆண்டுக் காலத்தில் ரூபாய் 1,030 கோடி கடன் உதவி அனுமதிக்கப்பட்டு, ரூபாய் 750 கோடி கடன் உதவி வழங்கப்பட்டது. 64,740 வேலைவாய்ப்புகள் இதன்மூலம் உருவாக்கப்பட்டன. 2004–2005 ஆம் ஆண்டு, மாநிலத்தின் வளர்ச்சி விகிதம் 8.73 சதவிகிதம் ஆகும். உற்பத்தித் துறையில் 8.7 சதவிகிதம் ஆகும்.

2001–2002–ல் தமிழ்நாட்டின் மூலதன பட்ஜெட், ரூபாய் 1,777.91 கோடி என்று இருந்ததை 2005–2006–ல் ரூபாய் 4,791.64 கோடியாக அம்மா அவர்கள் உயர்த்தி (மேசையைத் தட்டும் ஒலி) நகர்ப்புறங்களிலே கட்டமைப்பு வசதிகள், சாலை வசதிகள், மின்சாரம் உட்பட பல்வேறு துறைகளுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்து வரலாற்றை ஏற்படுத்தினார்கள்.

வளர்ந்துவரும் தொழில் வளர்ச்சிக்கு மின் தேவையை உற்பத்தி செய்யும்வகையில், மின் துறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, அதாவது புரிந்துணர்வு ஒப்பந்தம், N.L.C.-யோடு 1,000 மெகா வாட் அனல் மின் உற்பத்தி; தூத்துக்குடியில், N.T.P.C.-யோடு 1,000 மெகா வாட் திறன்கொண்ட மின் உற்பத்தி; இதேபோன்று—Special Economic Zone—சிறப்புப் பொருளாதார மண்டில நிலைய மேம்பாட்டுக்காகவும் சட்டம் கொண்டு வந்தார்கள்.

'எங்கும் கணினி, எதிலும் கணினி' என்று கணினிமயத்தை அனைத்துத் துறைகளிலும் முழுமையாக நடைமுறைப்படுத்தி, தமிழகம் தகவல் தொழில்நுட்பவியலுக்கு மிகச் சிறந்த இடமாக உலக அரங்கில் பெயர்பெறக் காரணமாயிருந்தவர், மாண்புமிகு அம்மா அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

புதிய தகவல் தொழில்நுட்பக் கொள்கையை உருவாக்கி, தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைக் கொள்கை 2005-ஐயும் உருவாக்கி மற்றும் உலக அளவில் தகவல் தொழில்நுட்பவியலைச் சார்ந்த சேவைத் துறைகளின் தலைநகரமாக தமிழகம் உருவாக்கப்பட்டது. இந்தக் கொள்கைகள்தான் தமிழகத்திற்கு உலகம் முழுவதிலுமிருந்து அதிக முதலீடுகளைக் கொண்டுவருவதற்குக் காரணமாக அமைந்தன. தனியார் துறையில் 70–க்கும் மேற்பட்ட தகவல் தொழில்நுட்பவியல் பூங்காக்களை, 20 மில்லியன் சதுர அடி பரப்பளவில் உருவாக்குவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. 2006–ல், 6 மில்லியன் சதுர அடி பரப்பளவு உள்ள கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு, வர்த்தகத்தைத் தொடங்கக் காரணமாக இருந்தவர், நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

தமிழ்நாட்டில் சென்னை மட்டுமின்றி, கோவை, மதுரை, திருச்சி போன்ற இரண்டாம் நிலை நகரங்களைத் தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனங்கள் தொடங்க, உகந்த இடங்களாக முதலீட்டாளர்கள் தேர்வு செய்ய, அனைத்து நடவடிக்கைகளையும் அம்மா அரசு எடுத்தது.

மென்பொருள் நிறுவனங்கள் அதிகமானதும், மென்பொருள் ஏற்றுமதி அதிகமானதும் அம்மா அவர்களின் ஆட்சியில்தான். *(மேசையைத் தட்டும் ஒலி)* 2000–2001–ல் 3,016 கோடி ரூபாய் அளவிலிருந்த தகவல் தொழில்நுட்பத் துறை ஏற்றுமதியை, 2005–2006 ஆம் ஆண்டில் 15,000 கோடி ரூபாயைத் தாண்டி, வரலாற்றை ஏற்படுத்தியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*(முற்பகல் 11–00)*

அதேபோல, மென்பொருள் நிறுவனங்களின் எண்ணிக்கை 2000–2001–ல் 520 என்ற அளவிலே இருந்தன. 2005–2006–ல் 1,400 மென்பொருள் நிறுவனங்கள் நிறுவப்பட்டன. 2005 ஆம் ஆண்டில் மட்டும் 400 புதிய நிறுவனங்கள் நிறுவப்பட்டன. அதாவது ஒரு நாளைக்கு ஒரு மென்பொருள் நிறுவனம் என்ற வரலாறு, அம்மா அவர்களால் படைக்கப்பட்டது. *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்த வளர்ச்சியின்மூலம் தமிழ்நாட்டில் படித்த இளைஞர்கள்



யன்பெற்றதும், அதிக அளவில் வேலைவாய்ப்புகள் உருவாக்கியதும் ‹ம்மா அவர்களுடைய ஆட்சியில்தான்.

பொது மற்றும் தனியார் தகவல் சேவையாளர்கள்—Public and Private ommunication Providers—i.e. PPCPs இணைந்து, ஏறக்குறைய 44,000 )லோ மீட்டர் தூர அளவிற்குக் கண்ணாடி ஒளி இழைவடங்களை– Optic Fibre Cable (OFC)—மாநிலம் முழுவதும் பதித்துள்ளதன்மூலம், ,மிழகம் பெரும்பான்மைப் பகுதிகளோடு இணைக்கப்பட்டு, ]ந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக உயர்த்தப்பட்டது. ıன்னாட்டுத் தொடர்புக்காக "Bharti" நிறுவனத்தார், 8.2 Terabyte )றன்கொண்ட ஏற்கெனவே பதிக்கப்பட்டுள்ள ஒளி இழைவட இணைப்புக்குக் கூடுதலாக "Videsh Sanchar Nigam Limited" என்ற )றுவனத்திற்கு, 5.12 Terabyte திறன்கொண்ட ஒளி இழைவடத்தை ஆழ்கடலில் பதிக்க அம்மாவின் அரசு ஒப்புதல் வழங்கியது.

ஊரகப் பகுதிகளில் வாழும் மக்களுக்காக, பொது மற்றும் தனியார் கூட்டமைப்பில் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டன. அவற்றின்மூலம் சேவை வழங்குதல், இணையதள ஊரகச் சேவை 'RASI" உள்ளடங்கியதாகும். 2,500 "RASI" மையங்கள் தமிழ்நாட்டிலே அமைக்கப்பட்டன.

தமிழ்நாடு மின்சார வாரியம், சென்னைக் குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் ஆகியவற்றின் சேவைகளை உள்ளடக்கிய 10 முன்னோடி மையங்களில் மின்னணுச் சேவை வழங்கப்பட்டது.

1,200 கிராமப் பஞ்சாயத்துக்கள் கணினிமயமாக்கப்பட்டன. மேலும், 5,500 கிராமப் பஞ்சாயத்துக்களும், 6,000 கிராமப் பஞ்சாயத்துக்களும் கணினிமயமாக்கப்பட முயற்சிகள் முழுமையாக எடுக்கப்பட்டன.

தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் சான்றிதழ்க் கல்வியையும், பட்டக் கல்வியையும் மாண்புமிகு அம்மா அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

தமிழ் இலக்கிய நூல்களின் சிறந்த தொகுப்பாக உள்ள இந்த மின்னூலகத்தைப் பலரும் பயன்படுத்தும்பொருட்டு, நூலகக் கட்டணம் நீக்கப்பட்டது. மின்னூலகத்தில் 217 புத்தகங்கள் இணைய தளத்தில் இடப்பட்டுள்ளன.

சான்றிதழ்க் கல்விக்குப் பதிவு, பட்ட வகுப்பிற்குப் பதிவு, பாடங்களைப் பார்வையிடமட்டும் பதிவு, நூலகத்தைப் பயன்படுத்த பதிவு எனப் பல்வேறு கல்வித் திட்டத்தின்கீழ், 58 நாடுகளைச் சேர்ந்த 9,561 மாணவர்கள்

பதிவுசெய்து பயன்பெற்றுள்ளனர். அதாவது, தமிழ் மென்பொருள் வளர்ச்சி நிதியை உருவாக்கி, தமிழ் மென்பொருள் வளர்ச்சி நிதியின்கீழ் கீழ்க்கண்ட தமிழ் மென்பொருள்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

1. பொன்விழி – ஒளிவழித் தமிழ் எழுத்துரு அறிவி

2. தமிழ் தேடுபொறி

3. தமிழ் இணையதள உலாவி

4. தமிழ் விண்டோஸ் 95, 98

5. இதம் 2000 – தமிழ் சொற்செயலி

6. தமிழ் அச்சு எழுத்திலிருந்து ஒலி உருவாக்கும் மென்பொருள்

பொன்விழி – தமிழ் OCR என்னும் தமிழ் மென்பொருள், மாண்புமிகு அம்மா அவர்களால் 2002 ஆம் ஆண்டு ஜூலை 22 ஆம் நாளன்று வெளியிடப்பட்டது.

தமிழ்நாட்டிற்கு வருகைதரும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள், குறைந்த அளவு தமிழைக் கற்று, தங்கள் அலுவல்களை மேற்கொள்ளும்வகையில், பயணிகள் தமிழ்ப் பாடங்கள் தயாரிக்கப்பட்டு, இணையதளப்படுத்தும் நிலை உருவாக்கப்பட்டது.

தமிழ் இணையம் 2003 மாநாடு, ஆகஸ்ட் திங்கள் 22 ஆம் நாள் மாண்புமிகு அம்மா அவர்களால் தொடங்கி வைக்கப்பெற்றது. இம்மாநாட்டில் பல்வேறு நாடுகளிலிருந்து 245 சார்பாளர்கள் கலந்துகொண்டனர். (மணியடிக்கப்பெற்றது)

சொத்துப் பதிவுத் துறையில், ரெஜிநெட் திட்டத்தின்மூலம் தமிழ்நாட்டில் உள்ள 325 பத்திரப் பதிவு அலுவலகங்களும் இணைக்கப்பட்டு, மாநிலத்தின் எந்தப் பதிவுத் துறை அலுவலகத்தில் இருந்தும் வில்லங்கச் சான்றிதழ் பெற வழிவகை செய்யப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே எங்களுக்குக் கொடுக்கப்பட்ட அந்த கொள்கை விளக்கக் குறிப்புகளை நாங்கள் படிக்கும்போது, பொதுவாகவே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் துறைக்கு மொத்தம் வருவாய்க் கணக்கில் 85,13,38,000/– ரூபாயும், மூலதனக் கணக்கில் ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.68,00,00,000/–ரூபாயும் இங்கே கோரியிருக்கிறார்கள். நான் இங்கே கேட்க விரும்புவது, கிட்டத்தட்ட கொள்கை விளக்கக் குறிப்பிலே அதாவது, – பக்கம் 6, பக்கம் 7, பக்கம் 8 என இந்த 3



பக்கங்களையும் பார்க்கும்போது, எண்ணூர் சிறப்புப் பொருளாதார மண்டல நிறுவனம் குறித்து வந்துள்ளது சுமார் 2,500 ஏக்கர் நிலம் எண்ணூர் துறைமுகம் அருகிலே இந்த சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருக்கின்ற தொகை என்று சொல்லும்போது, 900 கோடி என்று இங்கே நீங்கள் தெரிவித்திருக்கின்றீர்கள். அதேபோன்று, 'டிட்கோ' நிறுவனத்திற்கு மத்திய அரசிடமிருந்து, அதாவது கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் மற்றும் தேன்கனிக்கோட்டை ஆகிய வட்டங்களில் சுமார் 1,055 ஹெக்டேர் பரப்பளவில் பலவகை தயாரிப்புப் பொருட்களை உற்பத்தி செய்ய, சிறப்புப் பொருளாதார மண்டலத்தை ஏற்படுத்துவதற்கு 2005, டிசம்பர் திங்களில் 'கொள்கை அளவில்', 'டிட்கோ' நிறுவனத்திற்கு, மத்திய அரசிடமிருந்து ஒப்புதல் கிடைத்துள்ளது. உத்தேச சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்கான அங்காடி ஆய்வு மற்றும் தொடக்க சாத்தியக்கூறு ஆகியவை முடிக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்திற்கு செலவு ரூ. 500 கோடி என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அதேபோன்று, திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரியில் உயர் தொழில்நுட்பப் பூங்காவை அபிவிருத்தி செய்வதற்காக, 640 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. மொத்தம் சேர்த்தால், கிட்டத்தட்ட—ரூ.1,100 கோடி; இது ஒரு, கிட்டத்தட்ட—2,000 கோடி ரூபாய். ஆனால், 2,000 கோடி ரூபாய் இந்த நிதிநிலை அறிக்கையிலே எங்கே ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தங்களுடைய பதிலுரையிலே தெரிவிக்க வேண்டும் என்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-05

அதேபோன்று, மோட்டார் வாகன சோதனை மையம் அமைப்பதுபற்றி ஒரு விளக்கத்தை நான் இங்கே தெளிவாக்க விரும்புகின்றேன்:

அம்மா அவர்களின் ஆட்சியில், 15–12–2004–ல், கனரக நிறுவன மற்றும் பொது நிறுவன அமைச்சகங்களின் மத்தியக் குழு, தமிழகத்திற்கு வருகைதந்து, தமிழகத்தில் சென்னைக்கு அருகே அதிநவீன மோட்டார் வாகன சோதனை மையம் நிறுவுவதற்கான இடங்களைப பார்வையிட்டு அரசிடம் கலந்தாய்வு செய்தது. மத்தியக் குழு பார்வையிட்டுச் சென்றபிறகு, சென்னைக்கு அருகில் மோட்டார் வாகன மையத்தினை அமைத்திடுமாறு, மாண்புமிகு அம்மா அவர்கள், 30–03–2005–ல் மத்திய அரசுக்குக் கடிதம் எழுதினார்கள். 11–04–2005–ல் திரு. நரேன் கார்த்திகேயன் அவர்கள், அம்மா

அவர்களைச் சந்தித்து, மோட்டார் வாகன சோதனை மையத்தையும், மோட்டார் வாகன ஓடுபாதையையும் தமிழகத்தில் அமைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். அவரிடம் அம்மா அவர்கள், தான் ஏற்கெனவே இதுகுறித்து மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியிருப்பதாகத் தெரிவித்தார்கள். 11–05–2005–ல், அம்மா அவர்களின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்படுவதாக மத்திய அரசு, தமிழக அரசுக்குக் கடிதம் எழுதியது. இவற்றிற்கெல்லாம் பிறகு, 11–06–2005–ல், இன்றைய முதல்வர், இதே கோரிக்கைக்காக பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதினார். 14–06–2005–ல் வாகன சோதனை மையம் தமிழ்நாட்டில் அமைக்கவேண்டிய காரணங்களை எடுத்துச்சொல்லி, அதைச் சென்னையில் அமைக்குமாறு மத்திய அரசுக்கு அம்மா அவர்கள் மீண்டும் கடிதம் எழுதினார்கள். ஆனால், 02–07–2005 அன்று மதுரையில் நடைபெற்ற சேதுசமுத்திரத் திட்டத் தொடக்க விழா மேடையில், இன்றைய முதல்வர், வாகன சோதனை மையத்தைச் சென்னையில் அமைத்திடுமாறு கோரிக்கை விடுப்பதுபோல் விடுத்து, அதைப் பிரதமரும் ஏற்றுக்கொண்டதைப் போல ஒரு நாடகத்தை நடத்திக் காட்டினார்கள். அந்த நிகழ்ச்சியில், இன்றைய முதல்வர், பிரதமரிடம் கோரிக்கை வைப்பதற்கு முன்பாகவே அதைப் பிரதமரும் ஒத்துக்கொண்டதற்கு முன்பாகவே, பத்திரிகையாளரிடம் தரப்பட்ட பிரதமரின் உரையில், நீங்கள் கேட்டதும், அவர் ஒப்புக்கொண்டதும் இடம் பெற்றிருந்ததே, அது எப்படி என்பதை விளக்க வேண்டும். நீங்கள் ஏற்கெனவே திட்டமிட்ட நாடகத்தினுடைய நகல்கள் அவை. தேசிய மோட்டார் வாகன சோதனை மையம், தமிழகத்திற்குக் கிடைத்ததற்கு முழு முதற்காரணம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மாவின் முயற்சியால் கிடைத்த அந்த மையத்திற்கு தி.மு.க. அரசு, எந்தவகையிலும் உரிமை கொண்டாட முடியாது.

General Motors, அமெரிக்காவின் மிகப் பெரிய கார் தயாரிப்பு நிறுவனம். இந்நிறுவனம், தமிழ்நாட்டில் தொழிற்சாலை தொடங்க வேண்டுமென்று, தமிழக அரசுடன் பலமுறை பேச்சுவார்த்தை நடத்தி, ஒரு முடிவு ஏற்பட்டு, தேர்தல் முடிந்தபிறகு, MoU-வில்—புரிந்துணர்வு ஒப்பந்தத்தில்—கையொப்பம் இடுவதாக இருந்தது. அவர்கள் இங்கு தொழிற்சாலை தொடங்கியிருந்தால், தமிழகம் கார் உற்பத்தி செய்வதில் முதலிடத்தைப் பெற்றிருக்கும். அதற்குள், ஆட்சி மாற்றம் ஏற்பட்டுவிட்டதால், அவர்கள் பயந்துபோய், தமிழ்நாட்டுப் பக்கம் தலைவைத்துப் படுக்கக்கூடாது என்று கருதி, மகாராஷ்டிராவிலே தொழிற்சாலை அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்துவிட்டனர். வந்து தொழில் செய்வதற்குத் தயாராக இருந்தவர்கள்கூட, பயந்து ஓடுகின்ற



நிலை, இந்த ஆட்சியிலே. ஒரு இலட்ச ரூபாய்க்கான குறைந்த விலையில் கார் தொழிற்சாலை, ரத்தன் டாடா நிறுவனத்தினர், தமிழ்நாட்டிலே நிறுவுவதற்கு அம்மா அவர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவதற்குத் திட்டமிட்டிருந்தனர். அப்போது, மாண்புமிகு அம்மா அவர்கள், தேர்தல் சுற்றுப்பயணத்திலே இருந்ததால், தேர்தல் முடிந்தபிறகு இதுகுறித்துப் பேசுவதாக இருந்தது. ஆட்சி மாற்றத்தாலும், ரத்தன் டாடா மிரட்டப்பட்டதாலும், அந்நிறுவனத்தினர் மேற்கு வங்காளத்தில் தொழிற்சாலை அமைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்துவிட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 16 நிமிடங்கள் ஆகிவிட்டன; திரு. ஜெயக்குமார், 16 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. டி. ஜெயக்குமார்:** இன்னும் 2 நிமிடங்கள். மேற்கு வங்காளத்தில் தொழிற்சாலை அமைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்துவிட்டார்கள். இதுபோல, தற்போதைய தி.மு.க. அரசால், நிறைய வாய்ப்புகளைத் தமிழ்நாடு தொடர்ந்து இழந்து வருகிறது.

சிலர், வெளிநாட்டுப் பொருள் என்று ஆசை ஆசையாக வாங்கி வருவார்கள். உண்மையிலேயே, அது இந்தியாவிலே செய்யப்பட்ட பொருளாக இருக்கும். Label மட்டும் வெளிநாட்டு label ஒட்டப்பட்டிருக்கும். அதைப்போலத்தான், அம்மாவினுடைய ஆட்சியிலே தொடங்கப்பட்ட திட்டங்களுக்கும், தொழில்களுக்கும் தி.மு.க. label ஒட்டி மக்களை ஏமாற்றிக்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஓர் உண்மை தெளிவாகிறது. அம்மா ஆட்சியிலே, தொழில் தொடங்குவது ஒரு குழந்தை, பெற்ற தாயிடம் வளர்வது போல. ஆனால், தி.மு.க. ஆட்சியில் தொழில் தொடங்குவது என்பது, குழந்தை மாற்றாந்தாயிடம் வளர்வது போல. பெற்ற தாய்க்கும், மாற்றாந்தாய்க்கும் உள்ள வித்தியாசம், தொழில் அதிபர்களுக்கும் தெரியும்; (மணியடிக்கப்பெற்றது) தமிழ்நாட்டு மக்களுக்கும் தெரியும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** வளர்ப்பு மகன் போல. அது இன்னும் சரியாக இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்.

**திரு. டி. ஜெயக்குமார்:** பெற்ற தாய்க்கும், மாற்றாந்தாய்க்கும் உள்ள வித்தியாசம், தொழில் அதிபர்களுக்கும் தெரியும், தமிழ்நாட்டு மக்களுக்கும் தெரியும் என்று கூறி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** ஒரு விளக்கம் மட்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 11-10*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் மட்டும். (குறுக்கீடு) ஒரு விளக்கம் மட்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே பேசும்போது, ஏதோ இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு, பல தொழிற்சாலைகள் வெளி மாநிலங்களுக்குப் போய்விட்டதாகச் சொன்னார்கள். அ.தி.மு.க. ஆட்சியிலே இருந்தபோதுதான், நம்முடைய மாநிலத்திற்கு வரவேண்டிய பல தொழிற்சாலைகள், கர்நாடகாவிற்கும், ஆந்திராவிற்கும் போய்விட்டன. இப்போது இந்த ஆட்சிப் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகுதான், நோக்கியா M.o.U.-வில் கையொப்பம் செய்திருக்கிறது; Motorola கையொப்பம் செய்திருக்கிறது. இன்னும் ஒன்று. Semi-conductor தொழிற்சாலை; தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள், அமெரிக்காவிலே போய் பல ஆண்டுக் காலம் வாழ்ந்து, இந்த நாட்டிலே அந்தத் தொழிற்சாலையைத் தொடங்க வேண்டுமென்று, மத்திய அரசை அணுகி, மத்திய தொழில்நுட்பத் துறை அமைச்சர், 10 கடிதங்கள் எழுதியும் பதில் கிடைக்காத காரணத்தால், 10, 20 தினங்களுக்கு முன்னாலேதான், தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில், அவர்கள் Semi-conductor தொழிற்சாலை நிறுவ, 1,000 கோடி ரூபாயிலே ஒப்பந்தம் செய்து கொண்டார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன். (குறுக்கீடுகள்) இல்லை, ஏதாவது கேட்பதாக இருந்தால், கடைசியிலே கேட்கலாம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை மானியத்தின்மீது பேசுவதற்கு வாய்ப்புத் தந்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவைத் தேர்தலிலே போட்டியிடுவதற்கு வாய்ப்புத் தந்த கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சி



மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் மாண்புமிகு தளபதி அவர்களுக்கும், மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கும், மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத். தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று, வில்லிவாக்கம் சட்டப் பேரவைத் தொகுதியிலே அடங்கியுள்ள வாக்காளப் பெருமக்களுக்கும் மற்றும் கூட்டணிக் கட்சி நண்பர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கழக அரசு ஆட்சிப் பொறுப்புக்கு வந்து, 100 நாட்கள் ஆனதையொட்டி 'இந்து' பத்திரிகை, ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது. "The first 100 days of the Government"—August 20, 2006. "Marching ahead on the path of progress" என்று தலைப்பிட்டு ஒரு செய்தியை, 'இந்து' பத்திரிகை வெளியிட்டுள்ளது. அந்தச் செய்தியில், 'இந்து' நாளிதழ் வெளியிட்டுள்ள கட்டுரையில், "முதல் 100 நாட்களில், வரலாறு காணாத சாதனைகளால் தமிழகம் வளர்ச்சிப் பாதையில் வீறுநடை போட்டுப் பயணிக்கிறது" என்று குறிப்பிட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, 'The Economic Times', வணிக நாளேட்டில் 20-8-2006 ஆம் தேதி, 'இன்ப நிலை' என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள சிறப்புக் கட்டுரையின் தமிழாக்கம்: "தமிழகத்தின் முகம் தற்போது பிரகாசமான புன்னகையைப் பெற்றுள்ளது. இது மாநில மக்களின் இதயங்களில் உறுதியாக வைத்துள்ள திருப்தி உணர்வின் கூட்டான வெளிப்பாடு ஆகும். இதற்குப் பின்னுள்ள காரணம், புதிய ஆட்சி மற்றும் புதிய ஆட்சி அதிகாரத்திற்கு டாக்டர் கலைஞர் வந்தது, ஆகியவற்றோடு பெரிதும் தொடர்புடையதாகும்" என்று தலைப்பு எழுதியுள்ளது. அதே பத்திரிகையில், சமீபத்தில் மேற்கு வங்க மாநில முதல்வர் மாண்புமிகு புத்ததேவ் பட்டாச்சாரியா அவர்கள் முதல்வரைச் சந்தித்ததும், தி.மு. கழக அரசின் கொள்கைகளுக்கு அவர்கள் வெளிப்படையாக ஆதரவு நல்கியதும், நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞருக்குத் தேசிய அளவில் உள்ள மரியாதையையும், உயர்வான மதிப்பையும் தெளிவாகக் காட்டுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி.)

அடுத்து, 'The Financial Express', "Tamil Nadu all glory and sunshine- 100 days of Karunanidhi's Government" என்று தலைப்பிட்டு, அதிலே, "All roads lead to Tamil Nadu"; "The Tamil Nadu Industrial hub" என்று, கடந்த 20 ஆம் தேதியன்று வட மாநிலப் பத்திரிகைகளும், டெல்லி, மும்பை போன்ற தலைநகரங்களிலிருந்து வெளியாகின்ற பத்திரிகைகளும், தமிழகத்தில் இருக்கின்ற, சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு வெளிவருகின்ற தினசரி 'இந்து' நாளேடும், நூறு நாள் சாதனைகளைப்பற்றி இங்கே தம்முடைய கருத்துகளைப் பத்திரிகைகளிலே வெளியிட்டுள்ளன.

*முற்பகல் 11–15*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 22–5–2000 ஆம் நாளன்று, இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையம்—Centre for Monitoring Indian Economy—என்ற, மத்திய அரசு அதிகாரப்பூர்வமான நிறுவனம் வெளிட்டுள்ள அறிக்கையில், 1996–2000 வரையில் ஒரு இலட்சத்து 56 ஆயிரத்து 893 கோடி ரூபாய் முதலீடுகளைப் பெற்று, தமிழகம் தொழில் முதலீடுகளில் இந்தியாவிலேயே முதலாவது மாநிலமாக முன்னேற்றம் கண்டது என்று குறிப்பிடடுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) 21–7–2000 அன்று, அதே மையம் இந்திய மாநிலங்களில் செய்யப்பட்டுள்ள முதலீடுகளையெல்லாம் தொகுத்து வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, தமிழகம், தொழில் முதலீடுகளில் இந்தியாவில் முதலிடம் என்ற நிலை மீண்டும் உறுதிபடுத்தப்பட்டுள்ளது. ஆக, 1996–க்குப்பின் கலைஞருடைய ஆட்சியில் தொடங்கப்பட்ட தொழிற்சாலைகளின் பட்டியலையும் இங்கே வெளியிட நான் விரும்புகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, V.S.N.L. Earth Station, 110 கோடி ரூபாய் முதலீட்டில் ஜூன் மாதம், 1998 ஆம் ஆண்டு A.T.S. பிரிவும், 1999 ஆம் ஆண்டு B.T.S. பிரிவு ஜூன் மாதத்திலும் செயல்படத் தொடங்கியுள்ளன. G.M.R. வாசவி தனியார் மின் துறை உற்பத்தித் திட்டம், 825 கோடி ரூபாய் முதலீட்டில் சென்னை பேசின் பிரிட்ஜில், 1999 மார்ச் மாதம் உற்பத்தியைத் தொடங்கியது. Thapar DuPont Limited தொழிற்சாலை, கும்மிடிப்பூண்டியில் 300 கோடி ரூபாய் முதலீட்டில் அமைக்கப்பட்டுள்ளது. Visteon Power Train System India Limited கம்பெனி, 275 கோடி ரூபாய் முதலீட்டில் 1999–ல் இயங்கத் தொடங்கியது. Visteon Automotive System India Limited தொழிற்சாலை, 325 கோடி ரூபாய் முதலீட்டில் கழக ஆட்சியில், கலைஞர் ஆட்சியில் 1999 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

மஹிந்தரா இண்டஸ்ட்ரியல் பார்க் லிமிடெட் தொழிற்சாலை, சென்னைக்கு அருகில் சிங்கபெருமாள்கோவிலில், 210 கோடி ரூபாய் முதலீட்டில் கழக ஆட்சியில், கலைஞர் ஆட்சியில் 1999 ஆம் ஆண்டு செப்டம்பரில் செயல்படத் தொடங்கியது. Matushita Airconditioner Project தொழிற்சாலை, அறைகளுக்கு வைக்கக்கூடிய ஏர்கண்டிஷன் பெட்டிகள் தயாரிக்கும் தொழிற்சாலை, இருங்காட்டுக்கோட்டையில் கழக ஆட்சியில், கலைஞர் ஆட்சியில் 59.54 கோடி ரூபாய் முதலீட்டில் துவக்கப்பட்டது. Mando Brake System India நிறுவனம், வாகன உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை, கலைஞருடைய ஆட்சியில் 30 கோடி ரூபாய் முதலீட்டில் 1999–ல் செயல்படத் தொடங்கியது.



S.K.M. Egg Products தொழிற்சாலை, 100 விழுக்காடு ஏற்றுமதி பொருள்களைத் தயாரித்திடும் தொழிற்சாலை, 35 கோடி ரூபாய் முதலீட்டில், 12–7–1997 அன்று கலைஞர் ஆட்சியிலே துவக்கப்பட்டது. J.B.M. Sangwoo Limited தகடு உலோகப் பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை, கழக ஆட்சியில், தலைவர் கலைஞர் ஆட்சியில் 45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இருங்காட்டுக்கோட்டையில அமைக்கப்பட்டுள்ளது. Ilgin India Limited, 40 கோடி ரூபாய் முதலீட்டில் இருங்காட்டுக்கோட்டையில் கழக ஆட்சியில், கலைஞர் ஆட்சியில், 1998–ல் உற்பத்தியைத் தொடங்கியது.

*முற்பகல் 11–20*

உலோகத் தகடு பாகங்கள் தயாரிக்கும் Dongivision Industries தொழிற்சாலை, 43 கோடி ரூபாய் செலவில் இருங்காட்டுக்கோட்டையில் கழக ஆட்சியில் துவங்கப்பட்டது. Orchid Chemicals and Pharmaceuticals தொழிற்சாலை, சென்னைக்கருகில் ஆலந்தூரில், தலைவர் கலைஞர் ஆட்சியில், 50 கோடி ரூபாய் முதலீட்டில் அமைக்கப்பட்டு, 1998 நவம்பரில் செயல்படத் தொடங்கியது. Sundaram Clayton தொழிற்சாலை நிறுவனத்தின், Automobile Foundry தொழிற்சாலை, ஓசூரில் 1998 டிசம்பரில் கழக ஆட்சியில், கலைஞர் ஆட்சியில் துவக்கிவைக்கப்பட்டது. Sam Greaves Limited நிறுவனத்தின் Tractor and Assembling பிரிவு, இராணிப்பேட்டையில் 11 கோடி ரூபாய் முதலீட்டில், கழக ஆட்சியில், கலைஞர் ஆட்சியில் 1998 டிசம்பரில் திறக்கப்பட்டது.

அதேபோன்று, அம்பிகா சர்க்கரை ஆலை, கழக ஆட்சியில், 40 கோடி ரூபாய் முதலீட்டில் கோவையில், 1999 மார்ச்சில் தொடங்கி வைக்கப்பட்டது. Salem Iron and Steel Company Limited தொழிற்சாலை, கழக ஆட்சியில், கலைஞர் ஆட்சியில் 500 கோடி ரூபாய் முதலீட்டில் 31–3–1999 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. Epoxy Resin Project Petro Araldite Company Limited, மணலியில் கழக ஆட்சியில், 1999 மார்ச்சில் 50 கோடி ரூபாய் முதலீட்டில் உற்பத்தியைத் தொடங்கியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரங்கநாதன், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** இல்லை, இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுதுதானே பேச ஆரம்பித்திருக்கிறேன்!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்குப் பேச நேரம், 10 நிமிடங்கள்தான் தரப்பட்டிருக்கிறது.

**திரு. ப. ரங்கநாதன்:** இல்லை. அவர்கள் எல்லாம் நிறைய நேரம் பேசியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்வதைக் கேளுங்கள். உங்களுக்குப் பேச நேரம், 10 நிமிடங்கள்தான் தரப்பட்டிருக்கிறது.

**திரு. ப. ரங்கநாதன்:** கொஞ்சம் இருங்கள். அதேபோன்று, Prax Air India Private Limited, 60 கோடி ரூபாய் முதலீட்டில் ஸ்ரீபெரும்புதூர் தொழில் வளாகத்தில் அமைக்கப்பட்டு, 21-8-2000 அன்று திறக்கப்பட்டுள்ளது. St. Gobain கண்ணாடித் தொழிற்சாலை, இருங்காட்டுக்கோட்டை 'சிப்காட்' வளாகத்தில், பிரெஞ்சு நாட்டுத் தொழில்நுட்பத்துடன், 525 கோடி ரூபாய் செலவில் முதற்கட்டமாக அமைக்கப்பட்டு, 27–9–2000 அன்று தொடங்கப்பட்டது. இப்படிப் பல்வேறு தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டது மட்டுமல்லாமல், மறைமலைநகரில், Ford Motor Car தொழிற்சாலை, திறந்து வைக்கப்பட்ட நாள் 19-3-1999; அதனுடைய முதலீடு 1,700 கோடி ரூபாய்; ஆண்டு உற்பத்தித் திறன், ஒரு இலட்சம் கார்கள்; 2,000 பேர்களுக்குமேல் நேரடி வேலைவாய்ப்பு. 10,000 பேர்களுக்குமேல் மறைமுக வேலைவாய்ப்பு. இங்கே உறுப்பினர் பேசுகின்றபோது, அவர்கள் ஆட்சியில் திறந்ததாகச் சொன்னார்கள்; அதற்கு உரிமை கொண்டாடினார்கள். ஆனால், மறைமலைநகரில், 1,700 கோடி ரூபாய் முதலீட்டில் உருவான Ford Car தொழிற்சாலையின் உற்பத்தித் தொடக்க விழாவின் படத்தையும் நான் இங்கே காண்பிக்கிறேன்.

*(உறுப்பினர் ஒரு படத்தைக் காண்பித்தார்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரங்கநாதன், உரையை முடியுங்கள். நிறைய உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது.

**திரு. ப. ரங்கநாதன்:** Hyundai Motors, இருங்காட்டுக்கோட்டையில்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** See, the ball is in your court. Please si down. அடுத்த உறுப்பினரைப் பேசக் கூப்பிடுவேன். (குறுக்கீடு) அப்படியென்றால், சீக்கிரம் உரையை முடியுங்கள். சீக்கிரம் உரையை முடியுங்கள்.



**திரு. ப. ரங்கநாதன்:** ஜூன் மாதம் 1998-ல், கலைஞர் ஆட்சியில தொடங்கப்பட்டது. அதேபோன்று Mitsubishi Car தொழிற்சாலையும், 14–4–1998-ல் தொடங்கப்பட்டது. (மணியடிக்கப்பெற்றது) உரையை முடித்துக்கொள்கிறேன்.

இலண்டனில் இருந்து வெளிவரும் 'Financial Times' என்ற பத்திரிகை, 1997, எப்ரல் மாதத்தில், சென்னை, இந்தியாவின் Detroit என்று வர்ணித்தது. 'Mark Nicholson' என்ற தலைசிறந்த பத்திரிகையாளர், இலண்டனில் இருந்து வெளிவரும் 'Financial Times' என்ற பத்திரிகையில், 11-4-1997 அன்று, "Tamil Nadu rises up to achieve car ambition" என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அதில், "Tamil Nadu car industry is perhaps the most spectacular result of the race between the States to attract foreign investment and develop new industry"—"வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்து, புதிய தொழிற்சாலைகளை உருவாக்கி வளர்ப்பதில், மாநிலங்களுக்கு இடையேயான போட்டியில், தமிழ்நாட்டின் கார் தொழில், வியக்கத்தக்க முன்னேற்றத்தைக் கண்டுள்ளது" என்று குறிப்பிட்டுள்ளார்.

அதேபோன்று, 7-2-2000 ஆம் நாளிட்ட 'Economic Times' நாளிதழில், இந்தியாவில் பெரிதும் தொழில்மயப்படுத்தப்பட்ட மாநிலங்களில் ஒன்றாகத் தமிழ்நாடு விளங்குகிறது என்று குறிப்பிடப்பட்டு, நாட்டின் ஏற்றுமதிக்குத் தமிழ்நாட்டின் பங்களிப்பு மிகப் பெரியது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

*முற்பகல் 11-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரங்கநாதன், சொல்லிவிட்டேன் அல்லவா? Time ஆகிவிட்டது. உட்காருங்கள். நிறைய உறுப்பினர்கள் பேச வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்... (குறுக்கீடு)

**திரு. ப. ரங்கநாதன்:** Last, ஒரே ஒரு page-தான். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியில் வெளிநாட்டு மூலதனம் தமிழகத்திலே மிக அதிக அளவில் வந்ததாகவும், தொழில்கள் தொடங்கியதாகவும் இங்கே மாண்புமிகு உறுப்பினர் ஜெயக்குமார் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

'Apache Footwear Ltd' என்ற காலணி தொழிற்சாலை, செருப்பு மற்றும் shoe தொழிற்சாலை, 'Adidas Shoe Company', அதாவது, 100 கோடி ரூபாய் மூலதனம், 1,800 பேருக்கு வேலை வாய்ப்பு. குறிப்பாக

பத்தாம் வகுப்பு, பிளஸ் 2 படித்த, சுமார் 70 சதவீதம் பெண்களுக்கு வேலைவாய்ப்புள்ள அந்தத் தொழிற்சாலை, தைவான் நாட்டைச் சார்ந்த பெரிய நிறுவனம்; சீனா மற்றும் வியட்நாமில் கிளைகள் உள்ளன. அக்டோபர் மாதம் 2005-ல் அந்த நிறுவனத்தைச் சேர்ந்த மூத்த அதிகாரிகள் தமிழகத்தில் தொழில் தொடங்க வந்தார்கள். அரசு அதிகாரிகளைச் சந்தித்து பூர்வாங்கமாகப் பேசி முடித்தபின், ஸ்ரீபெரும்புதூர் அருகில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதல்வர் இரண்டு மானியங்களிலே உரையாற்ற வேண்டியிருக்கிறது. தெரிகிறதா? திரு. ரங்கநாதன், you should not take so much time. Please sit down. திரு. சுதர்சனம். (குறுக்கீடு) சொல்ல சொல்லத் திரும்பக் கேட்கமாட்டேன் என்கிறீர்கள்! (குறுக்கீடு) முடியுங்கள் இப்போது.

**திரு. ப. ரங்கநாதன்:** ஒரே நிமிடம். ஒரகடம் பகுதியில் 850 ஏக்கர் நிலம் ஒதுக்க வேண்டும் என்று கேட்டார்கள். அனைத்துப் பூர்வாங்கப் பேச்சுவார்த்தைகளும் முடிந்தபின், எனக்குக் கிடைத்த தகவல்படி, தொழில் அமைச்சரும், தலைமைச் செயலாளரும் 19-10-2005 அன்று கோப்புகளில் கையொப்பமிட்டு முதலமைச்சருக்கு அனுப்பிவிட்டார்கள்—முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்களுக்கு. ஆனால், அந்த நிறுவனத்தின் தலைவர் மற்றும் உயரதிகாரிகள் முதல்வரைச் சந்தித்தார்களா? அல்லது இடையில் என்ன சூழ்நிலை உருவானது? அந்த நிறுவனத்தினர் தமிழகத்தில் தொழில் துவங்காமல் ஆந்திர மாநிலத்திற்குச் சென்றுவிட்டனர். சென்னைக்கு அருகில் உள்ள தடாவில் தற்போது அந்தத் தொழிற்சாலையைத் துவக்கியுள்ளனர். அடுத்து CEM India (Interruption) CEM India ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) முதல்வர் இரண்டு மானியங்களிலே உரையாற்ற வேண்டியிருக்கிறது என்று சொல்கிறேன். திரும்பத் திரும்பப் பேசிக்கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? திரு. சுதர்சனம், பேசுங்கள் நீங்கள்.

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறை, தகவல் தொழில்நுட்பவியல் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது காங்கிரஸ் கட்சியின் சார்பாக எனது கருத்துகளை இங்கே எடுத்துவைக்க விரும்புகிறேன்.

தமிழகத்திலே ஆட்சிப் பொறுப்பை ஏற்று, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலே அமைந்திருக்கின்ற ஆட்சி, தன்னுடைய



100 நாள் சாதனையாக, தொழில் துறையைப் பொறுத்தவரை, 135 கோடி ரூபாய் செலவிலே Motorola தொழிற்சாலையை உண்டாக்கியிருக்கிறது. 520 கோடி ரூபாயிலே Apollo Radial என்ற Tyres செய்கின்ற தொழிற்சாலைக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது. 300 கோடி ரூபாயிலே Gabriel India தொழிற்சாலை உருவாக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நேற்றைக்கு முன்தினம், இரண்டு தினங்களுக்கு முன்னாலே, ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில், Tessol Semi-conductor தொழில் தொடங்க முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டியிருக்கின்றார்கள்.

ஒரு நாடு முன்னேற வேண்டுமென்று சொன்னால், விவசாய உற்பத்தி அதிகமாக இருக்க வேண்டும். ஒரு பக்கத்திலே விவசாயிகள் வளமாக இருக்க வேண்டும். இப்போது எங்கே பார்த்தாலும் கல்லூரிகள், எங்கே பார்த்தாலும் பள்ளிக்கூடங்கள் என்று வளர்ந்து வருகின்ற நிலையில், படித்துவிட்டு வெளிநாடுகளுக்கு வேலை செய்வதற்குப் போகாமல், தொழிற்சாலைகள் இங்கே அமைய வேண்டும். அந்தத் தொழிற்சாலைகள் அமைவதன்மூலமாக, நாட்டினுடைய வளம் பெருகும். வளம் பெருகுவதன்மூலமாக, வசதிகள் பெருகுகின்ற வாய்ப்பு இந்த நாட்டிற்கு ஏற்படும். குறிப்பாக, தகவல் தொழில்நுட்பம் இப்போது வேகமாக வளர்ந்துவருகின்ற ஒரு துறை. அந்தத் துறை இப்போது வேகமாக வளர்ந்து வருகின்றது.

முற்பகல் 11-30

இங்கே எனக்கு முன்னாலே பேசிய நண்பர்கள், சென்ற ஆட்சியிலே, தொழில்கள் துவங்குவதைப் பற்றியும், மத்திய அரசு கொடுத்த விமர்சனத்தையும் இங்கே மிக வேகமாகச் சொன்னார்கள். நான் அந்த நண்பர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், Bill Gates அமெரிக்காவிலேயிருந்து இந்தியாவிற்கு வந்தார்; தொழிற் புரட்சியிலே, தகவல் தொழில்நுட்பப் புரட்சியிலே சிறப்பான மாநிலங்கள் எவை என்று கண்டறிந்து, கர்நாடகா மாநிலத்திலுள்ள பெங்களூருக்குச் சென்று பார்த்தார்; அதேபோன்று, ஆந்திர மாநிலத்திற்குச் சென்று பார்த்தார். அங்கே தொழில்களெல்லாம் துவங்குவதற்கு ஏற்பாடுகள் செய்தார்; ஆனால், சென்ற ஆட்சிக் காலத்திலே, தமிழகத்திற்கு அவர் வர விரும்பவில்லை; ஏன் என்பதை எனக்கு முன்னாலே பேசிய நண்பர் விளக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல; தகவல் தொழில்நுட்பப் புரட்சியைப் பொறுத்தவரை, நிறைய பேர் இங்கே வருகை தந்தார்கள். இங்கே தொழில் துவங்க

வேண்டுமென்று எண்ணினார்கள். தொழில் துவங்க வேண்டுமென்று எண்ணினாலும்கூட, அன்றைக்கு அணுகுமுறை சரியாக இல்லாத காரணத்தினால், இங்கே தொழில் தொடங்க முடியவில்லை.

ஒரு நான்கு தினங்களுக்கு முன்னாலே, இங்கே நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்: 'அமெரிக்காவிலே வாழ்கின்ற இந்தியர், 1,000 கோடி ரூபாய் செலவிலே, ஒரு தொழிற்சாலையை இங்கே துவங்குவதற்கு ஏற்பாடு செய்தார்கள்' என்று சொன்னார்கள். அந்த முதலாளி என்ன சொல்கிறார் என்று சொன்னால், "தமிழ்நாட்டிலே தொழில் துவங்குவது என்பது, சர்வதேசத் தொழிலதிபர்களுக்கு ஒரு காலத்தில், கன்னித் தீவுக்குச் செல்வதுபோல, மிகவும் கஷ்டமாக இருந்தது; போகவே முடியாது என்று அண்டை மாநிலங்களுக்கு ஓடிவிடுவோம். வெளியே சொல்ல முடியாத அளவு தடங்கல், முட்டுக்கட்டை; பத்தாயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான தொழிற்சாலை ஹைதராபாத் போய்விட்டது; 400 கோடி ரூபாய் பெறுமானமுள்ள தொழிற்சாலை, ஆந்திரா போய்விட்டது; 900 கோடி ரூபாய் மதிப்புள்ள தொழிற்சாலை கர்நாடகா மாநிலத்திற்குப் போய்விட்டது." இப்படியாக சொல்லிக்கொண்டு வருகிற நேரத்தில், கடைசியாக அந்த வீரப்பன் அவர்கள் சொல்கிறார்கள்: "சென்ற ஆட்சியின்போது, எங்களால் தமிழ்நாட்டுப் பக்கமே தொழில் தொடங்க வர முடியவில்லை. எடுத்தவுடனே, 'எங்களுக்கு என்ன?' என்று கேட்கிறார்கள். மத்திய அரசின் சார்பிலே தொழில் துறைச் செயலாளர்கள் 20 கடிதங்கள், 30 கடிதங்கள் எழுதினாலும், பதில் வருவதில்லை. ஆனால், இப்போது ஏழு நாட்களுக்குள்ளாக பேச்சுவார்த்தை முடிக்கப்பட்டு, ஆயிரம் கோடி ரூபாய் திட்ட மதிப்பிலான ஒப்பந்தம் கையெழுத்து ஆகியுள்ளது" என்று (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது அந்த நிறுவனத்தினுடைய அதிபர் வீரப்பன் அவர்கள், அங்கே தெரிவித்து இருக்கின்றார்கள்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

தொழில் தொடங்குவது அவ்வளவு சுலபமான காரியமல்ல. நமது நாட்டிற்கு, எதிர்காலக் குழந்தைகளுக்கு, எதிர்காலச் சந்ததியினர்களுக்கு, தொழில் வளர்ச்சிக்கு, கடந்த அரசு என்ன செய்தது என்பதைப்பற்றி விவரமாகவும், விளக்கமாகவும் இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. பல்வேறு தொழிற்சாலைகள் இந்த நாட்டிலே தொடங்குவதற்கு வருகை தந்தபோதெல்லாம், சரியான அணுகுமுறை இல்லாத காரணத்தினாலே, அவர்களுடன் பேச்சுவார்த்தைகளுக்குப் போக முடியாத காரணத்தினாலே, இப்போது பல்வேறு தொழில்கள் நம்முடைய தமிழகத்தைவிட்டு வெளி மாநிலங்களுக்குச் சென்றுவிட்டன. ஆனால்,



சென்ற ஆட்சியிலே, பொறுப்பை வகித்தவர்கள், எங்களுடைய ஆட்சிக் காலத்திலே இதைச் செய்தோம், அதைச் செய்தோம், இந்தத் தொழிற்சாலை வந்தது, அந்தத் தொழிற்சாலை வந்தது என்றெல்லாம் கூறுகிறார்கள். நான் அவர்கள் கூறுவதற்கெல்லாம் மறுப்புச் சொல்ல விரும்பவில்லை. நீங்கள் முயற்சி செய்திருந்தால், இன்னும் மிகப் பெரிய அளவிலே, தொழிற்சாலைகளைத் தமிழகத்திற்குக் கொண்டுவந்து இருக்க முடியும். அதைச் செய்ய, கடந்த அரசு தவறிவிட்டது என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல; எண்ணூரிலே சிறப்புப் பொருளாதார மண்டலம், கிருஷ்ணகிரியிலே சிறப்புப் பொருளாதார மண்டலம் என்றெல்லாம் சென்ற ஆட்சிக் காலத்திலும் நீங்கள் அறிவித்தீர்கள். அந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதிகள்பற்றி அந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலங்களின் வளர்ச்சிக்குச் சென்ற ஆட்சிக் காலத்திலே என்ன செய்தீர்கள் என்பதைப்பற்றி இந்த நாட்டு மக்கள் நன்றாக அறிவார்கள். ஏதோ அறிவித்ததோடு விட்டு விட்டார்களே தவிர, அந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள், சிறப்பாக நாட்டு மக்களுக்குப் பயனளிக்கின்றவகையிலே, எந்தச் செயலும் செய்யவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11–35

நேரம் அதிகமாக இல்லை; நம்முடைய மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்கள் வந்து அமர்ந்திருக்கிறார்கள்; வெகுவிரைவிலே மணியடித்துவிடுவார்கள். அதனால், சில கருத்துகளை மட்டும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். சிமெண்ட் தொழிற்சாலை இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆலங்குளத்திலே இருக்கின்ற சிமெண்ட் தொழிற்சாலை, இன்றைக்கு நவீனப்படுத்த வேண்டிய ஒரு நிலையிலிருக்கிறது. சிமெண்ட் விலை அதிகமாக ஏறியிருக்கிறது. ஒரு மூட்டை சிமெண்ட், இப்போது 200 ரூபாய்க்கு விற்கிறார்கள். ஏன் இந்த நிலைமை ஏற்பட்டது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். சென்ற ஆட்சிக் காலத்திலே, இரட்டை வரி விதிப்புக் கொள்கையைக் கடைப்பிடித்தார்கள். அந்த இரட்டை வரி விதிப்புக் கொள்கையின் காரணமாக, அந்தத் தொழிலில் உள்ள சிமெண்ட் உற்பத்தியாளர்கள், தங்கள் உற்பத்தியை குறைத்துக் கொண்டார்கள். தேவை அதிகமாக இருந்தது; உற்பத்தி குறைந்து போய்விட்டது. உற்பத்தி குறைந்த காரணத்தினால், விலை உயர்ந்திருக்கிறது. அதனாலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சிமெண்ட்

தொழிலதிபர்களை எல்லாம் அழைத்து, குறைந்த விலைக்கு சிமென்டை விற்பனை செய்வதற்கு முயற்சி எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சர்க்கரைத் தொழிலைப் பொறுத்தவரையில், இப்போது 38 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. அவற்றில் 16, கூட்டுறவுத் துறைக்குச சொந்தமானவை; 3 ஆலைகள் பொதுத் துறைக்குச் சொந்தமானவை; 19 ஆலைகள் தனியாருக்குச் சொந்தமானவை. (குறுக்கீடு) பொதுத் துறை நிறுவனமான தமிழ்நாடு சர்க்கரைக் கழகம், 1974 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும்.

**திரு. டி. சுதர்சனம்:** சீரிய முறையில் இயங்கி வந்தது. நிர்வாகக் கோளாறினால் 1-4-2005 அன்று, அந்தச் சர்க்கரைக் கழகத்தினுடைய நஷ்டம். 7,014.35 இலட்சம்; 31-3-2006 வரை சென்ற ஆட்சிக் காலத்திலே, அதனுடைய நஷ்டம் 7,321.16 இலட்சம். ஏன் இந்த நஷ்டம் ஏற்பட்டது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அரசியல் தலையீடு, அதிகாரிகள் அடித்த கொள்ளை; இதன் காரணமாக, அந்தச் சர்க்கரைக் கழகம், இன்றைக்கு நஷ்டத்திலே இயங்குகிற ஒரு நிலையிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த அரசு அதிகாரிகள் செய்த தவறுகளைக் கண்டுபிடித்து, அவர்கள்மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, கூட்டுறவுத் துறைக்குச் சொந்தமான மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை 1961 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, கரும்பு உற்பத்தி செய்யப்பட்டு, இன்றைக்கு அந்த ஆலை மூடப்பட்டுக் கிடக்கிறது. ஏனென்று சொன்னால், கரும்பு உற்பத்தி செய்கின்ற பகுதியை, அந்த நிலங்களை, வேறொரு தனியாருக்குப் பிரித்துக் கொடுத்த காரணத்தினால், அந்தக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை நலிவடைந்தது.

அதேபோன்று, Rajashree Sugars என்ற நிறுவனம்; தென்னாற்காடு மாவட்டத்திலே இருக்கிறது, அந்தச் சர்க்கரை ஆலை. புதிதாக, அந்தப் பகுதியிலே Aswanth Sugars என்ற நிறுவனத்தைத் தொடங்க வேண்டும் என்று அரசு எண்ணியது. அந்த Aswanth Sugars நிறுவனம் யாருக்குச் சொந்தமானது என்பதை (மணியடிக்கப்பெற்றது) அரசு விளக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த Aswanth Sugars நிறுவனம், அங்கு துவக்கப்பட்டவுடனே, அங்குள்ள Rajashree Sugars-க்குக் கரும்பு வருகின்ற அந்த



இடங்களையெல்லாம், வேறு சர்க்கரை ஆலைக்கு மாற்றக்கூடாது என்று உயர் நீதிமன்றத்திலே தடையாணையை அவர்கள் வாங்கினார்கள். தடையாணை பெற்ற பின்னாலும்கூட, அரசு, அந்த Aswanth Sugars நிறுவனத்திற்கு, தான் பயிரிடுகின்ற அந்த நிலப்பரப்பினை, இந்த Rajashree Sugars-லேயிருந்து மாற்றிக் கொடுத்தார்கள்; ஒரு தனியாருக்கு மாற்றிக் கொடுத்தார்கள். அவர்கள் உச்ச நீதிமன்றத்திற்குப் பிறகு சென்று, அதன் பின்னாலே அவர்கள் நியாயம் பெற்றார்கள் என்பதை இந்த நேரத்திலே உங்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏன் இதைச் சொல்கிறேன் என்று சொன்னால், மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை நலிவடைந்திருக்கிறது என்று எப்படிச் சொல்கிறேனோ, அதேபோன்று, அந்தத் தனியாருக்குச் சொந்தமான ஆலை, அன்றைக்கு நலிவடையும் நிலை ஏற்பட்டிருக்கும். தனியாராக இருந்த காரணத்தினால், உயர் நீதிமன்றத்திற்குச் சென்றார்கள்; உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். இது அரசினுடைய கூட்டுறவுத் துறை; அரசுக்கு வேண்டியவர்கள் அந்த Aswanth Sugars நிறுவனத்தைத் தொடங்கியிருக்கின்றார்கள். அதனடிப்படையிலே, அதற்கு நிலங்கள் ஒதுக்கப்பட்டன. இப்படியெல்லாம் இந்தச் சர்க்கரைத் துறையை வீணடித்தார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே பதிவுசெய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-40

அதேபோன்று 'டிட்கோ' நிறுவனம். 'டிட்கோ' நிறுவனம் இப்போது நல்ல முறையிலே பல்வேறு தொழில்களைச் செய்து வந்தாலும்கூட-- 'டிட்கோ' நிறுவனம், 'சிட்கோ' நிறுவனம் இன்னும் பல்வேறு நிறுவனங்கள் இப்போது தமிழகத்திலே அதிகமான அளவு சிறப்பான பல்வேறு காரியங்களைச் செய்து, தொழில் துறையிலே வளர்ந்து வந்தாலும்கூட—அந்த 'டிட்கோ' நிறுவனத்தினுடைய ஒரு தொழிற்சாலை, 49 சதவீத பங்குகளையும் கொண்ட Maruthi Marine Industries Limited என்ற அந்த நிறுவனம், 5000 ஏக்கர் நிலத்தைத் தமிழக அரசிடமிருந்து மகாபலிபுரம் ,பக்கத்தில், திருக்கழுக்குன்றத்திற்குப் பக்கத்தில் குத்தகைக்கு எடுத்தது. 25 ஆண்டுகள் குத்தகைக் காலம் என்று சொல்லி எடுத்தது. குத்தகைக் காலம் முடிந்துவிட்டது. குத்தகை நீடிப்பு அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. ஏனென்று சொன்னால், அந்த 5000 ஏக்கர் நிலத்தில் அவர்கள் உப்பு செய்வதற்கு, அந்தத் தொழிற்சாலையைப் பயன்படுத்த வேண்டும் என்று அரசாங்கம் சொல்லியிருந்தது. ஆனால், அவர்கள் இறால் பண்ணைகளை அங்கே வளர்த்தார்கள். இறால் பண்ணைகளை வளர்த்தும் அதிலே அவர்கள் நட்டம் என்று கணக்குக் காட்டுகின்றனர். அவர்கள் வைத்திருந்த 25 ஆண்டுக் காலம் 30 ஆண்டுக் காலத்திற்கு, அரசுக்கு அவர்கள் ஏதாவது

வரியாகவோ அல்லது குத்தகையாகவோ செலுத்தினார்களா என்று சொன்னால் ஒன்றும் செய்யவில்லை. ஆனால், அவர்கள் இன்றைக்கு...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடம் எடுத்துக்கொள்ளுங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** இரண்டு நிமிடங்களில் நிறைவு செய்கிறேன். அந்த நிறுவனம் இன்றைக்கு ஒரு வருடம்கூட அரசுக்குச் செலுத்த வேண்டிய பணத்தைச் செலுத்தவில்லை. ஆனால், 25 ஆண்டுக் காலம் நட்டத்தில் இயங்குகின்ற அந்த நிறுவனத்தை, இந்த 'டிட்கோ' நிறுவனத்தினுடைய தலைவர்களோ, யாருமே அதைப்பற்றி எந்தவிதமான கவலையும்படாமல் இருந்து வருகிறார்கள். அந்த 5000 ஏக்கர் நிலத்தை அரசு உடனடியாகக் கைப்பற்றி—உப்புத் தயாரிக்கின்ற தொழிலுக்காகப் பெற்று, இந்த 30 ஆண்டுக் காலத்திலே அவர்கள் நட்டத்தையே காட்டி வந்திருக்கிறார்கள்—அரசு அந்த நிலத்தை எடுத்து, நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கையின்மீது பல்வேறு நண்பர்கள் இங்கே பேசியிருந்தாலுங்கூட, கடைசியாக என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற Southern Structurals தொழிற்சாலை; அந்த Southern Structurals தொழிற்சாலை எல்லா வசதிகளையும் வாய்ப்புகளையும் பெற்று இருககின்ற தொழிற்சாலை. Railway track அங்கே இருக்கிறது. பட்டாபிராம் பகுதியிலே, சென்னைக்கு 30 கிலோ மீட்டர் தொலைவிலே அமைந்திருக்கின்ற அந்தத் தொழிற்சாலை, சரியான முறையிலே நிர்வாகம் செய்யாத காரணத்தினால், அந்தத் தொழிற்சாலை இன்றைக்கு மூடப்பட்டிருக்கிறது. இந்தியன் வங்கி, தான் கொடுத்த கடனுக்கு அந்தத் தொழிற்சாலையை எடுத்துக்கொண்டதாகச் சொல்லுகிறது. ஒரு மனிதனுடைய இதயம் எப்படி முக்கியமோ, அப்படிப்பட்ட ஒரு முக்கியமான இடம்; அந்தப் பட்டாபிராமிலே, இரயில் நிலையத்திற்குப் பக்கத்திலே, ஒரு 60, 70 ஏக்கர் கொண்ட பரப்பளவிலே, மிகப் பெரிய Southern Structurals தொழிற்சாலை; அந்தத் தொழிற்சாலை உள்ள இடத்தில் எப்படியாவது வேறு எந்தவிதமான தொழிலாவது அங்கே துவங்கி, அந்தப் பகுதியிலே இருக்கின்ற நலிவடைந்த மக்களுக்கு தமிழக அரசு, வாழ்வு தேடிக் கொடுக்க வேண்டுமென்ற ஒரு வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, திருவள்ளூர் மாவட்டத்திலே, திருவள்ளூரை ஒட்டி இருக்கின்ற பூண்டி ஊராட்சி ஒன்றியத்திலே, பல்வேறு ஏக்கர் நிலம் தரிசு நிலமாக இருக்கிறது. அந்த தரிசு நிலப் பகுதியிலே 'சிட்கோ'வோ அல்லது 'டிட்கோ'வோ, யாராவது முன்வந்து ஒரு 5000 ஏக்கர் நிலத்தை



எடுத்து மிகப் பெரிய தொழிற்பேட்டையை அங்கே உருவாக்குவார்களானால், நன்றாக இருக்கும். இந்த அரசு அதை உருவாக்க வேண்டும் என்று ஒரு அன்பான பணிவான வேண்டுகோளை நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, போளூர் பகுதியிலே நிறைய பூக்கள் விளைந்து கொண்டிருக்கின்றன. அந்தப் பூக்களைப் பயன்படுத்தி, அங்கே ஒரு சென்ட் ஆலை நிறுவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, சென்னையை அடுத்த ஸ்ரீபெரும்புதூர் சட்டமன்றத் தொகுதியிலே இருக்கின்ற படப்பையிலே நிறைய பூக்கள விளைகின்றன. புஷ்பகிரி என்றே பெயர். அந்த புஷ்பங்கள் விளைகின்ற பகுதியிலே, ஒரு சென்ட் ஆலையை அமைத்துத்தா வேண்டுமென்ற பணிவான வேண்டுகோளை வைத்து இந்த வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன.

(முற்பகல் 11-45

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம். (குறுக்கீடு) இல்லை, உங்கள் கட்சியின் சார்பிலே திரு. செந்தமிழன் பேச இருக்கிறார். நீங்கள் கேட்க வேண்டியதையெல்லாம் அவரிடம் சொல்லிவிட்டால், அவர் கேட்டுவிடுவார். ஏனென்றால், நேரங்காலத்தைக் கருதி. (குறுக்கீடு) இல்லை, நான் சொல்வதைக் கேளுங்கள். நேரங்காலத்தைக் கருதித்தான் இந்த யோசனையைச் சொல்கிறேன். திரு. செந்தமிழனிடம் சொல்லுங்கள். திரு. ஆறுமுகம், பேசுங்கள்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களாலே முன்மொழியப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கை எண் 27 தொழில்கள் மற்றும் மானியக் கோரிக்கை எண் 31– தகவல் தொழில்நுட்பவியல் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில், என்னைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே பேச அழைத்தமைக்குத் தங்களுக்கு முதலிலே என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்குத் தமிழகம், மிகப்பெரிய சாதனையை, நம்முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையிலே, 100 நாட்கள் சாதனையாக, அத்தனை துறைகளும் கொடிகட்டிப் பறந்து கொண்டிருக்கிற நிலையிலே, (மேசையைத் தட்டும் ஒலி) தொழிற்சாலைகள் குறித்து மேலெழுந்தவாரியாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், நான்கு தொழிற்சாலைகள்—கிட்டத்தட்ட 2,000 கோடி ரூபாயிலே முதலீடு செய்வதற்காக, இப்போது தமிழகம் வந்திருக்கின்றன.

என்ற செய்தியும், அதற்கான ஒப்பந்தத்தையும் அளித்திருக்கிற நம்முடைய முதல்வர் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் துறையின் சார்பிலே பேச வரும்போது, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே என்னுடைய நன்றியை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நாட்டினுடைய முன்னேற்றத்திற்கான இரண்டு கண்களாக இருப்பவை, விவசாயமும், தொழில் முன்னேற்றமும்தான் என்பதில் இரண்டுபட்ட கருத்துக்கு இடமில்லை. ஏனென்று சொன்னால், தமிழகம் இன்றைக்குத் தொழில் துறையிலே வளருவதற்கு நம்முடைய அரசாங்கம் பல்வேறு நல்ல திட்டங்களைச் செய்து கொண்டிருக்கிறது. அதேபோன்று, நம்முடைய முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் இருக்கிற இந்த அரசு, அவர்கள் கையிலே இருக்கிற இந்தத் துறை, மேலும் புதுப் பொலிவோடு வர இருக்கிறது என்பதிலே மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. இந்தத் துறையிலே பல்வேறு நல்ல செய்திகளைக் கொள்கை விளக்கக் குறிப்பிலே அறிவித்திருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக, தமிழகத்தில், தொழில் வளம் முன்னேற, கட்டமைப்புப் பணிகளுக்குப் பெருமளவிலான முதலீடு, உற்பத்தி, உற்பத்தித் திறன் மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்க திட்டங்கள், மக்களின் வேலைத் திறமை மற்றும் தரத்தை உயர்த்துவது, சேவைத் துறை—Service Sector—ஆற்றலை முழுமையாகப் பயன்படுத்துகின்ற பல செய்திகள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் ஒருங்கிணைத்து, தொழில் துறையில் மகத்தான வெற்றிபெற்றிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில், தொழில் முன்னேற்றத்திற்கான உயர்நிலைக் குழு அமைக்கப்படும் என்ற செய்தியைச் சொல்லியிருக்கிறார்கள். அது நல்லதொரு முன்னுதாரணமாக இருந்து கொண்டிருக்கிறது.

இந்த நாட்டினுடைய தொழில்வளம் பெருக வேண்டுமென்று சொன்னால், அதற்கு இந்த நாட்டிலே, இயற்கை தந்த மிகப் பெரிய வரமாக, நம்முடைய மாநிலத்திற்கு ஏறக்குறைய 1,000 கிலோ மீட்டர் நீளத்திற்குக் கடற்கரை அமைந்திருக்கிறது. அதையொட்டி ஏராளமான துறைமுகங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. அவற்றிலே கடலூர், நாகப்பட்டினம் போன்ற துறைமுகங்கள், அதேபோன்று மணப்பாடு, திருச்சோபுரம், புன்னக்காயல், காட்டுப்பள்ளி போன்ற துறைமுகங்களில் இன்னும் ஏற்றுமதி, இறக்குமதியே செய்யப்படாமல் இருக்கின்ற நிலைமை இருந்து கொண்டிருக்கின்றது. அதை மேம்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, சாலை மேம்பாடு. இன்றைக்கு நம்முடைய நடுவண் அரசிலே அமைச்சராக இருக்கின்ற அண்ணன் டி.ஆர். பாலு அவர்கள்,



அவர்களுடைய நிதியிலே மூன்றில் ஒரு பங்கை தமிழகத்திற்குக் கொடுத்து, தமிழகத்திலே தேசிய நெடுஞ்சாலைகளை, இருவழிச் சாலைகளாகவும், நான்குவழிச் சாலைகளாகவும் மாற்றி, தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக, சென்னையிலிருந்து பெங்களூர் செல்கின்ற சாலை, அதிவிரைவு சாலையாக மாற்றப்பட்டிருக்கிறது. அதேபோல், எங்களுடைய வேண்டுகோள், சென்னையிலிருந்து திண்டிவனம் வரையிலே நான்குவழிச் சாலையாக இருந்து கொண்டிருக்கிறது; அந்த நான்குவழிச் சாலையை, திருநெல்வேலிவரை நீட்டிக்க வேண்டுமென்று இந்தச் சமயத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, இன்னொரு முக்கியமானது. இப்போது தொழில் வளத்தைக் கருதி சென்னைக்கு வருகிறார்கள் என்று சொன்னால், சென்னையைச் சுற்றியிருக்கிற பகுதிகள், குறிப்பாக, சென்னை மட்டுமல்ல; திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்கள், தொழில் முதலீட்டாளர்களை அதிகமாகக் கவருவதற்குக் காரணம், இங்கே ஆகாய விமான வழி, நீர் வழி, தரை வழியெல்லாம், மிக அதிகமாக இருக்கிற காரணத்தாலே, இங்கே தொழில் துறை முன்னேறுவதற்கான வாய்ப்பு இருந்து கொண்டிருக்கின்றது. இந்தத் துறையிலே இதே நிலைமை, நம் மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் வரவேண்டுமென்று சொன்னால், ஒன்று, கப்பல் தளங்களை மேலும் மேலும் கட்டவேண்டும். இன்னொரு பக்கம், 75 முதல் 100 கிலோ மீட்டருக்குள்ளாக, அந்தச் சுற்று வட்டாரப் பகுதியிலே, விமான நிலையங்கள் அமைய வேண்டும். ஏனென்று சொன்னால், மேலை நாட்டவர்கள், இன்றைக்குத் தமிழ்நாட்டிலே முதலீடு செய்ய வேண்டுமென்று சொன்னால், அவர்கள் உடனடியாக வந்து செல்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்த முடியும். ஆகவே, இதையெல்லாம் இதற்காகச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–50*

அதேபோன்று, இப்போது மனித உழைப்பைப்பற்றிச் சொல்லவேண்டுமென்று சொன்னால், தமிழகத்தில் தொழில் தொடங்க முன்வரும் தொழில் முதலீட்டாளர்களுக்குத் தேவையான உதவிகளைத் தமிழக அரசு உடனடியாகச் செய்து தந்துகொண்டிருக்கிறது. அந்த விதத்திலே, தமிழகத்தில் தொழில் தொடங்குவதற்கு, அத்தொழிலை வளர்த்தெடுப்பதற்கான ஒரு நல்ல நிலையும், மனித வளமும் உள்ளது. ஆனால், கடந்த ஆண்டுகளில் தமிழகத்திலே ஆண்டு கொண்டிருந்தவர்களால், காலம் தாழ்த்தப்படுகிறது என்று சொல்லி,

கர்நாடகா மாநிலத்திற்குப் பல்வேறு தொழிற்சாலைகளை அனுப்பிய பெருமை, கடந்த ஆட்சியாளர்களுக்கு உண்டு என்பதை நான் பட்டவர்த்தனமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நிலையிலே அனுபவமும், ஆற்றலும் மிக்க, திறமையான, ஆர்வமிக்க மூத்த I.A.S. அதிகாரி ஒருவரின் தலைமையில், ஒரு குடையின்கீழ் என்று சொல்கிறமாதிரி, ஒரே இடத்தில் தொழில் முதலீட்டாளர்களுக்கு உரிமம், மின் இணைப்பு வழங்குதல் போன்ற தேவையான அனைத்து உதவிகளையும் செய்ய நமது அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென இந்தச் சமயத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேசமயத்திலே, மனித உழைப்புகளைப் பெரும்பாலும் பயன்படுத்துகிறவகையிலே நம்முடைய தொழிற்சாலைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமென்று இந்தச் சமயத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், மனித உழைப்புகளே இல்லாமல் இயந்திரங்களை வைத்தே பல நூற்றுக்கணக்கான கோடி ரூபாய்களை வைத்து, இன்றைக்குத் தொழிற்சாலைகளை அமைக்க முடியும். ஒரே பொத்தானை அழுத்தினால், இங்கே போடுகிற... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை. திரு. செந்தமிழன் என்று உங்கள் கட்சியிலே ஒருவர் பேச இருக்கிறார். நிறைய பேர் பேசவேண்டியிருக்கிறது. நேரம், காலம் உங்களுக்கும் தெரியும். (குறுக்கீடு) சரி. (குறுக்கீடு)

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடம், திரு. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது, முந்தைய ஆட்சிக் காலத்தில் பல்வேறு தொழில்கள் இங்கே கொண்டுவர முடியாமல், கர்நாடகா மாநிலத்திற்கு விட்டுத் தந்துவிட்டார்கள் என்று சொன்னார்கள். ஒரு புள்ளிவிவரத்தை, இரண்டொரு நிமிடத்தில் நான் முடித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. செந்தமிழனிடம் கொடுத்துவிட்டால் நன்றாக இருக்கும்.



**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** 1991–1996 வரையிலும், உற்பத்தித் துறையில் முதலீடுகள் 35 ஆயிரம் கோடியே 953 இலட்சம். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே 1996–2001 வரையிலும், 37 ஆயிரம் கோடியே 300 இலட்சம். அதிலே வித்தியாசம் எவ்வளவு இருக்கிறதென்று சொன்னால் 1,347 கோடி ஆகும். அதேபோல இங்கே குறிப்பிடுகிறபோது, 2001 முதல் 2005 வரை அதற்கும், அதற்குப் பிறகு, 45 ஆயிரம் கோடியே 490 இலட்சம் என்பதையும் இந்த நோத்திலே கோடிட்டுக் காட்டி, அதிலே வித்தியாசத் தொகை 8,184 கோடி ரூபாயக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா ஆட்சியிலே வித்தியாசம் வந்திருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆறுமுகம் அவர்கள் (குறுக்கீடு) இல்லை, அவரையே பேசச் சொல்லிவிடுங்கள். நேரம் இல்லை. (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சொல்லிவிடுகிறேன், சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் இல்லை.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஐந்து ஆண்டு ஆட்சிக் காலத்தில் ஒதுக்கீடு செய்வதாக அறிவிப்பார்கள். அறிவித்தவாறு, நிதி ஒதுக்கீடு செய்தாலுங்கூட, அந்தத் துறைக்கு முழுவதுமாகச் செலவழிக்கப்படுவது இல்லை. அதுதான் யதார்த்த உண்மை. அதை வேறு வழியில் செலவழிப்பது, மாற்று வழிமுறைகளில் செலவழித்ததற்கு ஏராளமான சான்றுகள் இருக்கின்றன. அதேநேரத்தில், ஒதுக்கிய தொகையில் எவ்வளவு செலவழிக்கப்பட்டது என்பதை மாண்புமிகு செங்கோட்டையன் அவர்கள் அறிவிப்பாரா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** இல்லை, இல்லை, பட்டிமன்றம் (குறுக்கீடு) நீங்கள் மட்டும் பேசலாமா? மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஒவ்வொரு ஆட்சிக்கும் இருந்த வித்தியாசத்தைச் சொன்னேன். வித்தியாசங்களைச சொல்லுகிறபோது 1996–2001 வரையிலும் அவர்கள் ஆட்சி காலத்திலே இருந்த வித்தியாசம் 1,347 கோடி என்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, சரி.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் 8,184 கோடி ரூபாய் கூடுதலாக வித்தியாசம் பெற்றிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறேன்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தலைவர் கேட்ட கேள்விக்கு மாண்புமிகு அண்ணன் செங்கோட்டையன் அவர்கள் பதில் சொல்லவில்லை. அவர் எழுதி வைத்த அறிக்கையை மட்டும்தான் இங்கே படித்திருக்கிறார்கள் என்பதைச் சொல்லி, இங்கே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வேண்டாம், வேண்டாம். திரு. கி. ஆறுமுகம், நீங்கள் மேற்கொண்டு பேசுங்கள்.

**திரு. கி. ஆறுமுகம்:** இன்றைக்குச் சென்னை நகரை ஒட்டியே ஒரு துணை நகரம் அமைக்கப்போவதாக நம்முடைய அரசாங்கம் கடந்த சில தினங்களுக்கு முன்பாக அறிவித்திருக்கிறது. அது எங்கே என்று சொன்னால், என்னுடைய மாவட்டத்திலே இருக்கிற செங்கல்பட்டு வட்டத்திலே, அதுவும் குறிப்பாக, திருப்போரூர் தொகுதியிலே வருகிற 44 கிராமங்களில் இருக்கின்ற மக்கள், இன்றைக்குக் குலைநடுங்கி உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். ஒரே நாளிலே அரசினுடைய வருவாய்த் துறை அதிகாரிகள், அனைத்துக் கிராமங்களுக்கும் பல குழுக்களாகச் சென்று, அங்கே நில எடுப்புச் செய்வதற்கான பணிகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள். அங்கே துணை நகரம் அமைப்பதற்கான காரணத்தை, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகிறபோது சொல்லியிருக்கின்றார்கள். அதிலே, உள் கட்டமைப்பு வசதிகள் செய்யப்படும்; அதற்கான தேவைகள், அடிப்படை வசதிகளெல்லாம் செய்து கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இன்று அவர் எடுத்திருக்கிற இந்த 44 கிராமங்களிலே; இன்றைக்கு நிலைமை என்னவென்று சொன்னால், ஏற்கெனவே தொழில் ஜுரம் அடிக்கிற அந்தப் பகுதியிலே, ஒரு பக்கம் மறைமலை நகர் தொழிற்பேட்டை; இன்னொரு பக்கம் மகேந்திரா தொழில் பூங்கா; இன்னொரு பக்கம் O.M.R. சாலையிலே இருக்கிற ஒரு தொழில்நுட்பப் பூங்கா எனப் பல தொழிற்சாலைகள் ஏராளமாக அந்தப் பகுதியிலே உள்ளன. இன்றைக்கு நிலத்தினுடைய விலை, சாலையோரங்களிலே கேட்டால், 2 கோடி ரூபாய் ஒரு ஏக்கர். உள்ளிருக்கிற நிலங்களைக் கேட்டால், 25 இலட்சம் ரூபாய்க்குக்கீழே ஒரு ஏக்கர் நிலம் கிடையாது என்கின்ற நிலைமை இருக்கிறது. அந்த இடங்களிலே இன்றைக்கு real estate business கொடிகட்டிப் பறந்து கொண்டிருக்கின்றது. அங்கு, சென்னை நகரில் சுற்றியிருக்கிறவர்கள்... (மணியடிக்கப்பெற்றது) பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இப்போதுதான் பேச ஆரம்பித்திருக்கிறேன். நிறைய குறுக்கீடுகள் வந்திருக்கின்றன. நேரம் கூடுதலாகக் கொடுங்கள். நேற்றைக்கு எங்களுக்கு நேரம் குறைக்கப்பட்டிருக்கிறது. இப்போது கொடுங்கள்.



முற்பகல் 11–55

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை. முடித்துவிடுங்கள். நிறைய பேசி விட்டீர்கள். குறுக்கீடு நேரத்தை உங்களுக்குக் கொடுத்துவிடுகிறேன்.

**திரு. கி. ஆறுமுகம்:** இந்த நிலைமையில் அங்கு இருக்கிற விவசாயிகள் பயந்து கொண்டிருக்கிறார்கள். நிலம் எடுப்பதற்கு, ஒருகால் எடுக்க வேண்டுமென்று சொன்னாலும்கூட, அதற்கு ஆட்சேபணையில்லை. நீங்கள் 1968, 1978 guideline value கொடுத்தால், விவசாயத்தை நம்பியிருக்கின்ற விவசாயி எதையும் செய்ய முடியாது. இன்றைக்கு இருக்கிற market நிலவரப்படி, நிலம் கொடுப்பதற்குத் தனியாக நில ஆர்ஜிதம் செய்யாமல், நேரடியாக நில உரிமையாளர்களிடம் பேசி முடிக்க வேண்டும் என்கின்ற ஒரு கோரிக்கையும் அங்கே எழுந்து கொண்டிருக்கிறது. அதைச் செய்ய வேண்டுமென்று இந்தச் சமயத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய திருக்கழுக்குன்றம் வட்டத்திலே தொழிற்பேட்டையே இல்லை. அங்கே தொழிற்பேட்டை அமைப்பதற்கான முயற்சியை நம்முடைய அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உலகப் புகழ்பெற்ற சுற்றுலாத் தலமாக இருக்கின்ற மாமல்லபுரம், என்னுடைய தொகுதியிலே இருக்கிறது. அங்கே ஏராளமான கற்சிற்பங்கள் செய்கின்ற தொழிற்சாலைகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம், இப்போது மாசுக் கட்டுப்பாட்டு வாரியமும், மத்திய அரசின் தொல்லியல் துறையும், சுற்றுலாத் துறையும் அப்புறப்படுத்தவேண்டுமென்று சொல்கின்றன. அங்கு இருக்கிற தொழில் செய்கிற நிர்வாகிகள், எங்களுக்குத் தனியாக மாற்று இடங்கள் ஏதாவது கொடுங்கள் என்று கேட்கிறார்கள்; சிற்பங்கள் செய்வதற்குத் தனியாக, 5 ஏக்கரிலோ, 10 ஏக்கரிலோ தொழிற்கூடங்கள் அமைத்துக் கொடுத்தால் உடனடியாகச் செல்கிறோம் என்று சொல்கிறார்கள். அதை நம்முடைய அரசாங்கம் செய்ய வேண்டும். ஏனென்று சொன்னால், பல கோடிக் கணக்கான ரூபாய்கள், அன்னிய செலாவணியாகக் கிடைக்கின்ற ஒரு தொழிலாக அது இருக்கிறது என்று சொல்கிறார்கள்.

அதேபோன்று, எனக்கு முன்னால் பேசிய அண்ணன் திரு. சுதர்சனம் அவர்கள், இங்கே சொன்னார்கள். மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை திறக்கப்படும் என்கின்ற அறிவிப்பை, நம்முடைய மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதை உடனடியாகத் திறப்பதற்கான பணிகளைத் துவங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று, செங்கற்பட்டு அருகிலே இருக்கிற மகேந்திரா தொழில் பூங்காவிலே, பல கிராமங்களை எடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். அங்கேயெல்லாம். இதுவரையிலே செய்தது, தனியார், அவர்களுடைய நிலங்களைப் பேரங்கள் பேசி, அந்த மகேந்திரா தொழிற் பூங்காவிற்கு நிலத்தை வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள். அரசு நிலங்களைத் தவிர, எஞ்சிய நிலங்கள் எதுவும் நில ஆர்ஜிதம் செய்யப்படவில்லை. ஆனால், கடந்த ஆட்சியிலே, அவர்கள் ஆட்சியைவிட்டுப் போகின்றபோது, ஒரு அறிவிப்பைச் செய்தார்கள். அதிலே வீராபுரம், பரனூர், கொல்லமேடு, தர்காஸ், குன்னவாக்கம், பட்டரைவாக்கம், தேனூர், அமணப்பாக்கம், கொன்னமங்கலம் ஆகிய கிராமங்களை எடுப்பதாக ஒரு அறிவிப்பைச் செய்துவிட்டுப் போய்விட்டார்கள். அதற்கான, நில ஆர்ஜிதம் செய்வதற்கான எந்தப் பணியும் செய்யவில்லை. ஆனால், தொழில் பூங்காவை இன்றைக்கு அமைக்க இருக்கிற அந்த நிர்வாகம், அந்த மக்களை மிரட்டி, அந்த நிலங்களை வாங்க நினைத்துக் கொண்டிருக்கிறது. அதை இந்த அரசாங்கம் உடனடியாகத் தடுத்து நிறுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆறுமுகம், சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

**திரு. கி. ஆறுமுகம்:** சீக்கிரம் பேசி முடித்து விடுகிறேன். நீங்கள் மணியை அடித்தவுடன் எதைப் பேச வேண்டும் என்று தெரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கடைசிப் பக்கத்தை எடுத்துப் பேசுங்கள்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னொரு நல்ல யோசனையை நம்முடைய அரசாங்கத்திற்குச் சொல்ல வேண்டுமென்று நினைக்கிறேன். கடந்த ஆட்சியிலே, கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் மொலாசசை எல்லாம், அதிக விலைக்கு விற்காமல், குறைந்த விலைக்கு விற்று, நம்முடைய சர்க்கரை ஆலைகள் நட்டத்தில் இயங்குவதற்குக் காரணமாக இருந்தது. இந்த மொலாசஸை, முடிந்தால் இங்கே விற்கவேண்டும். இல்லை என்று சொன்னால், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டும். அப்படியில்லை என்று சொன்னாலும்கூட, எங்களுக்கு உடன்படாத கருத்தாக இருந்தாலும்கூட, எங்கள் கட்சிக்கு உடன்பட்டாத கருத்தாக இருந்தாலும்கூட, அதே தொழிற்சாலையிலே, அதாவது சாராயம் உற்பத்தி செய்கிற...



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எரி சாராயம்.

**திரு. கி. ஆறுமுகம்:** ஆலைகளை நிர்வகிக்க வேண்டும். ஏனென்று சொன்னால், கூட்டுறவுத் துறைமூலம் நடத்தப்படுகிற ஆலைகளிலே, மொலாசஸ் உற்பத்தி செய்யலாம். இதுபோன்ற ஆலைகளை ஆரம்பித்தால் அந்த ஆலையும் நசுங்காது; அதேபோன்று, ஆயத் தீர்வைமூலம் நமக்கு வருமானமும் கூடுதலாக வரும். கடந்த ஆட்சியிலே, தனியார்களுக்குத் தரப்பட்டதால், இந்த ஆயத் தீர்வையிலே அரசுக்கு வரி மட்டும் கிடைத்தது. அதிலே உற்பத்தியாகிற அந்தச் சாராயம் எல்லாம், தனியார்களுக்குத்தான், அதிகமாக உற்பத்தி செய்ய முன்னுரிமை கொடுக்கப்பட்டது. எனவே, இதையெல்லாம் கண்ணுற்ற நம்முடைய அரசாங்கம், உடனடியாக...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தயவுசெய்து கொஞ்சம் முடித்துவிடுங்கள். நேரம் இல்லை. எல்லாக் கட்சித் தலைவர்களும் பேச வேண்டியிருக்கிறது.

**திரு. கி. ஆறுமுகம்:** முடித்துவிடுகிறேன், பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னும் எதற்குமே போகவில்லை; Matter–க்கே போகவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Matter–க்கே போகவில்லையா?

**திரு. கி. ஆறுமுகம்:** அதேபோன்று, இதை உடனே செய்ய வேண்டுமென்று சொல்லி, அடுத்து, மணல் குவாரிகள், இப்போது இலாபத்தில் அரசே நடத்துவதற்குக் காரணமாக இருந்தது, பாட்டாளி மக்கள் கட்சி என்பதை இந்த நேரத்தில் நான் பதிவுசெய்ய விரும்புகிறேன். எங்களுடைய தமிழ்க் குடிதாங்கி மருத்துவர் அய்யா அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. வேல்முருகன் மற்றும் நாங்கள் எல்லாம் பேசி—சென்ற கூட்டத் தொடரிலே, கடந்த ஆட்சியிலே ஏற்கவில்லை; இப்போது—அதை ஏற்றுதான், தனியாருக்குத் தாரைவார்க்கப்பட்ட அந்த மணல் குவாரிகள், இப்போது அரசே நடத்துகிற வாய்ப்பை, அரசுக்குப் பல நூறு கோடி ரூபாய் கிடைக்கிற வாய்ப்பை, பாட்டாளி மக்கள் கட்சி ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. அதை முறையாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, இன்னும் அதிக அளவிலே வருமானம் வர வாய்ப்பு இருக்கிறது. அதை எல்லாம், மக்கள் அதிக அளவிலே குடியிருக்கக்கூடிய இடங்களிலே, குடிநீர்ப் பிரச்சினை இருக்கிற இடங்களிலே எடுக்காமல், பல்வேறு இடங்களில்,

அதற்காகத் தனிப்பட்ட இடங்களைத் தேர்வு செய்து நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*நண்பகல் 12-00*

அதேபோல, தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை. (மணியடிக்கப்பெற்றது) தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை, மிகப் பெரிய அளவிலே, அதற்குத் தனித் தன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முடித்துவிடுகிறேன், முடித்துவிடுகிறேன் என்று சொன்னால் எப்படி?

**திரு கி. ஆறுமுகம்:** நேற்றும் இப்படித்தான் செய்தீர்கள்; இன்றைக்கும் அப்படியே செய்கிறீர்கள்!

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எழுதிக் கொடுத்துவிட வேண்டியதுதான். நேரம், காலத்தைக் கருதித்தான் சொல்கிறோம்.

**திரு. கி. ஆறுமுகம்:** எங்கள் கட்சியில் நாங்கள் எல்லாம் பேசவேண்டும். கடந்த ஆட்சியிலே பேச விடவில்லை; நீங்களும் பேச விடவில்லை என்றால், எப்படி?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேசவிடாமலா, உங்களை 15 நிமிடங்கள் பேச விட்டிருக்கிறோம்?

**திரு. கி. ஆறுமுகம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆய்வகத் துறை தனித் தன்மை பெறவேண்டும். ஏனென்று சொன்னால், இந்த நாட்டிலே பட்டாசுத் தொழிற்சாலைகளில் அதிகமாக விபத்துகள் நடைபெறுகின்றன. கொதிகலன்கள் இருக்குமிடங்களில் அதிகமாக விபத்துகள் நடைபெறுகின்றன. பல்வேறு சாயக் கழிவுகள் பல கோணங்களிலே இன்றைக்கு நம்மை அச்சுறுத்துகின்றன. இவற்றையெல்லாம் கண்காணிப்பதற்கு, தொழிற்சாலை ஆய்வகப் பணிகள் சிறப்பாக நடப்பதற்கு, அதற்கு மிகவும் முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோன்று, (மணியடிக்கப்பெற்றது) இப்போது தகவல் தொழில்நுட்பத் துறையிலே, ஒரே நிமிடம், பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. ஒரே நிமிடம். நம்முடைய அரசுக்கு ஆதரவாகத்தானே பேசப்போகிறேன்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இருந்தாலும், நேரம், காலம் முக்கியமல்லவா?

**திரு. கி. ஆறுமுகம்:** உலகத் தரம் வாய்ந்த 'டைடல்' பூங்காவை, நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது, 2000 ஆம் ஆண்டிலே துவக்கினார்கள். அதனுடைய அடிச்சுவடாக, இன்றைக்கு அதிலே இருந்து ஆரம்பிக்கப்பட்ட மென்பொருள் உற்பத்தி நிறுவனங்கள் தமிழகத்திலே, 1,437 மென்பொருள் தொழில்நுட்ப நிறுவனங்கள் இருக்கின்றன. அவற்றின்மூலம் இதுவரை கடந்த ஆண்டிலே 14,115 கோடி ரூபாய்க்கு உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லி, (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு கருத்து.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைதி, அமைதி.

**திரு. கி. ஆறுமுகம்:** ஒரே ஒரு கருத்து. கடைசியாக ஒரு கருத்து. இப்போது தகவல் தொழில்நுட்பத் துறையிலே மென்பொருள்கள் உற்பத்தி; அதனால் பல்வேறு துறைகள் முன்னேறிக் கொண்டிருக்கின்றன என்று சொன்னாலும், தமிழகத்தில், சென்னை, கோவை போன்ற பகுதிகளில் மட்டும் அப்படி என்றில்லாமல், தமிழகத்திலே இருக்கிற அத்தனை மாவட்டங்களிலும் இந்தத் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களை...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. கி. ஆறுமுகம்:** அமைத்தால், அந்தப் பகுதிகளிலே இருக்கிற மாணவர்களுக்கு, படித்திருக்கிறவர்களுக்கு வேலைவாய்ப்புக் கிட்டும் என்று சொல்லி, இந்தத் தொழில் துறை மிகச் சிறப்பாக இயங்குவதற்கு நல்ல திட்டங்களை மென்மேலும் கொண்டுவரவேண்டும் என்று கேட்டு, இந்த வாய்ப்பினை நல்கிய உங்களுக்கு நன்றிகூறி இடம் சார்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில் துறை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறையில் பேசுகிற வாய்ப்பினைத் தந்தமைக்காகத் தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தில் தொழில் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை வளர்வதற்கு வாய்ப்புள்ள ஒரு நல்ல காலம் இது. தகவல் தொழில்நுட்பத் துறையிலும், தொழில் துறையிலும் மாண்புமிகு முதல்வர் அவர்களே நேரடியாகத் தலையிட்டு, அதனுடைய வளர்ச்சிக்குக் கவனம் செலுத்துவது வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

இந்த அரசு, மதிப்புக் கூட்டல் வரி—VAT—அமலாக்குவது என்ற முடிவை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. மதிப்புக் கூட்டல் வரி, தமிழகத்தை இதர மாநிலங்களோடு இணைந்து செயலாற்ற உதவும். நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் தமிழகம் மூன்றாவது இடத்தில் இருப்பதாகக் கூறப்படுகிறது. முதலிடத்திற்குச் செல்லும் வாய்ப்பினை உருவாக்கவேண்டுமென்ற எங்களுடைய ஆவலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதேநேரத்தில், இதில் உள்ள சில உண்மைகளையும், சிரமங்களையும் கவனத்திற்கொண்டு பணியாற்ற வேண்டியிருக்கிறது. அதிவேகமான வளர்ச்சி மட்டுமே வேலையில்லாத் திண்டாண்டத்தைக் குறைப்பதில்லை என்பது நம் முன் நிற்கும் மிகப் பெரிய உண்மையாகும். நம்முடைய நாட்டின் நடவடிக்கைகளால் இது நிரூபிக்கப்பட்டிருக்கிற உண்மை என்பதை நான் கவனப்படுத்த விரும்புகிறேன்.

நம்முடைய தமிழக அரசினுடைய திட்டக் கமிஷன் துணைத் தலைவர், பேராசிரியர் மு. நாகநாதன் அவர்களின் 'இந்தியப் பொருளாதாரம்-இருளில் ஒளி' என்ற நூலில் குறிப்பிடப்பட்டிருக்கிற ஒருசில வரிகளை இங்கே நான் கவனப்படுத்த விரும்புகிறேன். பக்கம் 234–ல் ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் மனித வளர்ச்சி அறிக்கை 2005–ல், "உலகமயமாக்கலின் விளைவுகள் பற்றிய புள்ளிவிவரங்கள், வளர்கிற நாடுகளில் உள்ள பெரும்பான்மையான மக்களுக்குப் பலனளிக்கவில்லை என்பதை உறுதி செய்கிறது." அதே புத்தகத்தில், பக்கம் 232–ல் கொடுத்துள்ள விவர அடிப்படையில், "நகர்ப்புறங்களில் வாழும் மேல்தட்டு மக்கள்தான் இந்தப் பொருளாதாரச் சீர்திருத்தத்தால் பயன்பெற்றுள்ளார்கள் என்பதை இந்திய வளர்ச்சி அறிக்கை குறிப்பிடுகிறது." இவற்றை நாம் கவனத்தில்கொள்வது பொருத்தமாகவும், அவசியமாகவும் இருக்கும் என்று இங்கே கவனப்படுத்த விரும்புகிறோம். இவற்றைக் கவனத்தில்கொண்டுதான், எங்கள் கட்சியின் சார்பான தேர்தல்



அறிக்கையிலேயே குறிப்பிடப்பட்டிருப்பது, வேலைவாய்ப்புகளைப் பெருக்க வேண்டும்; வறுமையை ஓரளவாவது குறைக்கவேண்டும்; கட்டுப்படுத்த வேண்டும், அதற்கு, இருக்கும் தொழில்கள் காப்பாற்றப்படுவதோடு, புதுத் தொழில்கள் பல்கிப் பெருகுவது மிக அவசியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளதை இங்கே கவனப்படுத்த விரும்புகிறேன்.

*பிற்பகல் 12–05*

அதேபோல, அன்னிய முதலீடு சம்பந்தமாக, F.D.I. என்று அழைக்கப்படும் அன்னிய நேரடி முதலீடு பெறுவதில், தமிழகம் நான்காவது இடத்தில் இருப்பதாகக் கூறப்படுகிறது. இதுகுறித்து மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய நிலைப்பாடுகளை இந்த இடத்திலே நான் பதிவுசெய்ய விரும்புகிறேன். காரணம், சிலபேர் அறியாமையால் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி மேற்கு வங்காளத்திலே ஒரு கொள்கை, தமிழகத்திலே ஒரு கொள்கை, மற்ற மாநிலங்களில் வேறு கொள்கை என்றெல்லாம் பேசக்கூடிய காரணத்தினாலே, நான் குறிப்பிட விரும்புகிறேன். நாங்கள் ஆளுகிற மாநிலமாக இருந்தாலும், நாங்கள் ஆதரிக்கிற அரசு செயல்படுகிற மாநிலமாக இருந்தாலும், அரசியல் ரீதியாக நாங்கள் எதிர்த்துப் போராடுகிற மாநிலமாக இருந்தாலும், இந்தக் கொள்கையில் ஒரே நிலைப்பாட்டைத்தான் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி கடைப்பிடிக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதிலும் குறிப்பாக, அத்தகைய மூலதனம் பெறுகிறபோது, அந்த மூலதனம் நமது பொருளாதாரத்தின், தற்போது இருந்துவரும் உற்பத்தித் திறனை மேம்படுத்தும்வகையில் அது இருக்க வேண்டும் என்பதோடு, அன்னிய மூலதனம், இந்தியப் பொருளாதாரத்தைத் தொழில்நுட்ப ரீதியில் மேம்படுத்துவதாக இருக்க வேண்டும். அந்த மூலதனம், கட்டாயம் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதாக இருக்கவேண்டும் என்பதை இந்த நேரத்தில் நான் கவனப்படுத்துகிறேன். எங்கள் கட்சியின் அகில இந்திய மாநாட்டிலே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இந்தியா முழுவதும் மார்க்சிஸ்ட் கட்சி வலியுறுத்துகிறது என்பதை நான் இந்த அவையிலும் பதிவுசெய்ய விரும்புகிறேன். அரசு இந்த யோசனைகளைப் பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இது பொருளாதார வளர்ச்சிக்கும், மக்களுக்கும் நன்மை அளிப்பதாக அமையும் என்ற காரணத்தினாலே, இவற்றைக் கவனப்படுத்த விரும்புகிறேன்.

அதேபோல, பொதுத் துறை; சேலம் உருக்காலையை இப்போது தனியார்மயமாக்குவதற்காகப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது, அதைப் பாதுகாப்பதற்கு அந்த ஆலையில் பணியாற்றுகிற

தொழிலாளர்களும், சேலம் மாவட்ட மக்களும் நடத்திய மகத்தான இயக்கத்திற்குப் பெரும் பங்கு உண்டு. பொதுத் துறையாக இப்போது அது தொடர்ந்து செயல்படுவது வரவேற்கத்தக்கது. நம்முடைய தமிழகத்தைச் சார்ந்த மத்திய அமைச்சர்கள், சேலம் உருக்காலைக்குக் கூடுதலான முதலீடுகள் வந்து சேர்வதற்கு எடுத்துவரும் பெரும் முயற்சிக்கும் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி பாராட்டுதல்களை உரித்தாக்குகிறது.

அதேபோல, இலாபம் ஈட்டக்கூடிய மிக முக்கிய பொதுத் துறை நிறுவனமான நெய்வேலியைப் பாதுகாத்த பெருமை, அந்த ஊழியர்களுக்கும், தொழிற் சங்கங்களுக்கும் உண்டு. மிகச் சரியான நேரத்தில், பொருத்தமான முறையிலே தலையிட்டு, மத்திய அரசை, தன்னுடைய முடிவைப் பின்வாங்கச் செய்ய தலையிட்ட நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் மார்க்சிஸ்ட் கட்சி தன்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பொதுத் துறையைப் பொறுத்தவரை, B.H.E.L. போன்ற நவரத்தினா தொழில்கள் பாதுகாக்கப்படுவதோடு, மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ள தொழில் துறைகளான போக்குவரத்து, புகளூர் காகித ஆலை, மின்சாரம், சர்க்கரை, சிமென்ட், கூட்டுறவுப் பஞ்சாலைகள் மற்றும் N.T.C. மில்கள் போன்றவற்றைப் பாதுகாப்பதோடு, அவற்றை வளப்படுத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுத் துறை என்றாலே முகம் சுளிக்கக்கூடியவர்கள் நம்மிடையே உண்டு என்பதை நாங்கள் அறிவோம். ஆனால், தனியார் நடத்தும் தொழில்களில் நட்டங்களைப்பற்றிக் கவலைப்படாமல், பொதுத் துறையிலுள்ள திறமையின்மை, நட்டம் போன்றவற்றை விமர்சிக்கக்கூடியவர்கள் உண்டு. இதுகுறித்து மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி, தன்னுடைய கருத்தை இங்கே முன்வைக்க விரும்புவது, பொதுத் துறையை நவீனப்படுத்துதல், ஜனநாயகப்படுத்துதல், அதிகார வர்கக கட்டுப்பாடுகளிலிருந்தும், இலஞ்ச இலாவண்ய நடவடிக்கைகளிலிருந்தும் விடுவிப்பது, கறாரான பொறுப்புகளை நிர்ணயித்தல், நிர்வாகத்தில் தொழிலாளர்களைப் பங்கேற்கச் செய்தல், போட்டியை எதிர்கொள்ளும் ஆற்றலை வளர்த்தல் போன்றவை கடைப்பிடிக்கப்பட்டால், பொதுத் துறை நிச்சயமாக மேலாதிக்கம் வகிக்கும் என்று நாங்கள் உறுதியாக இங்கே குறிப்பிட விரும்புகிறோம். சிமென்ட், சர்க்கரை, பஞ்சாலை, ஜவுளி, தோல் பொருள், விவசாய வளர்ச்சி மற்றும் உணவுப் பொருள் பதப்படுத்துதல், இரசாயனம் மற்றும் உரம் போன்ற தொழில்கள்,



தமிழகத்திலே இன்று செயல்படுகின்றன. இவை மேலும் வளர்வதற்கான வாய்ப்பை இந்த மாநிலம் சிறப்பாகவே பெற்றுள்ளது.

பிற்பகல் 12–10

பொருளாதாரச் சீர்திருத்தம் என்பது, சந்தையை அடிப்படையாகக் கொண்டுள்ளது. மேலும் மேலும் இலாபத்தை நோக்கிச் செல்ல வேண்டும் என்ற பேராசை கொண்டதாக இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில், தொழில்கள் வளரும்போதே நிறுவனங்கள், சட்டங்களை மதித்து நடக்க அரசு ஆணையிட வேண்டும். கடந்த ஆட்சியில் அது முறையாக நடைபெறவில்லை. இந்தக் காலத்தில் தொழிற் சங்கங்கள் மிகவும் பொறுப்புடன் நடந்துள்ளதாகப் பல்வேறு விவரங்கள் கூறுகின்றன. ஆனால், நிறுவனங்கள் அவ்வாறு நடக்கவில்லை. குறிப்பாக, 1999-ல் கதவடைப்பின்மூலம் ஏற்பட்ட இழப்பு, 161.6 இலட்சம் நாட்கள். ஆனால் வேலைநிறுத்தத்தின்மூலம் ஏற்பட்ட இழப்பு, 106.2 இலட்சம் நாட்கள். ஆனால், அதுவே 2004 ஆம் ஆண்டு புள்ளிவிவரத்தை ஆய்வு செய்தால், கதவடைப்பின்மூலம் ஏற்பட்ட இழப்பு, 190.4 இலட்சம் நாட்கள். வேலைநிறுத்தத்தின்மூலம் ஏற்பட்ட இழப்பு, வெறும் 48.3 இலட்சம் நாட்கள். இது அகில இந்திய புள்ளிவிவரமாக இருந்தாலும், தமிழகத்திற்கும் இதில் பங்குண்டு என நான் குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே, தொழிலாளர் சட்டங்களை மதிக்க வேண்டும் என நிர்வாகத்திற்கு அரசு உத்தரவிட வேண்டும். தனியார் கல்வி நிலையங்களில், கல்வியில் இட ஒதுக்கீடு வழங்குவது...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இரண்டு நிமிடத்தில் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** முக்கியமான விவரங்களை நான் சொல்கிறேன். நிறைய பேர் சபையின் நேரத்தை வீணடிக்கிறார்கள். நான் அப்படிச் செய்யவில்லை. முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு போவதற்காக நான் அதைப் பதிவுசெய்ய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Continue பண்ணுங்கள். (குறுக்கீடு) Continue பண்ணுங்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** ஆகவே, தனியார் தொழிற்சாலைகளிலும் இட ஒதுக்கீட்டிற்கு வழிவகை செய்யக்கூடியவகையில், அரசு சட்டம் இயற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சிமென்ட் தொழில் உற்பத்திக்குத் தேவையான சாம்பலை மின்சார உற்பத்தி நிலையங்களிலிருந்து கிடைக்க ஏற்பாடுகளை இந்த அரசு செய்ய

வேண்டும். நான் ஏன் இதை வலியுறுத்துகிறேன் என்றால், சென்ற ஆட்சிக் காலத்திலே இந்தச் சாம்பல், நம்முடைய தமிழ்நாட்டில் பற்றாக்குறையாக இருந்தபோது, ஆந்திராவிலுள்ள நிறுவனங்களுக்கு அனுப்ப அ.தி.மு.க. அரசு உத்தரவு போட்டது என்பதையும் நான் இங்கே கவனப்படுத்த விரும்புகிறேன். வேறு மாநிலங்களுக்கு அனுப்பவே கூடாது என்று நான் சொல்லவில்லை. நம்முடைய தேவைக்கு அதிகமாக ஒன்று இருக்குமானால், அதை அனுப்புவதிலே தவறில்லை. ஆகவே, அதை கவனத்தில்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அதேபோல், ஜவுளித் தொழிலில் தமிழகம் முதல் இடத்தில் உள்ளது என்பது நாம் பெருமைப்படக்கூடிய விஷயமாகும். நம்முடைய மாநிலத்தில் மட்டும்தான் பருத்தி உற்பத்தி கூடுதலாக இருப்பதும், அதன்மூலம், spinning, நெசவு, processing unit, knitting, garments போன்றவற்றை உள்ளடக்கிய இந்தத் தொழில்கள் வளர்ச்சி பெற்று வருகின்றன. இதில் நேரடியாகவும், மறைமுகமாகவும் 25 இலட்சம் பேர் பணியாற்றுகிறார்கள். ஆகவே, இந்தத் தொழில் மேலும் வளரும்; வளர அரசு மேலும் கவனம் செலுத்திட வேண்டுமென்று குறிப்பிடுகிறேன்.

நாட்டின் ஒட்டுமொத்த விவசாய உணவுப் பதப்படுத்தும் தொழில் வளர, அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்று, விவசாயம், சிறிய, நடுத்தர விவசாயிகளுக்கு இலாபகரமாக இல்லை என்கிற உண்மையை கவனத்தில்கொண்டு பொருத்தமான முறையில் இதைச் சரி செய்ய வேண்டும்.

ஈரோட்டில் மஞ்சள், சேலத்தில் ஜவ்வரிசி, திருச்சியில் வாழை, நாங்குநேரியில் மூலிகைகள், கிருஷ்ணகிரியில் மாம்பழம், மதுரையிலே பூ வகைகள், பண்ருட்டியில் முந்திரி, தூத்துக்குடியில் பனைத் தொழில், விருதுநகரில் மிளகாய், அதேபோல குடியாத்தம், உடுமலை, பொள்ளாச்சிப் பகுதிகளில் கயிறு, குமரியிலே கனரக இரப்பர் தொழில், தருமபுரியில் மாலிப்டினம் தொழிற்சாலை போன்றவற்றைப் புதிதாக அமைப்பதற்கு உரிய வாய்ப்புகள் இருக்கின்றன. அரசு கவனத்தில்கொண்டு சாத்தியமானவற்றைத் தொடங்க முன்வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சிறுதொழிலுக்கு முன்னுரிமை. அதன் வளர்ச்சிக்கு அரசின் உதவியாக இன்றைக்குப் பல்வேறு அறிவிப்புகள் வெளியிடப்பட்டிருப்பது, (மணியடிக்கப்பெற்றது) பாராட்டுக்குரிய நல்ல அம்சம் என்பதை இங்கே நான் குறிப்பாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதைச் சொல்கிற நேரத்தில், சிறுதொழில்களை வளப்படுத்துவதன்மூலம்



கூடுதலான வேலைவாய்ப்புகளை அதிகரிக்க முடியும் என்ற காரணத்தினால், இதை வலியுறுத்துகிறோம். ஆனால், மத்திய அரசினுடைய கொள்கை இதற்கு மாறாக உள்ளது என்பதையும், மத்திய பட்ஜெட்டில் ஏற்கனவே சிறுதொழில்களுக்கு இருந்த பாதுகாப்பு—'Dereserving' என்று சொல்லக்கூடிய அந்தப் பாதுகாப்பு—படிப்படியாக இப்போது குறைக்கப்பட்டு வருவதும், குறிப்பாக அதனுடைய நிதிநிலை அறிக்கையில், 2004-ல் 85 தொழில்கள் அதிலிருந்து விலக்கப்பட்டதும், 2006-ல் 108-ம், 2006-2007-ல் 109-ம், சிறுதொழில்கள் அந்த list-லிருந்து நீக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் கவனப்படுத்துகிறேன். பொருளாதாரச் சீர்திருத்தம் என்பது, சிறுதொழில்களை அழிக்கக்கூடியதாக இப்போது இருக்கிறது. இதைத் தடுத்து நிறுத்தாவிட்டால், வேலைவாய்ப்பைப் பாதுகாக்க முடியாது என்பதை மார்க்சிஸ்ட் கட்சி சுட்டிக்காட்ட விரும்புகிறது. பழைய N.D.A. அரசாங்கம் சென்ற அந்தப் பாதையில், இன்றைய மத்திய அரசு இந்த விஷயத்தில் தொடருமானால், சிறுதொழில்கள் கடுமையாக பாதிப்புக்கு ஆளாகும் என்பதை இங்கே நான் கவனப்படுத்த விரும்புகிறேன். ஆகவே, அந்தக் கொள்கையை மாற்ற வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசோடு தொடர்புகொண்டு, மத்திய அரசினுடைய இந்தக் கொள்கையில் உரிய மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இங்கிருக்கிற நம்முடைய காங்கிரஸ் நண்பர்களும் அதற்காக, தமிழகத்தினுடைய நலன் கருதி, அதற்கான முயற்சி எடுக்கவேண்டும், குரல் கொடுக்கவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-15

கடைசியாக, மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை... (மணியடிக்கப்பெற்றது) ஒரே நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன். கடந்த 4 வருடங்களாக இயங்காத காரணத்தினால், 60 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும், அதற்குரிய வட்டியைக்கூட செலுத்தமுடியாத நிலை இருக்கக்கூடிய நிலையில், வட்டியைத் தள்ளுபடி செய்து, அந்த ஆலை இயங்க நடவடிக்கை எடுக்கவேண்டும். கோவை மாவட்டம், சிறுமுகையிலே மிகப் பழம்பெருமை வாய்ந்த தொழிற்சாலை அங்கே செயல்பட்டு வந்தது. கடந்த பல ஆண்டுகளாகப் பூட்டிக் கிடக்கிறது. 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் தெருவிலே நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அதற்குரிய நடவடிக்கை எடுத்து, ஒன்று ஆலை இயங்கவேண்டும்; அல்லது அந்தச் சொத்தை விற்று, தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டியதைச் சேர்க்கவேண்டும் என்று இந்த நேரத்திலே

கேட்டுக்கொண்டு (மணியடிக்கப்பெற்றது) இந்த மானிய கோரிக்கையிலே பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூற விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பின திரு. சு. குணசேகரன். (குறுக்கீடு) திரு. செங்கோட்டையன், நான் உங்களிடமிருந்து ஒரு விளக்கத்தைக் கேட்க விரும்புகிறேன் ஒவ்வொருவரும் பேசிய பிறகு, நீங்களாகவே point of order என்று பேசினால். சரிதானா (குறுக்கீடு)

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவ அவர்களே, தமிழக அரசின் கொள்கை விளக்கக் குறிப்பில்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. குணசேகரன், ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடு) சரி, திரு. செங்கோட்டையன், சொல்லி முடியுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இடதுசாரி கட்சியின் சார்பாகப் பேசியிருக்கிற உறுப்பினர் பேசுகிறபோது, தங்களுடைய கொள்கையைப்பற்றி இங்கே சொன்னார். மேற்கு வங்காளத்திலே இவர்கள் ஆட்சி நடத்துகிற இடத்திலேகூட, இன்றைக்குத் தனியார் நிறுவனங்களின் சார்பாக தனியார் முதலீடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அவர்களுடைய முதலமைச்சராக இருப்பவர், தனியார் முதலீடு செய்யவேண்டுமென்று அண்டை நாட்டுக்குச் சென்று அவர்களை அழைத்து வருகிற நிலை இருக்கிறது. ஆகவே, கம்யூனிஸ்ட் சித்தாந்தங்களைப் பார்க்கிறபோது வெளியே ஒன்றைப் பேசுகிறார்கள்; ஆளுகின்ற இடத்திலே ஒன்றைச் செய்து கொண்டிருக்கிற காட்சியை இப்போது நாம் காண்கிறோம் (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத துணைத் தலைவர் அவர்களே, நான் பேசியபோது அவர் கவனித்தாரா என்று எனக்குத் தெரியாது. இவர்களைப் போன்றவர்கள் தவறாகச் செய்கின்ற பிரச்சாரத்திற்காகத்தான், எங்கள் கொள்கை நிலையை ஏற்கெனவே இந்த அவையில் நான் தெளிவாக வலியுறுத்தி இருக்கிறேன் இன்னொரு முறை சொல்வதற்கு நேரம் இல்லை விளக்குவதற்கு இதைப் புரிந்துகொள்ளவேண்டும். எல்லா இடத்திலேயும் ஒரே நிலையைக் கையாளுவதுதான் கம்யூனிஸ்ட்டுகள் என்பதை மீண்டும் அழுத்தமாகச் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சு. குணசேகரன்.



***திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் கொள்கைக் குறிப்பில், தமிழகத்தின் தொழில் வளத்தைப் பெருக்க, ஊக்குவிக்க எடுத்திருக்கிற கோட்பாடுகள் சிறந்ததாகும். நான்கு அம்சங்களில் கொள்கை வகுக்கப்பட்டிருக்கிறது. தொழில் வளர்ச்சி என்பது, முன்னேறிக்கொண்டிருக்கிற மனித சமுதாயத்திற்கு, ஒரு நாட்டிற்கு அவசியம் தேவை. தொழில் என்றாலே கூடுதல் உற்பத்தி, வேலைவாய்ப்பு, வருமானம் என்று கொள்ளவேண்டும். தமிழகத்தின் தொழில் வளர்ச்சியை, தனி நபர் வருமானம், வேலைவாய்ப்பு, தொழிலாளர் நலன் பாதுகாப்பு என்ற அடிப்படையில் உருவாக்கவேண்டும்.

புதிய பொருளாதாரக் கொள்கையால், தொழிலாளர் நலன் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. உதாரணத்திற்கு, தமிழகத்தில இருக்கிற 1,993 பஞ்சாலைகளில் இளம் பெண்கள் இன்றைக்குப் பல்வேறுவிதமாக சுரண்டப்படுகிறார்கள். அவர்களுடைய கூலி குறைக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கடந்த ஆட்சிக் காலத்தில் பஞ்சாலைத் தொழிற் சங்கத் தலைவர்கள், கடந்த ஆட்சியில் இருந்த முதலமைச்சர் அவர்களைச் சந்திப்பதற்கு ஐந்தாண்டுக் காலம் முயற்சி செய்தும், முடியாத நிலையில், இன்றைக்கு நமது தமிழக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 5–7–2006 ஆம் தேதி, ஒரு மணி நேரம் தொழிற் சங்கத் தலைவர்களைச் சந்தித்துப் பரிவோடு குறைகளைக் கேட்டிருக்கிற ஒரு சிறப்பான செய்தியை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதைத் தொடர்ந்து தொழிலாளர் நலத் துறை அமைச்சரும் ஜூலை 11 ஆம் தேதி பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்.

அதைப்போல, மேட்டுப்பாளையத்தில் இருக்கிற சிறுமுகையிலே 5 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை பார்க்கிற அந்த விஸ்கோஸ் தொழிற்சாலை கடந்த ஆட்சியில் மூடப்பட்டிருந்தது. அதைத் திறக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். அதைப்போல, சென்னையைச் சுற்றி, தொழில் வளர்ச்சி மையப்படுத்தப்படுகிறது. அது எதிர்மறையான பல்வேறு விளைவுகளை உருவாக்கி இருக்கிறது. மக்களின் போக்குவரத்து நெருக்கடி, சுற்றுச்சூழல், விலையேற்றம், சாதாரண மக்களின் வாழ்க்கையில் பாதிப்பு போன்ற எதிர்மறையான விளைவுகளை உருவாக்கி இருக்கிறது. எனவே, நாட்டின் பிற பகுதிகளில் தொழில் வளர்ச்சிக்கான உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்படவேண்டும். தொழிலில அந்நிய முதலீடுகள் என்ற நிலை உருவாகியிருந்தாலும், இந்திய முதலீட்டாளர்களுக்கு முன்னுரிமை

அளிக்கப்படவேண்டும். தொழில் உருவாகும்போது, சுற்றுப்புறச் சூழல் மிக உறுதியாகப் பாதுகாக்கப்பட வேண்டும். நமது மண்வளம், நீர், காற்று மாசுபடுவதைத் தடுக்கவேண்டும். இதைக் கவனத்தில் எடுத்துக்கொள்ளாததால், தமிழகத்தில் கடந்தகால இழப்புகள் ஈடுசெய்ய முடியாதவை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கரும்புத் தொழிற்சாலைகளின் விவசாயிகள் நலன் பாதுகாக்க, முத்தரப்புப் பேச்சுவார்த்தை தொடர்ந்து நடத்தவேண்டும். கரும்புப் பயிர், சீனி, ethanol, molasses, spirit மின்சாரம், காகிதக் கூழ் போன்ற பல பொருட்கள் தயாரிக்கப் பயன்படுகிறது. எனவே, அந்தத் தொழிலை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். புதுக்கோட்டை E.I.D. Parry சர்க்கரை ஆலை உட்பட, பல ஆலைகளில் கரும்பினைக் காலங்கடந்து வெட்டுவதால் ஏற்படுகிற விளைவுகளைப் போக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பிற்பகல் 12-20

தமிழ்நாட்டில் விவசாயத்திற்கு உப தொழிலாக இருக்கக்கூடிய பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கான உறுதியான நடவடிக்கையை எடுத்து, 'பால் விற்பனை மட்டும்' என்ற குறிக்கோளை மாற்றி, பால் பொருளைக் கொண்டு தயாரிக்கிற தொழிற்சாலைகளை உருவாக்க வேண்டும்.

அதைப்போல, மரபுசாரா எரிசக்தியை உருவாக்குவதற்கு, bio-diesel தொழிற்சாலையை அரசே ஏற்று நடத்த வேண்டும். கிருஷ்ணகிரி மாவட்டத்தில், ஓசூர் பகுதியில், தேன்கனிக்கோட்டை வட்டாரத்தில் சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைப்பதற்காக எடுத்திருக்கிற அரசின் நடவடிக்கையால் வளமிக்க விவசாயப் பகுதிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

அதைப்போல, என்னுடைய மாவட்டமான சிவகங்கையில், இன்றைக்குக் குறிப்பாகத் தொடர்ந்து நான் வலியுறுத்திக் கொண்டிருக்கிற கிராஃபைட் தொழிற்சாலையைத் துவங்குவதற்கு உறுதியான நடவடிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவிக்க வேண்டும். 1950, 1960, 1970, 1971 ஆம் ஆண்டுகளின் ஆய்வின் அடிப்படையில், சிவகங்கையிலே சுமார் 18 கிலோ மீட்டர் நீளம், 10 முதல் 30 கிலோ மீட்டர் அகலம், 100 முதல் 140 மீட்டர் ஆழம் வரை கிராஃபைட் படிவங்கள் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆய்வின் அடிப்படையில், 30 இலட்சம் மெட்ரிக் டன் கிராஃபைட் தாது கிடைக்கிறது. சமீபத்திலே மத்திய அரசாங்கத்தினுடைய ஆய்வின் அடிப்படையில், 1996–1997, 2004–2006 ஆய்வின்படி, மேலும் 20 இலட்சம் மெட்ரிக் டன் கிராஃபைட் கிடைக்கிற ஒரு வாய்ப்பும் உருவாகி



இருக்கிறது. இன்னும் ஆய்வுகள் மேற்கொண்டால், மேலும் அந்த கிராஃபைட் கிடைப்பதற்கான வாய்ப்புகள் நிறைய இருக்கும். அதனுடைய கரிச் சத்தும் 10 முதல் 25 விழுக்காடுகள் உள்ளதாகச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, கிராஃபைட் என்பது 100 ஆண்டுகளுக்காக வெட்டியெடுக்கிற ஒரு திட்டம்.

இன்றைக்கு நமது சுரங்கப் பணி என்பது 950 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தி நடந்தாலும், 1980 முதல் நடக்கிற அந்தச் சுரங்கப் பணி 50 ஏக்கர் நிலப் பரப்பில் 20 மீட்டர் ஆழம் வரை மட்டுமே செய்யப்பட்டிருக்கிறது. அதைப்போல, 1994–ல் தொடங்கப்பட்ட சுத்திகரிப்பு ஆலை, இதுவரை 1 இலட்சம் டன் கிராஃபைட், தாதுவைச் சுத்தம் செய்து, அதன்மூலம் சுத்திகரிக்கப்பட்ட கிராஃபைட் 84 விழுக்காடு முதல் 94 விழுக்காடு வரை உற்பத்திசெய்து, இந்தியாவில் பல மாநிலங்களுக்கு விற்பனை செய்து வருகிறது. இந்தத் தொழிற்சாலை கடந்த 3 ஆண்டுகளாக இலாபத்தில் இயங்கி வருகிறது. இந்தியாவினுடைய ஆண்டுத் தேவை, சுமார் 35 ஆயிரம் டன் எனத் தற்போதுள்ள நிலையில், தமிழ்நாடு, ஒரிசா இணைந்து 13 ஆயிரம் டன்தான் கிராஃபைட் உற்பத்தி செய்கின்றன. எனவே, சிவகங்கையிலே மேலும் 10 ஆயிரம் டன் கிராஃபைட்டை உற்பத்தி செய்வதற்குத் தாதுக்களும் இருக்கின்றன; தேவையும் இருக்கிறது என்ற அடிப்படையில், அந்த ஆலையை விரிவாக்குவதற்கான உறுதியான நடவடிக்கையை நமது முதல்வர் அவர்கள் எடுக்க வேண்டும்.

அதைப்போல, கிராஃபைட்டைப் பயன்படுத்தி, உப தொழிற்சாலைகளை அங்கே உருவாக்க வேண்டும். தமிழகத்திலே திருப்பூரிலே இருப்பதைப்போல, சிவகாசியிலே பட்டாசுத் தொழிற்சாலைகள் இருப்பதைப்போல, இராணிப்பேட்டை, ஆம்பூர், வாணியம்பாடியிலே தோல் பதனிடும் தொழிற்சாலைகள் இருப்பதைப்போல, கிராஃபைட்டை பயன்படுத்துகிற உப தொழிற்சாலைகளை அங்கே சிவகங்கையில் துவங்க வேண்டும். வெப்பம் தாங்கும் சூளைக் கற்கள் தயாரிப்பு, mosaic தயாரிப்பு, உராய்வுத் தடுப்பான்கள் தயாரிப்புகள், கருப்பு வண்ணம் தயாரிப்பு, மின்கலத் தயாரிப்புகள், கரிக்குச்சித் தயாரிப்பு, விரிவாக்கப்பட்ட கிராஃபைட், வாகன உதிரி பாகங்கள், மேலும் பலவகை உப தொழில்கள் அங்கே தொடங்குவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட தொழிற்சாலைகளை அங்கே துவங்கி, அந்த மாவட்டத்தைத் தொழில் வளர்ச்சி மாவட்டமாக மாற்ற வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விரைவிலே உரையை முடியுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** இன்னும் சொல்லவேண்டுமென்று சொன்னால், தமிழ்நாடு கனிம நிறுவனம், சுரங்கப் பணிகளைத் துரிதப்படுத்தி, 100 மீட்டர் ஆழம்வரை அந்தக் கனிமங்கள் வெட்டப்பட்டால், அதிலே கிடைக்கிற தண்ணீரினால், அந்த மாவட்டத்தினுடைய விவசாயிகளுக்குப் பாசன வசதியை உருவாக்க முடியும்; விவசாயத்தையும் பெருக்க முடியும் என்று இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சிவகங்கை பகுதியிலே கிடைக்கிற கிராஃபைட்டைக் கொண்டு உப தொழிற்சாலைகள் தொடங்கினால், அதன்மூலம் தமிழக அரசின் ஆண்டு வருமானத்தை மேலும் பல கோடிகள் பெருக்கலாம். புதிய கிராஃபைட் தொழிற்சாலை மற்றும் உப தொழிற்சாலைகள் தொடங்குவதற்கு அரசுக்கு ஆகின்ற தொகை, சுமார் 100 கோடி என்றுதான் மதிப்பீடு செய்யப்பட்டு இருக்கிறது. அந்த அடிப்படையிலே, அந்தத் திட்டத்தை முன்னுரிமை கொடுத்துச் செயல்படுத்த வேண்டும். *(மணியடிக்கப்பெற்றது)* இறுதியாக ஒன்றே ஒன்று. குறிப்பாக, 1772 ஆம் ஆண்டு முத்து வடுகநாதத் தேவரை, வெள்ளையர்கள் கொன்று, ஆட்சி உரிமையைப் பெற்றதற்குப் பின்னால், 1780 ஆம் ஆண்டு வீரமங்கை வேலு நாச்சியாரும், மருது சகோதரர்களும் படை நடத்தி, வெள்ளையர்களை எதிர்த்துப் புறமுதுகிட்டு ஓடச் செய்து, ஆட்சி உரிமையைப் பெற்றெடுத்த வீரம் செறிந்த வரலாறு படைத்த மாவட்டம் சிவகங்கை மாவட்டம். இந்திய சரித்திரத்திலேயே வெள்ளையர்களைத் தோற்கடித்து, மீண்டும் ஆட்சி உரிமையைப் பெற்றது, தமிழகத்திலே சிவகங்கை மண் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*பிற்பகல் 12–25*

அதைப்போல, இன்றைக்குச் சுதந்திர இந்தியாவில் சுதந்திர போராட்டத்திற்காகப் பல்வேறு தியாகங்களைச் செய்த மக்கள் வாழ்கிற மாவட்டம். அதைப்போல, சுதந்திரப் போராட்டம் நடைபெற்ற நேரத்தில் பொதுவுடைமை சிற்பி ஜீவா அவர்கள், சிராவயலிலே ஆசிரமம் நடத்தியிருக்கிற நேரத்தில், அங்கே காந்தியடிகளே வந்து ஜீவாவைப் புகழ்ந்து, இந்த நாட்டினுடைய சொத்து என்று பாராட்டிய சிறப்புப் பெற்ற மண், சிவக்ங்கை மண்.

அதைப்போல, சுதந்திரத்திற்குப் பின்னால், அரசியல் வரலாற்றில் தமிழகத்தில், *(மணியடிக்கப்பெற்றது)* திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய இரண்டாவது மாநாட்டை, சிறப்பித்து நடத்திய மண் இந்த மண்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுக்கு நிறைய மண் வாசனை இருக்கிறதே!

**திரு. சு. குணசேகரன்:** அதைப்போல, தமிழகத்தினுடைய அரசியல் வரலாற்றில் முக்கியமான பல்வேறு திருப்பு முனைகளை உருவாக்கியிருக்கிற மாவட்டம், அந்த மாவட்டம். அந்த வரலாறுகள் இன்றைக்கு மறைக்கப்பட்டு, அதனுடைய தொழில் வளங்களும் மறைக்கப்பட்டிருக்கிறது. சரித்திரத்தில் இடம் பெற்றிருக்கிற அந்த மாவட்டம் *(மணியடிக்கப்பெற்றது)* இன்றைக்குத் தரித்திரம் பிடித்த மாவட்டமாக மாறியிருக்கிற சூழ்நிலையில், நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள், தொழில் அவதரிக்கிற ஒரு மாவட்டமாக அந்த மாவட்டத்தை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, கன்றுக்கு நீதி சொன்ன மனுநீதி சோழன் பரம்பரையிலே வந்திருக்கிற நமது சிறப்பு வாய்ந்த தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) அந்த மாவட்ட மக்களுடைய நியாயமான கோரிக்கைக்குச் செவி சாய்ப்பார்கள்; அறிக்கை வெளியிடுவார்கள் என்ற நம்பிக்கையோடு, நான் என்னுடைய கருத்துக்களை முடித்துக்கொள்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு.

***திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்று 100 நாட்களில் என்னென்ன பணிகளைச் செய்திருக்கிறது என்பதை நாடு அறியும்; நாட்டு மக்கள் அறிவார்கள். இந்தச் சபையைத் தலைவர் அவர்கள், எவ்வாறு நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும், இங்கேயிருக்கின்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல, நம்முடைய பத்திரிகை நண்பர்கள் எல்லாம் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள்.

சீன அறிஞர் Confucius சொன்னார்: "ஒருவர் ஒரு கன்னத்தில் அடித்தால், அவனை நடு ரோட்டிலே தூக்கிப் போட்டு இரண்டு கன்னத்தையும் பிய்" என்றார். நம்முடைய இயேசுநாதர் சொன்னார், "ஒருவர் ஒரு கன்னத்தில் அடித்தால் மறுகன்னத்தைத் திருப்பிக் கொடு" என்று சொன்னார். ஆனால், திருவள்ளுவரோ,

"இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு"

என்று சொன்னார். இன்று வாழும் வள்ளுவராக நம்முடைய முதல்வர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இன்னா செய்தாருக்கும், பகைவருக்கும் நல்லது செய்கின்ற நல்லவராக ஆட்சிப் புரிகின்ற இந்த ஆட்சியிலே, இந்தத் தொழில் துறை மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த நம்முடைய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைக் கூறிக்கொண்டு, என்னுடைய இனிய நண்பர், முன்னாள் அமைச்சர், சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு ஜெயக்குமார் அவர்களுக்கு ஒரு விவரத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அன்னிய முதலீடு அதிகமாக வந்ததாக அவர்கள் சொன்னார்கள். ஒரு புள்ளிவிவரத்தை மட்டும், 'Centre for Monitoring Indian Economy' என்பதிலிருந்து நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். 1997-1998 ஆம் ஆண்டு 2,510 கோடி ரூபாய், 1998-1999-ல் 2,577 கோடி ரூபாய், 1999-2000-ல் 1991 கோடி ரூபாய், 2000-2001-ல் 4,018 கோடி ரூபாய், இத்தனையும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் வெளிநாடுகளிலிருந்து நேரடியாக வந்த முதலீடாகும்.

நடந்து முடிந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 2001-2002 வரை 992 கோடி ரூபாயும், 2002-2003-ல் 451 கோடி ரூபாயும், 2003-2004-ல் 1,488 கோடி ரூபாயும், 2004-2005-ல் 562 கோடி ரூபாயும், 2005-2006-ல் 217 கோடி ரூபாயும், ஆக மொத்தம் 3,710 கோடி ரூபாய் ஐந்து ஆண்டுக் காலத்திலும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி 2000-2001-ல் ஒரு ஆண்டில் மட்டும் 4,018 கோடி ரூபாயும், நான்கு ஆண்டுகளில் 11,126 கோடி ரூபாயும் (மேசையைத் தட்டும் ஒலி) நேரடியாக வெளிநாடுகளிலிருந்து மூலதனம் பண்ணியிருக்கிறார்கள் என்றால், இதிலிருந்து யாருடைய ஆட்சிக் காலத்தில் தொழில் வளர்ந்தது என்பது நன்கு தெரியும்.

இன்னொன்றைச் சொன்னார்கள், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்: General Motors, Tata Motors போன்ற company-கள் எல்லாம் தமிழகத்திற்கு வருவதாக இருந்ததாகவும், ஆனால் அந்த company-கள் எல்லாம் இந்தத் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைப் பார்த்து ஓடிவிட்டதாகவும் சொன்னார்கள். நானும் தொடர்ந்து மூன்றாவது முறையாக இந்தச் சட்டமன்றத்தில்தான் இருக்கின்றேன். நடந்து முடிந்த ஆட்சிக் காலத்தில், அவர்கள் வந்தார்கள். என்ன நடந்தது என்று தெரியாது. ஒருவர் மராட்டியத்திற்கும், ஒருவர் வங்காளத்திற்கும் சென்றுவிட்டார் என்பதுதான் உண்மை. அது நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும் என்பதைத் தெரிவித்து, (குறுக்கீடுகள்) முன்னாள் அமைச்சர்



அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்; Optical Fibre Cable—கண்ணாடி ஒளியிழை வடம் இந்தியாவிலே தமிழகத்தில்தான் முதன்முதலாக மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால், (மேசையைத் தட்டும் ஒலி) 1-5-2000 அன்று, அதற்கான கொள்கை, அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் வெளியிடப்பட்டது. 2001-ல் ஆட்சிப் பொறுப்பில் புதியதாக வந்தவர்கள், அதைத் தாம் கொண்டு வந்ததாகச் சொல்வது, எந்தவகையிலும் நியாயமில்லை என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-30

இப்போது, நம்முடைய முதல்வர் அவர்கள், ஆட்சிப் பொறுப்பேற்றதும், தமிழக இளைஞர்களிடையே ஒரு புத்துணர்ச்சி, ஒரு நம்பிக்கை, எப்படியாவது நமக்கு வேலை கிடைத்துவிடும் என்று சொல்லி, காரணம், அத்தனை துறைகளிலும் காலியான இடங்களில் பணியமர்த்தி பெருமை சேர்த்தார். ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான இளைஞர்கள் இப்போது வேலைக்குச் சென்று நிம்மதியாக இருக்கிறார்கள். இன்றும் படித்து முடித்துக் கொண்டிருக்கின்றவர்கள், படிக்கின்றவர்களுக்கெல்லாம் மிகப் பெரிய நம்பிக்கை. 83 வது வயதில், இங்கிருந்து தொழில் முதலீட்டாளரைத் தேடிச் செல்கின்றார். நடந்து முடிந்த ஆட்சியில் தொழில் முதலீட்டாளர்கள் தேடிவந்து திரும்பச்சென்ற காலம் போய், ஒரு தொழில் முதலீட்டாளரைத் தேடி, 83 வயதில் ஹைதராபாத்துக்குச் சென்று, Wipro, Infosys Chairman-ஐச் சந்தித்து, (குறுக்கீடுகள்) பெங்களூருக்குச் சென்று ஹைதராபாத் உங்களுக்குள்ளது; நாங்கள் போகமாட்டோம்! (சிரிப்பு) பெங்களூருக்குச் சென்று Wipro, Infosys Companies' Chairman-ஐ எல்லாம் சந்தித்து, அவர்களிடம் முறையிட்டு, "மனித வளம் இருக்கிறது எங்களுடைய நாட்டில்; எங்களிடம் மனித நேயமும் இருக்கிறது; வாருங்கள், தொழில் தொடங்க; (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுக்கு ஒத்துழைப்புத் தருகிறேன்" என்று சொல்லி, அவர்களையும் அழைத்து வந்து, இந்த ஆண்டு மட்டும் Infosys கம்பெனியில் 25,000 படித்த இளைஞர்களை வேலையில் அமர்த்துவதற்கு உத்தரவாதம் பெற்று வந்தவர்தான், நம்முடைய முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல; ஒரு உண்மையை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஜெயக்குமார், என்னுடைய இனிய நண்பருக்குத் தெரிவித்தாக வேண்டும். Semi Conductor Fabrication Products என்ற இந்த நிறுவனம், 11,000 கோடி ரூபாய் செலவில், 2005 ஆம் ஆண்டு

இந்தியாவிலே தொழில் ஆரம்பிப்பதற்காக அமெரிக்காவைச் சேர்ந்த வினோத் அகர்வால் என்பவர் வந்தார். MoU எல்லாம் sign பண்ணினார்; அதற்குப் பிறகு என்ன ஆனதோ தெரியவில்லை; நீங்கள்தான் போகச் சொன்னீர்களோ, எங்களுக்குத் தெரியாது; இங்கிருந்து நேரடியாக ஹைதராபாத்துக்குப் போய்விட்டார். ஆனால், அந்தக் கம்பெனி இங்கு வருவதற்குக் காரணமாக இருந்தவர், இப்போது நம்முடைய தொழில்நுட்பத் துறை மத்திய அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு தயாநிதி மாறன் அவர்கள்தான். இதில் நிரம்ப கஷ்டப்பட்டு, "தமிழ்நாட்டிற்கு வாருங்கள்; இன்னொரு ஆட்சி நடந்தாலும் பரவாயில்லை; என்னுடைய மண்ணுக்கு வாருங்கள்" என்று அழைத்து வந்தவர் அவர். ஆனால், அவரை இங்கிருந்து விரட்டிவிட்ட பெருமை உங்களைச் சாரும் என்பதை இந்த நேரத்திலே நான் வருத்தத்தோடு சொல்லிக்கொள்கிறேன்.

இந்த அரசு, தொழிலை ஊக்குவிக்க வேண்டும் என்பதற்காகத்தான், ஒரு புதிய சட்டத்தை, எண் 588, தொழில் துறை, நாள் 10–9–1998–இன்மூலம் ஓர் அரசாணை வெளியிட்டது. அந்த அரசாணையின்படி, ஒருவர் தொழில் தொடங்க வரவேண்டும் என்றால், 10 துறைகளுக்குச் செல்லவேண்டும்; 10 விதமான N.O.C–க்கள் பெறவேண்டும். அதிலே எவ்வளவு துன்பம், கஷ்டம் இருக்கிறது என்பது, அந்தத் தொழில் தொடங்க வந்தவர்களுக்குத்தான் தெரியும். அதை நேரடியாக நம்முடைய முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்ததும், 1998 ஆம் ஆண்டு, அந்த அரசாணையை வெளியிட்டு, அதன்படி ஒரே விண்ணப்பத்திலே அத்தனை N.O.C–க்களையும் கொடுக்கின்ற ஒரு சட்டத்தை, முதன்முதலாகத் தமிழகத்திற்குக் கொண்டு வந்தவர், டாக்டர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தச் சட்டத்தின்படிதான், நடந்து முடிந்த 18 ஆம் தேதி, ஒரு MoU sign பண்ணினார்கள்; புரிந்துணர்வு ஒப்பந்தம். இந்திய நாட்டைச் சார்ந்தவர், அமெரிக்காவிற்குச் சென்று மிகப் பெரிய தொழில் அதிபராக மாறி, அங்கிருந்து மீண்டும் நம்முடைய தமிழகத்திற்கு வந்த ராஜமாணிக்கம் என்பவர், இங்கே தமிழகத்திற்கு வந்து, நம்முடைய மத்திய அமைச்சர் மாண்புமிகு தயாநிதி மாறன் மற்றும் நம்முடைய முதல்வர் அவர்களுடைய முயற்சியினால், "உலகத்திலேயே வேறு எங்கும் இப்படி நடந்தது இல்லை—அந்த ராஜமாணிக்கம் சொல்லிவிட்டுப் போனது—உலகத்திலேயே வேறு எந்த நாட்டிலும், எங்கேயாவது போய் ஐந்தே நாட்களில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்து ஆனது, உலக சரித்திரத்திலேயே இதுதான்" என்று சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வயதிலும் இவ்வளவு சுறுசுறுப்பாக இருக்கின்ற முதல்வர் அவர்களைப் பாராட்டி, "இன்னும் நாங்கள் மட்டும் அல்ல; ஆயிரக்கணக்கான தொழில் அதிபர்களை இங்கே அழைத்து வருவேன்" என்று உறுதியாகச் சொல்லிச் சென்றிருக்கின்ற அளவுக்கு, இந்த நாட்டில் தொழில் வளம் பெருகிவந்து கொண்டிருக்கின்றது. இன்னொரு உண்மை என்னவென்றால், இந்தக் கம்பெனியானது ஹைதராபாத்துக்குச் செல்ல இருந்தது. அதை இங்கு கொண்டுவந்த பெருமை, நம்முடைய தமிழக அரசுக்கும், தயாநிதி மாறன் அவர்களுக்கும் உண்டு.



இன்னொரு உண்மையைச் சொல்கிறேன். தமிழ்நாட்டில் முதன்முதலாக 'Tidel Park' ஆரம்பிக்கப்பட்ட தாமணியில், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் ஒன்றோ, இரண்டோ இல்லை; 12 இலட்சம் சதுர அடி பரப்பளவிலே 12 ஆயிரம் பேர் வேலை பார்க்கின்ற ஒரு முதல் 'Tidel Park', நம்முடைய தமிழ்நாட்டிலே, தரமணியிலே முதன்முதலாகக் கொண்டுவந்த பெருமை, நம்முடைய மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களையே சாரும் எனபதை இந்த நேரத்திலே நான் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

*பிற்பகல் 12–35*

அதேநேரத்தில், 2001–2002, முதல் வரவு–செலவுத் திட்டத்தை, மாண்புமிகு முன்னாள் நிதியமைச்சர் பொன்னையன் அவர்கள் வாசித்தார்கள். இங்கேயிருக்கின்ற பலபேருக்கு அது தெரியும். இந்த 'Tidel Park' அருகிலேயே, இரண்டாவது 'Tidel Park' ஆரம்பிக்கப்படும்; அதுவும் எவ்வாறு என்று சொன்னால், உலகத் தரம்வாய்ந்த மாநாட்டுக் கூடம், அறிவுப் பூங்கா மற்றும் ஓட்டல் வசதிகளோடு ஆரம்பிக்கப்படும் என்று சொல்லி, 2001–2002 வரவு–செலவுத் திட்டத்திலே அறிவித்தார்கள். நானும் தேடித் தேடிப் பார்க்கிறேன், இந்தியாவிலே, தமிழ்நாட்டிலே எங்கேயாவது இருக்கிறதா என்று சொல்லி. அப்படி ஒரு 'Tidel Park'–ஐயே காணவில்லை ஐயா! ஆனால், 2001–2002; அந்த வரவு–செலவுத் திட்டத்தில் அவர் அறிவித்தபோது, இந்த மேஜை எவ்வளவு உடைந்திருக்கிறது என்பது எனக்கு மட்டும்தான் தெரியும். அந்த மேஜையையே உடைத்து விட்டார்கள்!

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

அதேபோல, நம்முடைய மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள், சிறுசேரியில் 200 ஏக்கர் நிலம் வாங்கி, இதை வேறு யாருக்கும் கொடுக்கக் கூடாது; தொழில் தொடங்குங்கள் என்று சொல்லி, முதன்முதலாக தமிழ்நாட்டில் மகளிருக்காக ஒரு பூங்கா ஆரம்பிக்கப்பட்ட இடம் சிறுசேரி. அதிலே 20 shed–கள் கட்டி, இப்போது அங்கே பணி நடந்துகொண்டு இருக்கிறது. 1999–ல் இந்தத் திட்டம் அங்கே

தொடங்கப்பட்டது நம்முடைய முதல்வர் அவர்களால். 2001-2002 வரவு-செலவுத் திட்டத்திலே சொன்னார்கள்: "அன்றைய முதல்வர் ஒரு மகளிர் பூங்கா ஆரம்பித்து விட்டார்கள்; நான் ஒன்றோடு நிறுத்த மாட்டேன்; 4 மகளிர் பூங்காக்கள் தமிழ்நாட்டில் ஆரம்பிக்கப்படும்" என்று சொல்லி, 2001–2002 வரவு-செலவுத் திட்டத்திலே சொன்னார்கள். நான் கேட்கின்றேன்; சிறுசேரியில் ஆரம்பிக்கப்பட்ட மகளிர் பூங்காவிற்குப் பிறகு, தமிழ்நாட்டில் வேறு எங்கேயாவது மகளிருக்குப் பூங்கா ஏற்படுத்தியிருக்கின்றீர்களா என்று நான் கேட்கின்றேன். ஆனால் பூங்கா ஏற்படுத்தவில்லை. நீங்களும் சிறுசேரிக்குச் சென்றீர்கள்; அதைப் பார்த்தீர்கள்; வெளிநாட்டுக்காரர்களைக் கூட்டிக் கொண்டுவந்து—அவ்வளவிலும் தலைவர் அவர்கள் வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கு மகளிர் பூங்கா ஆரம்பித்தார்கள்—நீங்கள் வீடு கட்டி விற்க வெளிநாட்டுக்காரர்களைக் கூப்பிட்டு, அதை அப்படியே கொடுத்துவிட்டீர்கள். நம்முடைய மாண்புமிகு மின் துறை அமைச்சர் ஆற்காட்டார் அவர்கள் உயர் நீதிமன்றத்திற்குப் போனதும், Cabinet–ஐக் கூட்டி, "இதை நாங்கள் செய்யவில்லை; அதிகாரிகள் செய்துவிட்டார்கள்" என்று சொல்லி, அவர்கள்மீது போட்டு தப்பித்துவிட்டீர்கள். எப்படி இருப்பார்கள் அதிகாரிகள்? பார்த்துக் கொண்டிருப்பார்களா? நாடு பார்த்துக் கொண்டிருக்கிறது. நாம் எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இதிலே என்ன நியாயம்? பார்த்துக் கொள்ளுங்கள். அதேபோல, தைவான் கம்பெனி; நம்முடைய திரு. ரங்கநாதன்கூட சொன்னார்கள்; Apache—இது உயர் ரக விளையாட்டு வீரர்களுக்கான உயர் ரக shoe தயாரிக்கும் கம்பெனி. Adidas, Nike போன்ற பெரிய கம்பனிகளுக்கு இவர்கள் shoe செய்து கொடுப்பார்கள். சைனாவில் எல்லாம் இந்தக் கம்பெனியின் கிளைகள் இருக்கின்றன. இதைத் தமிழ்நாட்டில் தொடங்கவேண்டி, MoU sign பண்ணி, என்ன கூத்தோ? இதில் ஒரு முக்கியமான விஷயம் என்னவென்று சொன்னால், மகளிர் ஒருவர் முதல்வராக இருந்தார்கள். படிக்காத மகளிர் 10, 11, 12 படித்திருந்தால்கூட போதும்; 18,000 பேருக்கு வேலைவாய்ப்பு தரக்கூடிய ஒரு நிறுவனம் அது. அவர்கள் கெஞ்சிப் பார்த்தார்கள்; கூத்தாடினார்கள்; கொடுக்கவில்லை. கடைசியில், அதில் எங்களுக்கு எல்லாம் பெரிய மன வருத்தம் என்னவென்று சொன்னால், நம் பக்கத்தில் நம்முடைய ஆந்திராவுக்கு அருகிலே, நம்முடைய தமிழ்நாட்டுக்கும் பக்கத்தில் இருக்கக்கூடிய, தடா என்ற அந்த இடத்தில், ஆந்திரா மாநிலம் தடாவில் அது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சண்முகம், நீங்கள் அடிக்கடி சபை நடவடிக்கையில் இடையூறு பண்ணிக் கொண்டிருக்கிறீர்கள்!



**திரு. மு. அப்பாவு:** இப்போது ஆந்திராவைச் சேர்ந்த 18,000 பெண்மணிகள் அங்கே பணியாற்றுகிறார்கள்... (குறுக்கீடு) தமிழ்நாட்டைச் சேர்ந்த...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Thiru Shanmugam, bear in mind; you are always causing disturbances to the proceedings. உட்காருங்கள் முதலில்.

**திரு. மு. அப்பாவு:** தம்பி சண்முகம் உட்காருங்கள். நான் பேசியதற்குப் பிறகு, பதில் சொல்லலாம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** I warn you. உட்காருங்கள் முதலில்.

**திரு. மு. அப்பாவு:** அதேபோல Flextronics Electronics Hardware Company தொழிற்சாலை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சண்முகம், உட்காருங்கள் முதலில். Repeated - ஆக நான் சொல்லிக் கொண்டேயிருக்கிறேன்; நீங்கள் சபை நடவடிக்கையை நடத்தவிடாமல் இடைஞ்சல் பண்ணிக் கொண்டேயிருக்கிறீர்கள்! கை நீட்டிப் பேசுவது; இதுமாதிரி இடையூறுகள் அடிக்கடி பண்ணிக் கொண்டிருக்கிறீர்கள்!

**திரு. மு. அப்பாவு:** நம்முடைய மாண்புமிகு மத்திய அமைச்சர் தயாநிதி மாறன் அவர்களுடைய முயற்சியினால், ஸ்ரீபெரும்புதூரில் 450 கோடி ரூபாய் செலவில்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடைசியாக அ.தி.மு.க. வைச் சேர்ந்த உறுப்பினர்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் முதலில், திரு. சண்முகம்... (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இன்று முதலமைச்சர் பதில் அளிக்க வேண்டும். கடைசியாக அ.தி.மு.க.–வைச் சேர்ந்த உறுப்பினர்தான் முடித்துவைக்க இருக்கிறார். தயவுசெய்து, மாண்புமிகு உறுப்பினர் ஏதாவது சொல்ல வேண்டுமென்றால், அவர்மூலமாகத் தெரிவிப்பது நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஏதாவது சொல்ல வேண்டுமென்றால், கடைசியாகச் சொல்லுங்கள். உட்காருங்கள் முதலில். நீங்கள் பேசுங்கள் திரு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Nokia Cell Phone Company, Saint Gobain கண்ணாடித் தொழிற்சாலை ஆகியவை மாண்புமிகு மத்திய தகவல் துறை அமைச்சர் தயாநிதி மாறன் அவர்களுடைய முயற்சியினால், தமிழ்நாட்டில் 675 கோடி ரூபாய் செலவில் ஆரம்பிக்கப்பட்டு, 2500 பேர் பணியாற்றுகின்ற ஒரு வாய்ப்பைப் பெற்றிருக்கின்றோம்.

*பிற்பகல் 12–10*

எங்களுடைய நெல்லை மாவட்டத்தில், பேட்டை கூட்டுறவு நூற்பாலை கடந்தகால ஆட்சியில் மூடப்பட்டு, 2000 பேர் ரோட்டில் இருக்கின்றார்கள். நம்முடைய THC நிறுவனம் போன்றவற்றை எல்லாம் வைத்து, அந்தக் கம்பெனியைத் தொடங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, உலகத்திலேயே, 1997–98 ஆம் ஆண்டு, கலைஞர் ஆட்சிக் காலத்தில்தான் TIDCO மூலம் ஆரம்பிக்கப்பட்ட, மகேந்திரா உலக நகர நிறுவனத்தில் இன்று பல ஆயிரம் பேர் பணிபுரிந்து வருகிறார்கள். அதேபோன்று, நாகார்ஜுனா எண்ணெய் நிறுவனமும், TIDCO–வும் இணைந்து 9–1–1998-ல் ஏற்படுத்திய ஒப்பந்தப்படி—நான் முடித்துவிடுகிறேன்—ஓர் ஆண்டுக்கு 60 இலட்சம் டன் பெட்ரோலியத்தைச் சுத்திகரிக்கும் ஆலையை, 4,790 கோடி ரூபாய் செலவில் கட்டி முடித்து, இந்த செப்டம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட இருக்கிறது என்பதைப் பெருமையோடு சொல்லி, எண்ணூர் சிறப்பு மண்டலம்; அதேபோன்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோபிநாத்.

**திரு. மு. அப்பாவு:** முடித்துவிடுகிறேன். இந்த அருமையான தொழில் துறை மானியத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்த நம்முடைய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கிறேன். (குறுக்கீடு)

**THIRU D. JAYAKUMAR:** Hon. Speaker Sir...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோபிநாத். (குறுக்கீடு) No, no. உட்காருங்கள். No, nothing.



***THIRU K. GOPINATH:** Hon. Speaker Sir, first I should say thanks to you for giving me this opportunity to speak on the Industries and I.T. Demand.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இரண்டாவது முறையாக இந்த மாமன்றத்திலே பேச வாய்ப்புத் தந்தமைக்கு முதலில் உங்களுக்கு நன்றி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இப்போது தமிழில் பேசுவது, எனக்குக் கன்னித் தமிழ்ப் பேச்சு; தயவுசெய்து நீங்கள், மாண்புமிகு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒன்றும் தவறில்லை. கொஞ்சம், சீக்கிரம் subject-க்குள் வாருங்கள். நேரம் நிறைய போய்க் கொண்டிருக்கிறது.

**திரு. கே. கோபிநாத்:** நான் முதன்முதலாகத் தமிழில் பேசுகிறேன் தலைவர் அவர்களே. அதனால் தாங்கள் தயவுசெய்து கொஞ்சம் நேரம் கூடுதலாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Right. பேசுங்கள், பேசுங்கள்.

**திரு. கே. கோபிநாத்:** என்னை இரண்டாவது முறையாக இந்த மாமன்றத்திற்கு அனுப்பிவைத்த என் அன்பிற்குரிய அகில இந்தியத் தலைவி அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மற்றும் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அண்ணன் டி. சுதர்சனம் அவர்களுக்கும் மற்றும் என்னைத் தமிழிலே பேசவேண்டுமென்று கட்டாயப்படுத்திச் சொல்லிய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவி யசோதா அம்மா அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இரண்டாவது முறையாக என்னைச் சட்டசபைக்கு அனுப்பிய ஓசூர் தொகுதி வாக்காள மக்களுக்கும், என்னுடைய வெற்றிக்கு உறுதுணையாக இருந்த ஜனநாயக முற்போக்குக் கூட்டணி மாவட்டச் செயலாளர்களுக்கும் மற்றும் நண்பர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த, நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு முத்தமிழ் அறிஞர், கலைஞர் ஐயா அவர்கள், முதலமைச்சர் அவர்கள் உள்ளே வந்துவிட்டார்கள். எனக்கு இப்போது தமிழில் பேசத் தெரியவில்லை; மறந்துவிட்டேன் நான.

*(உறுப்பினர் சிறிது நேரம் தெலுங்கில் பேசினார்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், தமிழில் பேசமுடியவில்லை என்றால், ஆங்கிலத்தில் பேசினாலே பாதி பேருக்குப் புரியும்.

**திரு. கே. கோபிநாத்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் ஏன் தெலுங்கிலே பேசினேன் என்றால், 100 நாட்களிலே எத்தனையோ சாதனைகளைப் பெற்ற இந்தக் கழக ஆட்சிக்கு, எங்களுடைய தலைவர் மதிப்பிற்குரிய முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஐயா அவர்களுடைய (மேசையைத் தட்டும் ஒலி) கவனத்திற்கு, ஒன்றை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12–45*

இந்த அவையிலே கட்டாயத் தமிழ் என்று ஒரு G.O. பிறப்பித்திருக்கிறீர்கள். இதே அவையிலே நான் அவை ஆரம்பித்த அன்றுமுதல் இன்றுவரை தொடர்ச்சியாக participate பண்ணிக் கொண்டிருக்கின்றேன். ஆனால், யாரும் இதைத் தங்களின் கவனத்திற்கு இதுவரை கொண்டுவரவில்லை. காரணம், இந்தக் கட்டாயத் தமிழைச் சிறுபான்மை மொழி பேசும் சிறுபான்மையினருக்கு மட்டுமல்ல. சிறுபான்மை மக்கள் மேலே நிறைய அக்கறை கொண்ட தாங்கள், தங்கள் காலத்திலே இந்தமாதிரியான ஒரு தவறு நடக்கக்கூடாது என்பதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர நான் விரும்புகிறேன். காரணம், தாங்கள்கூட பாராளுமன்றத் தேர்தல் நடக்கும்போது, ஏப்ரல் 22 ஆம் தேதி, நீங்கள் அங்கே தேர்தல் பிரச்சாரத்தை ஆரம்பித்து, ஏப்ரல் 24 ஆம் தேதி நீங்கள் என்னுடைய தொகுதியான ஓசூருக்கு வந்தீர்கள். தங்களோடு அன்பு அண்ணன் தளபதி அவர்களும் வந்திருந்தார்கள். அண்ணன் துரைமுருகன் அவர்கள்கூட வந்திருந்தார்கள். அப்போது பக்கத்திலே, எங்கள் பகுதியான ஓசூர் மற்றும் தேன்கனிக்கோட்டை ஆகிய இரண்டு தாலுகா பகுதி மக்கள், சிறுபான்மை மொழியைக் கொண்ட தெலுங்கு மக்கள் என்பதை நீங்கள் அறிந்து, அன்றைக்கு நீங்கள் தெலுங்கிலே வாக்குச் சேகரித்தீர்கள் என்பதை நான் நினைவுகூர்கின்றேன். நினைவுகூர்வது மட்டும் இல்லாமல், இந்தத் தடவை எந்தப் பாராளுமன்றத் தேர்தலிலும் கிடைக்காத அளவுக்குக் கிட்டத்தட்ட 1.50 இலட்சம் வாக்குகள் அதிகமாகப் பெற்று வாக்குச் சேகரித்த பகுதி, நம்முடைய பகுதி.

அதேபோல, அண்ணன் தளபதி அவர்களும், நம்முடைய பக்கத்து மாநில, அண்டை மாநில முதலமைச்சரான டாக்டர் ஒய்.எஸ். ராஜசேகர ரெட்டி அவர்களும் 2005 ஆகஸ்ட் 12 ஆம் தேதி All India Telugu Samakhya–வின் 16th Annual Day Function–லே கலந்துகொண்டார்கள்.



அப்போது அவருடன், இப்போது மத்திய அமைச்சராக உள்ள, முன்னாள் எங்களுடைய காங்கிரஸ் கட்சியினுடைய அன்புத் தலைவர் திரு. ஜி.கே. வாசன் அவர்களும், அதிலே பங்குபெற்றார்கள். அவர்களுடன் அதிலே நானும் கலந்துகொண்டேன். அப்போது அண்ணன், தளபதி அண்ணன் திரு. ஜி.கே. வாசன் அவர்கள் பேசும்போது, "எங்களுக்குத் திராவிட மொழிகளின்பால் ஓர் இணக்கம் உண்டு; தெலுங்கு மொழியின்பால் மிகவும் அக்கறை கொண்டவர்கள் நாங்கள். நிச்சயமாக உங்களுக்கு நாங்கள் எப்போதும் உடனிருப்போம்" என்று அப்போது எங்களுக்கு வாக்குக் கொடுத்தார்கள். அதேநேரத்திலே அப்போது அவர்கள் பேசும்போது, அண்ணன் தளபதி அண்ணன் அவர்கள், ஒரு சின்ன துண்டுச் சீட்டிலே எழுதிக் கொடுத்தார்கள். காங்கிரஸ் கட்சி மட்டுமல்ல; ஜனநாயக முற்போக்குக் கூட்டணி சார்பாக, அத்தனை கட்சிகளின் சார்பாக நான்கூட உங்களுக்கு ஆதரவு கொடுக்கிறேன் என்று சொன்னதை உங்களுக்கு நான் இப்போது நினைவுபடுத்துகிறேன்.

காரணம், இந்த G.O.–விலே first language, compulsory–ஆக Tamil என்றிருக்கிறது. மனமாரப் பாராட்டுகிறோம், வரவேற்கிறோம். காரணம், எனக்குப் பின்னே இந்த அவலநிலை இல்லை. நானும்கூட முதல்காலத்திலேயே, தமிழ்க் கல்வி கிடைத்திருந்தது என்றால்— முதல்காலத்திலேயே, நான் படிக்கிற கால்த்திலேயே, நான் படித்தது தெலுங்கிலே; ஏற்கெனவே, இந்தத் தெலுங்குக்குப் பதிலா க அப்போது தமிழ் இருந்திருந்தால் — நிச்சயமாக நான்கூட தமிழ் படித்திருப்பேன். இப்போதுகூட, மாண்புமிகு உறுப்பினர்கள் சிரிக்கிறார்கள். அதைப் பார்த்து எனக்கு வருத்தம் இல்லை. இந்த அவலநிலை எனக்கு இருந்திருக்காது. இன்றைக்கு நீங்கள் கட்டாயத் தமிழ் கொண்டு வந்திருக்கிறீர்கள். உங்களை நாங்கள் மனமாரப் பாராட்டுகிறோம்; புகழ்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், அதேநேரத்திலே எங்களுடைய சிறுபான்மை மொழிகளான, தெலுங்கு, உருது, மலையாளம், கன்னடம் இந்த மொழிகளுக்கு ஒரு importance— முக்கியத்துவம் — இல்லாமல் போகின்றது.

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடம் நான் இதுபற்றி விளக்கம் கேட்டேன். அவர் விளக்கத்தைத் தந்தார்கள். அதேமாதிரி, நான் துறையினுடைய செயலாளர் அவர்களிடமும் கேட்டேன். அவர் என்ன சொன்னார் என்றால், first language–ஆக நீங்கள் compulsory- ஆக Tamil படிக்க வேண்டும் என்றார். வரவேற்கிறோம். இரண்டாவது, English–லே படிக்க வேண்டும்; மூன்றாவது என்று வரும்போது, Mathematics, History, Geography, Science படிக்கும்போது, நாங்கள் எந்த மொழியிலே படிக்க

வேண்டும் என்று கேட்டபோது, அதற்கு அவர்களால் சரியான பதில் தர முடியவில்லை. நான்காவது optional, நீங்கள் வேண்டுமென்றால் படித்துக்கொள்ளுங்கள்; இல்லையென்றால் வேண்டாம் என்பதுமாதிரி எங்களுக்குச் சொல்லியிருக்கிறார்கள்.

தமிழைச் செம்மொழி அந்தஸ்துக்கு உயர்த்திக் கொடுத்த தாங்கள், செம்மொழி ஆக்கித் தந்த தாங்கள், அன்னை சோனியா காந்தி தலைமையிலே இருக்கின்ற மத்திய அரசாங்கமும் சரி, அதேபோல இங்கே தமிழ்நாட்டிலே நீங்கள், இப்போது காமராஜருடைய ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். காமராஜர் அவர்கள் பிறந்த நாளிலே இலவச முட்டை, இரண்டு முட்டை; அதேபோல காமராஜர் அவர்களுடைய தாயாரின் பெயரிலே நேற்றுகூட, அமைச்சர் அவர்கள் ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதை ஏன் உங்களுக்கு நினைவுகூர்கிறேன் என்றால், இப்போது பக்கத்திலே Ceylon-இலே இருக்கிற நம்முடைய தமிழர்கள் அவதிப்பட்டவுடனே, நம்முடைய இந்தியாவிலே, உடனே அதற்கு நீங்கள் கண்டனம் தெரிவித்து, தீர்மானம் pass பண்ணினீர்கள். ஆனால், அதேபோல ஆந்திராவிலே இருக்கிற தமிழர்களும் சரி, டில்லியிலே இருக்கிற நம்முடைய தமிழ்ச் சகோதரர்கள் படிப்பதற்கு ஏதுவாக, அங்கே தமிழ் ஒரு subject இருக்கிறது; அதேபோல தெலுங்கு மக்களாகட்டும், உருது மக்களாகட்டும், நம்முடைய தமிழ்நாட்டிலே அவற்றைப் படிப்பதற்கு ஒரு வாய்ப்பை நீங்கள் உருவாக்கிக் கொடுக்க வேண்டும்; கொடுப்பீர்கள் என்று நம்பி, தயவுசெய்து அதற்கான பதிலை நான் பெறுவேன் என்று எதிர்பார்க்கிறேன். காரணம், இன்றைக்குத் தமிழ் படிப்பதற்கு நாங்கள் மனப்பூர்வமாக, ஆர்வமாக இருக்கிறோம்; நாங்கள் தமிழைக் கற்றுக்கொள்கிறோம்; அதிலே எந்தவிதமான மாறுபாடுமில்லை; அதிலே நாங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறோம்;

*பிற்பகல் 12–50*

அதேமாதிரி தெலுங்கு மக்களுக்கும் வாய்ப்பு கொடுக்க வேண்டும். கிட்டத்தட்ட, என்னுடைய தொகுதி, ஓசூர், தேன்கனிக்கோட்டை பகுதியின் border-லே பாருங்கள்; 800 தெலுங்கு பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. இந்தத் தெலுங்கு படித்த school வாத்தியார்களுக்கு, தெலுங்கு school-ல் படிக்கிற குழந்தைகளுக்கு நிதியெல்லாம் போய்விடுகிறது. மாண்புமிகு முதலமைச்சருக்கு நான் சின்ன நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், இந்த 100 நாட்களுக்குள்ளேயே என்னுடைய தொகுதி, ஓசூருக்கு, 2 தெலுங்கு



Higher Secondary Schools நீங்கள் தந்தீர்கள். அதற்கு நான் முதலிலே, தெலுங்கு மக்கள் சார்பிலே நன்றி சொல்லுகிறேன். என்னுடைய தொகுதியிலே 2 Higher Secondary Schools, நீங்கள் வந்தபிறகு கொடுத்திருக்கிறீர்கள். அதேமாதிரி, சிறுபான்மை மொழிகளுக்கு, உருதுக்கு, ஒரு Higher Secondary School கேட்கும்போது, மாண்புமிகு கல்வியமைச்சர் சொன்னார்கள்; நான் நிச்சயமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே பேசியிருக்கிறேன்; அவர் table-இல் இருக்கிறது; நிச்சயமாக இதைக்கூட பண்ணிக் கொடுக்கிறேன் என்று உறுதி கொடுத்திருக்கிறார்கள். இதுபோல, சிறுபான்மை மொழிகளுக்கு, இந்த 100 நாட்களிலே என்னுடைய தொகுதிக்கு 3 பள்ளிகள் கொடுத்திருக்கிற தங்கள் ஆட்சியிலே, எங்களுக்குச் சரியான பாதுகாப்புத் தருவீர்கள் என்ற நம்பிக்கையோடு, தயவுசெய்து அதை நீங்கள் பரிசீலிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தங்கள் ஆட்சிக் காலத்தில் தொடர்ந்துவந்த தெலுங்கு உகாதி holiday என்பது, கடந்த ஆட்சிக்காலத்திலே பறிக்கப்பட்டது. இப்போது தெலுங்கு உகாதிக்கு holiday-யே கிடையாது. தமிழ்நாட்டிலே இருக்கிற தெலுங்கு மக்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். கடந்த, உங்கள் ஆட்சிக் காலத்தின்போது உகாதிக்கு holiday இருந்தது. ஆனால், இப்போது holiday-யே கிடையாது. அதேபோல, கடந்தகால ஆட்சியிலே, பொறுப்பிலே இருந்தபோது, உருதுக்கு Academy கொடுத்தீர்கள். அதுபோல, "தெலுங்குக்கு Academy கொடுக்கிறேன்" என்று வாக்குக் கொடுத்தீர்கள். ஆனால், இதுவரை நிறைவேற்றவில்லை. தயவுசெய்து, தாங்கள் பரிசீலிக்க வேண்டும் என்று சொல்லி,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 10 minutes ஆகிவிட்டன.

**திரு. கே. கோபிநாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைஞர் அவர்கள் இரண்டாவது முறையாக முதலமைச்சர் பதவியேற்கும்போது, என்னுடைய தொகுதியான ஓசூரிலே SIPCOT ஆரம்பித்துக் கொடுத்தார்கள். இந்த SIPCOT-ஐ ஆரம்பித்ததால், இன்றைக்குத் தமிழ்நாட்டில் industries நன்றாக develop ஆகியிருக்கின்றன. முதல் இடத்தில் சென்னை மாநகர் இருக்கிறது. இரண்டாவதாக, கோயமுத்தூர் இருக்கிறது. Third place-ல் ஓசூர் இருக்கிறது. அந்த அளவிற்கு, தங்கள் கரங்களால் start பண்ணிய industries, நன்றாக வளர்ச்சியடைந்து develop ஆகியிருக்கிற தருணத்திலே, (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் தாங்கள் ஓசூருக்கு ஒரு Industrial Park, I mean, I.T. — Information Technology — கொடுக்க வேண்டும் என்ற ஒரு வேண்டுகோளை வைக்கிறேன். இங்கே

infrastructures கம்மியாக இருக்கிறது. தாங்கள் எப்போது ஆரம்பித்தீர்களோ, அன்றைக்கும் போட்ட சாலைகள், இன்றைக்குவரைக்கும் அவை பராமரிக்கப்படவில்லை. கிட்டத்தட்ட 20 வருட காலமாக SIPCOT இருக்கிற இடத்திலே, industries-ஐ எவ்வளவு develop பண்ணினாலும், அந்த road–கள் பராமரிப்பில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரத்தைக் கருத்தில்கொண்டு, —time waste பண்ண விரும்பவில்லை; தயவுசெய்து மணியடித்துவிடாதீர்கள். முதலிலே நன்றி சொல்லிவிடுகிறேன். ஏற்கெனவே, இந்த அரசாங்கம் எனக்கு 3 கொடுத்திருக்கிறது; 2 Higher Secondary Schools கொடுத்திருக்கிறது; இன்னொரு Higher Secondary School கொடுக்கிறேன் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறார், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள். அதேமாதிரி, எங்கள் குடும்பத் தலைவர், அண்ணன் மாண்புமிகு வீரபாண்டியார் அவர்கள், என்னுடைய தொகுதிக்கு 2 கோடி ரூபாயிலே ஒரு Cold Storage Godown கொடுத்திருக்கிறார்கள்—Tomato Cold Storage Godown —அதற்கு அவருக்கு முதலிலே நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, SEZ என்பது, 2005–லே ஓசூருக்கு வருகிறது என்று ஒரு திட்டம் இருந்தது. SEZ என்ற இந்தத் திட்டம், ஓசூர், தேன்கனிக்கோட்டை border-லே பண்ணலாம் என்று இருந்தது. இந்த நல்ல தருணத்திலே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே இருக்கிற விவசாயிகளை மனதில்கொண்டு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோபிநாத், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. கே. கோபிநாத்:** 6,500 கோடி ரூபாய் தள்ளுபடி செய்து, விவசாயத்தை ஊக்குவித்த நம் அன்புத் தலைவர் கவனத்திற்குக் கொண்டுவருவது என்னவென்றால், அவர் 6,500 கோடி ரூபாய் அசல், வட்டி, தள்ளுபடி பண்ணி, அந்த விவசாயிகள் வயிற்றில் பாலை வார்த்தார்கள். ஆனால், அந்த SEZ தேர்வு பண்ண இடம் எங்கேயென்று பார்த்தீர்களானால், 480 pump set கொண்ட இடம்; கிட்டத்தட்ட 15 Tanks — I mean— ஏரிகள், பெரிய ஏரிகள், சின்ன ஏரிகள், மொத்தம் அங்கு 15 ஏரிகள் இருக்கின்றன. அந்தப் பகுதியை அவர்கள் தேர்வு செய்திருக்கிறார்கள். தேர்வு செய்யும்போது, கடந்த ஆட்சிக் காலத்திலே நிறைய விவசாயிகள் போராட்டத்தை நடத்தினார்கள். அதுகுறித்து, என் அன்புத் தலைவர், மாண்புமிகு இன்றைய பாராளுமன்ற உறுப்பினர் திரு. கே.வி. தங்கபாலு அவர்களோடு, அந்த Secretary-யைப் போய்ப் பார்த்தோம்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியுங்கள். பேசி முடியுங்கள்.

**திரு. கே. கோபிநாத்:** இது ஒன்றுதான் தலைவர் அவர்களே. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய ஆட்சிப் பொறுப்பை நாம் ஏற்றபிறகு, எங்களுடைய தலைவர், அண்ணன் வீரபாண்டியாரோடு கலந்து அதைக் கொடுக்கும்போது, அவர், "Industries Secretary-யிடம் அறிவுறுத்துகிறேன்; விவசாயத்திற்கு எந்தவித இடையூறு இல்லாமல் நடக்கும்" என்று சொன்னார்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா செந்தமிழன். (குறுக்கீடு)

**திரு. கே. கோபிநாத்:** தயவுசெய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு அன்பான வேண்டுகோள். இந்தப் பக்கம் அந்த SEZ வருவதற்கு, we all welcome; நாங்கள் மனமார வரவேற்கிறோம்; அதேநேரத்திலே, விவசாய சங்கத்திற்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லாமல் பார்க்க வேண்டும். தயவுசெய்து, நீங்கள் அதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று சொல்லிக்கொண்டு... (மணியடிக்கப்பெற்றது) ஒன்றே ஒன்றைச் சொல்லி முடித்துவிடுகிறேன், தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எத்தனை சொல்லிவிட்டீர்கள். எல்லாக் கருத்தையும் சொல்லிவிட்டீர்கள்.

**திரு. கே. கோபிநாத்:** முடித்துவிடுகிறேன் தலைவர் அவர்களே. இரண்டே இரண்டுதான் சொன்னேன். ஒன்றே ஒன்று.

பிற்பகல் 12–55

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணன் தளபதி அண்ணன் அவர்களுக்கு, மாண்புமிகு தளபதி அண்ணன் அவர்களுக்கு ஒரு அன்பான வேண்டுகோள் என்னவென்றால், 1998–லிருந்து இன்றுவரை ஓசூர் Town-இல் இருக்கிற Municipality-க்கு மக்கள் யாருமே வரி செலுத்தவில்லை. காரணம், அன்று இருந்த நம ஆட்கள் திடீரென்று tax-ஐ excess ஆகப் போட்ட பிறகு, சிலபேர் இதுவரை செலுத்தவில்லை. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை Municipality limit-இலே, எந்த Municipality-இலும் இல்லாத அளவிற்கு, ஓசூரில் tax அதிகமாகப் போட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு ஏற்கெனவே நாங்கள் ஒரு மனு கொடுத்திருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** [illegible] உறுப்பினர் திரு. ஞா. செந்தமிழன். (குறுக்கீடு) [illegible] (குறுக்கீடு) உடனே முடியுங்கள்.

227430

**திரு. கே. கோபிநாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தமிழ் கன்னிப் பேச்சை இவ்வளவு நேரம் பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருந்த எல்லோருக்கும் மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொண்டு, ஒரு நல்ல பதிலை மாண்புமிகு முத்தமிழ் கலைஞர் ஐயா அவர்கள் தருவார்கள் என்று நான் நம்புகிறேன். காரணம், கடந்த தடவை பேசும்போது எல்லோருடைய பெயரையும் list எடுத்துக்கொண்டு, எந்தெந்த M.L.A. என்னென்ன கேட்டார்கள் என்பதை ஐயா அவர்கள் list போட்டார்கள். கடைசியில் அந்தந்த M.L.A.-வினுடைய தொகுதிக்கும். அவர்களின் கோரிக்கையைத் தமிழ்நாடு முழுவதும் நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறார்கள். அதுபோல, மாண்புமிகு உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுத்த ஐயா அவர்களுக்கு, மீண்டும் எனது கோரிக்கையை வலியுறுத்துகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. செந்தமிழன்.

***திரு. ஞா. செந்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தப் பேரவையிலே இந்த உரையினை நிகழ்த்துகின்ற வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்த, சமூகத்தில் ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் வாழ்வில் ஒளியேற்ற 69 சதவிகித இட ஒதுக்கீட்டை ஏற்படுத்திக் கொடுத்த, சமூக நீதி காத்த வீரத்தாய் எங்களின் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள் வாழ்கின்ற காலத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் வாழ்கிறோம் என்ற பெருமையோடு மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, எனது உரையைத் துவக்குகின்றேன்.

நடுத்தர குடும்பத்தில் பிறந்து வளர்ந்து, வழக்கறிஞர் தொழில் செய்து கொண்டிருக்கும் என்னை, கழக மாணவர் அணியின் தென்சென்னை மாவட்டத் தலைவராகவும், பின் கழக மாணவர் அணியின் மாநிலத் துணைச் செயலாளராகவும் பணியாற்ற அனுமதித்து, சைதாப்பேட்டை தொகுதிக்குச் சட்டப் பேரவையின் உறுப்பினராகப் போட்டியிட வாய்ப்பளித்து, என்னை வெற்றிபெறச் செய்த சிங்கநிகர் தலைவி, நான்காம் தமிழாம் அறிவியல் தமிழ்கண்ட இதய தெய்வம் எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள் பாதங்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என் இதயங்கனிந்த நன்றிகளைக் காணிக்கையாக்கி, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சிக்கு விசுவாசத்தோடு வாக்களித்து, சைதாப்பேட்டை மீண்டும் அம்மா அவர்களின் கோட்டை என்பதை நாட்டுக்கு உணர்த்திய (மேசையைத் தட்டும்



ஒலி) தொகுதிவாழ் வாக்காளப் பெருமக்களுக்கும், வெற்றிக்கு உழைத்த இயக்கத்தின் முன்னோடிகளுக்கும், கூட்டணிக் கட்சியைச் சார்ந்த தலைவர்களுக்கும், தோழர்களுக்கும், அம்மாவின் புகழ்பாடும் கழகத் தொண்டர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

உலக வரலாற்றில் தமிழகம், தகவல் தொழில்நுட்பத்தில் ஒரு புரட்சியை உருவாக்கி சாதனை படைத்து, தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு, கணினியின் சிறப்புக் கூறுகளான வேகம், நினைவாற்றல், கணக்கிடுதலின் துல்லியம், செயல்முறைப்படுத்துதல் முதலியவற்றைத் தொலைத் தொடர்பு தொழில்நுட்பத்துடன் இணைத்து, தகவல் தொழில்நுட்பத்தை, மாநிலத்தில் வளர்ச்சியடையச் செய்தவர், மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதைப் பதிவுசெய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்று இணையத்தின் பரிணாம வளர்ச்சி, மனித வாழ்வின் சிந்தனை, செயல், நடைமுறை அனைத்திலும் ஒரு பெரும் தாக்கத்தையும், மாற்றத்தையும் கொண்டுள்ளது. இணைய வளர்ச்சியால், இன்று மின் வணிகம் (e-commerce), மின்னிதழ் (e-zines), மின் பணம் (e-cash), மின்தரவுப் பரிமாற்றம் (e-Data interchange) என்றெல்லாம் மின்வெளி சார்ந்த நடைமுறை உலகமாக மாற்றங்கள் தொடர்ந்து, இணையமே ஒரு வெளியாய், Cyber Space பரிணமித்து, இம் மின்வெளி ஒரு மெய்நிகர் Virtual State-ஆகக் காணப்படுகிறது. இந்தச் சூழ்நிலையை உணர்ந்து, மாண்புமிகு அம்மா அவர்கள், தகவல் தொழில்நுட்பத்தில் மாநிலத்தை முதன்மையாக்க வேண்டும் என்ற அவர்களின் சீரிய சிந்தனையில் தோன்றியதுதான் தகவல் தொழில்நுட்பக் கொள்கை, 2002.

மாண்புமிகு அம்மா அவர்களால் 2002 ஆம் ஆண்டு செப்டம்பர் 19 ஆம் நாள் அறிவிக்கப்பட்ட, '2002 தகவல் தொழில்நுட்பவியல் கொள்கை'—Information Technology Policy 2002—தமிழகத்தைத் தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் சென்று, நாட்டின் கணிசமான அளவு தகவல் தொழில்நுட்பவியல் ஏற்றுமதியின் வளர்ச்சிப் பாதைக்கு, வழி அமைத்துக் கொடுத்தது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

வளர்ச்சிப் பட்டியலிலே, தி.மு.க. ஆட்சிக் காலத்திலே, 2000-2001-லே மென்பொருள் ஏற்றுமதி. 3,116 கோடி ரூபாய் என்று இருந்ததை. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்திலே ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், 2001-2002-ல் 5,223 கோடி ரூபாயாகவும். (மேசையைத் தட்டும் ஒலி) 2002-2003-ல் அதை 6,316 கோடியாகவும்.

2003–2004–ல் 7,621 கோடி ரூபாயாகவும், 2004–2005–ல் 10,703 கோடி ரூபாயாகவும், 2005–2006–ல் 15,000 கோடி ரூபாயாகவும் உயர்த்தி 5 ஆண்டுகளில் சுமார் கிட்டத்தட்ட 11,884 கோடி ரூபாய் ஏற்றுமதி வளர்ச்சியினைச் செய்தவர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்லாமல், தகவல் தொழில்நுட்பவியல் சேவைகளில், வங்கி, நிதி சேவை, காப்பீடு, சுகாதாரம் மற்றும் போக்குவரத்துத் துறைகளில் சென்னையை உலகின் தகவல் தொழில்நுட்பத் துறையின் தலைநகராக மாற்றும் முயற்சி, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்திலே மேற்கொள்ளப்பட்டது.

பிற்பகல் 1–00

தேசத்தின் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகள் (Information Technology Enabled Services) மற்றும் வணிக செயல்முறை வெளித்திறன் செயல் (Business Process Outsourcing–B.P.O.) ஆகியவற்றில், குறிப்பாக வங்கி நிதி சேவைகள் மற்றும் காப்பீட்டுத் துறைகளில், தமிழ்நாடு வலிமைமிக்க முக்கிய இணைப்பு மையமாக விளங்கி வருகிறது என்பதையும், மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் நடத்திக்காட்டப்பட்ட சாதனை என்பதைப் பதிவுசெய்ய விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைத் தொழில்களுக்குத் தேவையான தரமிக்க மனிதவள ஆற்றலை உருவாக்குவதற்கு, மாநிலத்தில் உள்ள தன்லசிறந்த ஐந்து பல்கலைக்கழகங்கள், ஏழு தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைத் தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றுடன் இணைந்து, 280 மணி நேர, மாதிரி தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைப் பயிற்சி வகுப்புகளை, 'எல்காட்' நிறுவனம்வாயிலாக உருவாக்கித் தந்தவர் மாண்புமிகு எங்கள் அம்மா என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, 'எல்காட்' நிறுவனம்மூலமாக தேசிய அளவில் நடைபெற்ற நிகழ்வுகளான Connect 2001, Connect 2002, 2003 மற்றும் 2004, Bangalore IT.com, Indiasoft மற்றும் பன்னாட்டுப் பொருட்காட்சிகளான "CeBIT" 2003, கோலாலம்பூரில் 2003 டிசம்பர் 2 முதல் 6 வரை நடைபெற்ற "Incredible India" 2003, "Hongkong I.C.T. Expo, 2004, GITEX DUBAI 2004" மற்றும் கொரியாவில் நடைபெற்ற "International Exposition on



Government Innovations" ஆகியவற்றில் பங்கேற்று, தகவல் தொழில்நுட்பத் துறையில் தமிழகத்தின் வளர்ச்சியை எடுத்துக்காட்டியது.

அதுமட்டுமல்லாமல், மின்னணு செய்திப் பரிமாற்றம் மற்றும் பாதுகாப்புச் சங்கத்தின் தலைமை அலுவலகச் செயல்பாடுகளுக்கு இடமளிக்க, தேசிய அள்வில் தகவல் தொழில்நுட்பத் துறையில் முன்னணியில் உள்ள மாநிலங்களுக்கிடையே நிலவிய கடும் போட்டியில் தமிழகம் வெற்றிபெற்றுத் தெரிவு செய்யப்பட்டது என்பதையும் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், இச்சங்கத்திற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலே 5,000 சதுர அடி கட்டடத்தை, 3 ஆண்டுகளுக்கு வாடகை இல்லாமலும், தரமணியில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர். அறிவு நகரத்தில் 3 ஏக்கர் நிலமும், உறுப்பினர் கட்டணமான ரூபாய் 60 இலட்சம் தொகையினையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வழங்கியது என்பதையும் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இங்கே இருக்கின்ற இந்தத் தலைமைச் செயலகத்திலே தகவல் தொடர்புத் தரத்தை மேம்படுத்தும்வகையில், சென்னை தலைமையகத்தில் 1,000 இணைப்புகளுடன் கூடிய உள்பேசி இணைப்பகம், ரூபாய் 76 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாமல், தலைமைச் செயலக உள்கட்ட வலையமைப்புத் துணைச் சாதனங்கள் அமைக்கும் திட்டத்தின்மூலம் முக்கிய முடிவுகளை மேற்கொள்வதற்கு 2 mbps கொள்ளளவு அதிகம் உள்ள அதிவேக இணையம், தலைமைச் செயலகத்தில் ரூபாய் 63 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ளது.

இந்தப் பேரவையில் உறுப்பினர்கள் பேசுகின்ற பேச்சு, பதிவு செய்கின்ற கருத்துகள், தட்டச்சுமூலம் அடித்துக் கொடுக்கப்பட்டிருந்த நிலைமையை மாற்றி, உறுப்பினர்கள் பதிவு செய்யும் கருத்தைக் கணினிமூலம் அடித்துக் கொடுக்க வைத்தவர், மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், நீங்கள் உங்கள் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டுள்ள அத்தனை சாதனைகளும்; போக்குவரத்துத் துறை கணினிமயமாக்கப்பட்டு, 86 வட்டாரப் போக்குவரத்துக் கழகங்களிலே ஓட்டுநர் உரிமம் அட்டைகள் வழங்கப்பட்டது முதல், பத்திரப் பதிவுத் துறை, வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள், கணினிக் கல்வித் திட்டம், 1,197 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் செயல்பட்டதையும், 18,973 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அது செயல்படுத்தப்பட்டு, ஆண்டிற்குச் சுமார்

92,500 மாணவர்கள் முழு தேர்ச்சி அடைந்ததையும், தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் சான்றிதழ் கல்வியையும், அயல் நாடுகளைச் சேர்ந்த 175 மாணவர்கள், சான்றிதழ்கள் கல்வித் திட்டத்தின்கீழ் முதல் அடிப்படை நிலை மற்றும் இடைநிலைக் கல்வியை நிறைவு செய்ததையும், தமிழ் இலக்கிய நூல்களின் சிறந்த தொகுப்பாக உள்ள மின் நூலகத்தில் தற்போது 205 புத்தகங்கள், இணையத் தளத்திலிடப்பட்டு, 29 கலைச் சொற்களஞ்சியங்களும் மின் நூலகத்தில் இடம் பெற்றுள்ளதையும், தமிழர்கள் பயனடையும் வகையில், தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் ஒருங்கிணைப்பு மையங்கள் அமெரிக்காவில் 5, கனடாவில் 1, மலேசியாவில் 1, இலங்கையில் 1, மொரீஷியஸ் 1, சுவிட்சர்லாந்து 1, ஜெர்மனியில் 1, ரீயூனியனில் 1, ஆக மொத்தம் 12 தொடர்பு மையங்கள் நிறுவப்பட்டுள்ளதையும், கணினித் தமிழ் வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் தமிழ் மென்பொருள்களை உருவாக்க, தமிழ் மென்பொருள் வளர்ச்சி நிதியை தமிழக அரசு வழங்கியுள்ளது என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளீர்கள்.

தகவல் தொழில்நுட்பத் துறையில் சொல்லப்பட்ட குறிப்புகள் அத்தனையும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் செய்யப்பட்ட சாதனைகள்தான் என்பதைச் சுட்டிக்காட்டி, (மேசையைத் தட்டும ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் சாதனையை ஏற்றுத்தான் நீங்கள், உங்களுக்கென்று ஒரு கொள்கையை வெளியிடமுடியாமல், 10 ஆம் தேதி வரவிருந்த மானியக் கோரிக்கையைப் பின்னர் 19 ஆம் தேதி வருவதாகச் சொல்லி, தட்டுத் தடுமாறி இன்று 23 ஆம் தேதிக்கு வந்திருந்தாலும், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் செய்யப்பட்ட சாதன்னகள்தான் இன்று கொள்கைக் குறிப்பாக வந்திருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு அம்மா அவர்கள் எப்படி இந்த வளர்ச்சியினைத் தகவல் தொழில்நுட்பத்திலே கொண்டு வந்தார்கள்? தொல்லைகளைக் கண்டு துவளாமல், எதிர்ப்புகளைக் கண்டு அஞ்சாமல், பழிவாங்கும் செயல்களைக் கண்டு பயம் கொள்ளாமல் அம்மா அவர்களின் அரசு, தகவல் தொழில்நுட்பக் கொள்கை 2002–ன்மூலம் தொலைநோக்கோடு செயல்படுத்தி, குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படுத்தியவர், மாண்புமிகு அம்மா அவர்கள். வெளிநாட்டு மூலதனம் நம் மாநிலத்திற்கு அதிக அளவில் வரவேண்டும் என்பதற்காகவும், இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களின் போட்டியைச் சமாளிக்க வேண்டும் என்பதற்காகவும் கொண்டு வரப்பட்ட கொள்கைத் திட்டத்தின்வாயிலாக, மாண்புமிகு அம்மா அவர்கள் தலைமையில் நடந்த சீரிய அரசு, இந்தச்



சாதனைக்குரிய முதலீட்டாளர்களைத் தமிழ்நாட்டில், அதிலும் குறிப்பாக, சென்னையைத் தேர்ந்தெடுக்கச் செய்து, அரிய மக்கள் நலப் பணிகள் ஆற்றியதன்வாயிலாக, அமைதியான மாநிலம்; இங்கே கொள்ளைக்காரர்கள் இல்லை; கட்டப் பஞ்சாயத்துகள் இல்லை; காவல் துறை நவீனமயமாக்கப்பட்டு, பாதுகாப்பான ஒரு சூழ்நிலை உருவாக்கியது; அதுமட்டுமல்லாமல், எல்லாவித அடிப்படை வசதிகள்; புதிய வீராணம் தண்ணீர்வாயிலாகக் குடிதண்ணீர்ப் பிரச்சினை தீர்க்கப்பட்டது; தடையில்லா மின்சாரம் வழங்கப்பட்டது; உள்கட்டமைப்பு வசதியின்பேரிலே தரமான சாலைகள் வழங்கப்பட்டன; தொழில் தொடங்க வரும் முனைவோரிடம் தோழமையுடன்கூடிய வர்த்தக அணுகுமுறை; இயற்கைச் சீற்றங்களைக் கையாளும் விதம்; ஒரு நாட்டில் எல்லாவிதப் பாதுகாப்பு இருந்தாலும், இயற்கைச் சீற்றங்களினால் வரும் பாதுகாப்பு இல்லையெனில், அந்த நாட்டில் தொழில் வளர்ச்சி மேம்பாடு அடைய முடியாது; இதைக் கண்டு உலக நாடுகள் எல்லாம் அஞ்சிய நேரத்தில், இயற்கைச் சீற்றங்களாக வந்த சுனாமி, பெருவெள்ளச் சீற்றத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் கையாண்ட விதத்தின் காரணமாகவே —இங்கே தமிழகத்தில் பல்வேறு தகவல் தொழில்நுட்ப நிலைகள் வளர்ச்சியடைந்தன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) இன்னும் ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன்.

பிற்பகல் 1–05

அதுமட்டுமல்லாமல், தமிழ்நாட்டில் பல்வேறு மக்கள் நலப் பணித் திட்டங்களைச் செயல்படுத்தி, தமிழ்நாட்டிற்கு வந்தால் எந்தத் தொல்லையும் இன்றி, இன்று நிம்மதியாகத் தொழில் நடத்தலாம் என்ற சாதகமான சூழ்நிலையை உருவாக்கி, வெளிநாட்டு மூலதனங்களைத் தமிழ்நாட்டிற்குக் கொண்டுவந்து, மாநிலத்தை முதன்மை மாநிலமாக்கியவர், மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கடைசியாக, எனது தொகுதியின் பிரச்சினைக்கு வருகிறேன். சைதாப்பேட்டை தொகுதியில், பல இடங்களில் பல்வேறு சாதனைகள் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் செய்யப்பட்டிருந்தாலும், ஒருசில இடங்களுக்குப் பட்டா வழங்கும் பிரச்சினை உள்ளது. அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில், மழை நிவாரணத் தொகையாக ரூபாய் 2,000 வழங்கப்பட்டது. தேர்தல் அறிவிப்பால், ஈக்காட்டுத்தாங்கல் பகுதியில், 12 தெருக்களுக்கு இந்தத் தொகை வழங்கப்படாமல் விடுபட்டிருக்கிறது. அதனை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், சைதாப்பேட்டை மறைமலை அடிகளார் பாலத்தின் அருகிலுள்ள குடிசைகளை மாற்றி, அங்கு அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டித் தர வேண்டுமென்றும், சைதாப்பேட்டை, அண்ணா சாலை மற்றும் ஜீனீஸ் Road சந்திப்பில் பனகல் மாளிகை அருகில் ஒரு 'U' வளைவு மற்றும் பாதசாரிகள் சாலையைக் கடக்க ஒரு மின் விளக்கு சமிக்ஞை அமைத்துத் தர வேண்டுமென்றும், கோடம்பாக்கம் Road–கோவிந்தன் Road சந்திப்பில் ஒரு signal அமைத்துத்தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். சைதாப்பேட்டை கால்நடை மருத்துவமனை அருகிலுள்ள குடிசைவாசிகளுக்குத் தற்போது மின்சார வசதி இல்லை; அவர்களுக்கு மின்சார வசதி ஏற்படுத்திக்கொடுத்து, அடுக்குமாடிக் குடியிருப்பு வசதி செய்துதர வேண்டுமென்றும், ஜோன்ஸ் Road Railway Gate சுரங்கப்பாதை பணி தொடங்கப்பட்டு, அப்படியே கிடப்பில் போடப்பட்டுள்ளது. பாதசாரிகளுக்கும், பயனாளிகளுக்கும் மிகவும் இடையூறாக, gate-இன் இரண்டு பக்கமும் பாதை மூடப்பட்டுள்ளது. இந்தப் பணியை உடனடியாக ஆரம்பித்து முடித்துத்தா வேண்டுமென்றும், அதேபோல் மடுவின்கரை, சக்கரபாணி தெருவிலே ஆரம்பிக்கப்பட்ட பாலத்தின் பணி முடிவடையாமல் உள்ளது. அதையும் முடித்துத் தர வேண்டுமென்றும் கேட்டு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் உரையை முடியுங்கள்.

**திரு. ஞா. செந்தமிழன்:** ஒரேயொரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேட்டாகிவிட்டதல்லவா? உறுப்பினர், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)*

**திரு. ஞா. செந்தமிழன்:** அதேபோல் இன்றைக்குப் பேசிய உறுப்பினர்கள் எல்லாம், திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியிலே தொழில் துறை வளர்ந்துவிட்டது, தகவல் தொழில்நுட்பத்திலே ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளோம் என்றெல்லாம் பேசினார்கள். ஆனால், 1996 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டுவரை, ஏன் தகவல் தொழில்நுட்பத் துறை வளரவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அப்போதைய தி.மு.க. அரசின் நிர்வாகச் சீர்கேட்டால், சட்டம்–ஒழுங்கு சந்தி சிரித்தது. மக்களைப் பாதுகாக்க வேண்டிய...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர், உட்காருங்கள். *(குறுக்கீடு)* உட்காருங்கள். *(குறுக்கீடு)* நேரமாகிவிட்டது. *(குறுக்கீடு)* No, No. *(குறுக்கீடு)* No. No. *(குறுக்கீடு)* திரும்பத் திரும்ப open பண்ணிக்கொண்டு போய்க் கொண்டிருக்கிறீர்கள். *(குறுக்கீடு)* உட்காருங்கள். முதலில் தொகுதியில்



உள்ளவற்றுக்கு, என்னென்ன வேண்டுமென்று கேட்டாகிவிட்டது திரும்ப ஏன் திரும்பிப் போகிறீர்கள்? *(குறுக்கீடு)* மாண்புமிகு *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதிலுரை. *(குறுக்கீடு)* உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* திரு.. கலைராஜன், உட்காருங்கள். *(குறுக்கீடு)* உட்காருங்கள் No, no. *(குறுக்கீடு)* No, no. *(குறுக்கீடு)* மாண்புமிகு முதல்வர் அவர்களின் பதிலுரை. *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* பதிலுரை முடிந்ததற்குப் பிறகு, ஏதாவது கேள்வி கேட்க வேண்டுமென்றால், கேளுங்கள். பதிலுரைக்குப் பின்னால்தான். எல்லோரும் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* Not allowed. *(குறுக்கீடு)* உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* முடியாது, உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு முதல்வர் அவர்கள். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் குறித்தும், தகவல் தொழில்நுட்பத் துறை குறித்தும் காலையிலேயிருந்து இதுவரையிலே இந்த மாமன்றத்திலே பல்வேறு கட்சிகளின் உறுப்பினர்கள், தலைவர்கள், தங்களுடைய கருத்துகளை எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். எனக்கு முன்னால் பேசிய அ.தி.மு.க உறுப்பினர் கூறியதுபோல, ஏதோ, நானும் தட்டுத் தடுமாறி என்னுடைய பதிலுரையைத் தருவதற்கு முன்வந்திருக்கின்றேன். எல்லோருக்கும் தட்டுத் தடுமாறுகின்ற பருவம் வரும். *(மேசையைத் தட்டும் ஒலி)* அதை யாரும் தவிர்க்க முடியாது. நான் அவற்றையெல்லாம் கேலியாகவோ, கிண்டலாகவோ, வசையாகவோ கருதுபவன் அல்லன். இசையாகவே கருதிக்கொண்டு இரசிப்பவன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 1–10*

என்னுடைய உடல்நிலை காரணமாக, நீண்டநேரம் இந்த விவாதத்திலே கலந்துகொள்வதற்கு இயலாது என்பதற்காக, முதலில் பட்டியலிடப்பட்ட மானியக் கோரிக்கைகளை ஒரு சிறிது மாற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு, எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர், கொறடா, இவர்களுடைய ஒப்புதலோடு, தேதி மாற்றம் செய்யப்பட்டு, இன்றைக்குக்கூட அதே உடல்நிலையோடுதான் சில கருத்துகளை எடுத்து வைக்கின்ற வாய்ப்பை இங்கே நான் பெற்றிருக்கின்றேன். இது தற்காலிகமாக எனக்கு ஏற்பட்டிருக்கின்ற ஒரு நலிவு. யாரும் நிரந்தரமாக இருக்கக்கூடிய உடல் நலிவு என்று எண்ணி ஆறுதலடைய மாட்டார்கள்; அகமகிழ்ச்சி கொள்ள மாட்டார்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.

இன்று, இந்த விவாதத்தை ஆரம்பித்து வைத்தவர், நம்முடைய நண்பர் மாண்புமிகு உறுப்பினர் ஜெயக்குமார் அவர்கள் ஆவார்கள். அவர்கள் பேசும்போது கேட்டார்கள்; Centre for Monitoring Indian

Economy (CMIE), பிப்ரவரி 2006 ஆம் ஆண்டு தந்துள்ள விவரப்படி, Investment in Manufacturing Sector என்ற விவரப்புடி, அவர்கள் ஒரு பிரச்சினையை எழுப்பினார்கள். உற்பத்தித் துறையிலே, அம்மையார் ஜெயலலிதா அவர்களுடைய ஆட்சிதான் முதலிடத்தில் இருந்ததாகச் சொன்னார்கள். என்னுடைய கையிலே இருப்பவை C.M.I.E. வெளியிட்ட புத்தகங்கள். இரண்டு புத்தகங்கள் வைத்திருக்கின்றேன். அந்தப் புத்தகத்திலே உள்ள ஆதாரங்களை, புள்ளிவிவரங்களை வைத்துத்தான் நான் இந்தக் கருத்தை எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நான் முதலிலே சொன்னதுமாதிரி, Centre for Monitoring Indian Economy (CMIE), பிப்ரவரி 2006–ல் தந்துள்ள விவரப்படி, கடந்த ஆண்டு ஓரிசாவிலே 1,76,770 கோடி ரூபாய் உற்பத்தித் துறையில் முதலீடு, ஜார்கண்ட் 1,70,460 கோடி ரூபாய், குஜராத் 96,162 கோடி ரூபாய், கர்நாடகா 55,485 கோடி ரூபாய். ஆந்திரா 55,359 கோடி ரூபாய், தமிழ்நாடு 54,488 கோடி ரூபாய். வரிசைப்படி ஆறாவது இடத்திலேதான் அம்மையார் அவர்கள் ஆண்ட காலத்தில் தமிழகம் அமைந்திருக்கிறது இந்த விவரப்படி. ஆனால், இங்கே முதலிடம் பெற்றிருந்ததாக நண்பர்கள் வாதிட்டிருக்கின்றார்கள்.

பிற்பகல் 1–15

இன்னொரு ஆதாரத்தையும் சொல்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே என்ன நிலை என்றால், 2001 என்று எடுத்துக்கொள்ள வேண்டும். 2001 ஆம் ஆண்டு முடிவில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அன்றைய நிலையில், தற்காலிகமாக முடிந்த அந்தக் காலக்கட்டத்தில், ஓரிசாவிலே 23,366 கோடி ரூபாய், ஜார்கண்ட் வெறும் 731 கோடி ரூபாய். குஜராத் 36,058 கோடி ரூபாய், கர்நாடகா 27,345 கோடி ரூபாய், ஆந்திரா 34,928 கோடி ரூபாய், மராட்டியம் 26,218 கோடி ரூபாய், தமிழ்நாடுதான் 36,778 கோடி ரூபாய். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, அன்றைய நிலையில், இதில், தமிழ்நாடுதான் முதல் இடத்திலே இருந்தது என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ளலாம். நான் இந்தப் 'போட்டாபோட்டி', 'காட்டாகுஸ்தி'–யில் என்னைச் சிக்க வைத்துக்கொள்ள விரும்பவில்லை. இன்று நாம் எல்லோரும் அமர்ந்து, இந்த மாமன்றத்தில், தமிழ்நாட்டினுடைய மொத்த தொழில் வளத்தை வளர்ப்பதற்குப் பணியாற்ற வேண்டும்; பாடுபடவேண்டும்; ஆர்வம் கொள்ளவேண்டும்; அக்கறை காட்டவேண்டும் என்ற அளவிலேதான், இன்றைய விவாதம் அமைந்து, உங்களுடைய உரைகளும், என்னுடைய பதிலுரையும் அவ்வாறு விளங்கிட வேண்டுமென்றே நான் கருதுகின்றேன். இதற்கிடையிலே, இதற்கெல்லாம் யார் காரணம், நீயா, நானா என்ற அந்த விவாதங்களுக்குள் நான் செல்லவேண்டிய தேவையில்லை; வம்புக்குச்



செல்லவேண்டிய அவசியம் இல்லை; வந்த வம்பை விடவும தேவையில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், வந்த வம்பை விட்டுவிட்டால், வழங்கவேண்டிய விளக்கத்தை வழங்காமல போய்விடக்கூடும். அதனால் சொல்லுகிறேன், விளக்கம் தேவைப்படுகிற நேரத்தில் தந்தே தீரவேண்டிய நிலையில் நாம் இருப்பதால், நான் அதற்கு அந்தக் கருத்தைச் சொன்னேனே அல்லாமல், வேறு அல்ல.

திரு. ஜெயக்குமார் அவர்கள் இன்னொன்றும் சொன்னார்கள். தொழில் துறை மானியத்திற்கான நிதி ஒதுக்கீடு, கடந்த ஆண்டைவிட குறைந்துவிட்டது என்று குறிப்பிட்டார்கள். பத்திரிகைகளுக்குப் பெரிய தலைப்பு அது. அவர் நீண்டகாலமாகச் சட்டமன்ற அனுபவம் உள்ளவர் என்பதும், அதைப்போலவே, பத்திரிகைத் துறையிலே சற்று அனுபவம் உள்ளவர் என்பதும் எனக்கு நன்றாகத் தெரியும். அதனால் அவர் ஒரே அடியாக தொழில் துறை மானியம் கடந்த ஆண்டைவிட குறைந்துவிட்டதாகக் குற்றஞ்சாட்டினார். 2005–2006–ல் திருத்திய மதிப்பீடு, 227 கோடி ரூபாய் என்றபோதிலும், Final Modified Appropriation, இறுதித் திருத்த ஒதுக்கீடு என்று பார்த்தபோது, 186 கோடி ரூபாய்தான்; திருத்த ஒதுக்கீடு. ஆனால், சொல்லப்பட்டது 227 கோடி ரூபாய்; இறுதித் திருத்த ஒதுக்கீடு என்று குறிப்பிடப்பட்டது 186 கோடி ரூபாய். அதாவது, 40 கோடி ரூபாய், கடந்த ஆட்சியில், செலவழிக்கப்படாமல் surrender செய்யப்பட்டுவிட்டது. இந்த surrender எனக்குப் பிடிக்காது. (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான், அந்தக் கணக்கின் அடிப்படையில்தான், தற்போது கடந்த ஆண்டைவிட அதிகமாகவே ஒதுக்கிய நிதியின்படி மொத்தமாக 193 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. திரு. ஜெயக்குமார் அவர்களுடைய சந்தேகத்திற்கு, கேள்விக்கு இதை நான் விளக்கமாகத் தருகிறேன். ஏதோ அவருக்குப் பதிலுக்குப் பதில் சொல்வதாக அவரும் கருதிக்கொள்ளக்கூடாது; விளக்கம்தான்.

தமிழ்நாடு, உற்பத்தித் துறை முதலீட்டில் கடந்த ஆட்சியில், முதல் மாநிலமாகத் திகழ்ந்தது என்ற வாதமும் அடிபட்டுப் போகின்ற புள்ளிவிவரங்களை எடுத்து வைத்திருக்கின்றேன். Annual Survey of Industries, 2003-2004–ன்படி வெளிவந்துள்ள விவரப்படி, மராட்டியத்தில் Fixed Capital 83,472 கோடி ரூபாய், குஜராத்தில் 85,788 கோடி ரூபாய், தமிழ்நாடு 46,430 கோடி ரூபாய், 2004 விவரப்படி Invested Capital, மராட்டியத்தில் 1,24,019 கோடி ரூபாய், குஜராத்தில் 1,15,027 கோடி ரூபாய், தமிழ்நாடு 68,330 கோடி ரூபாய். எனவே, எப்படித் தமிழ்நாடு இவற்றில் எல்லாம் முதல் நிலையிலே இருக்கமுடியும் என்ற கேள்விக்கு நாமே பதிலைத் தேடிக்கொள்ளவேண்டும்.

பிற்பகல் 1–20

இன்னொன்றையும் கேட்டார்கள்; எண்ணூர் சிறப்புப் பொருளாதார மண்டலத் திட்டத்திற்கு 900 கோடி ரூபாய் என்றும், கிருஷ்ணகிரி மாவட்டச் சிறப்புப் பொருளாதார மண்டலத் திட்டத்திற்கு 500 கோடி ரூபாய் என்றும், நாங்குநேரி உயர் தொழில்நுட்பப் பூங்கா திட்டத்திற்கு 640 கோடி ரூபாய் என்றும் செலவாகும் எனக் குறிப்பிட்டுவிட்டு, அதற்கான 2,040 கோடி ரூபாயை, நிதியை, நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கீடு செய்யவில்லையே, ஏன் என்று கேட்டார்கள். எடுத்த எடுப்பிலே, மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது சரியான கேள்வி என்றுதான் தோன்றும். ஆனால், அது சரியான கேள்வி அல்ல என்று அதை மறுத்து, நான் பதில் சொல்ல விரும்பவில்லை; விளக்கம் அளிக்க விரும்புகின்றேன்.

இவற்றிற்கெல்லாம் தேவைப்படும் நிதி, பங்கு முதலீடுகள், Share Capital-மூலமாகவும், கடனாகப் பெறுவதன்மூலமாகவும் திரட்டப்படும். பங்கு முதலீடுகள்மூலமாக ஏற்படும் ஈவுத் தொகை, Equity, சிறிய பகுதியேயாகும். இதனை, இந்தத் திட்டங்களை நிறைவேற்ற, TIDCO நிறுவனம் ஏற்றுக்கொள்ளும். தேவைப்படும் நிதியின் பெரும் பகுதி, வங்கிகளிடமிருந்தும், நிதி நிறுவனங்களிடமிருந்தும் கடனாகப் பெறப்படும். பொதுவாக, இதுபோன்ற திட்டங்களுக்கெல்லாம், இந்த முறையில்தான் நிதிக்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதை, அமைச்சராகப் பணியாற்றியிருந்த நம்முடைய திரு. டி. ஜெயக்குமார் அவர்கள், நன்றாகவே அறிவார்கள் என்று கருதுகிறேன். இது எல்லா ஆட்சிக் காலங்களிலும் பின்பற்றப்பட்டுவரும் வழிமுறையேயாகும்.

இங்கே, நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் திரு. டி. சுதர்சனம் அவர்கள், ஒரு பிரச்சினையை எழுப்பினார்கள். கடந்த ஆட்சியில், Aswanth Sugars என்ற நிறுவனம் என்பதன்பேரில் (குறுக்கீடு)—Aswanth Sugars-தானே?—அதன்பேரில் நடைபெற்ற விதிமீறல்கள், முறைகேடுகள் தொடர்பாக, அந்த நிறுவனத்தின் பின்னணியிலே இருப்பவர்கள் யார், யார்; என்ன நடவடிக்கை என்றெல்லாம் கேட்டார்கள். அதைப்பற்றியெல்லாம் நான் அவர்களுக்குச் சொல்லுகின்றேன். ஏனென்றால், அவருக்கு ஏதேனும் உறுதியளிக்க வேண்டும்; நேற்றைக்கே கோபம் வந்து விட்டது அல்லவா? (சிரிப்பு) ஆகவே, இதற்கும் உறுதியளிக்க வேண்டும். உரிய முறையில் விசாரணை மேற்கொண்டு, ஒளிந்திருக்கும் உண்மைகளை வெளிச்சத்திற்கு நிச்சயமாகக் கொண்டு வருவோம் என்பதை மாத்திரம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. டி. சுதர்சனம் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



இங்கே, தொழில் துறை, தகவல் தொழில்நுட்பவியல் துறை, இந்த இரண்டு தலைப்புகளிலும், மொத்தம் 285 வெட்டுத் தீர்மானங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. நானும் 1957 ஆம் ஆண்டிலேயிருந்து இந்த அவையிலே இருந்திருக்கிறேன். பேராசிரியரும், 1957–லே என்னோடு இருந்தார். பிறகு Parliament-க்குச் சென்றுவிட்டு இங்கே வந்தார். தொடர்ச்சியாக 1957 ஆம் ஆண்டிலேயிருந்து, இதுவரையில் இருந்திருக்கிறேன். இவ்வளவு வெட்டுத் தீர்மானங்களை நான் பார்த்ததேயில்லை. அவர்கள்கூட சொன்னார்கள்; ஒவ்வொரு நாளும், இங்கே மானியங்களைத் தொடங்குவதற்கு முன்பு, நம்முடைய சபாநாயகர் அவர்கள், பள்ளிக்கூடத்திலே attendance எடுப்பதுபோல, ஒவ்வொருவருடைய பெயரைக் கூப்பிடுவதும், அவர்களும் 'உளளேன் ஐயா' என்று கூறுகின்றவிதத்தைப்போல, (சிரிப்பு) அவர்கள் பெயர் சொல்வதும் — ஆக, 285 வெட்டுத் தீர்மானங்கள்; இந்த இரண்டு தலைப்புகளிலேமாத்திரம், மானியங்களிலேமாத்திரம் 285 வெட்டுத் தீர்மானங்கள். ஆனால், அந்த 285–ல், அவற்றிலே எல்லாம், அரசுக்கு அல்லது இந்த இலாகாவை ஏற்றுக் கொண்டிருக்கின்ற எனக்கு நினைவூட்டுகின்ற, கவனப்படுத்துகின்ற பல வெட்டுத் தீர்மானங்கள் இருக்கின்றன. குறிப்பாகச் சிலவற்றைமாத்திரம், நான் இங்கே நினைவூட்டுவது சிறப்பாக இருக்கும் என்று கருதுகின்றேன். இல்லாவிட்டால், அந்த 'வெட்டுத் தீர்மானங்கள்' எல்லாம், 'வெட்டித் தீர்மானங்கள்' ஆக ஆகிவிடும்! (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, சிலவற்றைமாத்திரம், நினைவூட்ட விரும்புகின்றேன். கட்சிச் சார்பில்லாமல், பொதுவான முறையில் யார் யார் தந்திருக்கிறார்களோ, அவர்களுடைய பெயர்களைக் குறிப்பிட்டு, அந்தக் கருத்துகளைச் சொல்லி, அதற்கான விளக்கங்களை, விவரங்களைக் கூற விரும்புகின்றேன்.

செல்வி கே. பாலபாரதி அவர்களின் வெட்டுத் தீர்மானம்; "திண்டுக்கல் தொகுதியில், ஜவுளி ஏற்றுமதி வளாகம், ஜவுளிப் பூங்கா அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க" என்று சொல்லியிருக்கிறார்கள். இது பத்திரிகையிலே வரும்; வாக்களித்தவர்கள் அதைப் படித்துப் பார்த்து வாழ்த்துவார்கள். இதைப்பற்றிப் பரிசீலித்து, அரசு நடவடிக்கை எடுக்கும் என்ற உறுதியை நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. என். நன்மாறன், 'மதுரை மாவட்டத்தில், புதிய தொழிற்சாலைகள் உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க" என்ற வெட்டுத் தீர்மானம் தந்திருக்கிறார். மாவட்டரீதியான ஆய்வுகள் வரும்போது,

இதுவும் ஆய்வு செய்யப்பட்டு இணைக்கப்படும் என்பதை நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–25

டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத், காங்கிரஸ்; "செய்யாறில் இந்த ஆண்டிலேயே சிப்காட் தொழிற்பேட்டை துவங்கப்பட்டுச் செயல்பட வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க" என்று கேட்டிருக்கிறார். நான் அவருக்குச் சொல்வேன்; சிப்காட், இராணிப்பேட்டையிலே இருக்கிறது. இராணிப்பேட்டைக்கும், செய்யாறுக்கும் அதிக தொலைவு இல்லை. அங்கிருக்கிற தொழிற்சாலைகள் செய்யாறு வரையிலே வரலாம். தொழில் செய்யக்கூடியவர்களுக்கு இராணிப்பேட்டை என்ன? எங்கிருந்தாலும் வரும். "செய்யார்" என்றால்தான் வராது. எனவே, விஷ்ணுபிரசாத் அவர்களுக்கு நான் உறுதி அளிக்கின்றேன்; இராணிப்பேட்டையிலே தொழில்கள் வைப்பதற்கு, இடமில்லாத அளவுக்கு மிதமிஞ்சிவிட்டால், செய்யாறுக்கு நிச்சயமாக சிப்காட் தொழிற்பேட்டை வருவதற்கு வழிவகுக்கப்படும் என்று சொல்லிக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. தி. வேல்முருகன்; அவர், பண்ருட்டியிலே பலாப் பழ ஜூஸ் தயாரிக்கும் தொழிற்சாலை கேட்கிறார். அதோடுவிடவில்லை; முந்திரிப் பழ ஜூஸ் தயாரிக்கும் தொழிற்சாலையும் வேண்டும் என்று கேட்டிருக்கிறார். முந்திரி ஜூஸ், பலாப் பழ ஜூஸ் கேட்கிறார்; மாம்பழ ஜூஸ் கேட்கவில்லை, கேட்க வேண்டியவர், தேர்தல் சின்னத்தின்படி கேட்கவில்லை! (சிரிப்பு) அந்த இரண்டு ஜூஸூம் பிழிவதற்கான ஏற்பாடுகளை அரசு கவனிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

"திருப்போரூர் சட்டமன்றத் தொகுதியில் அடங்கிய மறைமலை நகர் தொழிற்பேட்டையில், பெரும்பாலான தொழிற்சாலைகளில், வேலை செய்யும் ஊழியர்களை நிரந்தரம் செய்ய வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க" திரு. டி. மூர்த்தி, வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறார். தொழிலை மாத்திரம் கவனித்தால் போதாது; அந்தத் தொழிலை வாழவைத்துக் கொண்டிருக்கின்ற தொழிலாளர்களையும் வாழவைக்க வேண்டும் என்ற கவலை உள்ள அரசு, நிச்சயமாக அதையும் கவனிக்கும் என்று நான் இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கம்பம் இராமகிருஷ்ணன் "கம்பம் தொகுதியில் தென்னை, திராட்சை சார்ந்த தொழிற்பேட்டையை உருவாக்கவேண்டிதன்



அவசியம் குறித்து விவாதிக்க" என்று கேட்டிருக்கிறார். தென்னையானாலும், திராட்சையானாலும், அதற்கான தொழிற்பேட்டையைக் கம்பத்திலே உருவாக்குவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. இளவழகன், பா.ம.க., ஆற்காடு; "தமிழகத்தில் தொழில் வளர்ச்சி சீரமைக்க, முதலீட்டாளர்களுக்குள்ள பல்வேறு கட்டுப்பாடுகளைக் களைந்து, முதலீட்டை ஊக்கப்படுத்த நடவடிக்கையும், தொழில் கட்டுப்பாடுகளை நீக்கியும், மேலும் வட்டி விகிதங்களைக் குறைத்தும், தொழிலாளர் துறை சீர்திருத்தமும், தகுந்த எரிசக்தி விலை நிர்ணயித்தும், தொழில்முறை காலவிரயத்தைக் குறைத்தும், அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதில் பொதுத் துறை மற்றும் தனியார் துறை கூட்டாக இணைந்து செயல்பட வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க" என்று திரு. இளவழகன், பா.ம.க., ஆற்காடு தொகுதியைச் சேர்ந்தவர் கேட்டிருக்கிறார், வெட்டுத் தீர்மானத்தில். தொழில் கொள்கை ஒன்று வகுக்கப்பட இருக்கிறது, விரைவில். அந்தத் தொழில் கொள்கையிலே சேர்த்துக்கொள்ளப்பட வேண்டிய ஷரத்துகளிலே இது ஒன்று என்பதை நான் அவருக்கு உறுதியாக அளிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முனைவர் டாக்டர் ஜெயக்குமார்; "நாமக்கல், வாகனத் தொழிலுக்கு முக்கியத்துவம் வாய்ந்த இடமாகும். எனவே, இத்தொழிலை மேம்படுத்தவும், இப்பகுதியிலே உள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பை அதிகரிக்கவும், நாமக்கல்லில் வாகனத் தொழிற்பேட்டை ஒன்று ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க" என்று சொல்லியிருக்கின்றார். நாமக்கல்லில் நடைபெறுகின்ற வாகனத் தொழில், நாட்டிலேயே மிக முக்கியமான தொழில். பெரும் போராட்டங்கள், அறப் போராட்டங்கள், அந்த வாகனங்கள்மூலமாக நடைபெற்று இருப்பதையும், அதைச் சமாளிக்க முடியாமல் சர்க்கார்கள் திணறி இருப்பதையும் நான் அறிந்திருக்கின்றேன். எனவே, வாகனத் தொழிலுக்கு வாகான பல சௌகரியங்களைச் செய்வதற்கு அரசு முனையும். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. விடியல் சேகர் சொல்லியிருக்கிறார், வெட்டுத் தீர்மானத்தில் "வெளிநாட்டு நிறுவனங்கள், புதிய தொழில் தமிழகத்தில் தொடங்கும்போது, 80 சதவிகிதப் பணியாளர்கள் தமிழகத்திற்குள்ளும் அதிலும் குறிப்பாக, தொழிற்சாலை அமையும் இடத்தில் உள்ள வேலையில்லா இளைஞர்களுக்கு, முன்னுரிமை வாய்ப்பு வழங்குவதன் முக்கியத்துவம் குறித்து விவாதிக்க", என்று கேட்டிருக்கிறார். இது மி

மிக முக்கியமான ஒன்று. ஹுண்டாய் தொழிற்சாலை அமைந்தபோதே, அதை அமைக்கவந்த கொரியா நாட்டைச் சேர்ந்த அந்த அதிபர்களிடத்திலே, நான் முதலில் போட்ட நிபந்தனை, இந்த வட்டாரத்திலுள்ள உள்ளூர்க்காரர்களுக்கு வேலைகொடுக்க வேண்டும் என்ற நிபந்தனையை விதித்துத்தான், அந்தத் தொழிற்சாலைக்கான அனுமதியை அளித்தேன் அப்பொழுது. எனவே, இது ஒரு நல்ல நிபந்தனை. இந்த நிபந்தனை ஏற்கப்படும். அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அந்த வகையிலேதான், தொழிற்சாலைகள் அமையும்.

*பிற்பகல் 1–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு, அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** திரு. கோவை தங்கம், சின்கோனா மரத் தொழில், அந்தப் பகுதியிலே விரிவடைய வேண்டும் என்று கேட்டிருக்கின்றார். C.P.I.-ஐச் சேர்ந்த திருத்துறைப்பூண்டி திரு. உலகநாதன், "திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதியில், அரிசியைப் பயன்படுத்தி, wine தொழிற்சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து, விவாதிக்க" அவர் வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கின்றார். அரிசியிலே wine–ஆம்! அதைத் தயாரிக்க வேண்டுமாம்! (சிரிப்பு) நாம் இப்பொழுதுதான் அரிசியை இரண்டு ரூபாய் விலைக்குக் கொடுப்பதற்குப் படாதபாடு பட்டுக் கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே, wine–உம் தயாரித்துவிட்டால் என்ன ஆவது என்பதையெல்லாம் தீர யோசித்து, பரிசீலித்து, அதுபற்றி முடிவெடுக்கப்படும் என்று நான் அவருக்குச் சொல்லிக்கொள்கின்றேன்.

திரு. ஜி.கே. மணி, மேட்டூர்; "தமிழகத்திலே உள்ள அனைத்துக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கும், கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகையை, உடனே வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து"—அவர் அதை இப்போது எதிர்பார்க்கிறார். "உடனடியாகக் கரும்பு விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய தொகையை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யுங்கள்" என்று கேட்டிருக்கிறார். நிச்சயமாக அரசு அதற்கான நடவடிக்கையைக் கடுமையாக எடுக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. சி. ஞானசேகரன்; "வேலூர், திருப்பத்தூர், ஆம்பூர், செய்யாறு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் கரும்புச் சக்கைகளிலேயிருந்து அதிக மின்சாரம் தயாரிக்கும் திட்டத்தைச் செயல்படுத்த



வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க"—அவர் சக்கையைக்கூட பேசாமல் விடமாட்டார்! (சிரிப்பு) அதையும் தினந்தோறும் இந்த அவையிலே பயன்படுத்திக் கொண்டிருக்கிறார் என்பதை நீங்களெல்லாம் அறிவீர்கள். அவர் கேட்டு இல்லையென்று சொல்ல முடியுமா? எனவே, அதைப்பற்றி நிச்சயமாகக் கவனம் செலுத்தப்படும்.

திரு. ரவிக்குமார், விடுதலைச் சிறுத்தைகள்; "இந்தியத் தொழில் நிறுவனங்களின் கூட்டமைப்போடு-C.I.I.—இணைந்து, தொழில் திறன் மேம்பாட்டு—Skill development—மையங்களை மாவட்ட அளவில் உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க," என்று கேட்டிருக்கிறார். நான் மீண்டும் சொல்கின்றேன். தொழிற் கொள்கை விரைவிலே வகுக்கப்பட இருக்கிறது. அப்போது இது கவனத்திலே கொள்ளப்படும் என்பதை நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும ஒலி)

திரு. டி. ஜெயக்குமார், இராயபுரம்; "வடசென்னையிலே உள்ள எண்ணூர் பகுதியைச் சிறப்புப் பொருளாதார மண்டலமாக அறிவிக்கப்பட்டு, இதுவரை இப்பகுதியில் தொழிற்சாலைகள் அமைக்கப்படவில்லை."—அம்மா காலத்திலேகூடவா? (சிரிப்பு) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** கவலைப்படாதீர்கள், அமைத்துவிடலாம். "வேலைவாய்ப்பைப் பெருக்குகின்ற வகையில், வடசென்னை மக்கள் பெரிதும் பயன்படக்கூடியவகையில், இப்பகுதியில் Special Economic Zone உடனடியாக அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க," என்று கேட்டிருக்கிறார். நிச்சயமாக அதுவும் கவனிக்கப்படும். அவர் மகிழத்தக்க அளவில். (மேசையைத் தட்டும் ஒலி)

செங்கல்பட்டு திரு. கி. ஆறுமுகம் அவர்கள்; "திருக்கழுக்குன்றம் வட்டத்தைத் தொழிலில் பின்தங்கிய பகுதியாக அறிவித்து, தொழில் தொடங்குவோருக்கு ஊக்கமளிக்கும்வகையில், 25% மானியம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க," என்று கேட்டிருக்கின்றார். அதுவும் கருத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1–35*

திரு. செந்தில் பாலாஜி, அதிமுக, கரூர்; "கரூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள தமிழ்நாடு காகித ஆலை நிறுவனத்தில்–T.N.P.L. – பணிபுரியும் ஒப்பந்தத் தொழிலாளர்கள்மீது, முதல் தகவல் அறிக்கை – F.I.R.–

காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டாலே, அவர்களைப் பணிக்கு வரவிடாமல் நிறுவனம் தடை செய்துவிடுகின்றது. இந்த முறையை மாற்றி, குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் மட்டுமே பணி செய்வதைத் தடை செய்யவேண்டும் என்பது குறித்து வி்வாதிக்க,'' என்று கேட்டிருக்கிறார். இந்தக் கொள்கையிலே எந்தவிதமான மாற்றமும் இல்லை. ஒருவர்மீது குற்றம் சுமத்திவிட்டதாலேயே, அவர் குற்றவாளியாக ஆகிவிடமுடியாது. தொழிலாளர் என்பதற்காக, அவரை ஏறி மிதிப்பதை, நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன். ஆகவே, நிரூபிக்கப்பட்டால்மாத்திரமே, பணித் தடை வேண்டுமே தவிர, குற்றஞ்சாட்டிவிட்டு, அவர் தகுதி இல்லையென்று விரட்டிவிட, எந்தத் தொழிலாளியையும், அப்படிப் பழிவாங்க இந்த அரசு இடம் தராது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. சி. சண்முகவேலு, அடிக்கடி எழுந்து நிற்பவர், அ.தி.மு.க., உடுமலை; ''வங்கியில் வட்டி குறைந்துள்ள நிலையில், தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்திலும், கடன் கொடுப்பதிலே உள்ள நிபந்தனைகளை எளிமையாக்கி, வட்டியைக் குறைத்துக் கொடுக்கவேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க'' என்றொரு முக்கியமான விஷயத்தை அவர் வெட்டுத் தீர்மானத்திலே முன்மொழிந்திருக்கிறார். இது பரிசீலித்து முடிவெடுக்கப்படும் என்பதை நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி செல்வி ராமஜெயம், புவனகிரி; ''புவனகிரி தொகுதிக்குட்பட்ட பரங்கிப்பேட்டை ஒன்றியப் பகுதிகளில், அதிகம் பயிரிடப்படும் மலர்களைக் கொண்டு, அந்தப் பகுதியிலே வாசனைத் திரவியத் தொழிற்சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க'' என்று திருமதி செல்வி ராமஜெயம் கேட்டிருக்கின்றார்கள்.

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்; ''பொள்ளாச்சிப் பகுதியில் வேலைவாய்ப்பை உருவாக்க, ஒரு பெரிய தொழிற்சாலையைப் பொள்ளாச்சியிலே ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க'' என்று கேட்டிருக்கிறார். நிச்சயமாக அவருடைய குறை தீர்க்கப்பட, பொள்ளாச்சி, தொழிற்சாலை ஒன்றை விரைவிலே பெறும் என்பதை நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மயிலாடுதுறை திரு. எஸ். ராஜகுமார், ராஜபாளையம் திருமதி மு. சந்திரா ஆகியோர் அளித்துள்ள கோரிக்கைகளும் கவனிக்கப்படும் என்பதை நான் தெரிவித்து, 285 வெட்டுத் தீர்மானங்களுக்கும் விளக்கம் அளிக்கவில்லையே என்று யாரும் என்மீது வருத்தப்படாமல், பொறுக்கியெடுத்து, சிலபல வெட்டுத்



தீர்மானங்களுக்குமாத்திரமே விளக்கம் அளித்திருக்கின்றவகையிலே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

பிறகு, பொதுவாக, இந்தத் தொழில் மானியத்தைப்பற்றிப் பேசும்போது, நமது நாட்டினுடைய சமுதாயப் பொருளாதார வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும், வேளாண்மை எந்த அளவுக்கு முக்கியமோ, அந்த அளவுக்கு இணையான முக்கியத்துவம் தொழிலுக்கும் உண்டு. வேளாண்மை உற்பத்தியும், தொழில் உற்பத்தியும், கைகோர்த்துச் செல்வதற்கான பாதையே, இந்தியத் திருநாடு அகிலத்தின் முன்னிலை வரிசையில் இடம்பெற பண்பட்ட பாதை ஆகும்.

18–வது நூற்றாண்டிலேயிருந்து ஏற்பட்டுவரும் தொழில் புரட்சி, புதிய புதிய தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளுக்கு வழிவகுத்துக் கொடுத்தது. அதனால், பொருட்களை உற்பத்திச் செய்யும் பெரிய பெரிய தொழிற்சாலைகள் தோன்றின. இதன் விளைவாக, உலகம் முழுவதும் சமூகப் பொருளாதார நிலைகளில் அதிசயிக்கத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன. இத்தகைய முற்போக்கான மாற்றங்களால், ஊரகப் பகுதியிலேயிருந்து வாழ்வாதாரத்திற்கான சிறந்த வாய்ப்புகளைத் தேடி, நகர்ப் பகுதிகளுக்கு ஏற்பட்ட குடிபெயர்ப்புகள், நகர்ப் பகுதிகளில் மக்கள் தொகை பெருக்கத்திற்குக் காரணமாயின. நிலக்கரி, பெட்ரோல், வாயு போன்ற எரிபொருள்கள், தொழில் வளர்ச்சியிலே உந்துதல் சக்திகளாக விளங்கிவருகின்றன. இந்தியத் திருநாட்டின் விடுதலைக்குப் பின்னர், 1956–ல், மத்திய அரசு வகுத்தளித்த தொழில் கொள்கை, தொழில் புரட்சியின் நன்மைகளை முழுவதுமாக உள்வாங்கிக் கொண்டிருந்தது. தொடக்க நிலையில், இரும்பு, கனரகத் தொழில்கள், மின் உற்பத்தி ஆகிய துறைகளில் வளர்ச்சியை உருவாக்குவதே குறிக்கோளாக இருந்தது.

அதன் பிறகு தகவல் தொழில்நுட்பம் மிகப் பெரிய வளர்ச்சியை எட்டியது. மனித இயக்கத்தில், அனைத்து முனைகளிலும் கணினி நுழைந்ததால், தகவல் தொழில்நுட்பப் புரட்சி, தொழில் துறையில் முன் எப்போதும் இல்லாத அளவிற்குப் பல்வேறு வகையான மாற்றங்களை உருவாக்கியது. அறிவுசார்ந்த கணினிப் புரட்சி, மனித வரலாற்றில், புதிய, ஆனால் புத்துணர்ச்சி மிகுந்த அத்தியாயத்தைத் தொடங்கி வைத்தது. நமது சமுதாய, பொருளாதார நடவடிக்கைகள் அனைத்திலும் அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் கணினி ஊடுருவி, யாரும் மறுக்கமுடியாத தாக்கத்தை உண்டாக்கி வருகிறது. இதனால், உலகமே சுருங்கி, உலகம் சேர்த்துக் குவித்துவரும் அறிவை, கடைக்கோடியிலே உள்ள கிராமத்தில் இருந்துகொண்டே பெற்று, உயரும் உன்னதமான வாய்ப்பு இன்றைய தலைமுறைக்கு ஏற்பட்டிருப்பது பெருமைப்படத்தக்க முன்னேற்றமாகும்.

*பிற்பகல் 1–40*

தொடர்ந்து நிகழ்ந்துவரும் இந்தப் புரட்சியின் அடுத்த கட்டமாக, உயிரி இயல் தொழில்நுட்பப் புரட்சி—Bio-technology Revolution—ஏற்படும் என்று அறிவியல் அறிஞர்கள் கணித்திருக்கிறார்கள். உயிரி இயல் தொழில்நுட்பப் புரட்சி முழுமையடையும்போது, மானுட வாழ்க்கைமுறைகளில் பெரும் மாற்றங்கள் ஏற்படும். வாழ்க்கைத் தரத்தில், வாழும் வயது பெருகுவதில், நோய்க் கட்டுப்பாட்டில், உணவுப் பொருள் உற்பத்தியில், உயிரி இயல் தொழில்நுட்பப் புரட்சி, பெரும் பங்காற்றும் என்பது, நிபுணர்களின் எதிர்பார்ப்பு.

தொழிற்சாலைகள் உருவாக, தொழில் வளம் பெருக, முதன்மையாகத் தேவைப்படும் நிலமும், அதனையொட்டி அடிப்படை கட்டமைப்பு வசதியும் ஆகும். இதனைக் கருத்திலேகொண்டுதான் தி.மு.க. ஆட்சியில், 1971 ஆம் ஆண்டு இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, தமிழகத்திலேதான் அன்றைக்கு 'சிப்காட்'—State Industries Promotion Corporation of Tamil Nadu—என்ற ஒரு நிறுவனத்தை உருவாக்கினோம். இன்றைக்குப் பேசப்படுகிற 'சிப்காட்' இருக்கிறதே, தமிழகமெங்கும் இன்றைக்கு வளர்ந்திருக்கின்ற தொழில் வளத்தை உருவாக்கி இருக்கிறதே, அந்த 'சிப்காட்',-யார் முதலில் கொண்டு வந்தார்கள், யார் பின்னால் கொண்டு வந்தார்கள் என்று தொழிற்சாலைகளுக்கெல்லாம் இன்றைக்கு நாம் சண்டை போட்டுக்கொள்கிறோமே, நான் அவர்களுக்குச் சொல்லுகின்றேன், அதற்கு முன்பு 'சிப்காட்' போன்ற பெரிய அளவிலே இல்லாத சிறு சிறு அமைப்புகள், park-கள், பூங்காக்கள் இருந்தாலும்கூட, பெரிய அளவில் இராணிப்பேட்டையிலும், ஓசூரிலும், 'சிப்காட்' என்ற இந்த நிறுவனத்தை (மேசையைத் தட்டும் ஒலி) அமைத்தது, 1971 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் என்பதை நான் மிகுந்த அடக்கத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

'சிப்காட்' நிறுவனம், தொழில் வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படை வசதிகள் அனைத்தையும், ஒரேயிடத்தில் வழங்கக்கூடிய தொழில் வளாகங்களை அமைத்தது. அப்படி அமைக்கப்பட்ட இடங்களிலே ஒன்றுதான், இராணிப்பேட்டை என்பதை நீங்கள் அறிவீர்கள். இராணிப்பேட்டைதான் தமிழ்நாட்டில் அமைந்த முதல் தொழில் வளாகம் என்பதை நான் எடுத்துக்கூற விரும்புகின்றேன். எப்படி திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு தமிழ்நாட்டில் சிறுதொழில் வளர்ச்சிக்கு, காமராஜர் போன்ற பெருந்தலைவர்களுடைய ஆட்சியில், பக்தவச்சலம் போன்றவர்களுடைய ஆட்சியில், சுப்பிரமணியம் போன்றவர்கள நடத்திய ஆட்சியில், கிண்டி



தொழிற்பேட்டையும், அம்பத்தூர் தொழிற்பேட்டையும், ஆதாரத் தளங்களாக அமைந்தனவோ, அதைப்போல, பெரிய தொழில் வளர்ச்சிக்குக் கழக ஆட்சியில் அமைக்கப்பட்ட 'சிப்காட்' வளாகங்களே, ஆரம்பத் தளங்களாக அமைந்தன என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள். இராணிப்பேட்டையிலும், ஓசூரிலும், 'சிப்காட்' தொழில் வளாகங்கள் நிறுவப்பட்டன. இராணிப்பேட்டையிலே, 729 ஏக்கர் பரப்பளவில், தொழில் வளாகம் அமைக்கப்பட்டு, அதிலே 168 கோடி ரூபாய் முதலீட்டில், 107 புதிய தொழில்கள் தொடங்கப்பட்டன. அதற்கு அடுத்து, ஓசூரில் 1236 ஏக்கர் நிலப்பரப்பில் தமிழ்நாட்டில் இரண்டாவது தொழில் வளாகம், கழக அரசால் அமைக்கப்பட்டது. அதில் 500 கோடி ரூபாய் முதலீட்டில் 186 தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டன.

*பிற்பகல் 1–45*

மூன்றாம் கட்டமாக, 1997-ல் இராணிப்பேட்டை 'சிப்காட்' தொழில் வளாகத்திற்கு 496 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, மேலும் பல தொழிற்சாலைகள் அமைவதற்கு அந்த வளாகம் விரிவாக்கம் செய்யப்பட்டது. 1997 ஆம் ஆண்டு வந்த கழக ஆட்சியில், ஓசூர் சிப்காட் வளாகத்திற்கு மேலும் 240 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, அதில் 64 புதிய தொழில்கள் தொடங்கப்பட்டன. ஏறத்தாழ 6,000 இளைஞர்கள் வேலைவாய்ப்பைப் பெற்றார்கள். இப்படி, தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்காக, இராணிப்பேட்டை, ஓசூர் ஆகிய இடங்களில் மட்டுமல்லாமல், கழக ஆட்சியில், கடலூரில், 1,198 ஏக்கர் நிலப்பரப்பில், 1997 ஆம் ஆண்டில் ஒரு தொழில் வளாகமும், இருங்காட்டுக்கோட்டையில் 1,830 ஏக்கர் நிலப்பரப்பில், 1996 ஆம் ஆண்டில் ஒரு தொழில் வளாகமும், தூத்துக்குடியில் 437 ஏக்கர் நிலப்பாப்பில், 1996 ஆம் ஆண்டில் ஒரு தொழில் வளாகமும், ஸ்ரீபெரும்புதூரில் 2,469 ஏக்கர் நிலப்பரப்பில், 1997 ஆம் ஆண்டில் ஒரு தொழில் வளாகமும், ஓரகடத்தில் 2,043 ஏக்கர் நிலப்பரப்பில், 1997 ஆம் ஆண்டில் ஒரு தொழில் வளாகமும், சிறுசேரியில் 756 ஏக்கர் நிலப்பரப்பில், 1998 ஆம் ஆண்டில் ஒரு தொழில் வளாகமும் எனப் பல்வேறு இடங்களில் 'சிப்காட்' தொழில் வளாகங்கள் அமைக்கப்பட்டன. என்ன தொழில், யாரால் வந்தது என்பதல்ல; அவை எல்லாம் வந்து இறங்குவதற்கு ஏற்ற இடங்கள், யாரால், எப்பொழுது, எந்த ஆட்சியால் அமைக்கப்பட்டன என்பதை மறந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் நான் இதைச் சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு கழக ஆட்சிக் காலங்களில், தமிழ்நாட்டில் தொய்வில்லாத தொழில் வளர்ச்சி உருவாக்கப்பட்டு, பொருளாதார வளர்ச்சிக்கு

அடிகோலியதோடு, பெரும் அளவிலான வேலைவாய்ப்புகளும் உருவாக்கப்பட்டன. உதாரணத்திற்கு ஒன்றிரண்டைக் கூறவேண்டுமேயானால், இருங்காட்டுக்கோட்டையிலே, JBM Sung Woo Ltd. தொழிற்சாலை; JKM Gem தொழிற்சாலை; Orchid Chemicals மற்றும் Pharmaceuticals தொழிற்சாலை; Citizen Watch தொழிற்சாலை, Sam Greaves Limited நிறுவனத்தின் Tractor தொழிற்சாலை; GMR Vasavi–யின் தனியார் மின் உற்பத்தித் திட்டம்; Matsushita Airconditioner தொழிற்சாலை; Reynolds Ball Pen தொழிற்சாலை; Sembawang Shriram பொருள் விநியோகத் தொழிற்சாலை; Markcube India காகித அட்டை இயந்திரம் தயாரிக்கும் தொழிற்சாலை; Optic Fibre Telecom Cable தொழிற்சாலை. அக்டோபர் மாதத்தில், 2000 ஆம் ஆண்டு, 'Centre for Monitoring Indian Economy'—அதாவது, 'இந்தியப் பொருளாதார கண்காணிப்பு மையம்', அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளைப்பற்றி வெளியிட்ட அறிக்கை ஒன்றில், தமிழ்நாடு 145.62 குறியீட்டு எண்களைப் பெற்று முதல் நிலையிலே இருந்தது; கர்நாடகம் 106.12 குறியீட்டு எண்; ஆந்திரம் 104.01 குறியீட்டு எண். அதைப்போல, அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளில் மாநகரங்களுக்கிடையேயான மதிப்பீட்டில், அன்றைக்கு 2000 ஆம் வருடத்திலே, சென்னை மாநகரம் 472.48 குறியீட்டு எண்களைப் பெற்று, முதல் நிலையிலே இருந்தது; ஹைதராபாத் 153 குறியீட்டு எண்; பெங்களூர் 100.28 குறியீட்டு எண் பெற்றிருந்தன.

1989–1991 காலக்கட்டத்தில், தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்குக் கழக அரசு அளித்த உறுதியான ஊக்கத்தின் காரணமாக, தமிழ்நாடு, இந்தியாவில் 3–ஆம் இடத்தை அடைந்திருந்தது. 1991–1996 காலக்கட்டத்தில் நடைபெற்ற ஆட்சியின்போது, தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் பின்தங்கி, 5–ஆம் இடத்திற்கு இறங்கி இருந்தது. இதை நான், யாரையும் தாழ்த்துவதற்காகச் சொல்லவில்லை. தொழில் வளர்ச்சியினுடைய அன்றைய நிலவரத்தை எடுத்துக் கூறுவதற்காகக் குறிப்பிடுகின்றேன். எல்லோரும் சேர்ந்துதான் தொழில் வளத்தைத் தமிழகத்திலே பெருக்க வேண்டும் என்ற அந்த ஊக்கத்தை, உற்சாகத்தை, ஆர்வத்தை, அக்கறையைப் பெறவேண்டுமென்பதற்காகச் சொல்லுகின்றேன்.

பிற்பகல் 1–50

1994–1995–இல் 8.7 சதவிகிதம் அளவுக்கு இருந்த தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி, கழக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளின் காரணமாக, 1999–2000 ஆம் ஆண்டில் 15.02 சதவிகிதம் அளவுக்கு உயர்ந்தது என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். கழக அரசு,



தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் காட்டிய அக்கறைக்கும், உயர்ந்த செயல்பாட்டிற்கும் அடையாளமாக ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், இங்கே திரு. அப்பாவு அவர்கள் குறிப்பிட்டதைப்போல, நம்முடைய கழகத்தின் சார்பிலே உரையாற்றிய திரு. ரங்கநாதன் குறிப்பிட்டதைப்போல, 1998 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட, ஒரே விண்ணப்பப் படிவத்தை உள்ளடக்கிய, ஒற்றைச் சாளர முறையை– Single Window System - இதை முதன்முதலாக அறிமுகப்படுத்தியதே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு முன்பெல்லாம், தமிழ்நாட்டிலே ஒரு தொழிலைத் தொடங்கவேண்டுமென்றால், உள்ளாட்சி மன்றத்தினுடைய அனுமதி, மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தினிடமிருந்து சுற்றுச்சூழலுக்கான அனுமதி, நில ஒதுக்கீடு பெற அனுமதி, நில வகைப்பாட்டை மாற்ற அனுமதி, நகர்ப்புற நில உச்சவரம்பிலேயிருந்து விலக்குபெற அனுமதி, தேவையான தண்ணீருக்கான அனுமதி, மின்சாரத்திற்கான அனுமதி, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பெற வேண்டிய அனுமதி என்று 8 வெவ்வேறு துறைகளுடைய அனுமதியைப் பெற வேண்டுமென்ற நிலைமை இருந்தது. இந்த எட்டையும் ஒழித்துவிட்டு, ஒரே அனுமதி பெற்றால் போதும், அதிலே எல்லாம் அடங்கும் என்கின்ற அந்த ஒற்றைச் சாளர முறையைக் கொண்டுவந்ததே, தொழில் துறையிலே பெரிய முன்னேற்றத்திற்குக் காரணமான திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இப்பொழுது அந்த நிலைமைகள் எல்லாம் இல்லை. புதிதாக நாங்கள் இந்த ஆட்சிப் பொறுப்பேற்ற நேரத்தில், அந்த ஒற்றைச் சாளர முறையினுடைய பலன்கள் எதுவும் இல்லாத ஒரு சூழ்நிலை. இது எப்படி இருந்தது என்றால், பரமபத சோபானப் படத்தில், ஏணியிலே ஏறிய காட்சியும், பாம்பின் தலையிலே மாட்டிய காட்சியுமாக, பரமபத சோபானப் படமாகத் தமிழ்நாடு ஆகிவிட்டது. மறுபடியும் தாயம் போட்டு, ஏணியிலே ஏற வேண்டும், ஏறுவோம் என்ற நம்பிக்கை நமக்கு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

இப்போது அறிவிப்புகள். நீண்டநேரம் பேசப் போவதில்லை. இறுதியாக, சில அறிவிப்புகளோடு முடிக்க விரும்புகின்றேன். அறிவிப்புகள்; தொழில் நயமிக்க அணுகுமுறையும், தொழில் முன்னேற்றத்திலே ஈடுபாடும் கொண்டுள்ள தி.மு.க. அரசின்மீது நம்பிக்கை வைத்து, தொழில் முனைவோர் பேரார்வத்தோடு, தமிழகத்திற்குக் கொண்டுவரக் கருதியுள்ள முதலீடுகளை வெளிப்படையான முறையில் வரவேற்று, அவர்களுக்குத் தேவையான

தவிகளையும், சலுகைகளையும் காலதாமதமின்றி உரிய நேரத்தில் ழங்கி, மாநிலத் தொழில் வளர்ச்சிக்கு மீண்டும் வழி மைத்துக்கொடுக்கும்வகையில், தொழில் துறை, தகவல் தாழில்நுட்பத் துறை ஆகியவை தொடர்பான முக்கியமான சில றிவிப்புகளை இப்பொழுது வெளியிட விரும்புகிறேன்.

'சிப்காட்' நிறுவனத்தின திருப்பெரும்புதூர் மற்றும் ஒரகடம் தாழில் பூங்காக்கள், தொழில் மையங்களாக உருவெடுத்துள்ளன. னந்தோறும், தமிழகத்தில் தற்போது புதிய தொழில் முதலீட்டுக்கான ட்டங்கள் வந்தவண்ணம் உள்ளன. புதிய முதலீடுகளையேற்று, புதிய தாழிற்சாலைகளை அமைப்பதற்குத் தேவைப்படும் நிலங்களுக்கான காரிக்கைகள் அதிகரித்து வருவதால், திருப்பெரும்புதூர் மற்றும் ரகடம் தொழில் பூங்காக்களை விரிவாக்கம் செய்ய இந்த அரசு டிவு செய்துள்ளது. இதற்காக, மேலும் 2,000 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் சய்யப்படவுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மசையைத் தட்டும் ஒலி)

ஹுண்டாய், ஃபோர்டு, மிட்சுபிஷி, பி.எம்.டபிள்யூ, அசோக் பலண்ட் போன்ற பெரும் மோட்டார் உற்பத்தி நிறுவனங்கள், மிழகத்தில் தொழிற்சாலைகள் அமைத்ததன் காரணமாக—இதனை ார் யார் அமைத்தது, எந்த ஆட்சியில் அமைத்தது என்று சால்லவில்லை; இந்த நிறுவனங்கள் தமிழகத்திலே மோட்டார் பத்தி நிறுவனங்களை ஏராளமாக அமைத்ததன் காரணமாக— சன்னை, "ஆசியாவின் டெட்ராய்ட்" (Detroit) என்று ர்ணிக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவின் மாட்டார் உதிரி பாகங்கள் உற்பத்தியில், 35 சதவிகிதம், சென்னையில் பத்தியாகின்றன. இந்த உதிரி பாகங்கள் உற்பத்தியாளர்களில் ரும், பெரும் ஏற்றுமதியாளர்களாகவும் உள்ளனர். இத்துறையில் ய முதலீடுகளின்மூலமாக ஏற்படக்கூடிய தேவையை நிறைவுசெய்ய, கடம் 'சிப்காட்' தொழில் பூங்காவில் மோட்டார் சிறப்புப் பாருளாதார மண்டலம் (Automotive Special Economic Zone) படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மிகப் பெரிய சுற்றுலாத் தலமாகவும், கோயில் நகரமாகவும் ாங்குகின்ற மதுரையில், நீண்டகாலமாக பல தொழிற்சாலைகள் இயங்கி ுகின்றன. அவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல், தென் வட்டங்களின் தொழில் வளர்ச்சிக்குப் புத்துயிரூட்டும்வகையில், மதுரை ுகில் 'சிப்காட்' நிறுவனம்மூலமாக, ஒரு புதிய தொழில் பூங்கா மைக்கப்படவுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

தோல் பதப்படுத்துதல் மற்றும் தோல் பொருள் உற்பத்தி, ழகத்தின் தொழில் துறையில் நீண்டகாலமாக ஒரு முக்கிய பங்கு



வகித்து வருகிறது. இத்துறையால் ஏற்படும் சுற்றுச்சூழல் மாசினைச் சரி செய்யும்வகையில், ரூபாய் 115 கோடி மதிப்பில், 11 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் ரிவெர்ஸ் ஆஸ்மாசிஸ் (Reverse Osmosis) சாதனங்களை அமைக்க, நிதியுதவி கோரி, மாண்புமிகு பிரதமரிடம் நான் நேரடியாக வேண்டுகோள் விடுத்துள்ளேன்.

பிற்பகல் 1–55

தோல் பதப்படுத்தும் மற்றும் தோல் பொருள் உற்பத்தி வளாகம் ஒன்று அமைக்க, சென்னை அருகில் 'சிப்காட்' நிறுவனம் மூலமாக 250 ஏக்கர் பரப்பில் ஒரு புதிய தோல் சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

கரூர் மாவட்டம், புகளூரில் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தில் தற்போது ஆண்டு ஒன்றுக்கு 2,30,000 மெட்ரிக் டன் காகிதம் உற்பத்தியாகி வருகிறது. இந்த உற்பத்தியை அதிகரிக்க, தற்போது காகிதம் தயாரிக்கும் இயந்திரத்தை நவீனப்படுத்தி விரிவாக்கம் செய்யும் திட்டத்தை, மொத்தம் 650 கோடி ரூபாயில் செயல்படுத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் ஆண்டொன்றிற்கு மேலும் கூடுதலாக, 1,20,000 மெட்ரிக் டன் உற்பத்தித் திறன் கொண்ட ஒரு புதிய அதி நவீன தொழில்நுட்பத்துடனான காகித இயந்திரம் அமைக்கப்படவுள்ளது. மேலும், இந்த நிறுவனத்தின் சார்பில் ரூபாய் 30 கோடி முதலீட்டில், ஐந்து புதிய காற்றாலைகளை நிறுவி, 6.25 மெகாவாட் கூடுதல் மின்சாரம் உற்பத்தி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

சர்க்கரை ஆலைகளில் இணை மின் உற்பத்தி (co-generation) செய்வதன்மூலம் அந்த ஆலைகளின் செயல்திறன் அதிகரிப்பதோடு, கூடுதல் வருவாய் ஈட்டுவதற்கும் உதவுகிறது. கள்ளக்குறிச்சி இரண்டாவது கூட்டுறவு சர்க்கரை ஆலையில் ரூ.13.50 கோடி செலவில் 6 மெகாவாட் திறன் கொண்ட ஒரு இணை மின் நிலையம் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

சேலம் மற்றும் அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில், 6 கோடி ரூபாய் செலவில் எத்தனால் எனும் எரிபொருள் உற்பத்தி நிலையம் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

பெரம்பலூர் மாவட்டம், தொழில் துறையில் பின்தங்கிய மாவட்டம் என்பதைக் கருத்தில்கொண்டு, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின்மூலம் (டிட்கோ) இம்மாவட்டத்தில் ஒருங்கிணைந்த தொழிற் பூங்காவோடு சிறப்புப் பொருளாதார மண்டலம்

ஒன்றினையும் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம், இந்தப் பகுதிக்குப் படிப்படியாக ரூபாய் 5,000 கோடி அளவிலான முதலீடும், (மேசையைத் தட்டும் ஒலி) ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்க வழிவகை செய்யப்படும்.

தமிழகத்திலே உள்ள இயற்கை எரிவாயு, பெரும்பகுதி காவேரிப் படுகை பகுதியிலே காணப்படுகிறது. புதிய ஆய்வுத் தொழில்நுட்பத்தின்மூலமாக, அந்த இருப்பைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவர இயலும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆந்திர மாநிலத்திலே உள்ள கிருஷ்ணா கோதாவரிப் படுகையில் இயற்கை எரிவாயு இருப்பு கண்டறியப்பட்டுள்ளது. தமிழகத்தின் எரிசக்திப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக இந்த இயற்கை எரிவாயுவைப் பயன்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

இக்குறிக்கோளை அடையும்வகையில், கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு ஆய்வு, உற்பத்தி மற்றும் விநியோகத்திற்கான புதிய இணையத் துறை நிறுவனத்தை, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் அமைக்கும். இப்புதிய நிறுவனம், தமிழகம் முழுவதும் தேவையான குழாய் கட்டமைப்பை அமைத்து, இயற்கை எரிவாயு விநியோகத் தொகுப்பை (Natural gas distribution network) உருவாக்கும். அரசின் இப்புதிய முயற்சி, இம்மாநிலத்தின் எரிசக்திப் பாதுகாப்பை மேம்படுத்துவதோடு, தமிழகத்தின் தொடர்ச்சியான பொருளாதார வளர்ச்சிக்கும், மாநில அரசின் வருவாய்ப் பெருக்கத்திற்கும் வழிவகுக்கும் என்பது திண்ணம். (மேசையைத் தட்டும் ஒலி)

தற்போது 10 கிலோ மீட்டர் தூரத்திற்குள் உள்ள, கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளுக்குக் கரும்பு எடுத்துச் செல்லும் லாரி வாடகையைக் கரும்பு விவசாயிகளே செலுத்துகின்றார்கள். பத்து கிலோ மீட்டர் தூரத்திற்கு அதிகமாக உள்ள பகுதிகளுக்கான லாரி வாடகையை இந்த ஆலைகளே ஏற்றுக்கொள்கின்றன. தேர்தல் அறிக்கையிலே கொடுக்கப்பட்டுள்ள மற்றொரு வாக்குறுதியை நிறைவேற்றும்வண்ணம், கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளுக்கு, பத்து கிலோ மீட்டர் தூரத்திற்குள்ளிருந்து கொண்டு வரப்படும் கரும்புக்கான லாரி வாடகையை, வரும் அரைவைப் பருவத்திலிருந்து சர்க்கரை ஆலைகளே ஏற்றுக்கொள்ளும். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இதனால் ஒரு ஆண்டுக்குக் கூடுதலாக 40 கோடி ரூபாய் செலவாகும்.

தகவல் தொழில்நுட்பத் துறையில் இதுவரை ஏற்பட்டுள்ள பலன்களையெல்லாம் ஒன்று திரட்டி, அத்துறை மேலும் வேகமாகப்



பயனுள்ளவகையில் வளர்ச்சியடைய, புதிய தகவல் தொழில்நுட்பக் கொள்கை ஒன்று வகுத்து அறிவிக்கப்படும்.

4–7–2000 அன்று, 'டைடல்' தகவல் தொழில்நுட்பப் பூங்கா தொடங்கி வைக்கப்பட்டபோது அறிவிக்கப்பட்டபடியும், தொடர்ந்து தேர்தல் அறிக்கையிலும், நிதிநிலை அறிக்கையிலும் குறிப்பிட்டுள்ளபடியும், இரண்டாவது 'டைடல்' தகவல் தொழில்நுட்பப் பூங்கா ஒன்று, சென்னை தரமணியில் நிறுவப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–00

தமிழக அரசும், மத்திய அரசின் மென்பொருள் தொழில்நுட்பப் தகவல் பூங்காக்கள் நிறுவனமும், தனியார் துறையும் இணைந்து, கோவையில் தொழில்நுட்பப் பூங்கா ஒன்றை நிறுவும். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னையில் மட்டும் பெரிதும் மையம் கொண்டுள்ள தகவல் தொழில்நுட்பப் புரட்சி, தமிழ்நாட்டில் உள்ள மற்ற நகரங்களிலும் பரவி, பலனளிக்கும்வகையில் மதுரை, திருச்சி, சேலம், திருநெல்வேலி ஆகிய நகரங்களில் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் உருவாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மத்திய அரசு அறிவித்துள்ள, உலகத் தரத்திலான தகவல் தொழில்நுட்பம், வடிவமைப்பு, உற்பத்தி ஆகியவற்றுக்கான இந்தியக் கல்வி நிறுவனம் சென்னைக்கு அருகே நிறுவப்படும்.

தகவல் தொழில்நுட்பத் துறையில் வெகுவான முதலீடுகளை ஈர்ப்பதற்கான வழிகளை வகுத்துச் செயல்படுத்த, முன்னர் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அமைக்கப்பட்டு, இடைக்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படாமல் விடப்பட்ட தகவல் தொழில்நுட்பப் பணிமுனைப்புக் குழு (I.T. Task Force) ஒன்று மீண்டும் உருவாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மின்னணு ஆளுமை (e-governance), நகரங்களில் உள்ள மக்களைப போலவே கிராமங்களில் உள்ள மக்களுக்கும் பயன்படும்வகையில் வடிவமைக்கப்பட்டு, விரிவாக்கம் செய்யப்பட்டு, தமிழகம் ஒரு முன்னோடி மின்னணு ஆளுமை மாநிலமாகத் திகழும்வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

தற்பொழுது சென்னையில் வாடகைக் கட்டடத்தில் இயங்கும் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்திற்கென தனியே சொந்தமாகக் கட்டடம் அமைவதற்கேற்ற நிலமும், ஒரு கோடி ரூபாயும் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

முன்னர் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தொடங்கப்பட்டு, நான்கு வழித்தடங்கள் கொண்ட சாலையாக அமைக்கப்பட்டு, இடையில் தொய்வு ஏற்பட்ட, தகவல் தொழில்நுட்ப விரைவுச் சாலை (I.T. Expressway) திட்டத்தின் முதற்கட்டமாக, பழைய மாமல்லபுரம் சாலையில் தாமணி முதல் சிறுசேரி வரை உள்ள சாலையை, உலகத் தரம் வாய்ந்த ஆறு வழித்தடங்கள் கொண்ட சாலையாக மேம்படுத்தும் பணிகள் (மேசையைத் தட்டும் ஒலி) 205 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. இச்சாலையினை மேம்படுத்தும்வகையில், இரண்டாம் கட்டமாக சிறுசேரி முதல் மாமல்லபுரம் வரையுள்ள சுமார் 25 கிலோ மீட்டர் நீள சாலையை, ஆறு வழித்தடங்கள் கொண்ட சாலையாக மேம்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

காஞ்சிபுரம் மாவட்டத்தில்,. திருப்பெரும்புதூர் மற்றும் ஓரகடம் பகுதிகள் முக்கியமான தொழில் மையமாக உருவாகி வருகிறது. அதனால், தொழிற்சாலைகளின் வசதிக்காக சாலைக் கட்டமைப்பினை மேம்படுத்துவது மிகவும் அவசியமாகிறது. எனவே, 24 கிலோ மீட்டர் நீள சிங்கப்பெருமாள் கோவில்–திருப்பெரும்புதூர் சாலை மற்றும் 20 கிலோ மீட்டர் நீள வண்டலூர்-வாலாஜாபாத் சாலை ஆகிய சாலைகளின் முக்கிய பகுதிகளை ஆறு வழித்தடச் சாலையாகவும், பிற பகுதிகளை நான்கு வழித்தடச் சாலையாகவும், சுமார் 300 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தும் திட்டத்தையும் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த இனிய அறிவிப்புகளோடு, நீங்கள் அளித்த அருமையான கருத்துகள், அவை எதிர்க் கருத்துகளானாலும், ஆதரவுக் கருத்துகளானாலும், அனைத்தையும் ஒன்றாகக் கருதி, அவற்றின்படி தொழில் துறை மானியத்திலே நாங்கள் எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை எடுப்போம் என்று கூறி, இந்த அளவில் என் உரையை நிறைவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார், சொல்லுங்கள்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை விளக்கக் குறிப்பில் எண்ணூர், கிருஷ்ணகிரி, நாங்குநேரி பகுதிகளில் சிறப்புப் பொருளாதார மையங்களை ஏற்படுத்தி, 2 ஆயிரம் கோடி ரூபாய் செலவில், எப்படி நீங்கள் இந்த நிதியைத் திரட்டப் போகிறீர்கள் என்றுதான் கேட்டேன். எனக்கு அந்த விவரம் தெரியும்.



அதாவது share மூலமாகப் போவது; ஆனால், அதைக் கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிட்டிருக்கலாம். அது குறிப்பிடப்படவில்லை. எனவே அதைக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கின்றீர்கள். அதேபோன்று எண்ணூர் பகுதியிலே வன்பொருள், மென்பொருள் (hardware, software) போன்ற நிறுவனங்கள் அமைக்கப்படவேண்டும் என்பது முன்பே, நம்முடைய Secretary–க்கு எல்லாம்கூட தெரியும். ஒரு கொள்கை முடிவு எடுக்கப்பட்டது. அது சிறப்புப் பொருளாதார மண்டலமாக அன்றைக்கு மத்திய அரசிலிருந்து 2006 ஆம் ஆண்டு ஆட்சியின் இறுதி வாக்கிலே கிடைக்கப் பெற்றதன் காரணமாக, அது ஆரம்பிக்கப்படவில்லை. எனவே அது ஆரம்பிக்கப்படும் என்ற கருத்தைச் சொன்னார்கள். அதில் மாண்புமிகு முதலமைச்சர்கூட, 'அம்மா' என்று குறிப்பிட்டார்கள். அதற்கும் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*பிற்பகல் 2–05*

அதேபோன்று, முன்பு சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் கணினியைப் பயன்படுத்துவதற்கு, அலுவலகங்களில் கணினிகள், சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து கொடுக்கப்பட்டது. அதைச் சில சட்டமன்ற உறுப்பினர்கள்கூட அன்றைக்குக் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். கணினி கொடுப்பதற்குப் பதிலாக, Laptop computer —மடியமர் கணினி—கொடுத்தால் வசதியாக இருக்கும் என்ற கருத்தைச் சொன்னார்கள். அன்றைக்கு, மடியமர் கணினி கொடுக்கப்பட்டது. எனவே, நம்முடைய 'எல்காட்' மூலமாகக் கொடுக்கப்படுகின்ற அந்தக் கணினிக்குப் பதிலாக, Laptop கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, மற்றபடி மத்திய அரசோடு நீங்கள் ஒரு நல்ல உறவில் இருப்பதாக அறிகிறோம். உங்களுடைய ஆட்சி அங்கே நடந்து கொண்டிருக்கிறது. எனவே இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தி, மத்திய அரசினுடைய முதலீடுகள் எதுவுமே தமிழ்நாட்டில் வரவில்லை என்ற ஒரு ஏமாற்றம்தான் இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறது என்பதைக் கூறி, அமர்கின்றேன். நன்றி வணக்கம்.

## (அ) கோரிக்கை எண் 27 – தொழில் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உட்காருங்கள். மானியக் கோரிக்கை எண் 27 – தொழில் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அருள் அன்பரசு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் எஸ். சேகர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. து. செல்வராஜ், இருக்கையில் இல்லை. திரு. து. செல்வராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு.ப. வேலுமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வீ. ராமநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எல். இளவழகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி.க. ராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. தி. வேல்முருகன், இருக்கையில் இல்லை. திரு. தி. வேல்முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. மாரிமுத்து அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. உலகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகவேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி கே. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. என்.ஆர். ரங்கராஜன், இருக்கையில் இல்லை. திரு. என்.ஆர். ரங்கராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ். ஜெயபால்.

**திரு. எஸ். ஜெயபால்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். ஜெயபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. இராமச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பெ. கமலாம்பாள் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சொ. கருப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.டி. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. குணசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திருமதி ரா. லீமா ரோஸ்.

**திருமதி ரா. லீமா ரோஸ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ரா. லீமா ரோஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெ. கண்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இல. வேலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. பெ.சு. விஜயகுமார்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெ.சு. விஜயகுமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. பலராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. மகேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திருமதி பி. பதமாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பி. பத்மாவதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஆர்.கே. பாரதி மோகன்.

**திரு. ஆர்.கே. பாரதி மோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.கே. பாரதி மோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஞா. ஜான் ஜோசப்.

**திரு. ஞா. ஜான் ஜோசப்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞா. ஜான் ஜோசப் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. தமிழரசு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. அரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன திரும்பப்பெறப்படுகிறது. திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. காவேரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. க. இராஜேந்திரன்.

**திரு. க. இராஜேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. இராஜேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. செ. சின்னச்சாமி.

**திரு. செ. சின்னச்சாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. சின்னச்சாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. ஜெயக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன திரும்பப்பெறப்படுகிறது. திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. செந்தில் பாலாஜி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். இராசசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. மா. சந்திரகாசி.

**திரு. மா. சந்திரகாசி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மா. சந்திரகாசி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி செல்வி ராமஜெயம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. சு. குணசேகரன்

**திரு. சு. குணசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. குணசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. வீர. இளவரசன்.

**திரு. வீர. இளவரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீர. இளவரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. மா. தண்டபாணி.

**திரு. மா. தண்டபாணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மா. தண்டபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. செ.ம. வேலுசாமி.



**திரு. செ.ம. வேலுசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ.ம. வேலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. நெடுஞ்செழியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. மா. ராஜசேகரன்.

**திரு. மா. ராஜசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மா. ராஜசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி மு. சந்திரா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஆர். ஞானதாஸ்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். ஞானதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.68,00,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

## (ஆ) கோரிக்கை எண் 31 – தகவல் தொழில்நுட்பவியல் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 31-தகவல் தொழில்நுட்பவியல் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அருள் அன்பரசு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. என்.ஆர். ரங்கராஜன், இருக்கையில் இல்லை. திரு. என்.ஆர். ரங்கராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் எஸ். சேகர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. து. செல்வராஜ், இருக்கையில் இல்லை. திரு. து. செல்வராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வீ. ராமநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எல். இளவழகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. த.அ. மேகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. செந்தமிழ்ச்செல்வன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி.க. ராஜா அவர்களுடைய வெடடுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. தி. வேல்முருகன், இருக்கையில் இல்லை. திரு. தி. வேல்முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. மகேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. உலகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகவேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திருமதி பெ. கமலாம்பாள்.



**திருமதி பெ. கமலாம்பாள்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பெ. கமலாம்பாள் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. பெ.சு. விஜயகுமார்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெ.சு. விஜயகுமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. மா. சந்திரகாசி.

**திரு. மா. சந்திரகாசி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மா. சந்திரகாசி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. செ. பொன்னுதுரை.

**திரு. செ. பொன்னுதுரை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. பொன்னுதுரை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு.ப. வேலுமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. செந்தில் பாலாஜி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. பலராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. அரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பி. பத்மாவதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. து. ரவிக்குமார்.

**திரு. து. ரவிக்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. து. ரவிக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. ஜெயக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஏ.கே. போஸ்.

**திரு. ஏ.கே. போஸ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.கே. போஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சொ. கருப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. டி. இராமச்சந்திரன்.



**திரு. டி. இராமச்சந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. இராமச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. காவேரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இல. வேலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. செ.ம. வேலுசாமி.

**திரு. செ.ம. வேலுசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ.ம. வேலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. கோவிந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.784,42,93,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (24–8–2006) வியாழக்கிழமை காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–07 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

–ஏதுமில்லை–

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

82. மானியக் கோரிக்கை எண் 27 – தொழில் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007. (தமிழ், ஆங்கிலம்)

83. தொழில் துறை பற்றிய செயலாக்கத் திட்டம், 2006–2007. (தமிழ், ஆங்கிலம்)

84. தொழில் துறை பற்றிய செயல்பாட்டு ஆய்வுரை, 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)

85. மானியக் கோரிக்கை எண் 31 – தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007. (தமிழ், ஆங்கிலம்)

86. தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய செயல் ஆய்வுரை, 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)



## இணைப்பு I

(443 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 27 – தொழில் துறை
## கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007

### முன்னுரை

தமிழ்நாடு அரசு தொலைநோக்குப் பார்வையும், தொழில் வளத்தைப் பெருக்குவதில் மிகுந்த பொறுப்புணர்வும் (Commitment) கொண்டுள்ளது. தொழில் மற்றும் கட்டமைப்புத் திட்டங்களில் பெரும் அளவிலான முதலீடுகளைச் செய்வதன்மூலம் தமிழ்நாட்டில் பொருளாதார வளர்ச்சியின் வேகத்தை விரைவுபடுத்துவது அரசின் தொலைநோக்குப் பார்வையாகும். உற்பத்தி, உற்பத்தித்திறன் (Productivity), போட்டி மற்றும் வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதில் தமிழகத்தை உயர்த்துவதே அரசின் குறிக்கோள்களாகும். மக்களின் வேலைத் திறமை மற்றும் தரத்தை உயர்த்துவதோடு மேற்கூறிய குறிக்கோள்களை நிறைவேற்ற சரியான சூழலை ஏற்படுத்துவதற்கு முன்னுரிமை த்ரப்படும். மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்குச் சேவைத் துறையின் (Service Sector) ஆற்றல் முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ளப்படும். குறிப்பிட்ட காலக்கட்டத்திற்குள் இத்தொலைநோக்குப் பார்வையைச் செயல்பாட்டிற்குக் கொண்டு வருவதே அரசின் கடமையாகும்.

2. அதற்கேற்ப 2006–07 நிதிநிலை அறிக்கையில், புதிய தொழில் கொள்கை அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இஃதன்றியும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் தொழில் முன்னேற்றத்திற்கான உயர்நிலைச் செயற் குழு (Industrial Task Force) ஒன்று அமைக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த உயர்நிலைச் செயற் குழு, புதிய முயற்சிகளை நோக்கிக் கவனம் செலுத்துவதோடு, தற்போதுள்ள தொழிற்சாலைகளின் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும் கவனம் செலுத்தும்.

3. புதிய முதலீடுகளை ஈர்ப்பதில் சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகள் முக்கிய மையமாகத் திகழ்கின்றன. இருப்பினும், கட்டமைப்பு வசதிகளில் காணப்படும் இடைவெளிகளைக் கவனத்தில்கொள்ள வேண்டியுள்ளது.

கட்டமைப்பு வசதித் திட்டங்களைத் தெரிவு செய்வதற்கும், அதனைச் செயல்படுத்தி, சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளை உலக அளவிலான முதலீட்டு மையங்களாக உருவாக்குவதற்கும் ஓர் உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. மாநிலத்தின் பிற பகுதிகள்மீதும் இதற்கு இணையான கவனம் செலுத்தப்படும். இரண்டாம் நிலை நகரங்களில் (Tier II Cities) தொழில் மையங்களும், தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களும் அமைக்கப்படும். மாநிலத்தின் பல்வேறு பகுதிகளின் வளர்ச்சித் திறன் முழுமையாகப் பயன்படுத்தப்படும். மாநிலத்தின் கிழக்குப் பகுதியிலுள்ள முந்தைய தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் அதன் அருகில் உள்ள பிற மாவட்டங்களில் கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கிடைக்கக்கூடிய வாய்ப்புகள் பெருமளவில் உள்ளன. இந்த இயற்கை வளத்தினைப் பயன்படுத்தி, மாநிலத்தின் எரிசக்தி தொடர்பான தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவும் மற்றும் இயற்கை வாயுவின் அடிப்படையில் தொழிற்சாலைகளை ஏற்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். புதிய முதலீடுகள்மூலமாக கடலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரி ஆதாரங்களைப் பயன்படுத்தித் தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்த தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். வேளாண் துறை சார்ந்த தொழில்களை மேம்படுத்தி, வலுப்படுத்துவதற்காகப் பழம் மற்றும் காய்கறிகளைப் பயன்படுத்தி வேளாண் சார்ந்த தொழில்கள் நிறுவப்படும். இவைதவிர, மாநிலத்தின் மனிதவளம்தான் உண்மையான சொத்தாகத் திகழ்கிறது. புதிய முதலீடுகளை ஊக்குவிப்பதில் மனித வள ஆற்றலைத் தக்க முறையில் பயன்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

4. தமிழ்நாடு தொழில் துறையில் எதிர்பார்க்கும் முன்னேற்றம் அடைவதற்கு இவ்வரசு மத்திய அரசின் துறைகள் மற்றும் நிதி நிறுவனங்களின் உதவியுடன் புதிய அணுகுமுறையை மேற்கொள்ளும். ஏற்கெனவே தேசிய நெடுஞ்சாலைத் துறையின் உதவியோடு சுமார் 1,000 கிலோ மீட்டருக்கும் அதிகமாக சாலைகள் நான்கு வழிப் பாதைகளாக அகலப்படுத்தப்பட்டு, வலுப்படுத்தப்பட்டுள்ளன. சென்னை விமான நிலைய விரிவாக்கம், எண்ணூர் மற்றும் தூத்துக்குடி துறைமுக விரிவாக்கம் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. நீண்ட காலக் கனவான சேதுசமுத்திரத் திட்டப் பணிகள் தொடங்கப்பட்டு, வேகமாக நடைபெற்று வருகின்றன. இந்த அரசு இம்முயற்சிகளோடு மனநிறைவடையாது, கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் முனைப்பான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.



5. இந்த அரசு முன்பு ஆட்சியில் இருந்த போது, ஒப்புதல் மற்றும் நடையில்லாச் சான்றிதழ்கள் வழங்கும் பணிகளை விரைவுபடுத்துவதற்காக ஒற்றைச் சாளர முறையினை அறிமுகப்படுத்தியது. அரசு ஆணை நிலை எண் 588, தொழில் (எம்ஐபி.I) துறை, நாள் 10–9–1998–ல் வெளியிட்ட ஆணைமூலம் பல்வேறு தடை நீக்கச் சான்றிதழ்களைப் பெறுவதற்காக ஒரு பொது விண்ணப்பப் படிவம் அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும், இது தொடர்பான முறைகள் அனைத்தும் மறு ஆய்வு செய்யப்பட்டு, செயல் முறைகளை மேலும் எளிமைப்படுத்தும் வழிகள் ஆராயப்பட்டு செயல்படுத்தப்படும்.

6. சென்னை, தரமணியில் இந்த அரசின் முந்தைய ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட தொழில்நுட்பப் பூங்கா (TIDEL PARK) தமிழ்நாட்டில் தொழில்நுட்பத் துறையை ஊக்குவிக்கும் அடிப்படைத் தளமாக அமைந்தது. தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சி வேகம் விரைவுபடுத்தப்படும். அதன் அடிப்படையில் 2006–07 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளபடி, இரண்டாவது டைடல் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்கப்படும்.

[2006 ஆகஸ்ட் 23

## தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்

உரிமங்களும், கட்டுப்பாடுகளும் நிலவிய காலக்கட்டங்களில் தொழிற்சாலைகளை அமைப்பதில் அரசுக்குப் பெரும்பங்கு இருந்து வந்தது. ஆகவே, தமிழ்நாட்டில் பெரிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்களை ஊக்குவிக்கும் நோக்குடன் தமிழக அரசின் நிறுவனமாக 1965 ஆம் ஆண்டில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) ஏற்படுத்தப்பட்டது. புதிய தொழில் திட்டங்களைத் தொழில் முனைவோருடன் இணைந்து டிட்கோ நிறுவனம் ஏற்படுத்தி வருகிறது. தொழிற்சாலை உரிமங்கள் மற்றும் கட்டுப்பாடுகள் தாராளமயமாக்கப்பட்டதன் பின்னர், கட்டமைப்பு வசதி மேம்படுத்தும் திட்டங்களில் டிட்கோ அதிக கவனம் செலுத்திவருகின்றது. டிட்கோ நிறுவனம், கட்டமைப்பு வசதித் துறையில் முதலீட்டு வாய்ப்புகளைக் கண்டறிந்து, இந்தத் தொழில் திட்டங்களை ஊக்குவிக்கும்வகையில் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. சென்னையில் டைடல் (TIDEL) தகவல் தொழில்நுட்பப் பூங்கா மற்றும் சென்னையிலிருந்து பாண்டிச்சேரி வரை அமைக்கப்பட்டுள்ள கிழக்குக் கடற்கரைச் சாலை ஆகியவை டிட்கோவின் முனைப்பான முயற்சிகளுக்கு உதாரணங்கள் ஆகும். நிதி நிறுவனங்களுடன் இணைந்து புது முயற்சிகளை ஊக்குவிக்கும்வகையில் புதிய முயற்சி முதலீட்டு நிதிகளையும் (Venture Capital Funds) டிட்கோ நிறுவனம் ஏற்படுத்தி உள்ளது.

அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் நோக்கத்துடன், டிட்கோ நிறுவனம் 1998 ஆம் ஆண்டு, தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்தை (TNRDC) ஏற்படுத்தி, பயனடைவோர் கட்டணத்தின் வாயிலாக ஐ.எல்.எப்.எஸ். நிறுவனத்துடன் கூட்டுத் துறையில் சாலை மேம்பாட்டுப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. கிழக்குக் கடற்கரைச் சாலைத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேறியபின், தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம், சென்னையில் மத்திய கைலாசத்திற்கும், சிறுசேரிக்கும் இடையே 20 கிலோ மீட்டர் தூரத்திற்குக் கிழக்குக் கடற்கரைச் சாலை இணைப்புச் சாலையில் 2.2 கிலோ மீட்டர் தூரத்திற்கும் சாலை அமைக்கும்பொருட்டு தகவல் தொழில்நுட்ப விரைவு சாலை நிறுவனம் (ஐ.டி.இ.எல்) என்ற பெயரில் துணை நிறுவனத்தை நிறுவியுள்ளது. இதற்கான மதிப்பீட்டுச் செலவு ரூ. 119 கோடி ஆகும். (நில விலை நீங்கலாக). அதில் தமிழ்நாடு அரசின் மானியமான ரூ. 21.5 கோடியும், அசைட்-ன் (ASIDE) மானியமான ரூ.12.5 கோடியும் அடங்கும். இத்திட்டம் தேக்க நிலையில் இருந்தது. இவ்வரசு பொறுப்பேற்றபின் இத்திட்டத்திற்குப் புத்துயிரளிக்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



2006 ஆகஸ்ட் 23]

தமிழ்நாட்டில் எண்ணெய் சுத்திகரிப்புத் திறனைப் பெருக்குகின்ற வகையில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் மற்றும் நாகார்ஜுனா குழுமத்தின் கூட்டுத் தொழில் நிறுவனமான நாகார்ஜுனா எண்ணெய் நிறுவனத்தை 9-1-1998 அன்று ஏற்படுத்தியுள்ளது. கடலூர் மாவட்டத்தில் ஆண்டொன்றுக்கு 60 இலட்சம் டன் கொள்திறனுள்ள பெட்ரோலியத்தைச் சுத்திகரிக்கும் ஆலை ஒன்றை ரூ.4,790 கோடி முதலீட்டில் கட்டி வருகிறது. இது இம்மாநிலத்தில், கூட்டுத் துறையில் முதன்முதலாக மேற்கொள்ளப்படுகிற ஒரு மிகப் பெரிய கூட்டுத் தொழில் நிறுவனம் ஆகும். இந்நிறுவனம் சமவீதப் பங்குகளில் முழுப் பங்கேற்பை இறுதி செய்துள்ளது. இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி (IDBI) தவணைக் கடன் தருவதாக ஒப்புதல் அளித்துள்ளது. இந்த ஆலையின் கட்டுமானப் பணி 2006, செப்டம்பர் திங்களில் தொடங்கும்.

டிட்கோ நிறுவனம், தொழில் பூங்கா மற்றும் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை ஏற்படுத்தி வருகிறது. மகேந்திரா தொழில் பூங்கா திட்டப் பணிகள் (மகேந்திரா உலக நகர நிறுவனம்) 1997-98 ஆம் ஆண்டு செங்கல்பட்டு அருகே துவக்கப்பட்டுள்ளது. அதேபோன்று, எண்ணூர் சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்கும் திட்டத்தை நிறைவேற்ற எண்ணூர் சிறப்புப் பொருளாதார மண்டல நிறுவனம் (Ennore SEZ Company Ltd.) தொடங்கப்பட்டுள்ளது. சுமார் 2500 ஏக்கர் நிலம், எண்ணூர் துறைமுகம் அருகே இந்தச் சிறபபுப் பொருளாதார மண்டலத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. டிட்கோ நிறுவனம், திட்ட தகவல் குறிப்பு, இட இயல்பு/நில இயல்பு ஆய்வுகள் மற்றும் மண் பரிசோதனை ஆகிய பணிகளை நிறைவு செய்துள்ளது. இந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலத்தினை அமைக்க ரூ.900 கோடி ஆகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இலக்கு நிர்ணயிக்கப்பட்ட தொழில்களில் மோட்டார் வண்டி துணைப் பாகங்கள், பணி நிறைவு பெற்ற தோல் பொருட்கள், மின்னணுப் பொருட்கள், ஆடைகள் மற்றும் பொறியியல் பொருட்கள் தயாரிப்புத் தொழில்களும் அடங்கும். இதனால் 7-8 ஆண்டுக் கால அளவில், சுமார் 50,000 பேருக்கு நேரடி / மறைமுக வேலைவாய்ப்புகள் கிடைக்கும். இத்திட்டத்தினை விரைந்து நிறைவேற்றிட இவ்வரசு முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றது.

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் மற்றும் தேன்கனிக்கோட்டை ஆகிய வட்டங்களில் சுமார் 1055 ஹெக்டேர் பரப்பளவில் பலவகை தயாரிப்புப் பொருட்கள் சிறப்புப் பொருளாதார மண்டலத்தை ஏற்படுத்துவதற்கு 2005, டிசம்பர் திங்களில் "கொள்கை அளவில்" டிட்கோ நிறுவனத்திற்கு மத்திய அரசிடமிருந்து ஒப்புதல் கிடைத்துள்ளது. உத்தேச சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்கான அங்காடி ஆய்வு மற்றும் கொடக்க

சாத்தியக்கூறு ஆகியவை முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கான நிலத்தைக் கையகப்படுத்தி, உடைமையை உரிமை மாற்றம் செய்வதற்கு நிர்வாக அனுமதி அளிக்குமாறு "டிட்கோ" நிறுவனம் தமிழ்நாடு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளது. இந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலத்தை ஏற்படுத்துவதற்கான செலவு, சுமார் ரூ.500 கோடி என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலம், 8–10 ஆண்டு கால அளவில் சுமார் 70,000 பேருக்குத் தகவல் தொழில்நுட்பம்/தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள், மருந்துப் பொருட்கள், ஆடைகள், மின்னணுப் பொருட்கள் மற்றும் உணவுப் பொருள் பதப்படுத்தும் தொழில்கள் ஆகியவற்றில் வேலைவாய்ப்பு அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனைச் செயல்படுத்தும் நிறுவனத்தை மறுசீரமைத்து, இத்திட்டத்தை விரிவுபடுத்தவும், விரைவில் செயல்படுத்தவும் அரசு திட்டமிட்டுள்ளது.

நமது நாட்டில், பெட்ரோலியம், இரசாயனம் மற்றும் பெட்ரோலிய இரசாயனப் பொருட்கள் முதலீட்டு வட்டாரங்களை (PCPIR) ஏற்படுத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. திருவள்ளூர் மாவட்டம், எண்ணூர் பகுதியில் ஒன்று, கடலூர் மாவட்டத்தில் மற்றொன்று என இரண்டு இடங்களைப்பற்றிய விரிவான அறிக்கை ஒன்று, மத்திய அரசின் இரசாயனம் மற்றும் பெட்ரோலிய இரசாயனப் பொருட்கள் துறையிடம் அளிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த இரண்டு இடங்களில் ஒன்றினைத் தேர்ந்தெடுக்கும்படி தொடர்புடைய மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்களைக் கடிதம்மூலம் கேட்டுக் கொண்டுள்ளார். இத்தகைய பெட்ரோலியம், இரசாயனம் மற்றும் பெட்ரோலிய இரசாயனப் பொருட்கள் முதலீட்டு வட்டாரம் ஏற்படுத்தப்படும்போது, பெட்ரோலியம் மற்றும் பெட்ரோலிய இரசாயனத் துறையில் சுமார் ரூ. 15,000 கோடி வரையில் முதலீடுகளைப் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படலாம்.

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரியில் உயர் தொழில்நுட்பப் பூங்கா அமைக்கும் திட்டத்தைச் செயல்படுத்துவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. ரூ.640 கோடி திட்டச் செலவில் இத்திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

5,40,000 சதுர அடியில் முதல் நிலை தகவல் தொழில்நுட்பப் பூங்காவை ஏற்படுத்தும் பணியில் நிறைவு அடைந்ததன் பேரில் "டிட்கோ" நிறுவனம் சிங்கப்பூரைச் சேர்ந்த அஸ்சென்டாஸ் நிறுவனத்துடன் சேர்ந்து, ரூ.190 கோடி மதிப்பீட்டுச் செலவில் 7,30,000 சதுர அடியில் கட்டடம் கட்டுவதற்கான் இரண்டாம் நிலை பணியைத் தொடங்கியுள்ளது.





இத்திட்டம் 2007 ஆம் ஆண்டில் நிறைவடையும் என்றும், சுமார் 8,000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

சேலம் மாவட்டம், கஞ்சமலையிலும், திருவண்ணாமலை மாவட்டம் கௌதிமலை, வேதியப்பன்மலை ஆகியவற்றிலும் முறையே 75 மில்லியன் டன் மற்றும் 35 மில்லியன் டன் குறைந்த தரமுள்ள இரும்புத் தாது படிமங்கள் உள்ளன. இரும்புத் தாதுவை வெட்டியெடுத்து, சுத்திகரித்து, பெல்லட் தயாரிப்பதற்கு ரூ.400 கோடி செலவில் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக, ஜிண்டால் விஜயநகர் உருக்கு நிறுவனத்துடன் தொழில் முனைவோர் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டு, ஒரு புதிய வழி நடத்துதல் துறை (Escort Sector) நிறுவனமான தமிழ்நாடு இரும்புத் தாது சுரங்க நிறுவனம் (TIMCO) துவக்கப்பட்டது. இதன்மூலம் உற்பத்தியாகும் இரும்புத் தாதுவை டிட்கோ நிறுவனத்தின் மற்றொரு கூட்டுத் தொழில் நிறுவனமான சதர்ன் அயர்ன் மற்றும் ஸ்டீல் (SISCOL) என்ற நிறுவனம், மூலப் பொருளாகப் பயன்படுத்தும். வன நிலம் உட்பட, ஏற்கெனவே இனங்கண்டறியப்பட்ட நிலத்தில் இரும்புத் தாதுவை வெட்டியெடுக்க, தேவையான ஒப்புதல் வழங்குமாறு மத்திய அரசிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

[2006 ஆகஸ்ட் 23

## தமிழ்நாடு மாநிலத் தொழில் முன்னேற்ற நிறுவனம்

வங்கித் தொழிலும் நிதிச் சேவைத் துறையும் முழுவதுமாக வளர்ச்சியடையாத ஒரு சமயத்தில் தொழில் வளர்ச்சிப் பகுதியில் தொழில் வளர்ச்சிக்குத் தூண்டுகோலாக அமைந்திடும்வகையில், அரசு ஒரு தீவிர செயல்திறனுடைய பங்கினை ஆற்ற வேண்டியிருந்தது. அதனால், தமிழ்நாடு மாநிலத் தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) 1971 ஆம் ஆண்டில் நிறுமங்கள் சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டது. தொடக்கத்தில், சிப்காட் நிறுவனம் பெரிய மற்றும் நடுத்தரத் தொழில்களுக்குத் தவணைக் கடன் வழங்கும் நிறுவனமாக இருந்தது. இருப்பினும், காலமாற்றத்தில், தவணைக் கடன் வழங்கும் பணிகள் யாவும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திற்கு (டிக்) மாற்றப்பட்டன. சிப்காட் நிறுவனம் தற்போது, பின்வரும் நடவடிக்கைகளை முனைப்புடன் மேற்கொண்டு செயல்பட்டு வருகிறது:—

(அ) தொழில் வளாகங்கள்/பூங்காக்கள் மற்றும் வளர்ச்சி மையங்களை மேம்படுத்தி, பராமரித்து விற்பனை செய்தல்;

(ஆ) மேம்பாட்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகளைச் செயல்படுத்துதல்.

தவணைக் கடன் வழங்கும் பணிகள் யாவும் 1–4–2000 முதல் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திற்கு மாற்றப்பட்டதால், இந்நிறுவனம், ஏற்கெனவே வழங்கப்பட்ட தவணைக் கடன் நிலுவைகளை வசூலிப்பதிலும், வளர்ச்சிப் பணிகளிலும் முனைப்பாகச் செயல்பட்டு வருகிறது.

இந்நிறுவனம் 31–3–2006 வரை கையகப்படுத்திய, மேம்படுத்தி விற்பனை செய்த நிலங்களின் பரப்பளவு விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:–

| | (ஏக்கரில்) |
|---|---|
| கையகப்படுத்தப்பட்ட மொத்தப் பரப்பளவு | 22,072 |
| ஒதுக்கீடு செய்யக்கூடிய மொத்தப் பரப்பளவு | 17,018 |
| ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்தப் பரப்பளவு | 96,22 |
| ஒதுக்கீடு செய்யப்பட்ட அலகுகள் எண்ணிக்கை | 1,410 |
| வளர்ச்சிப் பணிகளுக்காக இதுவரை செலவிடப்பட்ட தொகை | ரூ. 37,542.75 இலட்சம் |



2006 ஆகஸ்ட் 23]

### 2006–2007 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்

| வ. எண் | தொழில் வளாகங்கள்/ பூங்காக்கள் மற்றும் வளர்ச்சி மையங்கள் | கையகப்படுத்த உத்தேசிக்கப் பட்டுள்ள நிலப்பரப்பு (ஏக்கரில்) | விற்பனை செய்ய தீர்மானிக்கப் பட்டுள்ள நிலப்பரப்பு (ஏக்கரில்) | மேம்பாட்டுச் செலவினம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | இராணிப்பேட்டை | – | – | 101.50 |
| 2. | ஓசூர் | – | | 93.50 |
| 3. | கடலூர் | – | – | 305.00 |
| 4. | கும்மிடிப்பூண்டி | – | – | 50.00 |
| 5. | ஏற்றுமதி மேம்பாட்டு தொழிற் பூங்கா | – | – | – |
| 6. | தூத்துக்குடி | 425.92 | 50.00 | 200.00 |
| 7. | செய்யாறு | – | 150.00 | 2.20 |
| 8. | திருப்பெரும்புதூர் | – | 750.00 | 2740.00 |
| 9. | இருங்காட்டுக் கோட்டை | 1321.35 | – | 635.00 |
| 10. | சிறுசேரி | – | – | 1519.00 |
| 11. | நிலக்கோட்டை | – | – | 15.00 |
| 12. | கங்கைகொண்டான் | – | 50.00 | 900.00 |
| 13. | பர்கூர் | – | – | – |
| 14. | பெருந்துறை | | 250.00 | 1193.17 |
| 15. | ஓரகடம் | 977.81 | 750.00 | 405.00 |
| 16. | புதுக்கோட்டை | – | – | 20.00 |
| 17. | மானாமதுரை | – | | 4.00 |
| | **மொத்தம்** | **2725.08** | **2000.00** | **8183.37** |

[2006 ஆகஸ்ட் 23

## சிப்காட் தொழில் வளாகங்கள் / பூங்காக்கள் மற்றும் வளர்ச்சி மையங்கள்

*சிப்காட் நிறுவனம், பன்னிரண்டு மாவட்டங்களில் மொத்தம் பதினேழு தொழில் வளாகங்கள் / பூங்காக்கள் / வளர்ச்சி மையங்களை மேம்படுத்தி உள்ளது. சிப்காட் நிறுவனத்தின் இந்தத் தொழில் வளாகங்கள் கையகப்படுத்திய நிலங்கள், ஒதுக்கீடு செய்த நிலப்பரப்பு ஆகியவை பற்றிய விவரங்கள் 31–3–2006 அன்றுள்ளவாறு பின்வருமாறு:-*

*(பரப்பளவு ஏக்கரில்)*

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | தொழில் வளாகம்/ பூங்கா/ வளர்ச்சி மையத்தின் பெயர் | கையகப் படுத்திய நிலங்களின் பரப்பளவு | இதுவரை ஒதுக்கீடு செய்யப் பட்ட நிலப் பரப்பு | ஒதுக்கீடு செய்யப் பட்ட நிலப் பரப்பு 2004-05 | ஒதுக்கீடு செய்யப் பட்ட நிலப் பரப்பு 2005-06 |
|---|---|---|---|---|---|---|
| 1 | வேலூர் | இராணிப் பேட்டை (கட்டம்-I) | 729.78 | 577.87 | 0.00 | 0.00 |
| | | (கட்டம்-II) | 133.13 | 111.97 | 0.00 | 0.00 |
| | | (கட்டம்-III) | 496.07 | -- | 0.00 | 0.00 |
| 2 | கிருஷ்ணகிரி | ஓசூர் (கட்டம் - I) | 1235.86 | 982.95 | 4.60 | 0.00 |
| | | (கட்டம் – II) | 456.88 | 396.48 | 5.42 | 0.00 |
| | | (விரிவாக்கம்-II) (விரிவாக்க நிலஎடுப்பு பணியில் 235.13 ஏக்கர்) | 179.06 | 137.63 | 17.67 | 4.09 |
| | | பர்கூர் | 1404.54 | 30.33 | 0.00 | 0.00 |
| 3 | காஞ்சிபுரம் | இருங்காட்டுக் கோட்டை தொழில் பூங்கா | 1513.57 | 1188.34 | 167.20 | 158.93 |
| | | ஆடை தயாரிக்கும் பூங்கா | 123.83 | 71.85 | 20.59 | 52.26 |
| | | காலணி பாகங்கள் தயாரிக்கும் பூங்கா | 52.63 | 8.00 | 0.00 | 8.00 |



2006 ஆகஸ்ட் 23]

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | தொழில் வளாகம்/ பூங்கா/ வளர்ச்சி மையத்தின் பெயர் | கையகப் படுத்திய நிலங்களின் பரப்பளவு | இதுவரை ஒதுக்கீடு செய்யப் பட்ட நிலப் பரப்பு | ஒதுக்கீடு செய்யப் பட்ட நிலப் பரப்பு 2004-05 | ஒதுக்கீடு செய்யப பட்ட நிலப் பரப்பு 2005-06 |
|---|---|---|---|---|---|---|
| | | காலணி பூங்கா | 153.65 | 0.00 | 0.00 | 0.00 |
| | | திருப்பெரும்புதூர் தொழில் பூங்கா கட்டம் 1 | 470.94 | 380.00 | 47.67 | 91.75 |
| | | கட்டம் 2 | 1293.30 | 347.08 | 0.00 | 341.93 |
| | | கட்டம் 3 | 215.46 | 210.87 | 0.00 | 210.87 |
| | | தகவல் தொழில்நுட்ப பூங்கா, சிறுசேரி | 749.46 | 487.72 | 221.57 | 10.33 |
| | | ஒரகடம் வளர்ச்சி மையம் | 1507.34 | 354.19 | 0.00 | 354.19 |
| 4 | கடலூர் | கடலூர் (கட்டம் –I) | 518.79 | 442.82 | 0.08 | 0.00 |
| | | (கட்டம் –II) | 154.72 | 103.91 | 71.80 | 14.34 |
| | | (கட்டம் –III) | 1197.97 | 282.47 | 0.00 | 282.47 |
| 5 | புதுக் கோட்டை | புதுக்கோட்டை தொழில் வளாகம் | 421.10 | 252.85 | 20.50 | 9.70 |
| 6 | சிவகங்கை | மானாமதுரை தொழில் வளாகம் | 492.07 | 175.84 | 4.92 | 0.75 |
| 7 | தூத்துக்குடி | தூத்துக்குடி (கட்டம் –I) (விரிவாக்க நிலஎடுப்புப் பணியில் 1623.27 ஏக்கர்) | 1083.59 | 731.41 | (1.97) | 1.97 |
| | | (கட்டம் – II) | 436.54 | 107.05 | 0.00 | 107.05 |

| வ. எண் | மாவட்டத் தின் பெயர் | தொழில் வளாகம்/ பூங்கா/ வளர்ச்சி மையத் தின் பெயர் | கையகப் படுத்திய நிலங்களின் பரப்பளவு | இதுவரை ஒதுக்கீடு செய்யப் பட்ட நிலப் பரப்பு | ஒதுக்கீடு செய்யப் பட்ட நிலப் பரப்பு 2004-05 | ஒதுக்கீடு செய்யப் பட்ட நிலப் பரப்பு 2005-06 |
|---|---|---|---|---|---|---|
| 8 | திருவள்ளூர் | கும்மிடிப் பூண்டி (கட்டம்-I) | 798.42 | 634.07 | 3.47 | 5.13 |
| | | (கட்டம்-II) | 476.99 | 327.54 | 0.00 | 11.54 |
| | | ஏற்றுமதி மேம்பாட்டு தொழிற் பூங்கா | 224.11 | 83.74 | 18.94 | 63.80 |
| 9 | திருநெல் வேலி | கங்கை கொண்டான் வளர்ச்சி மையம் | 1994.58 | 53.84 | 39.24 | 1.05 |
| 10 | திண்டுக்கல் | நிலக்கோட்டை வளாகம் | 287.38 | 10.63 | 0.00 | 0.63 |
| | | நிலக்கோட்டை உணவுப் பூங்கா | 100.70 | 8.58 | 13.58 | 0.00 |
| 11 | ஈரோடு | பெருந்துறை வளர்ச்சி மையம் | 2599.26 | 1122.42 | 215.93 | 242.09 |
| 12 | திருவண்ணா மலை | செய்யாறு தொழில் வளாகம் (நடப்புத் திட்டம்) | 510.97 | 0.00 | 0.00 | 0.00 |

*2004–2005–ல்* ஒதுக்கீடு
செய்யப்பட்ட நிலங்களின் மொத்தப்பரப்பு : *871.21* ஏக்கர்

*2005–2006–ல்* ஒதுக்கீடு
செய்யப்பட்ட நிலங்களின் மொத்தப்பரப்பு : *1,972.87* ஏக்கர்



## 2. உட்கட்டமைப்பு வசதி மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்தும் பணிகள்

சிப்காட் நிறுவனம், பின்வரும் சிறப்பு உட்கட்டமைப்பு வசதி மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது:—

### உணவுப் பூங்கா, நிலக்கோட்டை, திண்டுக்கல் மாவட்டம்

சிப்காட் நிறுவனமும், வேளாண்மை விற்பனை வாரியமும் இணைந்து திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள நிலக்கோட்டை சிப்காட் தொழில் வளாகத்தில் சுமார் 100 ஏக்கர் நிலப்பரப்பளவில் ரூ.1,300 இலட்சம் செலவில் ஓர் உணவுப் பூங்காவை ஒரு சிறப்புக் குறிக்கோள் அமைப்பான "நிலக்கோட்டை உணவுப் பூங்கா நிறுவனம்" மூலமாகச் செயல்படுத்தி வருகிறது. மாநில திட்ட முதலீட்டுக் குழு, இந்தத் திட்டத்தை நிறைவேற்ற திட்ட மதிப்பீட்டுத் தொகையான ரூ.1,300 இலட்சம் மற்றும் அதில் உள்ளடங்கிய மத்திய அரசின் மானியத் தொகையாக ரூ.325 இலட்சத்திற்கு அனுமதி அளித்துள்ளது. இத்திட்டத்திற்குத் தேவையான பணிகள் யாவும் முடிக்கப்பட்டு சிறப்புக் குறிக்கோள் அமைப்பான நிலக்கோட்டை உணவுப் பூங்கா நிறுவனம், 1-4-2004 அன்று உருவாக்கப்பட்டது. இந்த உணவுப் பூங்காவில் சுமார் 10.63 ஏக்கர் நிலப்பரப்பு, 3 உணவுப் பதப்படுத்தும் தொழிற்சாலைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் ஒரு தொழிற்சாலையான மேக்ரித்தா ஏற்றுமதி நிறுவனம், தன்னுடைய பரீட்சார்த்த முறையிலான உற்பத்தியைத் தொடங்கியுள்ளது.

### சிப்காட் தொழிற்பூங்காக்களுக்கு நீர் வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்துதல் (இருங்காட்டுக்கோட்டை மற்றும் திருப்பெரும்புதூர்)

இருங்காட்டுக்கோட்டை மற்றும் திருப்பெரும்புதூர் சிப்காட் தொழிற்பூங்கா ஆகியவற்றிற்கு நீர் வழங்குவதை அதிகரிப்பதற்காக கோயம்பேடு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து கிடைக்கும் இரண்டாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரைப் பெற்று டி.டி./ஆர்.ஓ. (TT/RO) இயந்திரங்களின்மூலம் சுத்திகரித்திடத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காகச் சென்னைப் பெருநகரக் குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம், இரண்டாம் கட்டமாகச் சுத்திகரிப்பு செய்த கழிவுநீரை நாளொன்றுக்கு 25–30 மில்லியன் லிட்டர் வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து 10 மில்லியன் லிட்டர்/20 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட குழாய்கள் அமைக்கப்பட்டுச் செம்பரம்பாக்கத்தில் உள்ள சிப்காட் நீர்த்தேக்கத்திற்கு இக்கழிவுநீர்

எடுத்துச் செல்லப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டுத் தொழிற்சாலைகளுக்கு விநியோகிக்கப்படும். இதற்கான சிறப்பு அமைப்பு (Special purpose vehicle) மூலமாக, பொது, தனியார் நிறுவனங்களுடன் இணைந்து கூட்டு முயற்சியாக சிப்காட், இத்திட்டத்தைச் செயல்படுத்தும். இத்திட்டத்திற்கான செலவு ரூ. 65.00 கோடி ஆகும். சென்னைத் தொழிற்சாலை நீர் உற்பத்தி நிறுவனம் என்ற ஒரு சிறப்புக் குறிக்கோள் நிறுவனம், 13-5-2005 அன்று அமைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு ஏற்கெனவே இத்திட்டத்திற்குத் தேவையான தொகை ரூபாய் 24 கோடியை மானியமாக வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்குத் தேவையான மீதமுள்ள நிதியைப் பங்குத் தொகையாகவும், கடனாகவும் வங்கிகள் மூலமாகப் பெற்று, இத்திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டக் கட்டமைப்பு மற்றும் செயலாக்க முறைகள் ஆய்வில் உள்ளன. இத்திட்டத்தை விரைவில் செயல்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் விரைவில் தொடங்கப்படும்.

**தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் அபாயகரமான கழிவுகளை (Hazardous Industrial Waste) அகற்றும் திட்டம். சிப்காட் தொழில் வளாகம் கும்மிடிப்பூண்டி, ஓரகடம் மற்றும் பெருந்துறை வளர்ச்சி மையங்கள்**

இத்திட்டத்தை நிறைவேற்றும்பொருட்டு தொழிற் கழிவு மேலாண்மை சங்கம், தனது சிறப்புக் குறிக்கோள் அமைப்பாகத் தமிழ்நாடு கழிவு மேலாண்மை லிமிடெட் (Tamil Nadu Waste Management Ltd.) என்ற நிறுவனத்தினை ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்திற்காக அரசாணை (நிலை) எண் 251, வருவாய், நாள் 27-5-2004 மூலம் காஞ்சிபுரம் மாவட்டம், மேலகோட்டையூர் என்ற இடத்தில் 68.92.0 ஹெக்டேர் நிலம் சிப்காட் நிறுவனத்திற்கு நில உரிம மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்கு மேலகோட்டையூர் உள்ளூர் மக்களின் மறுப்பு மற்றும் எதிர்ப்பு இருந்ததால் இத்திட்டம் கைவிடப்பட்டது.

இதற்கிடையில் உச்ச நீதிமன்றத்தின் கண்காணிப்புக் குழுவின் கருத்துப்படி, இந்தத் திட்டத்தைச் சிப்காட் தொழில் வளாகமான கும்மிடிப்பூண்டியில் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு, இத்திட்டத்திற்குத் தேவையான சுமார் 26 ஏக்கர் நிலப் பரப்பை, சிப்காட் நிறுவனம், தொழிற் கழிவு மேலாண்மைச் சங்கத்திற்கு ஒதுக்கீடு செய்துள்ளது. இம்மாதிரியான பொது நலத்திற்கு ஊறு விளைவிக்கக்கூடிய தொழிற்சாலை திடக் கழிவுகளை அகற்றும் திட்டத்தைக் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள ஓரகடம், மற்றும் ஈரோடு மாவட்டத்திலுள்ள பெருந்துறை, சிப்காட் வளர்ச்சி மையங்களில் அமைப்பதற்குப் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.



**ஆடை தயாரிக்கும் தொழிற் பூங்கா இருங்காட்டுக்கோட்டை, காஞ்சிபுரம் மாவட்டம்**

இத்திட்டத்தைச் சிப்காட் நிறுவனம் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்திற்கான மத்திய அரசின் மானியத் தொகையான ரூ. 16.00 கோடி உள்ளடங்கிய திட்ட மதிப்பீட்டுத் தொகையான ரூ. 26.70 கோடிக்கான திட்டச் செயலாக்க அறிக்கைக்கு, மத்திய அரசின் ஜவுளித் துறை அமைச்சகம், 24-6-2004 அன்று அனுமதி அளித்துள்ளது. இத்திட்டத்திற்குச் சிப்காட் நிறுவனம் ரூ.10.70 கோடி முதலீடு செய்யும். இந்த ஆடை தயாரிக்கும் பூங்காவின் மொத்த நிலப்பரப்பு 123.83 ஏக்கர்ஆகும். இதில் 37.98 ஏக்கரில் அடிப்படை வசதிகள் அடங்கிய 85.85 ஏக்கர் நிலப்பரப்பு ஒதுக்கீடு செய்யத்தக்கதாகும். இத்திட்டத்திற்குத் தேவையான பொது உட்கட்டமைப்பு வசதிகளான சாலை அமைத்தல், தெரு விளக்கு, நீர் வழங்குதல் மற்றும் கழிவுநீர் அகற்றும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இந்த ஆடை தயாரிக்கும் தொழிற் பூங்காவில் உள்ள 85.85 ஏக்கர் நிலப்பரப்பில் இதுவரை 73.80 ஏக்கர் நிலப்பரப்பு 29 தொழில் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசின் மானியத் தொகையில் ஒரு பகுதியான ரூபாய் 9.66 கோடி பெறப்பட்டுள்ளது.

**துணி பதப்படுத்தும் தொழிற் பூங்கா திட்டம்**

கடலூர் மாவட்டத்தில் சிப்காட் தொழில் வளாகத்தில் (கட்டம் III-ல்) தென்னிந்திய நூற்பாலைகள் சங்கம் (SIMA) அமைக்கும் ஒருங்கிணைந்த துணி மற்றும் நூல் பதப்படுத்தும் பூங்காவை உருவாக்க சிப்காட் நிறுவனம், சுமார் 282 ஏக்கர் நிலப்பரப்பை ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டத்திற்குத் தேவையான வசதிகளை வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், மாநில அரசால் இந்திய நிறுவனச் சட்டத்தின்கீழ் 1949 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட ஒரு பழமையான நிதி நிறுவனமாகும். இக்கழகம், புதிய தொழில்கள் நிறுவவும், இம் மாநிலத்தின் எப்பகுதியிலும் ஏற்கெனவே உள்ள தொழில் பிரிவுகளை விரிவுபடுத்துவதற்கும், நவீனமயமாக்குவதற்கும் நிலம் வாங்குதல், கட்டடம் கட்டுதல், தளவாடம் மற்றும் இயந்திரங்கள் வாங்குவதற்கும் நிதியுதவி அளிக்கிறது. மேலும் இந்நிறுவனம் இம்மாநிலத்தில் இயங்கும் சேவைத் தொழில்களுக்கும் காலக் கடன் வழங்கி வருகிறது.

தர நிர்வாக சேவையை உருவாக்க, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ஐ.எஸ்.ஓ. 9001 : 2000 சான்றிதழை இந்தியத் தர நிர்ணயச் செயலகத்திலிருந்து (பி.ஐ.எஸ்.) பெற்றுள்ளது.

### தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் செயல்படுத்தும் திட்டங்கள்

நாட்டின் தொழில் வளர்ச்சிக்காக, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், பல திட்டங்கள்மூலம் உதவிகள் செய்து வருகிறது. இக்கழகம் தேசிய பங்கு மூலதனத் திட்டம், முன்னாள் இராணுவத்தினர் சுய வேலைவாய்ப்புத் திட்டம், மகளிர் தொழில் முனைவோருக்கான திட்டம் போன்ற பல திட்டங்கள்வாயிலாக, இக்கழகம் நிதி உதவி அளிக்கிறது. இக்கழகத்தின்மூலம் இயங்கிவரும் முக்கியத் திட்டங்களின் சிறப்பியல்புகள் பின்வருமாறு:

### தேசிய பங்கு மூலதனத் திட்டம்

சிறு தொழில் பிரிவுகளின்கீழ் உள்ள திட்டங்களில், திட்ட மதிப்பீடு ரூ.50.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்கும்பட்சத்தில், திட்ட முதலீட்டில் 10 சதவீதத்தை மூலதனப் பங்காகச் செலுத்தும் சிறு தொழில் முனைவோருக்கு முக்கியமாக, முதன்முதலாகத் தொழில் தொடங்கும் தொழில்முனைவோருக்கு புதிய திட்டத்திற்கும் மற்றும் ஏற்கெனவே உள்ள திட்டத்தின் விரிவாக்கத்திற்கும், நிதி உதவி அளிக்கிறது. சுலபக் கடனாக திட்ட மதிப்பீட்டில் 25 சதவிகிதம் அல்லது அதிகபட்சமாக 10 இலட்சம் வரை 5 சதவிகிதம் வட்டி விகிதத்தில் மூலதனப் பற்றாக்குறைக்காக அளிக்கப்படுகிறது. மீதமுள்ள 65 சதவிகிதம் திட்ட மதிப்பில் காலக் கடனாக 11 சதவிகிதத்தில் நிதியுதவி அளிக்கிறது. கடந்த 2005–2006 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 463 தொழில் நிறுவனங்களுக்கு ரூ.92.82 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.



### ஜவுளித் தொழிலுக்கான தொழில்நுட்ப மேம்பாட்டு நிதித் திட்டம்

இந்திய அரசு தொழில் மேம்பாட்டு நிதித் திட்டத்தின்கீழ் ஜவுளி மற்றும் சணல் தொழில்களை நவீனப்படுத்தி மேம்பாடு அடையச் செய்யும் பொருட்டும், உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டும் ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது. இத்திட்டம், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தால் இம்மாநிலத்தில் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் வாங்க, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் நிதியுதவி வழங்குகிறது. தொழில் முனைவோரின் மூலதனம், திட்ட மதிப்பில் 20 சதவிகிதமாகும். இத்திட்டத்திற்கு சலுகை வட்டி 6 சதவிகிதமாகும். வட்டி மானியம் 5 சதவிகிதம்; இதற்குப் பதிலாக, சிறு தொழில் நிறுவனங்கள், அங்கீகரிக்கப்பட்ட மூலதன மதிப்பில் 15 சதவிகிதத்தை மூலதன மானியமாகப் பெற்றுக்கொள்ளலாம். சிறு நூற்பாலைகளுக்கு 20 சதவிகிதம் மூலதன மானியமும், ஜவுளித் துறை அமைச்சகம் சில குறிப்பிட்ட சொத்துக்களுக்கு அனுமதித்துள்ளது. 2005–2006–ல் ரூ.58.44 கோடி அளவில் தொழில் நவீனமயமாக்குவதற்கு வரையறை கடனாக நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசிடம் 2005–2006 ஆம் ஆண்டுக்கு ஜவுளி ஆலைகளுக்கு வழங்கிட, வட்டி மானியத் திட்டம் மற்றும் மூலதன மானியத் திட்டத்தின்கீழ் ரூ.237.01 இலட்சம் கோரப்பட்டுள்ளது. இதில் வட்டி மானியத் திட்டத்திற்கு ரூ.172.94 இலட்சம்; மற்றும் மூலதன மானியத் திட்டத்திற்கு ரூ. 64.07 இலட்சம் ஆகும்.

### சிறிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான நிதி

இந்திய அரசாங்கம் நம் நாட்டில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் வளர்ச்சிக்காக சிறிய மற்றும் நடுத்தர நிறுவன நிதியை ஏற்படுத்தியுள்ளது. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், 1–4–2005 முதல் சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கு மேற்கூறிய திட்டத்தில் குறைக்கப்பட்ட வட்டி விகிதம் 11 சதவிகிதத்தில் தொழில் நவீன மயமாக்குதல் மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டிற்கு நிதி அனுமதி வழங்குகிறது.

### காற்று மின்சக்தித் திட்டம்

தமிழ்நாடு மாநிலமானது, காற்றாலைமூலம் மின்சாரம் தயாரிப்பதில் முதல் மாநிலமாக உள்ளது. இதுவரை இம்மாநிலத்தில் 30–4–2006 வரை 6,300 காற்றாலைகள் இயங்குகின்றன. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக்

கழகம், இத்திட்டங்களுக்கு நிதி வழங்குவதில் சிறப்பாகச் செயல்படுகிறது. பல்வேறு வாடிக்கையாளர்களின் தேவைக்கு ஏற்ப, நிதி அளிப்பதற்காக தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் சிறப்புப் பயிற்சி பெற்றுள்ளது. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், இரண்டு திட்டங்களைச் செயல்படுத்துகிறது. அதாவது பொதுக் காலக் கடன் திட்டத்தின் திட்ட மதிப்பில் 75 சதவிகிதம் வரை கடனாகவும், மற்றும் சாதனங்கள் நிதியுதவித் திட்டத்தில் சாதனங்களின் மதிப்பு மற்றும் அதைச் சார்ந்த செலவினங்களில் 85 சதவிகிதம் வரை நிதி உதவி அளிக்கிறது. தனது சுய தேவை மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு விற்பதற்கு தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், சலுகை வட்டி ஆண்டு விகிதம் 10.5 சதவிகிதம் காற்றாலை திட்டத்திற்கு வழங்குகிறது. 2005–2006 ஆம் ஆண்டில், இக்கழகம் 4 தொழில் நிறுவனங்களுக்கு ரூ. 4.10 கோடி வரை நிதியுதவி அளித்துள்ளது.

**தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் இயக்கும் மானியத் திட்டங்கள்**

தொழில் முனைவோரின் நிதிச் சுமையைக் குறைக்கும்வகையில் தொழில் அமைக்க விரிவாக்க/நவீனமயமாக்க தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்மூலம் பல மானியத் திட்டங்களை அரசு நடைமுறைப்படுத்துகிறது. பல்வேறு மானியத் திட்டங்கள் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளன:–

**கடன் இணைந்த மூலதன மானியத் திட்டம்**

இத்திட்டம் கடன் இணைந்த மூலதன மானியத் திட்டத்தின்கீழ், 30 வகையான துறைகளில் இயங்கிவரும் சிறு தொழில் பிரிவுகளின் தொழில் மேம்பாட்டிற்காக 15 சதவிகிதம் மூலதன மானியம், அதிகபட்சமாக ரூ.15 இலட்சம் வரை வழங்குகிறது. இத்திட்டம் தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம், சிட்பி (SIDBI) மற்றும் பெரிய தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள்மூலமாக இயங்குகிறது. மேலும், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், செயல் அமைப்பு-கடன் இணைந்த மூலதன மானியத் திட்டத்தின்கீழ், தொழில்நுட்ப மேம்பாடு நிதித் திட்டத்தில் சிறு தொழில், ஜவுளி மற்றும் சணல் தொழில்களுக்கு 15 சதவிகிதம் மூலதன மானியம் அல்லது 5 சதவிகிதம் வட்டி மானியமாக வழங்குகிறது.

நூற்பாலைகளை நவீனமயமாக்க, கடன் இணைந்த மூலதன மானியத் திட்டத்தின்கீழ், தொழில்நுட்ப மேம்பாட்டு நிதித் திட்டம், தற்போது 20 சதவிகிதம் மூலதன மானியம் அதிகபட்சமாக ரூ.20 இலட்சம் அல்லது 5 சதவிகிதம் வட்டி மானியம், இதில் ஏதேனும் ஒன்றை விருப்பத்தின்





அடிப்படையில் அளிக்கிறது. மேலும், தமிழக அரசு இறுதியில் கணக்கிடப்படும் வட்டி மானியத் (Back--ended subsidy) திட்டத்தின் உதவியை தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் பின்வரும் இனங்களுக்கு விரிவுபடுத்தியுள்ளது:

(அ) தொழில்நுட்ப மேம்பாடு/ நவீனமயமாக்குதல் திட்டத்தில் பெற்ற காலக் கடன்கள்

(ஆ) தேசிய மூலதனத் திட்டத்தின்கீழ் பெறப்பட்ட காலக் கடன்கள்

(இ) ஐ.எஸ்.ஓ. தரச் சான்றிதழ் மற்றும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடுகளுக்காகப் பெறப்பட்ட காலக் கடன்கள்

இத்திட்டத்தின்படி, 1-4-2003 முதல் அதிகபட்சமாக 3 சதவிகிதம் வட்டி குறையும் அளவு, திரும்பப் பெறும் வட்டி மானியம் வழங்கப்படுகிறது.

**வழிமுறைகளை எளிமைப்படுத்துதல்:–**

தொழில் முனைவோருக்கு உதவும்வகையில் இந்நிறுவனத்தின்மூலம் நிதியுதவி பெற்றவர்களுக்கு இக்கழகத்தின் சட்ட ஆவணங்கள் முறையை துரிதமாகச் செயல்படுத்த எளிதாக்கப்பட்டுள்ளது.

மேலும், தொழில் முனைவோருக்கு உதவும்வகையில் எல்லாக் கடன் மற்றும் முன்பணம் கோரும் விண்ணப்பங்களும் எளிதாக்கப்பட்டு, அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

கடன்களை வசூலிப்பதற்கு குறிப்பாக, தவணை தவறிய பிரிவினரிடமிருந்து சில கிளை அலுவலகங்களுக்குக் (கள அலுவலகங்கள்) கடன் வசூலிக்கும் வேலை மட்டும் கொடுக்கப்பட்டுள்ளது. ஆதாயம் தராத சொத்துக்களின் அளவைக் குறைக்கும்பொருட்டு, இக்கழகத்தின் கிளை அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

31-3-2005 அன்று தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் வாங்கும் அடிப்படைக் கடன்களின் வட்டி விகிதம், 9.10 சதவிகிதத்தில் இருந்தது. அது 31-3-2006 அன்று 8.7 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டில், நமது நாட்டில் இருந்த ஒட்டு மொத்த நிலவரத்தை ஒட்டியே அமைந்துள்ளது.

தகவல் தொழில்நுட்பத் தொழில்கள் வளர்ச்சி பெறுவதற்கு வாய்ப்புகளை உருவாக்கும்வகையில், தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களை

வடிவமைப்போர், உருவாக்குவோருக்கு நிதியுதவி செய்து, அதன்மூலம் தொழிற்கூடங்களை வாடகைக்கு வழங்கிடும் புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

## 2006–2007 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம்

தமிழ்நாட்டில் தொழில் முன்னேற்றத்தின் தொடர்ச்சியாக 2006–2007 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டத்தின் இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டு கீழே தரப்பட்டுள்ளன:–

| வ. எண் | இனம் | (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1. | கடன் அனுமதித்தல் | 485.00 (பட்டியல் நிதி தவிர்த்து) |
| 2. | கடன் வழங்குதல் | 285.00 (பட்டியல் நிதி தவிர்த்து) |
| 3. | கடன் வசூலித்தல் | 283.20 |

பாதிக்கப்பட்ட, நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களுக்கு உதவும் வகையில் தாராளமயமாக்கப்பட்ட ஒரே தவணையில் கடனை முடிக்கும் திட்டம் (OTS) இந்த ஆண்டிலும் நடைமுறைப்படுத்தப்படும்வகையில் இக்கழகத்தின் குழுமத்தில் வைத்து முடிவு எடுக்கப்படும்.





## தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்

கரும்புச் சக்கையை மூலப் பொருளாகக் கொண்டு செய்தித்தாள் மற்றும் காகிதம் உற்பத்தி செய்யும் திட்டத்தினை; தமிழ்நாடு அரசு, 1979 ஆம் ஆண்டு தொடங்கியது. தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் எனும் இந்நிறுவனம், நிறுமங்கள் சட்டம் 1956–ன்கீழ் ஒரு பொதுத் துறை நிறுவனமாக 1979 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. கரும்புச் சக்கையை முதன்மை மூலப் பொருளாகப் பயன்படுத்தி, நிறுவனம் 50,000 டன் செய்தி அச்சுத்தாளையும், 40,000 டன் அச்சு எழுத்தாளையும் உற்பத்தி செய்யும் திறன்கொண்ட வசதிகள் படைத்த நிறுவனமாகத் தொடங்கப்பட்டது. நாட்டில் காடுகளின் பரப்பு குறைவதைத் தவிர்ப்பதே, இதன் முக்கிய அடிப்படை நோக்கமாகும்.

இந்த ஆலை ரூ.239 கோடி மூலதனச் செலவில் நிறுவப்பட்டு, 1985 ஆம் ஆண்டு வணிக அளவிலான உற்பத்தியைத் தொடங்கியது. உலக வங்கி இத்திட்டத்திற்கு 100 மில்லியன் அமெரிக்க டாலர் கடனுதவி வழங்கியது.

கரும்புச் சக்கையைக் கொள்முதல் செய்ய, இந்நிறுவனம் ஒரு தனித்தன்மை கொண்ட பண்ட மாற்று முறையைத் தேர்ந்தெடுத்துள்ளது. இந்நிறுவனம் ஐந்து சர்க்கரை ஆலைகளில் நிலக்கரி மற்றும் பழுப்பு நிலக்கரி கொண்டு இயக்கப்படும் கொதிகலன்களை இயக்கி, நீராவியைத் தயாரித்து இச்சர்க்கரை ஆலைகளுக்கு அளித்து கரும்புச் சக்கையைப் பெற்று வருகிறது. மேலும், இந்நிறுவனம் சந்தையில் கிடைக்கும் உபரி கரும்புச் சக்கையையும் கொள்முதல் செய்து வருகிறது.

தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம், ரூ.600 கோடி மொத்த செலவில் உற்பத்தித் திறனை 90,000 டன்னிலிருந்து 1,80,000 டன்னாக இரட்டிப்பாக்க ஒரு பெரிய விரிவாக்கத் திட்டத்தினை 1993–1996–ல் செயல்படுத்தியது. இத்திட்டச் செலவான ரூ.600 கோடியில் ஒரு பகுதியான ரூ.216 கோடி, நிறுவனத்தின் முதல் பொது சமபங்கு வெளியீட்டின் மூலம் 1995 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் திரட்டப்பட்டது. இத்திட்டத்தின் மீதமுள்ள முதலீட்டுத் தொகை, இந்திய தொழில் வளர்ச்சி வங்கியிடம் இருந்து பெறப்பட்ட கடன், நிறுவனத்தில் இருந்த உபரி உள்நிதி ஆதாரம் மற்றும் உலக வங்கி அளித்த 75 மில்லியன் அமெரிக்க டாலர் நேரடிக் கடனுதவி ஆகியவற்றின்மூலம் பெறப்பட்டது.

இந்த நிறுவனம், 1,711 பேர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பையும் ஏறத்தாழ 5,000 பேர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பினையும் அளித்துள்ளது.

[2006 ஆகஸ்ட் 23

மரபுசாரா மின் உற்பத்தியிலும், தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் பெரும் முயற்சி எடுத்து வருகிறது. திருநெல்வேலி மாவட்டத்தின் தேவர்குளத்திலும், பெருங்குடியிலும் காற்றாலையால் மரபுசாரா மின்சாரம் உற்பத்தி செய்ய ரூ.47.69 கோடி செலவில் 15 மெ. வாட் திறன் கொண்ட ஒரு காற்றுப் பண்ணையை நிறுவியது.

தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம், ரூ.565 கோடி செலவில் ஆலை மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. சுற்றுச்சூழல் தரங்களில் மேலும் சிறப்படையவும், உற்பத்திச் செலவைக் குறைக்கவும், தரத்தை மேம்படுத்தி போட்டியைச் சந்திப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இதன்மூலம் ஆலையில் உற்பத்தி செய்யப்படும் இரசாயன கரும்புச் சக்கை கூழ் பிரிவுகளில் உற்பத்தித் திறன் நாளொன்றுக்கு 520 டன்னிலிருந்து 800 டன்னாக உயர்த்தப்பட்டு, அவற்றில் மூலகக் குளோரின் வாயுவற்ற வெண்மையாக்கும் முறை அறிமுகப்படுத்தப்படும். புதிய, நவீன, நாளொன்றுக்கு 300 டன் திறன் கொண்ட மூலகக் குளோரின் வாயுவற்ற வெண்மையாக்கும் முறையுடைய கடினமரக் கூழ் பிரிவும், புதிய இரசாயன மீட்பு கொதிகலனும், இதர தளவாடங்களும் நிறுவப்படும். இத்திட்டம் முடிவுற்ற பின்னரும், நிறுவனம், மின் உற்பத்தியில் உபரிநிலை பெற்று, தொடர்ந்து உபரி மின்சாரத்தை மாநில மின் தொகுப்பிற்கு வழங்கும். மேலும், ஆலையின் காகித உற்பத்தித் திறன் ஆண்டொன்றுக்கு 2,30,000 மெ. டன்னிலிருந்து 2,45,000 மெ. டன்னாக உயரும். இத்திட்டம் 31-3-2007-ல் நிறைவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்திற்கான நிதி ஆதாரம் ரூ.150 கோடி, நிறுவனத்தின் சொந்த நிதியிலிருந்தும், ரூ.415 கோடி வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட கடன்கள்மூலமும் திரட்டப்பட்டுள்ளது.

தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம், தனது மரத் (மூலப் பொருள்) தேவையைப் பூர்த்திசெய்யும்பொருட்டு, ஒரு பெரிய பண்ணைக் காடுகள் திட்டத்தினை எடுத்துக் கொண்டுள்ளது. 2005-2006 ஆம் ஆண்டில் 9 மாவட்டங்களில் 1,466 விவசாயிகளை ஈடுபடுத்தி, 6005 ஏக்கர் நிலங்களில் பண்ணைக் காடுகள் திட்டத்தின்கீழ், கூழ் மரங்கள் நடப்பட்டன. இதேபோன்று, சுய பண்ணைத் திட்டத்தின்கீழ், 188 ஏக்கர் நிலங்களில் கூழ் மரங்கள் நடப்பட்டன. இவ்வாண்டு மொத்தம் 6,193 ஏக்கர் நிலங்களில் கூழ் மரங்கள் நடப்பட்டன. இது சென்ற ஆண்டு 3,075 ஏக்கராக இருந்தது.



2006 ஆகஸ்ட் 23]

## தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம்

நவீன பொருளாதாரத்தில், சிமெண்ட் ஒரு முக்கியத் தூணாக விளங்குகிறது. மாநிலத்தின் திறனை அதிகரிக்கவும் மற்றும் மாநிலத்தின் கனிம வளங்களைப் பயன்படுத்தவும், தமிழ்நாடு அரசு 1976 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11 ஆம் நாள், நிறுவனங்கள் சட்டத்தின்கீழ், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு (டிட்கோ) முழுமையாகச் சொந்தமான துணை நிறுவனமாக, தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் (டான்செம்) நிறுவப்பட்டது. தொடக்கத்தில், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தால் (டிட்கோ) 1970-ல், ஆலங்குளத்தில் நிறுவப்பட்ட சிமெண்ட் ஆலையை ஏற்றுக்கொண்டது. அதைத் தொடர்ந்து, டான்செம் நிறுவனம், மற்றொரு சிமெண்ட் ஆலையை, 1979 ஆம் ஆண்டு அரியலூரிலும், கல்நார் தகடு ஆலையை, 1981 ஆம் ஆண்டு ஆலங்குளத்திலும், மற்றும் கல்நார் சிமெண்ட் அழுத்தக் குழாய் ஆலையை 1984 ஆம் ஆண்டு மாயனூரிலும் அமைத்தது. டான்செம் நிறுவனம், 1989 ஆம் ஆண்டு, விருத்தாசலத்தில் இயங்காமல் இருந்த கற்குழாய் ஆலையை, தமிழ்நாடு பீங்கான் தயாரிப்பு நிறுவனத்திடமிருந்து ஏற்றுக்கொண்டது. டிட்கோ நிறுவனம் தனது பங்குகளை அரசுக்கு மாற்றி அளித்த காரணத்தால், 30-12-1994 முதல் தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம், அரசு நிறுவனமாக மாறியது.

டான்செம் ரூ.240 கோடிக்கு மேலாக ஆண்டு விற்பனை அளவு உள்ள பல இடங்களின் பல பொருட்களைத் தயாரிக்கும் நிறுவனம் ஆகும். இந்நிறுவனத்தின் பிரதான உற்பத்திப் பொருள் சிமெண்ட் ஆகும். அத்துடன், கல்நார் தகடு (Asbestos Cement Sheet), கல்நார் அழுத்தக் குழாய் (Asbestos Pressure Pipes) மற்றும் கற்குழாய் (Stoneware pipes) போன்றவைகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

**ஆலங்குளம் சிமெண்ட் ஆலை:**

2005-2006 ஆம் நிதியாண்டில் இந்த ஆலை 64.50% உற்பத்தித் திறன் பயன்பாட்டினை எட்டியுள்ளது. ஆலையில் உள்ள இரண்டு கிளிங்கர் சூளைகளில், ஒரு கிளிங்கர் சூளையில் 2003-ல் இருந்து பெரிய அளவில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் குறைந்த அளவு கிளிங்கர் உற்பத்தி மட்டுமே உள்ளது. 2004-2005 ஆம் ஆண்டில் ஈட்டிய 59% உற்பத்தித் திறனைக்காட்டிலும், இந்த ஆண்டில் ஆலங்குளம் ஆலை கணிசமாக, தனது உற்பத்தி மற்றும் விற்பனையை அதிகரித்துள்ளது. இந்த ஆண்டில் மொத்த விற்பனை விற்றுமுதல் ரூ.73.40 கோடியாக இருந்தது. நட்டத்தைக் குறைப்பதற்காக, சில பகுதிகளில் உள்ள இயந்திரங்களைப் புதுப்பிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

[2006 ஆகஸ்ட் 23

**அரியலூர் சிமெண்ட் ஆலை**

2005–2006 ஆம் நிதியாண்டில், இவ்வாலை 105.36% உற்பத்தித் திறன் பயன்பாடு எட்டியுள்ளது. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் நடைமுறைபடுத்தும் சமீபத்திய மாசுக் கட்டுப்பாடு அளவுகளைப் பின்பற்றுவதற்கும், ஏற்கெனவே உள்ள மாசுக் கட்டுப்பாடுக் கருவிகளின் தரத்தினை உயர்த்தும்பொருட்டு, பழுது பார்க்கவும் மற்றும், சில மாசுக் கட்டுப்பாடுக் கருவிகளை மாற்றுவதற்கும், சுமார் ரூ.2 கோடி செலவில் திட்டமிடப்பட்டு, செயல்கள் நடைபெற்று வருகின்றன. அரியலூர் ஆலை சர்வதேச தரச் சான்றிதழ், 9001 : 2000 பெறும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**கல்நார் தகடு ஆலை:**

2005–2006 ஆம் நிதியாண்டில், இவ்வாலை 98.75% உற்பத்தித் திறன் பயன்பாடு ஈட்டியுள்ளது. கடந்த 15 ஆண்டுகளில் இவ்வாண்டு ஈட்டிய உற்பத்தியானது மிக அதிகமாகும். இவ்வாண்டில் ஈட்டிய மொத்த விற்றுமுதல் ரூ.17.64 கோடியாகும்.

**கல்நார் அழுத்தக் குழாய் ஆலை:**

1999 ஜுன் முதல் உற்பத்திக்குத் தேவையான கேட்பாணைகள் இல்லாத காரணத்தினால், மாயனூரில் உள்ள கல்நார் அழுத்தக் குழாய் ஆலை, உற்பத்தியில்லாமல் செயலிழந்து இருப்பதால், கடந்த 2005–2006 ஆம் நிதியாண்டில் இவ்வாலை, ரூ.209.76 இலட்சம் நிகர நட்டத்தைச் சந்தித்துள்ளது. ஏற்கெனவே தயாரிக்கப்பட்ட குழாய்களை விற்பனை செய்ததன்மூலம் ரூ.0.58 கோடி மொத்த விற்றுமுதலை ஈட்டியுள்ளது. அரசு ஆணை எண் 3, தொழில் துறை (எம்.ஐ.டி. 2), நாள் 5–1–2005–ல் அரசு அனுமதித்ததன்படி விருப்ப ஓய்வு பெறும் திட்டம் நடைமுறைபடுத்தப்பட்டது. அநேக தொழிலாளர்கள் விருப்ப ஓய்வு பெறும் திட்டத்தில் சென்று விட்டார்கள். எனினும், தொழிலாளர்களில் ஒரு சிலர், ஆலை மூடலுக்கு எதிராக சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருக்கிறார்கள். விருப்ப ஓய்வு பெறும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதால், இவ்வாலையில் நிகர நட்டம், வருகிற ஆண்டில் குறிப்பிடத்தக்க அளவில் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



2006 ஆகஸ்ட் 23]

**கற்குழாய் ஆலை**

கேட்பாணைகள் இல்லாத காரணத்தினால், 2005–2006 ஆம் ஆண்டில், இவ்வாலை 23.61% உற்பத்தித் திறன் பயன்பாட்டை அடைந்துள்ளது. இதன் காரணமாக, இவ்வாலை ரூ.52.16 இலட்சம் நிகர நட்டத்தைச் சந்தித்துள்ளது. இவ்வாண்டு, ரூ.1.16 கோடி மொத்த விற்றுமுதலாக ஈட்டியுள்ளது.

தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம், தனது உற்பத்தியில் பெரும் பகுதியை அரசுத் துறைகளுக்கும் மற்றும் நிறுவனங்களுக்கும் தொடர்ந்து வினியோகம் செய்து வருகிறது.

[2006 ஆகஸ்ட் :

## தமிழ்நாடு கனிம நிறுவனம்

தமிழ்நாட்டில் கிடைக்கக்கூடிய பல்வேறு வகையான கனிமங்கை அறிவியல் முறையில் பயன்படுத்தக்கூடியதாகவும், கிராமப்புறப் பகுதியிே உள்ள மக்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் 1978 ஆம் ஆண்( ஏப்ரல் திங்களில் நிறுவனங்கள் சட்டத்தின்கீழ், தமிழ்நாடு கனிம நிறுவனட (டாமின்) நிறுவப்பட்டது.

இந்நிறுவனம் கருப்பு, வெள்ளை பாரடைசோ மற்றும் பல வண்ணட பாறைகளையும் உயர்வகைக் கனிமங்களான கிராபைட் குவார்ட்ஸ் பெல்ட்ஸ்பார், சுண்ணாம்புக் கல், சிலிகா மணல் மற்றும் வெர்மிகுலைட் கனிமங்களையும் வெட்டியெடுத்து தரம் வாய்ந்த பொருட்களை வாடிக்கையாளர்களின் மனநிறைவு பெறும்வகையில் விற்பனை செய்து வருகிறது.

### மொத்த விற்பனை

பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றி, தமிழ்நாடு கனிம நிறுவனம் மொத்த விற்பனையில் ஒவ்வொரு வருடமும் தொடர்ந்து வளர்ச்சி பெற்று வருகிறது:—

1. தொடர்ச்சியான தேவை மற்றும் அதிக விற்பனை விலை உடைய கனிமப் பொருட்களைத் தன்னிடம் உள்ள இயந்திரங்களையும் மற்றும் கட்டுப்படியான வாடகை இயந்திரங்களையும் கொண்டு நிறுவனமே உற்பத்தியை மேற்கொள்கிறது.
2. கனரக இயந்திரங்களையும் தொழிலாளர்களையும் ஈடுபடுத்தி குவாரிகளை பெரிய அளவில் மேம்படுத்தும் பணியினை, குத்தகை முகவருக்கு வழங்குகிறது.
3. அதிக தேவையற்ற மற்றும் உள்ளூர்ப் பிரச்சினைகள் உள்ள புதிய குவாரிகளை டாமின் ஆதாயம் வைத்து குவாரி முகவர் மற்றும் விற்பனை முகவருக்கு வழங்குகிறது.
4. உலகளாவிய ஒப்பந்தப்புள்ளி கோரும் காலத்தை நிர்ணயிக்கும்பொருட்டு, சந்தைத் தேவை, நிலவர அளிப்பு மற்றும் தனியார் குவாரி சந்தை உத்தி விவரங்களைக் களப் பணியாளர் வழியாகப் பெறுகிறது.

### இயக்கத்திலுள்ள குவாரிகள்

டாமின், 2001 ஆம் வருடத்தில் 34 குவாரிகளில் பணி மேற்கொண்டது. ஒவ்வொரு ஆண்டும் டாமின் உற்பத்தியில் ஈடுபடும்பொருட்டும், சுரங்கக்



2006 ஆகஸ்ட் 23]

குத்தகை அரசாங்கத்திலிருந்து பெற டாமின் தொடர்ந்து நல்ல கனிம வளக் குவாரிகளைக் கண்டறிகிறது. 2004–2005 ஆம் ஆண்டில் 53 ஆக இருந்த கிரானைட் குவாரி 2006–2007–ல் 67 ஆக உயர்ந்தது. 2006–2007-ல் டாமின் 49705 கன மீட்டர் உற்பத்தி செய்து சாதனை படைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2006–2007 ஆம் ஆண்டுக்கான விற்பனை இலக்கு ரூ. 120.92 கோடி என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### குவாரிகள் நவீனமயம்

மேலும் அதிக கிரானைட் குவாரிகளை இயக்குவதோடு, டாமின் அதன் குவாரிகளை நவீனப்படுத்துவதற்கு டைமண்ட் வயர் அறுப்பு இயந்திரங்கள், ஹைட்ராலிக் துளையிடும் இயந்திரம், பாறைகள் உடைக்கும் இயந்திரம் முதலானவற்றைப் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்கிச் சமூக நடைமுறைக்கு வழிசெய்தது.

### டாமின் தொழிற்சாலைகள்

**டாமின் பின்வரும் 6 தொழிற்சாலைகளை நிறுவியுள்ளது:–**

| | | |
|---|---|---|
| 1 | டாமின் கிரானைட்ஸ், மணலி, சென்னை | வீடு கட்டுவதற்குத் தேவையான கற்பலகைகள், சுவற்றில் ஒட்டக்கூடிய கற்பலகைகள் மற்றும் நினைவுச் சின்னங்கள் உற்பத்தி செய்தல் முதலியன |
| 2 | டாமின் கிரானைட்ஸ் ஓடுகள் தொழிற்சாலை, மாதேப்பள்ளி, கிருஷ்ணகிரி | கிரானைட் ஓடுகள் உற்பத்தி செய்தல் |
| 3 | கிரானைட்ஸ் ஓடுகள் தொழிற்சாலை, சூலமலை, கிருஷ்ணகிரி | கிராபைட் ஓடுகள் உற்பத்தி |
| 4 | கிராபைட் சுத்திகரிப்பு தொழிற்சாலை, சிவகங்கை | கிராபைட் துகள்கள் உற்பத்தி |
| 5 | இந்திய தர மணல் தொழிற்சாலை, எண்ணூர் | கான்கிரீட் சோதனை தர மணல் பிரிப்பு |
| 6 | வெர்மிகுலைட் விரிவாக்க தொழிற்சாலை, அம்பத்தூர் | வெர்மிகுலைட் விரிவாக்கம் உற்பத்தி |

### சேலம் மத்திய பணிமனை

டாமின், தமிழ்நாடு அக்ரோ தொழிற்சாலை நிறுவனத்தைத் தன்வசம் எடுத்துக் கொண்டு, அதனை அனைத்து வசதிகளும் கொண்ட மத்திய பணிமனையாக மாற்றியமைத்து மற்ற கோட்டங்களில் உள்ள டாமின் பொறியாளர்கள், பட்டயப் பொறியாளர்கள் மற்றும் பணியாளர்களைக் கொண்டு டாமின் இயந்திரங்கள் பழுதுபார்க்கப்படுகின்றன.

மத்திய பணிமனை, பிறகு அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனையாக மாற்றப்பட்டு அது இயந்திரங்கள் மற்றும் வாகனங்களைச் சுத்தம் செய்தல், பழுது நிவர்த்தி செய்தல், வண்ணம் தீட்டுதல் போன்றவற்றைச் செய்து வருகிறது.

### தொழிற் பயிற்சிக் கூடம்

டாமின் தொழிற் பயிற்சிக் கூடம் ஒன்றைத் திருச்சியில் துவக்கி அந்நிறுவனத்தின் அலுவலர்கள், ஊழியர்கள் மற்றும் சுரங்கத் தொழிலாளர்களுக்குச் சிறந்த துறை வல்லுநர்களைக் கொண்டு பயிற்சி அளித்து வருகிறது.

### டாமின் காட்சிக் கூடம்

உள்ளூர் சந்தை, கிரானைட், ஓடுகள், கற்பலகைகள் வாங்குபவர்களுக்காக, டாமின், சென்னை வடபழனியில் காட்சிக் கூடம் ஒன்றை நிறுவியுள்ளது. இக்காட்சிக் கூடம், டாமின் கிரானைட் தொழிற்சாலைகள், உள்ளூர்ச் சந்தை விற்பனையை ஊக்குவிக்கும் பொருட்டு ஏற்படுத்தப்பட்டது.

### சிவகங்கை தொழிற்சாலைகளை நவீனமயமாக்குதல்

சிவகங்கை வட்டத்தில் டாமின் சுமார் 242 ஹெக்டேர் கிராபைட் குத்தகை நிலத்தில், 3 மில்லியன் டன்கள் கிராபைட் தாது உள்ளதாக மதிப்பீடு செய்துள்ளது. இவற்றில் 14 விழுக்காடு நிலையான கார்பன் 3 இலட்சம் டன்கள் உள்ளது. டாமின் 1994 ஆம் ஆண்டில் ஆண்டொன்றுக்கு 8,400 மெட்ரிக் டன் அமைப்புத் திறன் கொண்ட கிராபைட் செழுமைப்படுத்தும் சுத்திகரிப்பு ஆலை ஒன்றை நிறுவியது. எனவே, இதன் உற்பத்தித் தரம் 84 விழுக்காட்டிலிருந்து 96 விழுக்காடாக உயர்ந்தது.



டாமின் சிவகங்கை கிராபைட் துகள்கள் தேவை உயர்ந்துள்ளது. 2006–2007–ல் உற்பத்தியில் இரு மடங்கு திறன் அதிகரிப்பதற்கு அதிக அளவில் விற்பனை தொடர்பான கோரிக்கைகள் வந்துள்ளன. தற்சமயம் நடைமுறையில் உள்ளதுபோல, வாங்குபவரை நிர்ணயம் செய்ய சந்தைத் தேவையைக் கவனத்தில்கொண்டு, டாமின் 2006–2007 ஆம் ஆண்டுக்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. எனவே, டாமின் 2006–2007–ல் நல்ல விற்பனை விலையை எதிர்நோக்கியுள்ளது.

டாமின், அதிக தேவையை நிறைவுசெய்ய, புவனேஸ்வரில் உள்ள மண்டல ஆராய்ச்சி ஆய்வக நிறுவனத்துடன் ஆலோசனை செய்து முக்கிய அடிப்படை வசதிகளுடன் சுரங்கப் பணிகளை விரிவுபடுத்திக் கூடுதல் ஆலை மற்றும் சாதனங்கள் ஏற்படுத்தி உற்பத்தியை மேம்படுத்த நீண்டகால விரிவான திட்ட அறிக்கை ஒன்றைத் தயார் செய்துள்ளது.

### மணலி தொழிற்சாலையை நவீனமயமாக்குதல்

தற்பொழுது மணலியில் உள்ள கேங்சா இயந்திரம் 280 x 180 செ. மீட்டர் கற்துண்டங்களை அறுக்கக்கூடியது. எனினும், தற்பொழுது அயல்நாட்டிலிருந்து வாங்குபவர்கள் பெரிய அளவு 350 x 200 செ.மீ. கற்பலகைகளைக் கோருகின்றனர். எனவே, அயல்நாட்டிலிருந்து வாங்குபவர்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய, பெரிய அளவுள்ள வீடு கட்டுவதற்கான கற்பலகைகளை உற்பத்தி செய்ய ரூ. 10 கோடி மதிப்பீட்டில் மணலியில் உள்ள தொழிற்சாலையை விரிவாக்கம் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கென புதிய நவீன கேங்சா சில புதிய இயந்திரங்கள், தற்சமயம் உள்ள இயந்திரங்களைப் புதுப்பித்தல் மற்றும் மேலும் புதிய பல இயந்திரங்கள் ஆகியவற்றை உருவாக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட இயந்திரங்களை நவீனப்படுத்தி, தற்சமயம் உள்ள மாத விற்பனை ரூபாய் 45 இலட்சத்திலிருந்து ரூபாய் 100 இலட்சத்தை அடைய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

[2006 ஆகஸ்ட் 23

## தமிழ்நாடு கிராபைட் நிறுவனம்

சிவகங்கை பகுதியில் கிடைக்கக்கூடிய கிராபைட் படிவங்களைப் பயன்படுத்தி, தமிழகத்தில் கிராபைட்டை மூலப் பொருளாகக் கொண்டு உற்பத்தி செய்யப்படுகின்ற தொழிற்கூடங்களை நிறுவி, அத்தொழிற்கூடங்களில் உயர் தொழில்நுட்பங்களைக் கையாண்டு அதன் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் நோக்கத்தில் தமிழ்நாடு கிராபைட் நிறுவனம் தொடங்கப்பட்டது.

தமிழ்நாடு கிராபைட் நிறுவனம், 19-03-1997 அன்று கம்பெனிகள் சட்டம், 1956-ன்படி நிறுவப்பட்டது. இதன் அனுமதிக்கப்பட்ட மூலதனத் தொகை ரூ.100 இலட்சம் முழுவதும் அரசுக்குச் சொந்தமானதாகும். இதன் தொடக்க முதலீடு ரூ.10 இலட்சம் ஆகும்.

டான்கிராப் நிறுவனம், பின்வரும் கிராபைட் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற்கூடங்களை ஏற்படுத்தி, அதற்குத் தேவையான தொழில்நுட்ப வளர்ச்சி வழங்க திட்டமிட்டிருந்தது:

1. விரிவாக்கப்பட்ட கிராபைட்
2. உயர்மிகு தொழில்நுட்பம் கொண்ட உதிரி பாகங்களில் பயன்படும் தகடுகள்/மூடிமுத்திரை/ இணைப்புத் தகடுகள்/ தானியங்கி தொழிற்சாலை
3. வெப்பந்தாங்கும் அலுமினிய கார்பன்/மக்னீஸியம் கார்பன் சூளைக்கற்கள் (எஃகு தயாரிப்பு)
4. வேதியியல் மாற்றத்திற்கு உட்படாத கிராபைட் மூசைகள் மற்றும் உலோக வார்ப்பு சிலிகான் கார்பைட் மூசைகள் (உலோகத் தொழிற்சாலை)
5. வாகனங்களுக்குத் தேவையான வேகத் தடுப்பான்கள் பிரேக் லைனிங் மற்றும் கிளச்சஸ் (தானியங்கித் தொழிற்சாலை)
6. கார்பன் தூரிகை மற்றும் தாங்குதிசை கூறு

டான்கிராப் நிறுவனம் மேற்கண்ட தொழிற்கூடங்களை நிறுவி அவற்றுக்கு உரிய உயர் தொழிற்நுட்பங்களை வழங்கும் நோக்கத்தில் தேசிய அளவில் உள்ள தொழில்நுட்ப வல்லுநர்கள், ஆராய்ச்சியாளர்கள், விஞ்ஞானிகள், கிராபைட் தொழில்நுட்பம் பெற்றவர்கள் மற்றும் அரசு உயர் அதிகாரிகளை அழைத்து கருத்தரங்கம் நடத்தியது.



2006 ஆகஸ்ட் 23]

மேலும், டான்கிராப் நிறுவனம் தேசிய அளவில் கிராபைட்டின் சந்தை நிலவரம் அதன் பயன்பாடு மற்றும் கிராபைட் தொழில் வளர்ச்சிக்கான தொழில்நுட்பங்கள் பற்றி தெரிந்துகொள்ள திருவாளர் டாட்டா கன்சல்டன்ஸி நிறுவனம் மூலமாகத் திட்ட அறிக்கை ஒன்றைத் தயார் செய்வதற்கு விரிவான ஆய்வு ஒன்றை நடத்தியது.

அவ்வாறு பெறப்பட்ட விவர அறிக்கைகள், மேற்கண்ட கிராபைட் தொழிற்சாலைகள் நிறுவ போதுமான ஊக்கம் அளிப்பதாக இல்லை. எனவே, கடந்த 1999 ஆம் ஆண்டு டான்கிராப்பின் இயக்குநர் குழுமம் கிராபைட்டைப் பயன்படுத்தி, சிவகங்கைப் பகுதியில் மேற்கண்ட உபதொழில்கள் தொடங்க உரிய சூழ்நிலை இல்லை என்பதைக் கருத்தில் கொண்டு, இதற்குத் தனியே ஓர் அரசு நிறுவனம் தேவையில்லை என முடிவு செய்து டான்கிராப் நிறுவனத்தை டாமின் நிறுவனத்துடன் இணைத்து, கிராபைட் சம்பந்தமான தொழில் வளர்ச்சியை டாமின் நிறுவனமே கவனித்துக் கொள்ளலாம் எனப் பரிந்துரை செய்தது.

டான்கிராப்பின் இயக்குநர் குழுமத்தின் பரிந்துரையை ஏற்று, தமிழக அரசு, கடந்த 2005 ஆம் ஆண்டு, அரசு ஆணை நிலை எண் 7, தொழில் (எம்எம்இ-1) துறை, நாள் 12-01-2005-ன்படி டான்கிராப் நிறுவனத்தை டாமின் நிறுவனத்துடன் இணைப்பதற்கு ஆணையிட்டுள்ளது. இணைப்பு சம்பந்தமாக தமிழ்நாடு கனிம நிறுவனம், சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்து வருகிறது.

[2006 ஆகஸ்ட் 23

## தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம்

மேக்னசைட் கனிமத்தை வெட்டியெடுப்பதற்காகவும், அதைக் கொண்டு மதிப்புக் கூட்டப்பட்ட மேக்னசைட் பொருட்களை உற்பத்தி செய்யும் நோக்கத்துடனும் நிறுவனங்கள் சட்டத்தின்கீழ் 1979 ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் பொதுத் துறை நிறுவனமாக தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் (டான்மேக்) சேலத்தில் நிறுவப்பட்டது. இந்நிறுவனம் ஆண்டொன்றுக்கு 30,000 மெட்ரிக் டன்கள் முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட் பொருட்களை உற்பத்தி செய்வதற்காக, ரூ.8.57 கோடி செலவில் சுழற்சூளை ஒன்று, 1985 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் தொடங்கி வைக்கப்பட்டது. இந்நிறுவனத்தின் மற்றொரு பிரிவான நிலைச் சூளை, மிதமாக எரியூட்டப்பட்ட மேக்னசைட் பொருட்களை உற்பத்தி செய்கிறது.

**2006–2007 ஆம் ஆண்டிற்கான உற்பத்தி மற்றும் விற்பனைக் குறியீட்டளவுகள் பின்வருமாறு:**

| | உற்பத்தி (மெ. டன்) | விற்பனை (மெ. டன்) |
|---|---|---|
| கச்சா மேக்னசைட் | 1,10,000 | 1,10,000 |
| முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட் | 35,000 | 35,000 |
| மித எரியூட்டப்பட்ட மேக்னசைட் | 12,000 | 12,000 |

2005–2006 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் தேய்மானத்திற்காக ரூ.33.84 இலட்சமும் மற்றும் வட்டிக்காக ரூ.142.60 இலட்சமும் ஒதுக்கிய பின் ரூ.79.51 இலட்சத்தை (தணிக்கைக்குட்பட்டு) இலாபமாக ஈட்டியுள்ளது. இந்நிறுவனம் மிதமாக எரியூட்டப்பட்ட மேக்னசைட்டை நெதர்லாந்து, எதியோப்பியா, ஜெர்மனி, வங்காளதேசம் மற்றும் சூடான் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது.

2005–2006 ஆம் ஆண்டில் எரிபொருள் (பர்னஸ் ஆயில்) விலை அதிக அளவில் உயர்ந்த காரணத்தால் நிறுவனத்தின் நிகர இலாபம் குறைந்துள்ளது. மேலும் 2006–2007 ஆம் ஆண்டு உயர்ந்து வரும் எரி பொருளின் விலையால் குறைந்த அளவே நிகர இலாபம் ஈட்டப்படும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.



2006 ஆகஸ்ட் 23]

தமிழ்நாடு மேக்னசைட் தொழிற்சாலையில் உருவாகும் புகை, புகைபோக்கிமூலம் இயற்கையான முறையில் திறந்தவெளியில் (Natural draft to atmosphere) விடப்படுகின்றது. இவ்வாறு வெளியேறும் புகையில் உள்ள தூசு அளவு ஒரு கனமீட்டரில் 20 – 40 கிராம் உள்ளது. தமிழ்நாடு மாசு கட்டுபாட்டு வாரியத்தில் அனுமதிக்கப்பட்ட தூசு அளவு ஒரு கனமீட்டரில் 50 மில்லி கிராம் மட்டுமே. எனவே, அரசு இதனைக் கருத்திற்கொண்டு, அரசாணை நிலை எண் 80, தொழில் துறை, நாள் 19–7–2006–ல் மேக்னசைட் நிறுவனம், காற்று மாசு கட்டுபாட்டு இயந்திரங்களை ரூபாய் 260 இலட்சம் மதிப்பீட்டில் தனது சொந்த நிதியிலிருந்து வாங்கி அமைப்பதற்கு ஆணை பிறப்பித்துள்ளது.

## தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம்

தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம் (டெல்) 1983 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் தொடங்கப்பட்டு, தனது வணிக உற்பத்தியை 1986 முதல் தொடங்கியுள்ளது. வேலூர் மாவட்டத்தில் உள்ள காட்பாடியில் தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம், வனத் துறைக்குச் சொந்தமான 750 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. தற்போது 856 பேர் இதில் வேலை செய்து வருகிறார்கள். தொடக்க முதல், தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் துணை நிறுவனமாக ஏற்படுத்தப்பட்டது. அதன் பிறகு தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் அதன் மொத்த பங்குகளையும் 15–11–2002 அன்று அரசுக்கு மாற்றம் செய்துவிட்டதால் இது அரசின் நிறுவனமாகிறது. ஆரம்பத்தில் நலிந்த நிறுவனமாக இருந்ததால் தொழில் மற்றும் நிதி புனரமைப்புக் கழகத்திடம் 1992 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் பதிவு செய்யப்பட்டது. பிறகு இந்நிறுவனம் இலாபம் ஈட்டத் துவங்கியது.

2003–2004 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் எமல்சன் வகை வெடிமருந்துகளை உற்பத்தி செய்யும் பிரிவை ரூ.5.40 கோடி செலவில் நிறுவியது. மேலும், மின்சாரமில்லா வெடிஊக்கிகள் உற்பத்தி செய்யும் பிரிவையும் சொந்த செயல் உத்தியால் நிறுவியது. பிறகு 2004–2005 ஆம் ஆண்டில் எமல்சன் வெடிமருந்துகள் உற்பத்தி செய்யும் பிரிவின் திறனை ஓர் ஆண்டுக்கு 5,000 மெ. டன்களில் இருந்து 10,000 மெ. டன்கள் உற்பத்தி செய்யும் அளவுக்கு அதிகப்படுத்தியுள்ளது.

நைட்ரோ கிளிசரின் (என்.ஜி.) வகை வெடிமருந்துகள் 1–4–2004 முதல் மத்திய அரசால் தடை செய்யப்பட்டன. இதனால் டெல் நிறுவனத்தின் செயல்பாடு மிகவும் பாதிக்கப்பட்டு, கடந்த இரண்டு ஆண்டுகளாக நட்டத்தில் இயங்கி வந்தது.

செயல்பாட்டுத் திறனை மேம்படுத்த டெல் நிறுவனம் நடப்பாண்டில் இரண்டு புதிய உற்பத்திப் பிரிவுகளை நிறுவ, அனைத்து ஏற்பாடுகளையும் செய்துள்ளது. இதில் மோனோ மெதைல் அமின் நைட்ரேட் (எம்.எம்.ஏ.என்.) மூலம் உற்பத்தி செய்யப்படும் வெடிமருந்துகளைத் தயாரிக்கும் பிரிவு ரூ.88.00 இலட்சத்தில் நிறுவப்பட்டு, உற்பத்தி 2006 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29 ஆம் தேதி துவக்கப்பட்டது. மற்ற 2 ஈ.எச்.என். அமிலம் தயாரிக்கும் பிரிவும் ரூ.95.00 இலட்சம் செலவில் நிறுவுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த 2 ஈ.எச்.என். திட்டம், வரும் அக்டோபர் மாதம் உற்பத்தியைத் துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.



**2006–2007 ஆம் ஆண்டிற்கான உற்பத்தி மற்றும் விற்பனை இலக்கு பின்வருமாறு:**

| | | |
|---|---|---|
| கலவை வெடிமருந்து | : | 1,786 மெட்ரிக் டன்கள் |
| எமல்சன் வெடிமருந்து | : | 6839 மெட்ரிக் டன்கள் |
| வெடியூக்கிகள் | : | 355.68 இலட்சம் (எண்களில்) |
| வெடித் திரிகள் | : | 145.67 இலட்சம் (மீட்டரில்) |
| விற்பனை | : | ரூ. 27.65 கோடி |

மேலும், டெல் நிறுவனம் யூ.ஈ.ஈ. என்கிற ஸ்பெயின் நாட்டு வெடிமருந்து தயாரிக்கும் ஒரு நிறுவனத்துடன் ஓர் ஒப்பந்தமும் செய்துள்ளது. இந்த ஒப்பந்தத்தின்மூலம் யூ.ஈ.ஈ. நிறுவனத்திடமிருந்து சீரிய வகை வெடிமருந்துகளைத் தயாரிக்கும் தொழில்நுட்பத்தைப் பெறவும், யூ.ஈ.ஈ. நிறுவனத்துடன் இணைந்து ஒரு கூட்டு நிறுவனத்தை இந்தியாவில் உருவாக்கி இக்கூட்டு நிறுவனத்தின்மூலம் தன்னுடைய அனைத்து உற்பத்திப் பொருட்களையும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தையில் விற்கவும் டெல் நிறுவனம் அனைத்து ஏற்பாடுகளையும் செய்து வருகிறது. மேற்கண்ட செயல் முறைகளினால் டெல் நிறுவனத்தின் செயல்பாடு மேம்படுத்தப்பட்டு டெல் நிறுவனம் மறுபடியும் இலாபகரமாக செயல்படும் ஒரு நிறுவனமாக மாறும் என்பதில் ஐயமில்லை.

டெல் நிறுவனம் சிறந்த பொருட்களை உற்பத்தி செய்வதற்காகவும், பணியாளர்களின் ஆரோக்கியத்தைக் கருத்தில்கொண்டு சிறந்த பாதுகாப்பு முறைகளைச் செயல்படுத்தவுள்ளதற்காகவும், மாசு கட்டுப்பாட்டு விதிகளை நல்லமுறையில் செயல்படுத்தியுள்ளதற்காகவும், ஐ.எஸ்.ஓ. 9001:2000, ஐ.எஸ்.ஓ. 14001:2004 மற்றும் ஓ.எச்.எஸ்.ஏ.எஸ். 18001:1999 தரச் சான்றிதழ்களை தற்போது பெற்றுள்ளது.

## சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனம்

சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனம் (எஸ்.எஸ்.எல்.) தனியார் துறையில் சரக்கு இரயில் பெட்டிகள், சுரங்க உபகரணங்கள் மற்றும் இரும்பு கட்டுமானங்கள் தயாரிப்பதற்காக 1956 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. தொழிலாளர் பிரச்சினைகள் காரணமாக 1969–1970–ல் மூடப்பட்டது. எனவே, இதில் பணிபுரிந்த சுமார் 1,200 ஊழியர்களின் நலனைக் கருத்தில்கொண்டு 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு இந்நிறுவனத்தினை தன் பொறுப்பில் ஏற்றுக்கொண்டது.

1988–1989 முதல் இந்நிறுவனத்தில் தொடர் இழப்பு ஏற்பட்டது. எதிர்மறையான நிகர மதிப்பின் காரணமாக, 1992 ஆம் ஆண்டு இந்நிறுவனம் தொழில் மற்றும் நிதி புனரமைப்பு வாரியத்தின் (BIFR) ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது. இக்குழுமத்தின் பரிந்துரையின் அடிப்படையில் 1998 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் புனரமைப்புத் திட்டம் ஒப்புதல் அளிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது. எனினும், மறு சீரமைப்புத் திட்டத்தின்மூலம், இந்நிறுவனம் புத்துயிர் பெற இயலவில்லை.

சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனத்தின் செயல்பாடு குறித்து ஆய்வு செய்ய திரு. எஸ்.வி.எஸ். இராகவன் அவர்கள் தலைமையிலான மாநில பொது நிறுவனங்கள் தொடர்பான குழுவை நியமித்தது. அக்குழு 31–03–1998 அன்றைய நிலையில் தமிழ்நாடு அரசு சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனத்தின் நிலையினை மதிப்பீடு செய்யுமாறு பரிந்துரை செய்தது. மேலும், மாநில அரசின் நிதி உதவியின்றி, சதர்ன் ஸ்ட்ரக்சுல்ஸ் நிறுவனம் தன்னை நிலைநிறுத்த முடியாவிட்டால் நிறுவனத்தை மூடிவிடவேண்டும் என்றும், அதன் அசையா சொத்துகளைச் சந்தை நிலவர மதிப்பின்படி விற்றுவிட வேண்டும் என்றும் பரிந்துரை செய்தது. சந்தையில் கடுமையான போட்டி நிலவியதாலும், தொழிலில் ஏற்பட்ட மந்தநிலை காரணமாகவும் இந்நிறுவனத்தின் மறுசீரமைப்பு முயற்சிகள் வெற்றி பெறவில்லை. இதன் விளைவாக BIFR புனரமைப்புத் திட்டம் தோல்வி அடைந்ததாக 22–3–2002 அன்று அறிவித்தது. மாற்று நிர்வாகத்துக்கு, நல்ல கம்பெனிகள் ஏதும் முன்வரவில்லை. எனவே, கம்பெனியை மூடுவதற்கு BIFR முடிவு செய்து இறுதிகட்ட விசாரணைக்கு 17–11–2005 அன்று ஏற்பாடு செய்து இருந்தது.

14–11–2005 அன்று இந்தியன் வங்கி, கம்பெனியின் சொத்துகளை தன்வசப்படுத்திக் கொள்ளும் அறிவிப்பை நிறுவனத்தின் வாசலில் ஒட்டியது. மேலும், இந்த அறிவிப்பை பத்திரிகைகளிலும் வெளியிட்டுள்ளது.





17–11–2005 அன்று டில்லியில் நடந்த இறுதி BIFR கூட்டத்தில், இந்தியன் வங்கி எடுத்த நடவடிக்கை பற்றி எடுத்துக் கூறியது. இதனால் தொழில் மற்றும் நிதி புனரமைப்பு வாரியம் (BIFR) நலிந்த நிறுவனச் சட்டத்தின் (U/S–22 (1) of SICA 1985)கீழ் எடுக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டன என்று அறிவித்தது. மேலும் BIFR–லிருந்து கம்பெனி விடுவிக்கப்பட்டது.

தமிழக அரசின் விருப்ப ஓய்வு திட்டத்தின் (VRS) கீழ், இந்நிறுவனத்தின் அனைத்துப் (737) பணியாளர்களும் விடுவிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தவிர 12 ஊழியர்கள் ஆட்குறைப்பின்கீழ் (Retrenchment) விடுவிக்கப்பட்டுள்ளனர். 6 ஊழியர்கள் மட்டும் பாக்கியுள்ள பணிகளைக் கவனிக்க மீண்டும் ஒப்பந்த அடிப்படையில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

[2006 ஆகஸ்ட் 23

## தமிழ்நாடு உப்பு நிறுவனம்

தமிழ்நாடு உப்பு நிறுவனம், 1974 ஆம் ஆண்டு, நிறுவனங்கள் சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டது. இதனுடைய நோக்கம், உப்பு உற்பத்தி செய்வதோடு உப்பு சார்ந்த துணைப் பொருள்கள் தயாரிக்கும் உள்ளாற்றலைத் தன்னலப்படுத்தும்பொருட்டு, இம்மாநிலத்தில் பயன்படுத்தப்படுகிறது. குறிப்பாக, மிகவும் பின்தங்கிய இராமநாதபுரம் மாவட்டத்தில் கடற்கரையோரப் பகுதிகளில் உப்பு உற்பத்தி செய்து அதன்மூலம் அதிக வேலைவாய்ப்பினைத் தொடர்ந்து அதிகரிக்கும் பொருட்டு இந்நிறுவனம் அமைக்கப்பட்டது. தமிழ்நாடு உப்பு நிறுவனம் தற்பொழுது தொழிற்சாலைகளுக்குத் தேவையான உப்பு மற்றும் செறிவூட்டப்பட்ட உப்புக்களான, அயோடின் கலந்த உப்பு மற்றும் இரும்பு அயோடின் கலந்த உப்பு ஆகியவற்றை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டு வருகிறது. மூலதனம் முழுமையாக மாநில அரசின் பங்குத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டம் வாலிநோக்கத்திலுள்ள மாரியூர் வாலிநோக்கம் உப்பு வளாகத்தில் தமிழ்நாடு உப்பு நிறுவனத்திற்கு ஒதுக்கப்பட்ட 5,524 ஏக்கர் மொத்த பரப்பளவில், 4,825 ஏக்கர் பரப்பளவு உப்பு உற்பத்திக்கு மிகவும் பயன்படத்தக்க பகுதியாய் வளர்ச்சியடைந்துள்ளது. இந்நிறுவனம் இதுவரை 3,210 ஏக்கர் பரப்பளவு உபபு உற்பத்திக்காக மேம்படுத்தி உள்ளது. தமிழ்நாடு உப்பு நிறுவனம் 1990-1991 முதல் தொடர்ச்சியாக இலாபம் ஈட்டி வருகிறது. 2004-2005 ஆம் ஆண்டில் (வரிக்குப்பின்) நிகர இலாபம் ரூ. 83.59 இலட்சம் ஈட்டியுள்ளது. 2005-2006 ஆம் ஆண்டில் வரிக்குப்பின் நிகர இலாபம் ரூ.114.14 இலட்சம் ஈட்டியுள்ளது.

தமிழ்நாடு உப்பு நிறுவனம், தமிழ்நாடு மட்டுமல்லாது, அண்டை மாநிலங்களான கர்நாடகம் மற்றும் ஆந்திரப் பிரதேசத்திலும் தனது விற்பனை நடவடிக்கைகளை விரிவுபடுத்தியுள்ளது. இந்நிறுவனம் அயோடின் கலந்த உப்பின் விற்பனையில் பொது விநியோகம் மூலமாகவும் முன்னேற்றம் அடைந்துள்ளது. இதன்மூலம் தென் மாநிலங்களில் அயோடின் மற்றும் இரும்புச் சத்து குறைபாட்டினை மக்களிடையே நீக்குவதற்குப் பெரிதும் உதவி புரிந்துள்ளது.

தமிழ்நாட்டில் இந்நிறுவனம் தொடர்ந்து அயோடின் கலந்த உப்பை மதிய உணவுத் திட்ட மையங்களுக்கும் பொது விநியோகத் துறையின் மூலமாகவும் விநியோகம் செய்து வருகிறது. தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் முயற்சியால் பொது விநியோகத் திட்டத்தின்மூலம்



2006 ஆகஸ்ட் 23]

வழங்கப்படும் அயோடின் கலந்த உப்பினை, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள 25 விழுக்காடு மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். இச்செயல்பாடு, அயோடின் குறைபாட்டினால் ஏற்படும் நோய்களற்ற நாடு என்ற அந்தஸ்தை அடைவதற்கு முன்னேற்பாடாக அமையும். தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் இந்தச் சீரிய முயற்சியை "யுனிசெப்" "மைக்ரோ நியூட்ரியன்ட்" மற்றும் அயோடின் பற்றாக்குறையினால் ஏற்படும் குறைபாடுகளைக் கட்டுப்படுத்தும் கனடா மற்றும் பன்னாட்டு மன்றம் மிகவும் பாராட்டியுள்ளது.

கனடா நாட்டிலுள்ள இலாப நோக்கைக் கருத்தில் கொள்ளாத ஒட்டாவாவிலுள்ள மைக்ரோ நியூட்ரியன்ட் நிறுவனம், தமிழ்நாடு உப்பு நிறுவனத்திற்கு 2005-ல் இருவித செறிவூட்டப்பட்ட உப்பு தயாரிப்பதற்குகந்த தொழில்நுட்ப ஆலோசனை மற்றும் தேவையான உபகரணங்கள் மற்றும் கெமிக்கல்ஸ் ஆகிய பொருள்களை சுமார் ரூ. 2.26 கோடி அளவில் மானியமாக வழங்கியுள்ளது. இதன்மூலம் அயோடின் மற்றும் இரும்புச் சத்து குறைபாட்டினை மக்களிடையே நீக்குவதற்குப் பெரிதும் உதவி புரிந்துள்ளது.

தமிழ்நாடு உப்பு நிறுவனம், ரூ.2 கோடி செலவில் பொதுத் துறை-தனியார் துறை பங்கேற்புடன் வாலிநோக்கத்தில் உப்பு உற்பத்தி செய்து வரும் மிகை பிட்டனைப் பயன்படுத்தி புரோமின் தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சிபாக் என்கிற நிறுவனம் புரோமின் தயாரிக்கும் திட்டத்திற்கான வேலைகளை மே 2004-ல் தொடங்கியுள்ளது. இந்நிறுவனத்திற்குத் தேவையான இயந்திரத் தளவாடங்களை நிறுவும் வேலை நவம்பர் 2005-ல் முடிவடைந்துள்ளது. சட்டமுறையான ஒப்புதல் பெறப்பட்ட பின்பு, தமிழ்நாடு உப்பு நிறுவனம் புரோமின் உற்பத்தி செய்வதற்குரிய மூலப்பொருளான உப்புக் கழிவு நீரிலிருந்து வரும் பிட்டனை வழங்கும். இத்திட்டத்தின்மூலம் தமிழ்நாடு உப்பு நிறுவனத்திற்கு வருவாய் மற்றும் கூடுதல் வேலைவாய்ப்பு உருவாக்கப்படும்.

மத்திய அரசின் "நமக் மஸ்தூர் ஆவாஸ் யோஜனா" வீடு கட்டும் திட்டத்தின்கீழ் ரூ.1.25 கோடி செலவில் தமிழ்நாடு உப்பு நிறுவனம் (செயல்படுத்தும் நிறுவனம்) மாரியூர் வாலிநோக்கம் உப்புக் கூட்டுத் திட்டத்தில் பணியாற்றும் தொழிலாளர்களுக்காக 250 வீடுகள் கட்டும் பணி, 2004 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் செலவில் 90 சதவீத பங்கினை மத்திய அரசும், மீதமுள்ள 10 சதவீத பங்கினை பயன்பெறும் தொழிலாளர்களும் ஏற்க வேண்டும். மத்திய அரசு இதுவரை ரூ.101.25 இலட்சங்கள் தமிழ்நாடு உப்பு நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது. மொத்தம் 250 தொழிலாளர்களில் இதில்

[2006 ஆகஸ்ட் 23

பயன்பெறுவதற்கு, 218 தொழிலாளர்கள் இதுவரை தங்களது பங்காக ரூ.32.70 இலட்சங்கள் வழங்கியுள்ளனர். மீதமுள்ள 32 நபர்களைக் கண்டறிந்து இத்திட்டத்தின்மூலம் பயன்பெற, தமிழ்நாடு உப்பு உற்பத்தியாளர் சங்கத்திடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. டிசம்பர் 2004–ல் ஏற்பட்ட சுனாமியினாலும், 2005 ஆம் ஆண்டில் இடையிடையே பெய்த மழையினாலும் கட்டுமானப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன. மொத்தமுள்ள 250 வீடுகளின் கட்டுமானப் பணிகள் முடிவடைந்துள்ளன. தற்போது மின்வசதி செய்யும் பணி நடைபெற்று வருவது மிக விரைவில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.



2006 ஆகஸ்ட் 23]

## தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம்

தமிழ்நாட்டில் பெரிய அளவிலான தொழில் முதலீடுகளைக் கவரும் நோக்கத்துடன் தமிழ்நாடு தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம் நிறுவப்பட்டது. நிறுவப்பட்டதிலிருந்து இதுவரை 65–க்கும் மேற்பட்ட பெரும் முதலீட்டுத் திட்டங்களை வெற்றிகரமாகத் தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளை அமைக்கும்வகையில் பன்னாட்டு நிறுவனங்களைக் கவர்ந்துள்ளது.

தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனத்தின் பணிகள்:

- தமிழ்நாட்டில் தொழில் சார்ந்த திட்டங்களில் முதலீட்டைக் கவருதல் மற்றும் முதலீட்டை மேம்படுத்துதல்.
- பெரிய அளவிலான முதலீட்டுத் திட்டங்களுக்கு ஒற்றைச் சாளர ஆவண தயாரிப்பு மையமாகச் செயல்படுதல்.
- மைய மாநில அரசுகளின் கொள்கைகள், உட்கட்டமைப்பு வசதிகள், விதிக்கப்படுகின்ற வரிகள், முதலீட்டு வாய்ப்புகள் பற்றிய விரிவான செய்திகளை முதலீட்டாளர்களுக்கு அளிப்பது..
- இந்திய அரசு மற்றும் (FIPB) வெளிநாட்டு முதலீட்டுக் குழுமத்தால் ஒப்புதலளிக்கப்பட்ட வெளிநாட்டு முதலீட்டுக் கருத்துருக்களின் செயலாக்கங்களைக் கண்காணித்தல்.

இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் முக்கிய இடங்களில் முதலீடு ஊக்குவிப்பு முகாம்கள் நடத்த "கைடன்ஸ்" நிறுவனம் அரசுக்கு உதவி செய்கிறது. ஏற்றுமதித் திட்டங்கள் அல்லது மண்டலங்களுக்கான உட்கட்டமைப்பு வசதி உருவாக்கத்திற்காக மைய அரசின் அசைடு (ASIDE) திட்டத்தைக் கண்காணிக்கும் முகமையாளராகவும் "கைடன்ஸ்" செயல்படுகிறது. சிறப்புப் பொருளாதார மண்டல (SEZ) திட்டங்களுக்குத் தற்போது இந்நிறுவனம் கண்காணிப்பதோடு ஆதரவளித்து வருகிறது. சிறப்புப் பொருளாதார மண்டலம் தொடர்பாக செயற்குறிப்புகளை மைய அரசுக்குப் பரிந்துரைக்குமுன் மதிப்பீடு செய்வதிலும் "கைடன்ஸ்", அரசுக்கு உதவுகிறது.

[2006 ஆகஸ்ட் 23

## புவியியல் மற்றும் சுரங்கத் துறை

புவியியல் மற்றும் சுரங்கத் துறை, 1983 ஆம் ஆண்டு, தொழில் மற்றும் வணிகத் துறையிலிருந்து பிரிக்கப்பட்டு தோற்றுவிக்கப்பட்டது.

புவியியல் மற்றும் சுரங்கத் துறையின் செயல்பாடுகளாவன:–

(அ) கனிமங்களை ஆய்வு செய்தல் மற்றும் அக்கனிமங்களின் இருப்பின் மதிப்பினை ஆய்வு செய்தல்.

(ஆ) புவியியல் தொழில்நுட்ப முறைகளின்மூலம் மலைப் பகுதிகளான நீலகிரி மற்றும் கொடைக்கானல் போன்ற பகுதிகளை ஆய்வு செய்தல்.

(இ) பலவகை சட்டங்கள் மற்றும் விதிகளின்படி கனிம நிர்வாகம்.

(ஈ) கனிம வருவாயினை அதிகரித்து அரசுக்கு வருவாய் ஈட்டுதல்.

(உ) கனிம மேம்பாட்டினை ஊக்குவிக்கும் பணிகள் மேற்கொள்ளுதல்.

### (அ) கனிம ஆய்வு

புவியியல் மற்றும் சுரங்கத் துறை, மாநிலத்தின் தெற்கு மற்றும் மேற்குப் பகுதி மாவட்டங்களில் சுண்ணாம்புக் கல்லினைப் பற்றிய ஆய்வினை மேற்கொண்டுள்ளது. தூத்துக்குடி மாவட்டத்தில் சாத்தான்குளம் என்ற இடத்தில் சுண்ணாம்புக்கல் ஆய்வு முடிவுற்ற பிறகு, தற்போது திருநெல்வேலி மாவட்டத்தில் பரப்பாடி மற்றும் இலங்குளம் போன்ற இடங்களில் சுண்ணாம்புக் கல்லிற்கான ஆய்வு தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தூத்துக்குடி மாவட்டத்தில் 8 துரப்பணத் துளைகள் போடப்பட்டு 96 மண்கலவை மாதிரிகளும், திருநெல்வேலி மாவட்டத்தில் 2 துரப்பணத் துளைகள் போடப்பட்டு, 68 மண்கலவை மாதிரிகளும் எடுக்கப்பட்டுள்ளன. திருநெல்வேலி மாவட்டத்தில் 100 மேற்பரப்பு மாதிரிகள் எடுக்கப்பட்டு பகுப்பாய்வு செய்ய சேகரிக்கப்பட்டுள்ளன. இந்த ஆய்வானது தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

### (ஆ) குன்னூர் மற்றும் கொடைக்கானலில் புவியியல் தொழில்நுட்ப மையங்கள்

புவியியல் தொழில்நுட்ப மையங்கள் நீலகிரியிலும், கொடைக்கானலிலும் தொடர்ந்து செயல்பட்டுவருகின்றன.



2006 ஆகஸ்ட் 23]

இத்தொழில்நுட்ப மையங்களால் சமர்ப்பிக்கப்படும் ஆய்வறிக்கைகளைக் கொண்டு, அம்மாவட்டங்களின் வளர்ச்சி செயல்களுக்கும், சுற்றுப்புறச் சூழல்களுக்கும் எவ்விதப் பாதிப்பும் ஏற்படாமல் தடுத்து, வளர்ச்சிப் பணிகள் தங்குதடையின்றி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நிலச்சரிவு ஏற்பட்டுள்ள பகுதிகள் மற்றும் நிலச்சரிவு ஏற்படக்கூடிய பகுதிகளைப் பற்றிய ஆய்வறிக்கைகள் மாவட்ட நிர்வாகத்தினைச் செவ்வனே நிர்வகிக்கவும், அப்பகுதி மக்கள் மற்றும் பொருள்களை நிலச் சரிவிலிருந்து காப்பதற்கும் பேருதவியாக இருக்கின்றன.

நீலகிரி மாவட்டத்தில் 449 இடங்கள் புலத் தணிக்கை செய்யப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. கொடைக்கானலில் நிலச் சரிவுப் பகுதிகளை அறிவதற்கான நிலச் சரிவு மண்டல வரைபடங்கள் தயார் செய்யப்பட்டு வருகின்றன. இரண்டு இடங்களில் புலத் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு, அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் இங்கு மலைத்தொடர் சாலைப் பகுதிகளை ஆராய்ந்து, எங்கெல்லாம் நிலச் சரிவு ஏற்படக்கூடிய பகுதிகள் இருக்கின்றனவோ, அங்கு போக்குவரத்து தங்குதடையின்றிச் சென்றுவர, இப்புவியியல் தொழில்நுட்ப மையங்கள் அறிக்கை அளித்துள்ளன.

### (இ) கனிம நிர்வாகம்

திருவாரூர் மாவட்டத்தைத் தவிர அனைத்து மாவட்டங்களிலும், மாவட்ட நிர்வாகத்திற்கு உதவியாக மாவட்ட அலுவலகங்கள் இருக்கின்றன. மாவட்ட ஆட்சித் தலைவர், ஆற்று மணல் தவிர மற்ற பொதுவாக உபயோகப்படுத்தப்படும் சிறுகனிமங்களின் குவாரி குத்தகை வழங்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளார். கிரானைட் மற்றும் பெருங்கனிமங்களுக்கான சுரங்கக் குத்தகை உரிமம் வழங்குவதற்கான விண்ணப்பங்கள் கனிம சட்ட விதிகளின்படி புவியியல் மற்றும் சுரங்கத் துறையின் இயக்குநருக்கு அனுப்பப்படுகிறது. 1998 ஆம் வருடம் முதல், பட்டா நிலங்களில் கிடைக்கும் பெருங் கனிமங்களுக்கான சுரங்கக் குத்தகை உரிமம் வழங்கும் அதிகாரம் புவியியல் மற்றும் சுரங்கத் துறை இயக்குநருக்கு வழங்கப்பட்டு, தொடர்ந்து சுரங்கக் குத்தகை உரிமங்கள் அளிக்கப்பட்டு வருகின்றன. அரசுப் புறம்போக்கு நிலங்கள், பட்டா மற்றும் அரசுப் புறம்போக்கு ஆகிய இரு நிலங்களிலும் கலந்து விண்ணப்பிக்கப்படும் பெருங்கனிமம் மற்றும் கிரானைட் குவாரி குத்தகைகளை மாநில அரசே வழங்கும்.

[2006 ஆகஸ்ட் 23

இத்துறையானது, வருவாய்த் துறையினரின் துணையோடு சட்டத்திற்குப் புறம்பாகக் கனிமங்களை வெட்டியெடுத்தல் மற்றும் அவற்றினைக் கள்ளத்தனமாகக் கடத்துதல் போன்ற செயல்களைத் தடுத்துச் சிறப்பாகச் செயலாற்றி வருகிறது.

**(ஈ) கனிம மேம்பாட்டை ஊக்குவிக்கும் பணிகள்**

இத்துறையானது, பெங்களூரில் பிப்ரவரி 2006-ல் நடைபெற்ற ஏழாவது சர்வதேச கிரானைட் கற்களின் கண்காட்சி அரங்கினில் பங்கேற்று பலவகைப்பட்ட கிரானைட் கற்களைக் காட்சிக்கு வைத்து, நம் மாநிலத்தினைக் கிரானைட் இருப்புகளின் சிறந்த இடமாக எடுத்துக்காட்டி தொழில் முனைவோருக்குத் தெரிய வழிவகை செய்துள்ளது.

**மற்ற செயல்பாடுகள்**

**(அ) புவியியல் தகவல் மையம் மற்றும் அடிப்படை விவரம்**

இத்துறையானது, கனிம நிர்வாகம் மற்றும் கனிம ஆராய்ச்சிகள் மற்றும் தணிக்கை ஆட்சேபனை தொடர்பான அனைத்து விவரங்களையும் மின்னணு தகவல் மையம்மூலம் கணிப்பொறிகளில் மிகத் துல்லியமாக உருவாக்க, புவியியல் தகவல் மையம் நிர்வகிக்கப்பட்டுள்ளது. மேலும், வரைபடங்களை எண்படிமானப்படுத்தும் தன்மையும் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**(ஆ) மின்னணு நிர்வாகம் மற்றும் அலுவலக நிர்வாகம்**

மின்னணு நிர்வாகம் மற்றும் அலுவலக நிர்வாகத்தினைச் செயல்படுத்த கணிப்பொறிகள் பெறப்பட்டு 14 மாவட்ட அலுவலகங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் 2006-2007-ல் ரூ.10 இலட்சம் செலவில் 15 மாவட்ட அலுவலகங்களுக்குக் கணினிகள் அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த மாவட்டங்களில் உள்ள அலுவலகங்கள், கனிம நிர்வாகத்திற்கான அனைத்து விவரங்களையும் மின்னணு தகவல்களாக உருவாக்கி வருகின்றன. இத்தகவல்கள் தமிழ்நாடு அரசு அலுவலகங்கள் ஒருங்கிணைப்பு மின்னணு இணையம் செயல்பாட்டுக்கு வரும்போது அத்துடன் இணைக்கப்படும்.



2006 ஆகஸ்ட் 23]

**(இ) புவி இருப்பிட தகவல் அறியும் சாதனம்**

நடைமுறையில் சுரங்கம் மற்றும் குவாரிகளின் விவரங்களை மின்னணு தகவல் மையம் உருவாக்க (18) கையடக்கமான புவி இருப்பிடம் அறியும் சாதனங்களை எல்காட் நிறுவனத்தின்மூலமாகப் பெறுவதற்கான ஆணைகள், மார்ச் 2006-ல் வழங்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டு 2006-2007-ல் பகுதி II திட்டத்தின்மூலம் 9 மாவட்ட அலுவலகங்களுக்கு மேலும் 9 சாதனங்கள் ரூ.2.70 இலட்சத்தில் வாங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

## சர்க்கரைத் தொழில்

சர்க்கரைத் தொழில், தமிழ்நாட்டில் உள்ள தொழில்களில் ஒரு முக்கியத் தொழிலாக விளங்குகிறது. இத்தொழில் மாநிலத்தில் உள்ள கரும்புச் சாகுபடிக்கு ஒரு முன்னணி இணைப்பாக விளங்கி ஊரகப் பகுதிகளில் நல்ல வேளாண் வருவாயைப் பெருக்க உதவியாக உள்ளது. கரும்புச் சாகுபடி, அறுவடை, போக்குவரத்து மற்றும் இதர பணிகளில் ஈடுபட்டுள்ள பல இலட்சம் ஊரகப் பகுதி மக்களுக்கும் வேளாண் தொழிலாளர்களுக்கும் நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்பை இத்தொழில் உருவாக்குகிறது.

2. தமிழ்நாட்டில் 38 சர்க்கரை ஆலைகள் உள்ளன. அவற்றில் 16 ஆலைகள் கூட்டுறவுத் துறையிலும், 3 ஆலைகள் பொதுத் துறையிலும், 19 ஆலைகள் தனியார் துறையிலும் உள்ளன. நிறுவனங்கள் சட்டத்தின்கீழ் 1974 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட பொதுத் துறை நிறுவனமான தமிழ்நாடு சர்க்கரைக் கழகம், மூன்று பொதுத் துறை சர்க்கரை ஆலைகளான அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை, பெரம்பலூர் சர்க்கரை ஆலை மற்றும் மதுரா சர்க்கரை ஆலை ஆகிய ஆலைகளை இயக்கி வருகிறது. மதுரா சர்க்கரை ஆலை 2002–2003 அரைவைப் பருவம் முதல் இயக்கப்படவில்லை. கூட்டுறவுத் துறையில் உள்ள 16 சர்க்கரை ஆலைகளில் மதுராந்தகம் சர்க்கரை ஆலை மற்றும் மதுரை மாவட்டம் அலங்காநல்லூரில் உள்ள தேசிய கூட்டுறவுச் சர்க்கரை ஆலை ஆகியவை 2001–2002 மற்றும் 2002–2003 அரைவைப் பருவம் (அக்டோபர் முதல் செப்டம்பர் வரை) முதல் இயக்கப்படவில்லை. தேசிய கூட்டுறவுச் சர்க்கரை ஆலை 2005–2006 அரைவைப் பருவம் முதல் மீண்டும் அரைவையைத் தொடங்கியுள்ளது. தனியார் துறையில் உள்ள அருணாசலம் சர்க்கரை ஆலை 2003–2004 அரைவைப் பருவம் முதல் அரைவை மேற்கொள்ளப்படவில்லை. இந்த 38 ஆலைகளின் அரைவைத் திறன் நாளொன்றிற்கு 1,04,550 டன்களும் ஆண்டிற்கு 180 இலட்சம் டன்களும் ஆகும். கூட்டுறவு, பொது மற்றும் தனியார் துறைகளில் ஓர் ஆலை வீதம் இயக்கப்படாததால், இயங்கும் ஆலைகளின் எண்ணிக்கை 35 ஆகக் குறைந்துள்ளது. இவைகளின் அரைவைத் திறன் நாளொன்றுக்கு 98,300 டன்களாகும். 2004–2005 அரைவைப் பருவத்தில் 114.92 இலட்சம் டன் கரும்பு அரைக்கப்பட்டு 11.09 இலட்சம் டன் சர்க்கரையை 9.65 விழுக்காடு சராசரி கட்டுமானத்தில் இவ்வாலைகள் உற்பத்தி செய்துள்ளன. மேலும், இறக்குமதி செய்யப்பட்ட மூலச் சர்க்கரையிலிருந்து (Raw Sugar) தனியார் ஆலைகள் 5.69 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்தன. 2005–2006 அரைவைப் பருவத்தில், மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை





ஆலை, மதுரா சுகர்ஸ் மற்றும் அருணாசலம் சுகர்ஸ் ஆகிய ஆலைகளைத் தவிர, தமிழகத்திலுள்ள அனைத்து ஆலைகளிலும் 210.00 இலட்சம் டன் கரும்பு அரைக்கப்பட்டு 19.32 இலட்சம் டன் சர்க்கரையை 9.20 விழுக்காடு சராசரி கட்டுமானத்தில் உற்பத்தி செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது. தமிழகத்திலுள்ள கூட்டுறவு, பொதுத் துறை மற்றும் தனியார் துறை சர்க்கரை ஆலைகள் 30–06–2006 வரை 182.76 இலட்சம் டன் கரும்பு அரைக்கப்பட்டு, 18.15 இலட்சம் டன் சர்க்கரையை 9.34 விழுக்காடு சராசரி கட்டுமானத்தில் உற்பத்தி செய்துள்ளது. 2004–2005 பருவத்தில் இவ்வாலைகளின் அரைவைத் திறன் 70 விழுக்காடாக இருந்தது. இது 2005–2006 ஆம் பருவத்தில் 124 விழுக்காடாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

2006–2007 அரைவைப் பருவத்தில் மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, மதுரா சர்க்கரை ஆலை மற்றும் அருணாசலம் சர்க்கரை ஆலைகள் தவிர, தமிழகத்திலுள்ள 35 ஆலைகளிலும் 241.93 இலட்சம் டன் கரும்பு அரைக்கப்பட்டு 22.98 இலட்சம் டன் சர்க்கரையை 9.50 விழுக்காடு சராசரி சர்க்கரைக் கட்டுமானத்தில் உற்பத்தி செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள்

2004–2005 ஆம் அரைவைப் பருவத்தில் 14 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளிலும், 2 பொதுத் துறை சர்க்கரை ஆலைகளிலும் கரும்பு அரைவை மேற்கொள்ளப்பட்டு 31.65 இலட்சம் டன் கரும்பு அரைக்கப்பட்டு 3.12 இலட்சம் டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டது.

2005–2006 ஆம் அரைவைப் பருவத்தில் கூட்டுறவு மற்றும் பொதுத் துறையிலுள்ள 19 சர்க்கரை ஆலைகளில், மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை மற்றும் மதுரா சுகர்ஸ் ஆலைகளைத் தவிர, 17 சர்க்கரை ஆலைகள் கரும்பு அரைவையை மேற்கொண்டு வருகின்றன. இவ்வாலைகளில், 30–06–2006 வரை 61.53 இலட்சம் டன் கரும்பு அரைக்கப்பட்டு, 5.76 இலட்சம் டன் சர்க்கரையை 9.32 விழுக்காடு சராசரி கட்டுமானத்தில் உற்பத்தி செய்துள்ளன.

### கரும்புச் சக்கை

சர்க்கரை ஆலைகள், அரைவை செய்தபின் மீதமுள்ள கரும்புச் சக்கையைப் பயன்படுத்தி நீராவியை உற்பத்தி செய்து அதன்மூலம் ஆலைகளை இயக்குகின்றன. உபரி கரும்புச் சக்கையை தமிழ்நாடு காகித

நிறுவனத்திற்கு காகிதம் மற்றும் செய்தித்தாள் தயாரிக்க விற்பனை செய்து வருகிறது.

**இணை மின் உற்பத்தி**

சர்க்கரை உற்பத்தியின்போது உருவாகும் நீராவியைப் பயன்படுத்தி மின்சாரம் உருவாக்கப்படுகிறது. கூட்டுறவுத் துறையில் மூன்று சர்க்கரை ஆலைகள் அதாவது, எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை (சேத்தியாதோப்பு), செய்யாறு கூட்டுறவுச் சர்க்கரை ஆலை (அனக்காவூர்) மற்றும் சுப்ரமணிய சிவா கூட்டுறவுச் சர்க்கரை ஆலை (அரூர்) ஆகியவை 20 MW இணை மின் உற்பத்தி நிலையங்களை அமைத்துள்ளன. இந்த மூன்று மின் உற்பத்தி நிலையங்களும் வெற்றிகரமாகச் செயல்பட்டு உற்பத்தியாகும் உபரியான மின்சாரம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு விற்கப்பட்டு வருகிறது. தனியார் துறையில் 15 சர்க்கரை ஆலைகளில் 300 MW இணை மின் உற்பத்தி செய்யப்பட்டு உபரியான மின்சாரம், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு விற்கப்பட்டு வருகின்றது.

**கருப்பஞ்சாற்றுக் கசண்டு**

தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள் 2004–2005 அரைவைப் பருவத்தில், 1.34 இலட்சம் டன்கள் கருப்பஞ்சாற்றுக் கசண்டு உற்பத்தி செய்துள்ளன. 2005–2006 அரைவைப் பருவத்தில் கருப்பஞ்சாற்றுக் கசண்டு உற்பத்தி 2.75 இலட்சம் டன் அளவில் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. 2005–2006 அரைவைப் பருவத்தில் ஜூன் 2006 முடிய 2.65 டன் கருப்பஞ்சாற்றுக் கசண்டு உற்பத்தி செய்துள்ளன. 2006–2007 ஆம் ஆண்டில் தனியார் சர்க்கரை ஆலைகள் உட்பட சுமார் 10.00 இலட்சம் மெட்ரிக் டன்கள் கருப்பஞ்சாற்றுக் கசண்டு சர்க்கரை ஆலைகளில் உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வடிப்பகங்கள்**

சர்க்கரை ஆலைகளுடன் இணைந்து மொத்தமாக 10 சர்க்கரை ஆலைகளில் வடிப்பகங்கள் இயங்குகின்றன. இவற்றில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் உள்ள இரண்டு வடிப்பகங்கள் (சேலம் மற்றும் அமராவதி) 2005–2006 ஆம் பருவத்தில் 83.13 இலட்சம் லிட்டர் எரிசாராயம் உற்பத்தி செய்துள்ளன. 2006–2007 ஆம் பருவத்தில் 195.40 இலட்சம் லிட்டர் எரிசாராயம் உற்பத்தி செய்யப்படுமென



எதிர்பார்க்கப்படுகிறது. 2006–2007 ஆம் ஆண்டில் ஜூன் 2006 முடிய 38.34 இலட்சம் லிட்டர் எரிசாராயம் சேலம் மற்றும் அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை வடிப்பகங்களிலும், 91.99 இலட்சம் லிட்டர் எரிசாராயம் தனியார் சர்க்கரை ஆலை வடிப்பகங்களிலும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

**எத்தனால்**

நமது மாநிலத்தில் 5 சதவீதம் எத்தனால் கலந்த பெட்ரோல் வழங்க 625 இலட்சம் லிட்டர் எத்தனால் தேவைப்படுகிறது.

தமிழ்நாட்டில் 9 மாவட்டங்களில் பெட்ரோலுடன் எத்தனால் கலக்கும் திட்டத்தை தேசிய எண்ணெய் நிறுவனங்கள் செயல்படுத்தியுள்ளன. இதற்காக 2005–2006 ஆம் ஆண்டு மாநில அரசு 185.34 இலட்சம் லிட்டர் எத்தனால் ஒதுக்கியுள்ளது. எத்தனால் கலக்கும் திட்டம் மிகவும் வெற்றிகரமாகச் செயல்படுவதால் இத்திட்டத்தை 2006–2007 ஆம் ஆண்டில் மேலும் 20 மாவட்டங்களில் விரிவுபடுத்த மத்திய அரசு இவ்வரசைக் கேட்டுள்ளது. இதற்காக எண்ணெய் நிறுவனங்கள் 440.88 இலட்சம் லிட்டர் ஒதுக்கீடு செய்யக் கேட்டுள்ளன. இவ்வரசு இது தொடர்பான ஆணையை விரைவில் வெளியிட உள்ளது. விவசாயிகள் மற்றும் சர்க்கரைத் தொழிலில் உருவாக்கும் உற்பத்திப் பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கும் இத்திட்டத்திற்கு, இவ்வரசு முழு ஆதரவு அளிக்கும்.

தற்போது திருவாளர்கள் ஆரூரான் சுகர்ஸ் லிமிடெட், திருவாளர்கள் தரணி சுகர்ஸ் அண்ட் கெமிக்கல்ஸ் லிமிடெட், திருவாளர்கள் ராஜஸ்ரீ சுகர்ஸ் அண்ட் கெமிக்கல்ஸ் லிமிடெட், திருவாளர்கள் கோத்தாரி சுகர்ஸ் அண்ட் கெமிகல்ஸ் லிமிடெட், திருவாளர்கள் சக்தி சுகர்ஸ் லிமிடெட் ஆகிய 5 ஆலைகளில் எத்தனால் உற்பத்தி செய்யப்படுகிறது. இவ்வாலைகளின் மொத்த உற்பத்தித் திறன் ஆண்டிற்கு 645 இலட்சம் லிட்டர் ஆகும்.

[2006 ஆகஸ்ட் 23

## இணைப்பு II

*(443 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 31 – தகவல் தொழில்நுட்பவியல் துறை கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007

இந்தியாவில் தகவல் தொழில்நுட்பவியல் துறை, கடந்த சில ஆண்டுகளில் வேகமான வளர்ச்சி கண்டுள்ளது. தமிழகத்தில் இந்தப் புரட்சிக்கு இவ்வரசின் முந்தைய ஆட்சிக் காலத்தில்தான் வித்திடப்பட்டது. 1997 ஆம் ஆண்டில் இந்தியாவிலேயே தகவல் தொழில் நுட்பவியல் கொள்கையை வெளியிட்ட முதல் மாநிலம் தமிழகம்தான் என்பது பெருமைக்குரியது. உலகத்தரம் வாய்ந்த டைடல் பூங்காவும் அன்றைய ஆட்சி காலத்தில்தான் (4–7–2000) நிறுவப்பட்டது. இதேபோன்று 1996–2001 காலக்கட்டத்தில் தகவல் தொழில்நுட்பவியல் துறையில் பல தொலைநோக்கு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. இத்திட்டங்கள்தான் தமிழகத்தில் தகவல் தொழில்நுட்பவியல் புரட்சிக்கு அடித்தளம் அமைத்தன.

தமிழகம் தகவல் தொழில்நுட்பவியல் (IT), தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகள் (ITES), வணிக செயற்பாடு ஒப்படைப்பு (BPO) மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் வன்பொருள் (IT Hardware) உற்பத்தி ஆகிய துறைகளில் பெரிய அளவிலான வளர்ச்சியைக் கண்டுள்ளது. தமிழ்நாட்டிலிருந்து மென்பொருள் ஏற்றுமதி, இதுவரை ரூ.14,115 கோடி அளவை எட்டியுள்ளது. தகவல் தொழில்நுட்பத் துறையின் ஆழ்ந்த மற்றும் விரிவான வளர்ச்சியை, அதன் ஏற்றுமதிப் பிரிவின் பின்வரும் கூறுகளில் இருந்து மதிப்பீடு செய்யலாம். பயனீட்டு மென்பொருள் மற்றும் கணினி மென்பொருள் (70%) (Application Software), தகவல் தொழில் நுட்பம் சார்ந்த சேவைகள் மற்றும் வணிக செயற்பாடு ஒப்படைப்பு (13%) (ITES/BPO), தொலைத் தொடர்பு மென்பொருள், பெருமளவிலான ஒருங்கிணைப்புகளின் வடிவமைப்பு மற்றும் இணைய வலைத் தீர்வுகள் (8%) (Communication Software, VLSI Design and Web Solutions), தகவல் தொழில்நுட்பவியலில் கலந்தாலோசனை (6%) (IT Consultancy), உற்பத்திப் பொருள் மேம்பாடு (3%) (Product Development).



2006 ஆகஸ்ட் 23]

மென்பொருள் நிறுவனங்களின் எண்ணிக்கையும் மிக வேகமாக வளர்ந்து வருகிறது. இதுவரை 1,437 மென்பொருள் நிறுவனங்கள் உருவாகியுள்ளன. தேசிய மற்றும் உலக அளவிலான நிறுவனங்கள் தங்கள் வணிக அமைப்பு மற்றும் உற்பத்தி வசதிகளை இம்மாநிலத்தில் நிறுவுவதோடு மட்டுமல்லாமல் பெரிய அளவில் விரிவுபடுத்தி வருகின்றன என்பது, தமிழகம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்கு உகந்த மாநிலமாக இருக்கிறது என்பதற்கு ஒரு சிறந்த சான்றாகும். இந்திய அளவில் தலைசிறந்த தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனங்களான டாடா கன்சல்டன்ஸி சர்வீசஸ், இன்ஃபோசிஸ், விப்ரோ, சத்யம், எச்.சி.எல், பாட்னி கம்யூட்டர்ஸ், ஐஃப்ளெக்ஸ், போலாரிஸ் மற்றும் ஹெக்சாவேர் போன்றவை மட்டுமல்லாமல் மிகப் பெரிய பன்னாட்டு நிறுவனங்களான அக்சென்சர், வெரிசான், சான்சா, ஆபிஸ்டைகர், ஸ்டான்டர்டு சார்டர்ட்டு வங்கி, ஏபிஎன் ஆம்ரோ, அல்காடெல், காக்னிசன்ட் டெக்னாலஜிஸ் போன்றவைகளும் தங்கள் நிறுவனங்களைத் தமிழகத்தில் நிறுவி உள்ளன.

தமிழகம், மென்பொருள் துறையில் தலைமைப் பீடமாக இருக்கின்ற நிலையில் மிகப்பெரிய பன்னாட்டு வன்பொருள் உற்பத்தியாளர்களான, நோக்கியா, பாக்ஸ்கான், ப்ளெக்ஸ்ட்ரானிக்ஸ் மற்றும் மோட்டோரோலா போன்ற நிறுவனங்கள் தங்களின் தொழிற்சாலைகளைத் தமிழகத்தில் அமைத்துள்ளன.

இந்நிறுவனங்களைத் தமிழகத்திற்குக் கொண்டுவர மத்திய அரசின் தகவல் மற்றும் தொலைத்தொடர்புத் துறை பெரும்பங்கு வகித்துள்ளது. தமிழகத்தைத் தகவல் தொழில்நுட்பவியல் துறையில் தலைசிறந்த மாநிலமாக உருவாக்கிட, மத்திய, மாநில அரசுகள் இணைந்து முனைப்புடன் செயல்பட்டு வருகின்றன. மேலும், பல தேசிய மற்றும் பன்னாட்டு நிறுவனங்கள் தமிழகத்தில் முதலீடு செய்ய விருப்பம் தெரிவித்துள்ளன.

### புதிய தகவல் தொழில்நுட்பவியல் கொள்கை

இதுவரை அடைந்த முன்னேற்றங்களைத் தக்க வைக்கவும், தகவல் தொழில்நுட்பவியல் துறை மிக வேகமான வளர்ச்சி அடைய உந்து சக்தியாகத் திகழவும், தமிழ்நாடு அரசு ஒரு புதிய தகவல் தொழில்நுட்பவியல் கொள்கையை வடிவமைக்க முடிவு செய்துள்ளது. இப்புதிய கொள்கையானது, மென்பொருள், தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகள், வணிக செயற்பாடு ஒப்படைப்பு, உற்பத்திப் பொருள் மேம்பாடு, அறிவுசார் செயற்பாடு ஒப்படைப்பு ஆகிய தகவல்

[2006 ஆகஸ்ட் 23

தொழில்நுட்பவியல் தொழிலின் அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கிய விரிவான கொள்கையாக அமையும். தகவல் தொழில்நுட்பவியல் வன்பொருள் உற்பத்தி மற்றும் உயிரி தொழில்நுட்பவியலுக்கென மேலும் ஒரு தனியான கொள்கையையும் அரசு உருவாக்கி வெளியிடும். சுருங்கக்கூறின், இக்கொள்கையானது, அறிவுசார் பொருளாதாரத்தின் (Knowledge Economy) எல்லாவித வளர்ச்சிக்கும் தேவையான சூழல் அமைய வழிவகுக்கும்.

**இரண்டாவது டைடல் பூங்கா**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மற்றும் முன்னாள் மாண்புமிகு மத்திய தொழில் மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர், நினைவில்வாழும் திரு. முரசொலி மாறன் ஆகியோர் முன்னிலையில், மாண்புமிகு முன்னாள் இந்தியப் பிரதமர் அவர்களால், உலகத் தரம் வாய்ந்த தகவல் தொழில்நுட்பவியல் வசதிகளுடன் கூடிய டைடல் பூங்கா 4-7-2000 அன்று திறந்து வைக்கப்பட்டது. மிக நவீனமான 12 அடுக்குமாடிகள் கொண்ட இக்கட்டடம் 1.28 மில்லியன் சதுர அடி பரப்பளவில் அமைந்துள்ளது. 32 இந்திய மற்றும் பன்னாட்டு நிறுவனங்கள் இக்கட்டடம் திறக்கப்பட்ட நாளிலிருந்து முழுமையாக இடங்கொண்டுள்ளன. 12,000-த்துக்கும் மேற்பட்டவர்கள் இங்கு பணிபுரிகின்றனர்.

டைடல் பூங்காவின் தொடக்க விழாவிலேயே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சென்னையில் இரண்டாவது டைடல் பூங்காவும் அமைக்கப்படும் என்று அப்போது அறிவித்தார்கள். அதன்படி, சென்னை தரமணியில் இரண்டாவது டைடல் பூங்கா அமைக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

**கோவையில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், பெங்களூரில் உள்ள விப்ரோ மற்றும் இன்ஃபோசிஸ் நிறுவனங்களை, மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சருடன் 15-6-2006 அன்று நேரில் சென்று பார்வையிட்டு விவாதித்ததின் அடிப்படையில், தமிழ்நாடு அரசும், மத்திய அரசின் மென்பொருள் தொழில்நுட்பப் பூங்கா நிறுவனமும் இணைந்து, டைடல் பூங்கா போன்றதொரு தகவல் தொழில்நுட்பப் பூங்காவைக் கோவையில் உருவாக்குவது என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசுடன் மத்திய அரசின் மென்பொருள் தொழில்நுட்பப் பூங்கா நிறுவனமும் தனியார் தொழில் நிறுவன பங்காளர்களும், இணைந்து செயல்படும் ஒரு கூட்டு நிறுவனமாக இது அமையும்.



2006 ஆகஸ்ட் 23]

**மதுரை, திருச்சி, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய நகரங்களில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்காக்கள்**

தகவல் தொழில்நுட்பவியலின் புரட்சிகரமான செயல்பாடுகளைத் தமிழகத்தின் மற்ற நகரங்களிலும் பரவச் செய்ய அரசு உறுதி பூண்டுள்ளது. எனவே, முன்னர் அறிவிக்கப்பட்ட சென்னை மற்றும் கோயம்புத்தூர் தவிர, மதுரை, திருச்சி, சேலம், திருநெல்வேலி ஆகிய நகரங்களிலும் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பூங்காக்கள் அமைப்பதற்காகத் தகுந்த நிலங்களைத் தெரிவு செய்யும் பணியைச் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தொடங்கியுள்ளனர்.

**தகவல் தொழில்நுட்பம், வடிவமைத்தல் மற்றும் உற்பத்தி தொடர்பான தேசிய உயர்தனிக் கல்வி மையம் அமைத்தல்**

மத்திய அரசின் மனித வள மேம்பாட்டுத் துறை, தகவல் தொழில்நுட்பம், வடிவமைத்தல் மற்றும் உற்பத்தி தொடர்பான தேசிய உயர்தனிக் கல்வி மையத்தை (National Centre of Excellence – Indian Institute of Information Technology, Design and Manufacturing) – சர்வதேசத் தரத்தில் சென்னையில் அமைத்திட முடிவு செய்துள்ளது. அதற்காக மத்திய அரசுக்கு நிலம் தருவது குறித்து 2003 ஆம் ஆண்டு முதல் முடிவெடுக்கப்படாமலும், நிலம் ஒப்படைக்கப்படாமலும் இருந்ததால், கட்டடப் பணிகளை முடித்து, இந்தப் பெருமைமிக்க நிறுவனம் தொடங்கப்படுவது தாமதப்பட்டு வந்தது. இந்த அரசு அமைந்தவுடன் தேவையான நிலத்தை மத்திய அரசிடம் ஒப்படைக்கவும், உரிய ஒத்துழைப்பினை நல்கி இணைந்து செயல்படவும் முடிவெடுத்து அறிவித்துள்ளது. தமிழகத்தில் அமைய உள்ள பெருமைக்குரிய இந்நிறுவனத்தால் தகவல் தொழில்நுட்பவியல் முதலீடுகளை நமது மாநிலம் மேலும் கவருகின்ற தன்மையைப் பெறும்.

**மாநில தகவல் தொழில்நுட்பக் குழு (State Information Technology Task Force)**

நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டபடி, தமிழகத்தில் பல்வேறு கட்டமைப்பு வசதிகள் செய்வது குறித்து அரசுக்குப் பரிந்துரைகள் அளிக்க தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பிரதிநிதிகளைக் கொண்ட மாநிலத் தகவல் தொழில்நுட்பக் குழு (State Information Technology Task Force) ஒன்று அமைக்கப்படும். இது நமது மாநிலத்துக்குத் தகவல் தொழில்நுட்பவியல் துறையில் அதிக முதலீடுகளை ஈர்க்கும்.

[2006 ஆகஸ்ட் 23

## இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம்

வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாத வீடுகளுக்கு, இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் தன்னிகரில்லாத் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது. செப்டம்பர் 15 அறிஞர் அண்ணா பிறந்த நாள், செப்டம்பர் 17 தந்தை பெரியார் பிறந்த நாள் ஆகியவற்றை நினைவுகூரும்வகையில், இந்த இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம், செப்டம்பர் திங்கள் முதல் வாரத்திலேயே தொடங்கப்பட்டு, தொடர்ந்து செயல்படுத்தப்படும். தற்போது முதற்கட்டமாக வழங்கப்பட உள்ள 30,000 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளைக் கொள்முதல் செய்வதற்குச் செலவாகும் தொகை ரூ.9 கோடி; தவிர கூடுதலாக இத்திட்டத்திற்காக ரூ.750 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து இத்திட்டம் தொடர்ந்து நிறைவேற்றப்படும் என்பதனை அறிந்து கொள்ளலாம்.

இந்தத் தொலைக்காட்சிப் பெட்டிகளை முறையாகக் கொள்முதல் செய்யவும், குறை நேராமல் விநியோகிக்கவும், சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இக்குழுவில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், காங்கிரஸ் கட்சியின் சார்பில் திரு. டி. சுதர்சனம், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் திரு. கோ.க. மணி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் திரு. சி. கோவிந்தசாமி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் திரு. வை. சிவபுண்ணியம், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் திரு. கு. செல்வம், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் சார்பில் திரு. எச். அப்துல் பாசித், புரட்சி பாரதம் சார்பில் திரு. பூவை மு. ஜெகன் மூர்த்தி ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். இக்குழு, 27–6–2006 அன்று கூடி, இத்திட்டத்தைத் தொடங்கி வைக்க முதற்கட்டமாக 30,000 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை, வெளிப்படையான தேசிய ஒப்பந்தப்புள்ளி முறையில் கொள்முதல் செய்வது என்றும், அடுத்த கட்டமாக இத்திட்டத்திற்குத் தேவைப்படும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வெளிப்படையான சர்வதேச ஒப்பந்தப்புள்ளி (International Open Competitive Bidding) முறையில் கொள்முதல் செய்வது என்றும் முடிவு எடுத்துள்ளது. தேசிய அளவிலான ஒப்பந்தப்புள்ளிகள் 24–7–2006–க்குள் பெறப்பட்டு சட்டமன்றக் கட்சிகளின் உறுப்பினர்களின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவின் ஆலோசனையின்பட 27–7–2006 அன்று இறுதி செய்யப்பட்டது.



2006 ஆகஸ்ட் 23]

முதற்கட்டமாகப் பெரியார் நினைவு சமத்துவபுரங்களில் உள்ள குடும்பத்தினருக்கும், சமத்துவபுரம் இதுவரை அமைக்கப்படாத நீலகிரி மாவட்டத்தில் உள்ள மலைவாழ் பழங்குடி குடும்பங்களுக்கும், சென்னை மாநகரில் வடசென்னையில் ஒன்றும், தென்சென்னையில் ஒன்றுமாகக் குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளில் உள்ள குடும்பங்களுக்கும், மாநிலத்தில் உள்ள அனைத்து மறுவாழ்வு இல்லங்களில் வாழ்வோருக்கும் இவ்வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படும்.

## தமிழகத்தில் கணினி உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளுக்குச் சிறப்புச் சலுகைகள்

தமிழ்நாட்டில் கணினி பயன்பாட்டை அதிகரிக்கவும், கணினியை எல்லோரும் எளிதில் வாங்கக்கூடிய நிலையை உருவாக்கவும் தமிழகத்தில் புதிய கணினி உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை நிறுவ முன்வரும் நிறுவனங்களுக்குச் சிறப்புச் சலுகைகள் அளிக்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். தமிழ்நாட்டில் சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் ரூ.100 கோடிக்கு மேல் முதலீடு செய்யும் கணினித் தொழிற்சாலைகள் உற்பத்தி செய்யும் கணினிகளின்மீது விதிக்கப்படும் பொது மற்றும் மத்திய விற்பனை வரியிலிருந்து உச்சவரம்பின்றி விலக்கு அளிக்கப்படும். இச்சலுகை இந்தத் தொழிற்சாலைகள் வணிக ரீதியாகச் செயல்படும் ஆண்டிலிருந்து பத்தாண்டுகளுக்கு அளிக்கப்படும்.

## கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு

தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு முதன்மைத் தேவையான அதிநவீனரகக் கட்டடக் கட்டமைப்புகளை உருவாக்கி, தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் சூழலுக்கு ஏற்ப "தொழில் செய்யத் தயார்" என்ற நிலையை தமிழகத்தில் உருவாக்க வேண்டி தகவல் தொழில் நுட்பவியல் கட்டடங்களுக்குத் "தடையில்லாச் சான்றிதழ்" வழங்கும் அதிகாரத்தை, எல்காட் நிறுவனத்திற்குத் தமிழக அரசு வழங்கியுள்ளது. அண்மையில், எல்காட் நிறுவனம் தடையில்லாச் சான்றிதழ் வழங்கும் நடைமுறைகளை ஒழுங்குபடுத்தி, அதன்மூலம், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பெறப்பட்ட 72 மணி நேரத்தில் தடையில்லாச் சான்றிதழ் வழங்குகிறது. இதுவரை எல்காட் 143 தகவல் தொழில் நுட்பவியல் கட்டடங்களுக்கு 48 மில்லியனுக்கும் மேலான சதுர அடி அளவுக்குத் தடையில்லாச் சான்றிதழை வழங்கியுள்ளது. இக்கட்டடங்களில் 23 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு, அவை முழுவதும் பயன்பாட்டில் உள்ளன. மற்ற கட்டடங்கள் வெவ்வேறு

நிலைகளில் கட்டுமானப் பணியில் முன்னேற்றமடைந்து வருகின்றன. இத்தகைய அபாரக் கட்டடக் கட்டமைப்பு வசதிகள் முதலீட்டாளர்களைப் பெருமளவில் ஈர்க்கும்.

மிகவும் தாமதமாகி வந்த, தகவல் தொழில்நுட்பவியல் விரைவுப் பாதைத் திட்டம், முடுக்கிவிடப்பட்டு வெகுவிரைவில் நிறைவேற்றப்படும். எந்தவிதமான இடர்ப்பாடுகளும் இல்லாமல் இத்திட்டம் வெகுவிரைவாக நிறைவடைய இத்திட்ட வடிவமைப்பு மறு சீரமைக்கப்பட்டு, பணி முன்னேற்றங்களைக் கண்காணிப்பதற்காக ஓர் உயர் மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது. தகவல் தொழில்நுட்பவியல் துறையின் அபார வளர்ச்சியினால் இத்துறையில் பெருகிவரும் வேகமான மக்கள் தொகையைக் கணக்கில் கொண்டு, இச்சவாலைச் சென்னை நகரம் எதிர்கொள்ளுகிற வகையில் ஒருங்கிணைந்த பன்முகத் துறை மேம்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்படுகிறது. சென்னைப் பெருநகரில் அதிகரித்து வரும் மக்கள் தொகைக்குத் தேவையான அடிப்படை வசதிகளான மின்சாரம், சாலைகள், குடிநீர், கழிவுநீர் மற்றும் மழைநீர் வடிகால் ஆகிய வசதிகளை வழங்குவதற்குத் தேவையான மாபெரும் திட்டம் ஒன்று வடிவமைக்கப்படுகிறது. பெருநகர மக்களின் போக்குவரத்துத் தேவையை மேம்படுத்துவதற்கு, பெருநகர் இரயில் திட்டம் ஒன்றும் திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை நகரின் கட்டமைப்பு வசதி நெருக்கடிகளைக் குறைப்பதற்காகச் சென்னை நகருக்கு அருகில் துணை நகரங்கள் உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தக் கட்டமைப்பு வசதி மேம்பாடுகளின் காரணமாக தேசிய மற்றும் சர்வதேச முதலீட்டாளர்கள் தங்கள் முதலீட்டிற்கு உகந்த இடமாகச் சென்னையைத் தொடர்ந்து தெரிவு செய்ய வழிவகை செய்யும்.

## தகவல் தொழில்நுட்பவியல் மேம்பாடு

தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகளின் முதலீடுகளுக்கு உகந்த மாநிலமாகத் தமிழகத்தை உயர்த்துவதற்காக, தமிழக அரசு எல்காட் நிறுவனம் மூலமாகப் பல்வேறு தேசிய மற்றும் சர்வதேசத் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறது.

இவற்றுள் தலைசிறந்தது, 'கனெக்ட்' என்ற நிகழ்ச்சி ஆகும். அரசு, தொழில்நுட்ப நிறுவனங்கள், சேவை வழங்குவோர், கல்வி நிறுவனங்கள் மற்றும் முக்கியமாக இறுதிக் கட்டப் பயனாளிகள், தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் துறையைக் கையாளுகின்ற வகையினர்



அனைவரையும் ஒரே இடத்தில் ஒருங்கிணைக்கின்ற ஓர் அரங்கமாக இந்த "கனெக்ட்" நிகழ்ச்சி திகழ்கிறது. கடந்த 5 ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வரும் "கனெக்ட்" நிகழ்ச்சிகள், தகவல் தொழில் நுட்பவியல் தொழிலில் இந்தியா மற்றும் வெளிநாடுகளின் கவனத்தைப் பெருமளவில் ஈர்த்து, தேசிய மற்றும் சர்வதேசத் தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் நிகழ்வுகளின் பட்டியலில் மிகவும் பிரசித்தி பெற்ற நிகழ்ச்சியாக உயர்ந்துள்ளது. இந்த ஆண்டு 2006–ல் "கனெக்ட் 2006" செப்டம்பர் 8 முதல் 10 ஆம் தேதி வரை மிகப் பெரிய அளவில் நடத்தப்படவுள்ளது. தேசிய மற்றும் சர்வதேசப் பிரதிநிதிகள் பெருமளவில் இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்வார்கள் என்றும் எதிர்பாக்கப்படுகிறது.

தகவல் தொழில்நுட்பவியல் துறையின் மானியக் கோரிக்கையில் தகவல் தொழில்நுட்பவியல் வளர்ச்சிப் பணிக்காக ரூ.1.25 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## தகவல் தொழில்நுட்பவியல் தொழிலுக்கான சலுகைகள்

தகவல் தொழில்நுட்பவியல் பூங்காக்களை மேம்படுத்தும் தனியார் நிறுவனங்களுக்கு அவர்கள் செலுத்திய முத்திரைத் தாள் கட்டணத்தைத் திருப்பிக் கொடுப்பதற்காக, இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 3 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பன்னாட்டு மற்றும் தேசிய நிகழ்ச்சிகளில் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் பங்கு கொள்வதை ஊக்குவிப்பதற்காக அரசு ரூ.1 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

## தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பு (TNSWAN)

பொது மற்றும் தனியார் தகவல் தொடர்பு வழங்கு நிறுவனங்கள் மூலமாக அளிக்கப்படும் 2 Mbps திறன் கொண்ட அலைக்கற்றையைப் பயன்படுத்தி தமிழக அரசும், இந்திய அரசும் இணைந்து அமைத்துள்ள தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பு (TNSWAN) மூலமாக, 30 மாவட்டத் தலைமை அலுவலகங்கள், கோட்டத் தலைமை அலுவலகங்கள், வட்டத் தலைமை அலுவலகங்கள் மற்றும் வட்டாரத் தலைமை அலுவலகங்கள் ஆகியவற்றுடன் மாநிலத் தலைநகரமான சென்னையை இணைக்கின்ற பணி செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டம் டிசம்பர் 2006–க்குள் நிறைவேற்றப்படும். இத்திட்டத்திற்காக அரசு ரூ.12 கோடி ஒதுக்கியுள்ளது.

[2006 ஆகஸ்ட் 23

**திறன் உருவாக்கம்**

தெரிவு செய்யப்பட்ட அரசுத் துறைகளில் மின் ஆளுமையை அறிமுகப்படுத்த, இந்திய அரசு தேசிய மின் ஆளுமைச் செயல் திட்டம் (NeGAP) என்ற பெயரில் ஒரு திட்டத்தை அறிவித்துள்ளது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக மாநில அரசுகள் மாநில அளவில் செயல்படுத்தியுள்ள மின் ஆளுமைத் திட்டங்களின் திறனை மேம்படுத்துவதற்கு உரிய உதவியை வழங்கும். இத்திட்டம் மத்திய அரசின் உதவியோடு செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்திற்காக அரசு ரூ.13.95 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

**மின் ஆளுமை இயக்ககம்**

தமிழ்நாட்டை, நாட்டின் முன்மாதிரி 'மின் ஆளுமை மாநிலம்' என்று உருவாக்கவும், குடிமக்களுக்குத் தேவையான சேவைகளை எளிமையாகவும், சுலபமாக அடையக்கூடிய வழிகளில் வழங்கவும் புதிய சகாப்தமான எணினி ஆளுமை (Digital Governance) அறிமுகம் செய்து மின் ஆளுமையில் திறனை உருவாக்க தமிழக அரசு உறுதி பூண்டுள்ளது. இதற்காக, "மின் ஆளுமை இயக்ககம்" என்ற அமைப்பை உருவாக்குவதற்கு இந்திய ஆட்சிப் பணி நிலையில் ஓர் அலுவலர், "சிறப்புப் பணி அலுவலராக" நியமிக்கப்பட்டுள்ளார். இதற்காக ரூ.26 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மின் ஆளுமை இயக்ககம், அரசுத் துறைகள், குடிமக்களுக்கு வழங்கும் சேவைகளைப் பொறுப்பாகவும், வெளிப்படையாகவும், திறமையாகவும் வழங்கிட உதவி செய்யும். இவ்வகையில், முதற்படியாகக் கீழே குறிப்பிட்டுள்ள 12 துறைகள் தெரிவு செய்யப்பட்டு உள்ளன:

(1) நில ஆவணங்கள்
(2) வணிக வரி
(3) பதிவுத் துறை
(4) வேளாண்மை
(5) உணவு, குடிமைப்பொருள் வழங்கல்
(6) சுகாதாரம்
(7) ஊராட்சிகள்
(8) கல்வி
(9) கருவூலங்கள்
(10) நகராட்சிகள்
(11) போக்குவரத்து
(12) வேலைவாய்ப்பு



2006 ஆகஸ்ட் 23]

மேற்குறிப்பிட்டுள்ள துறைகளின் சேவைகள் பொதுமக்களை விரைவில் சென்றடையும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

எணினிப் புரட்சியினால் (Digital Divide) நகர்ப்புறம் மற்றும் ஊரகப் பகுதிகளில் வசிக்கும் மக்களின் இடையே ஓர் இடைவெளி ஏற்பட்டுள்ளது இந்த இடைவெளியைச் சரி செய்யவும் கிராமப்புற மக்களுக்கு வலிமை சேர்க்கவும் தமிழக அரசு ஒவ்வொரு ஊராட்சியிலும் கிராமப்புற தகவல் மற்றும் சேவை மையங்களை (Village Resources and Service Centre - VRSC) அமைக்க முடிவு எடுத்துள்ளது. இதனால், பலதரப்பட்ட இடங்களில் வாழும் குடிமக்களின் அலைக்கழிப்புகள் குறைக்கப்பட்டு அவர்களுடைய பொன்னான நேரம் வீணாவதைத் தடுக்க முடியும். குறைகள் பற்றிய தகவல்கள் பெறுவது, செயல்முறைகள் மற்றும் சேவை வழங்குதல் ஆகியவற்றைக் குறிப்பிட்ட காலத்திற்குள் வழங்குவதற்கு இத்திட்டம் உறுதி செய்யும். இந்தச் சேவை மையங்கள் பல்வேறு துறைகள் மூலம் வழங்கப்படும் அரசின் சேவைகள் சாதாரண மக்களையும் வீடு தேடிச் சென்றடையும் வாய்ப்பை அதிகரிக்கச் செய்யும்.

தமிழக அரசின் கிராமப்புறத் தகவல் மற்றும் சேவை மையங்களின் நோக்கம், ஊராட்சி மன்றங்கள் அரசுச் சேவைகளை வழங்கும் ஒரு மையமாகவும், தகவல் மற்றும் சேவை மையங்களாகச் செயல்படவும் செய்வதற்கு, ஓர் உந்து சக்தியாக விளங்க வேண்டும் என்பதாகும். மேலும், தகவல் மையங்கள் (Kiosks) நடத்தும் சுய உதவிக் குழுக்களுக்குத் தேவையான நிதி, தொழில்நுட்பம், பயிற்சி மற்றும் ஆதரவு அளித்து அவை வளர்ச்சி பெறவும் தாக்குப்பிடிக்கும் நிலையை அடையவும் செய்வதே இதன் நோக்கமாகும்.

மின் ஆளுமையை, மாநிலம் முழுவதும் அனைத்துத் துறைகளிலும் சென்றடையச் செய்வதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மாநில அரசு எடுப்பதன்மூலம் தங்கு தடையற்ற, வெளிப்படையான, திறமையான சேவையை நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களில் உள்ள சாதாரண மனிதனுக்கும் வழங்க இயலும்.

**தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்)**

தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்), 1977 ஆம் ஆண்டு தமிழக அரசுக்கு முழுவதும் சொந்தமான ஒரு நிறுவனமாக நிறுவப்பட்டு, தகவல் தொழில்நுட்பவியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசுக்கு ஓர் அங்கமாக இருந்து தகவல் தொழில்நுட்பவியல்/தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைத் துறைகளில் முதலீட்டாளர்களை இணைக்கும் ஒரு வழித்தடமாகச் செயல்பட்டு வருகிறது.

## திட்டச் செயலாக்கம்

### ஓட்டுநர் உரிம அட்டை

மாநிலத்திலுள்ள 86 மையங்களிலும் ஓட்டுநர்களுக்குக் கண்ணாடி உறையிட்ட (Laminated) உரிம அட்டை கணினிமூலம் தயாரித்து வழங்கும் பணியைப் போக்குவரத்துத் துறை, எல்காட் நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது. இந்த ஆண்டு கூடுதல் பணியாளர்கள் அமர்த்தப்பட்டுக் கூடுதலாகக் கணினி வன்பொருளும் வழங்கப்பட்டு இத்திட்டம் தொடர்ந்து நடைபெறும்.

### அரசு மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் கணினிக் கல்வி

1197 அரசு மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளில் கணினிக் கல்வித் திட்டத்தைச் செயல்படுத்தும் பணியினை, அரசு, எல்காட் நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது. மேலும், 60 அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலும், 5 சட்டக் கல்லூரிகளிலும், 12 மருத்துவக் கல்லூரிகளிலும் கணினிக் கல்வித் திட்டத்தைச் செயல்படுத்தும் பணியினையும், அரசு எல்காட் நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது. அனைத்துப் பள்ளிகளுக்கும் பல்வேறு கட்டங்களில் வரும் மூன்று ஆண்டுகளில் கணினி வழங்கப்படும் என்று ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

### கணினிமயமாகும் பத்திரப் பதிவுத் துறை

பதிவுத் துறையின்கீழுள்ள 475 மாவட்ட சார்பதிவாளர் அலுவலகங்களைக் கணினிமயமாக்கும் திட்டத்தை, அரசு எல்காட் நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது. மேம்படுத்தப்பட்ட வன்பொருள்களைக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்துடன் பல்வேறு துறைகளைக் கணினிமயமாக்கல், வசதி மேலாண்மை அளித்தல், தரவு பதிவு செய்தல் மற்றும் பயிற்சி ஆகிய பணிகளையும் எல்காட் நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

### கொள்முதல் மற்றும் சேவைகள்

அரசுத் துறைகள், பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் அரசுச் சார்பு நிறுவனங்கள் ஆகியவற்றிற்குத் தேவையான தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த பொருட்களைக் கொள்முதல் செய்து வழங்கும் முகமையாக எல்காட் செயல்படுகிறது. 2005–2006 ஆம் ஆண்டில் எல்காட் நிறுவனம் ரூ. 55.32 கோடி தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பொருட்களைக் கொள்முதல் செய்துள்ளது. வாடிக்கையாளர்களின் வன்பொருள் மற்றும் மென்பொருள் குறித்த புகார்களை அவ்வப்பொழுது கேட்டறிந்து, அவற்றைச் சரிசெய்வதற்கு உடனடி ஆலோசனை வழங்க அழைப்பு மையம் (Call Centre) ஒன்றை எல்காட் நிறுவனம், எல்காட் அலுவலகத்தில் அமைத்துள்ளது. வெளிப்படையான மற்றும் திறமையான சேவைகளை அரசுத் துறைகளுக்கு வழங்குவதை உறுதி செய்யும் வகையில் நடைமுறைகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.





திறந்த வெளி ஆதாரச் சூழலின்கீழ் (Open Source Environment) அரசுத் துறைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய, செயல்பாட்டு மென்பொருள் (Application Software) மற்றும் அடிப்படைத் தரவு ஆதரவு மையம் (Database Support Centre) என்ற அமைப்பை ஒரு நவீன முயற்சியாக எல்காட் அமைத்துள்ளது. இம்மையம், அழைப்பு மையம் ஒன்றையும் அமைத்து தகவல் தொழில்நுட்பவியல் உதவிகளை அரசுத் துறைகளுக்கும் கிராமப்புறத் தகவல் மற்றும் சேவை மையங்களுக்கும் வழங்கும்.

### தமிழ் இணையப் பல்கலைக்கழகம்

தமிழக அரசு, உலகுதழுவி வாழும் தமிழரும், தமிழ் ஆர்வலரும், இணையதளம் வாயிலாகத் தமிழ் மொழியைக் கற்கவும், இலக்கியம், பண்பாடு, கலை, வரலாறு ஆகியவற்றை அறிந்துகொள்ளவும் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் எனும் அமைப்பை நிறுவியது. இத்தகைய அமைப்பு, இந்தியாவில் வேறு எந்த மொழியிலும் இல்லாததோடு, ஒரு தனித்தன்மை உடையதுமாகும். தமிழ் இணையப் பல்கலைக்கழகம், அடிப்படை, இடைநிலை, மேல்நிலை என்ற 3 நிலைகளில் அமைந்த சான்றிதழ்க் கல்வியையும் தமிழ் இளநிலைப் பட்டப் படிப்பையும், வழங்குகிறது. இதுவரையிலும் 12.62 இலட்சம் பேர் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் இணையதளத்தைப் பார்வையிட்டுள்ளனர். 58 நாடுகளைச் சேர்ந்த 2,249 மாணவர்கள் சான்றிதழ் படிப்பிற்கும், 2,613 மாணவர்கள் தமிழ் இளநிலைப் பட்டப் படிப்பிற்கும் பதிவு செய்துள்ளனர். இதற்கென 12 நாடுகளில் 16 ஒருங்கிணைப்பு மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

### மின்வழிக் கல்விக்கான உள்கட்டமைப்பு

இணையவழிக் கல்வித் திட்டத்தில் கற்பித்தல் மற்றும் கற்றலுக்காகப் பயன்படுத்தப்படும் நெறிமுறைகள், ஒலி, ஒளி முதலிய பல்வேறு வகையான ஊடகங்களின் வாயிலாக வழங்கப்படுகின்றன. இணையதள வாயிலான கல்வியை மேலும் வலுப்படுத்துவதற்காகவும், விரிவுபடுத்துவதற்காகவும்

[2006 ஆகஸ்ட் 23

இணைய தொடரோட்டத்துடன், இணையவழி ஒளிப்பட உரையாடலுக்குரிய கருவிகளுடன்கூடிய இணைய வகுப்பறை, தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்டுள்ளது.

**கல்வித் தொடர்பு மையங்கள்**

ஏற்கெனவே, அமெரிக்கா, இலங்கை, மலேசியா, மொரீஷியஸ், கனடா, ஜெர்மனி, சுவிட்சர்லாந்து மற்றும் ரீயூனியன் ஆகிய நாடுகளில் நிறுவப்பட்டுள்ள கல்வித் தொடர்பு மையங்களுடன், மேலும், ஆஸ்திரேலியா, பிரான்ஸ், மியான்மர் மற்றும் தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளில், இவ்வாண்டு தொடங்கப்பட்ட நான்கு தொடர்பு மையங்கள், ஆஸ்திரேலியாவின் தமிழ் இணையவழிக் கல்வி, கலை மற்றும் இலக்கியக் கழகம், தென் இந்தியக் கல்விக் குழு பிரான்ஸ், சோழிய இஸ்லாமிய மத அறக்கட்டளை - மியான்மர், தென்னாப்பிரிக்காவிலுள்ள இராமமூர்த்தி தமிழ் பிரச்சார மையம் ஆகியவற்றுடன் ஒருங்கிணைக்கப்பெற்று செயல்பட்டு வருகின்றன. நடப்பாண்டில், மேலும் 3 கல்வித் தொடர்பு மையங்களை நிறுவுவதோடு உலகம் முழுவதும் கல்வித் தொடர்பு மையங்கள் நிறுவவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**கல்வித் திட்டங்கள்**

இணையதளம் வாயிலான கல்வித் திட்டங்கள், உலகின் பல்வேறு நாடுகளில் உள்ள தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் தொடர்பு மையங்கள்மூலமாகத் தமிழில் சான்றிதழ் மற்றும் பட்டப் படிப்புக்கான தேர்வுகளை நடத்தும் அளவுக்கு முன்னேற்றம் அடைந்துள்ளன. பல்வேறு நாடுகளிலுள்ள மாணவர்கள் சான்றிதழ் கல்வித் திட்டத்தின் நிலை 1 மற்றும் நிலை 2 படிப்புகளை வெற்றிகரமாக முடித்துள்ளனர். மேலும் நிலை–1 மற்றும் நிலை–2 ஆகிய படிப்புகளில் சேர, அமெரிக்காவில் இருந்து மேலும் பல மாணவர்கள் பதிவு செய்துள்ளனர்.

இளங்கலை (தமிழியல்) பட்டப் படிப்பு, பட்டயம், மேற்பட்டயம் மற்றும் பட்டம் என்ற மூன்று நிலைகளாக வழங்கப்படுகிறது. பட்டயப் படிப்புக்கான பாடங்கள் அனைத்தும் இணையதளத்தில் இடப்பட்டு, தேர்வுகள் நடத்தப்பட்டுள்ளன. இலங்கையிலிருந்து 56 மாணவர்கள் பட்டயத் தேர்வை வெற்றிகரமாக முடித்துள்ளனர். அவர்களுக்கு தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தால் பட்டயச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 98 மாணவர்கள் 2006 சனவரி மாதத்தில் பட்டயப் படிப்புத் தேர்வும் எழுதியுள்ளனர். மேற்பட்டயப் படிப்புக்கான இணையதள வழிப் பாடங்கள் முழுவதும் முடிக்கப்பட்டுள்ளன.



2006 ஆகஸ்ட் 23]

49 மாணவர்கள் மேற் பட்டயப் படிப்பின் முதற்பருவத் தேர்வினை எழுதியுள்ளனர். மேலும் வருகின்ற 2007–2008 ஆம் ஆண்டில், தமிழ் முதுகலைப் பட்டத்தின் பாடத் திட்டத்தினை அறிமுகப்படுத்த தமிழ் இணையப் பல்கலைக்கழகம் திட்டமிட்டுள்ளது.

தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் இந்திராகாந்தி திறந்தவெளிப் பல்கலைக்கழகத்தின் பாடங்களையும் பயன்படுத்திக்கொள்ளும் பொருட்டு, கூட்டு ஒப்பந்தம் ஒன்றில் 11–3–2004 அன்று கையெழுத்திட்டுள்ளது. இது இந்தக் கல்வி ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும்.

**மின் நூலகம் (Digital Library)**

தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் மின் நூலகம், தமிழ் இலக்கியத்தின் சிறந்த நூல்களின் தொகுப்புக் களஞ்சியமாகத் திகழ்கிறது. தமிழரின் பண்பாடு, வரலாறு, பாரம்பரியம் ஆகியவற்றை அறிந்துகொள்வதற்குரிய வாயிலாகவும் அமைந்துள்ளது. இதில் பெருமளவில் தமிழ் நூல்கள் இடம் பெற்றுள்ளன. மொத்தம் 90,000 பக்கங்கள் மின் நூலகத்தில் இடம் பெற்றுள்ளன. இந்த ஆண்டு, மேலும் 10,000 பக்கங்கள் சேர்க்கப்படும்.

**தமிழ் மென்பொருள் வளர்ச்சி நிதி**

தமிழக அரசு, தமிழ் மென்பொருள் வளர்ச்சிக்கான முயற்சிகளில் தளராத ஆர்வம் கொண்டுள்ளதால், இந்த உயர் நோக்கத்தைச் செயல்படுத்தத் தேவையான அளவு, நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. தமிழ்க் கணினி மென்பொருள் வளர்ச்சி நிதியின்கீழ் மானியம் வழங்குவதால் ஏராளமான தமிழ்க் கணினி மென்பொருள் பொதிகள் (Packages) உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், 3 திட்டங்கள் நிதி உதவி வழங்க பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

தமிழ்க் கணினி மற்றும் தமிழ்த் தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சிக்கான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு முயற்சிகளாக, அரசு, தமிழ் மென்பொருள் வளர்ச்சியை மேலும் விரிவுபடுத்தும்.

**தமிழ்க் குறியீட்டை முறைப்படுத்தித் (Encoding) தரப்படுத்தலும் சான்றளித்தலும்**

தமிழ்க் கணினியியலை மேலும் வளர்க்கவும், அலுவலகங்களில் கோப்புகளிலுள்ள விவரங்கள் மற்றும் திட்டங்களைத் தடையின்றித்

[2006 ஆகஸ்ட் 23

தாராளமாகப் பயன்படுத்திப் பயன்பெறவும், தமிழ் 99 மற்றும் தட்டச்சுப் பொறி விசைப் பலகைகளையும், TAB மற்றும் TAM தமிழ் எழுத்துக் குறியீடுகளையும் தமிழ்நாடு அரசு தரப்படுத்தி உள்ளது. இதற்குரிய தகுதிச் சான்றுகளைத் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் வழங்கி வருகிறது. இதுவரை 13 மென்பொருள்கள் சோதனை செய்யப்பட்டுச் சான்றளிக்கப்பட்டுள்ளன.

## தமிழ் எழுத்துகளின் வரிசை ஆக்க முறையைத் தரப்படுத்தல்

தமிழ்க் கணினியும், தமிழ்த் தகவல் தொழில்நுட்பமும் மிகுதியாகவும் அடிக்கடியும் பயன்படுத்தப்பட்டுவரும் இக்காலக்கட்டத்தில், தேடல் செயல்பாட்டில் சொற்களை மிக எளிதாகக் கண்டுபிடிப்பதற்கு வசதியாகத் தமிழ்த் தரவுகளை நிரல்படத் தொகுக்க வேண்டியது அவசியமாகிறது. இத்தகைய தரவுகள், உபயோகப்படுத்தப்படும் அனைத்துக் கணினி மென்பொருள் திட்டங்களுக்கும் கோப்புகளுக்கும் ஒரே மாதிரியானதாகவும் தரமுடையதாகவும் இருத்தல் வேண்டும். தமிழ் இணையப் பல்கலைக்கழகம் மிக விரிவான விவாதத்திற்குப் பின்னர், தமிழ்ப் பனுவலுக்கான ஒரு சிறந்த, தெளிவான, முழுமையான ஆக்க முறையைப் பரிந்துரைத்துள்ளது.

## புதிய திட்டங்கள்

### 1. தமிழ் எழுத்துருக்கள் கொள்முதல்

மாநிலம் முழுவதுமுள்ள அரசு அலுவலகங்களில் உள்ள கணினிகளில் பலவகையான தமிழ் எழுத்துருக்கள் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. காப்புரிமை பெற்றுள்ள எழுத்துரு மென்பொருளைப் பயன்படுத்துவதனால், அதனை உபயோகப்படுத்தும் ஒவ்வொரு கணினிக்கும் கட்டணம் செலுத்த வேண்டும். இதற்குப் பெருந்தொகை செலவாகும். அரசு அலுவலகங்களில் ஒரே மாதிரியான தமிழ் எழுத்துருக்களை உபயோகப்படுத்தும்பொருட்டு, எல்லா அலுவலகங்களிலும் உபயோகப்படுத்த எழுத்துருக்களின் ஒரு தொகுப்பைத் தகவல் தொழில்நுட்பவியல் துறை விலைக்கு வாங்கி ஒவ்வொரு துறைத் தலைவர்களுக்கும் அலுவலக உபயோகத்திற்காகக் கட்டணம் ஏதுமின்றி வழங்கும். எனவே, இச்செலவினத்திற்காக 2006–2007 ஆம் ஆண்டில் ரூ.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



2006 ஆகஸ்ட் 23]

### 2. மின் ஆளுமை பயிற்சிக் கழகம்

பல்வேறு துறைகளின் அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும் பயிற்சியளிப்பதற்காக மின் ஆளுமை பயிற்சிக் கழகம் ஒன்றை நிறுவ, அரசு முடிவெடுத்துள்ளது. எனவே, இச்செலவினத்திற்காக 2006–2007 ஆம் ஆண்டில் ரூ.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3. அரசு அலுவலர்களுக்கு மின் ஆளுமை பயிற்சி

அரசு மின்ஆளுமைக்குப் பெரும் முக்கியத்துவம் அளிக்கிறது. இதற்கு அலுவலர்களின் திறனை மேலும் வளர்க்க வேண்டியுள்ளது. அரசு அலுவலர்களுக்கும் பணியாளர்களுக்கும் அரசும் தனியாரும் பங்கேற்கும் முறையில் (Public-Private Partnership Model) மின்ஆளுமைப் பயிற்சியளிக்க 2006–2007 ஆம் ஆண்டில் ரூ.10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4. மடிக் கணினி வழங்குதல் (Laptop)

மின் ஆளுமைத் திட்டம், தமிழக அரசினால் மிகத் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் நன்கு பிரபலமடைய வேண்டுவதும் கணினியைத் தீவிரமாக உபயோகிக்க வேண்டுவதும் அவசியம். இவ்வழிமுறைகளில் அரசுச் செயலாளர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர்கள் சிறந்த முன்னோடிகளாக விளங்குகிறார்கள். மிக முக்கிய மற்றும் இரகசிய தகவல்களைக் கையாள்வதுடன் அவர்கள் அலுவல் நேரத்திற்குப் பின்னரும்கூட பணிபுரிய வேண்டியுள்ளதனால், இவர்கட்கு மடிக் கணினி தேவை. எனவே, மடிக் கணினி வழங்குவதற்காக 2006–2007 ஆம் ஆண்டில் ரூ.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5. மின் ஆளுமை சங்கம் துவக்க பண உதவி

தகவல் பரிமாற்றத் தொழில்நுட்பவியல் கொள்கை மற்றும் திட்டமிடல் குறித்த அரசின் முயற்சிகளுக்கான பிரத்யேக சேவை மற்றும் அரசுத் திட்டங்களின் வளர்ச்சிக்கென "மின் ஆளுமை இயக்ககம்" நிறுவுவதற்காகச் சிறப்புப் பணி அலுவலர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். மின் ஆளுமையின் செயற்பாடுகளை மேம்படுத்தவும், ஊக்குவிக்கவும், ஒரு தன்னாட்சிபெற்ற சங்க அமைப்பை நிறுவ அரசு கருதியுள்ளது. இச்சங்கத்தை நிறுவ, துவக்கப் பண உதவியாக புதிய தலைப்பின்கீழ் 2006–2007 ஆம் ஆண்டில் ரூ.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2006 ஆகஸ்ட் 23

**6. தமிழ்நாட்டின் பண்பாட்டுத் தன்மையை விவரிப்பதற்கான ஒளி—ஒலி காட்சியகம்**

தமிழ் இணையப் பல்கலைக்கழகம், இணையத்தின் வழி தமிழ் கற்பிக்கும்பொருட்டு, நல்ல தரமான பாடங்களை இணையதளத்திலிட்டுள்ளது. மேலும் தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளான இசை, நாடகம், நாட்டியம் கிராமப்புறக் கலைகள் மற்றும் நாட்டின் பிற கலைகள் பற்றிய ஒளி, ஒலியுடன்கூடிய பண்பாட்டுக் காட்சியகம் ஒன்றினைக் காட்சியாக இணையத்தில் வழங்க உள்ளது. இதனால் விருப்பமுடையோர் தமிழ்நாட்டின் பல்வேறு கலை மற்றும் பண்பாட்டுக் கூறுகளை இணையதளத்தில் கண்டு மகிழலாம். இதன்மூலம் தமிழ் மற்றும் தமிழ்நாட்டைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் தமிழைக் கற்கும் ஆர்வத்தையும் அவர்களுக்கு ஏற்படுத்தும். எனவே, 2006–2007 ஆம் ஆண்டில் இதற்கென ரூ.15 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**7. தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தைப் பரவலாக்கும் திட்டம்**

தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் மூலமாக, தமிழை உலகளாவிய நிலையில் பரப்புவதற்காகவும் மேலும் பிரபலப்படுத்தும் நோக்கிலும் பிரபல மாத இதழ்கள் மற்றும் பத்திரிகைகளிலும் இணையதளம் மூலமும் விளம்பரம் மற்றும் அறிவிப்புகள் தரவேண்டியது தேவைப்படுகிறது. மேலும், இந்தியாவிலுள்ள மும்பாய், கொல்கத்தா, தில்லி போன்ற முக்கிய பெருநகரங்களில் தமிழ்ப் பயிலரங்குகள் நடத்துவதும் அவசியம். எனவே, 2006–2007 ஆம் ஆண்டில் ரூ.10 இலட்சம் இதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**8. ஓலைச் சுவடிகளைக் கணினியாக்கப்படுத்துதல் மற்றும் அட்டவணைப்படுத்துதல்**

இந்தியா முழுவதிலுமுள்ள பல்வேறு நூலகங்களில், பழங்கால சிறந்த அறிஞர்களால் எழுதப்பெற்ற பனை ஓலைச் சுவடிகள் ஏராளமாக உள்ளன. அவற்றில் வரலாற்று நிகழ்வுகள் மட்டுமின்றி பண்பாடு, பாரம்பரியம் மற்றும் மருத்துவம் சார்ந்த நுண்மையான தகவல்கள் அடங்கியுள்ளன. பொதுமக்கள் நலனுக்காக இச்சுவடிகளை அட்டவணைப்படுத்தி மற்றும் கணினியாக்கப்படுத்தி மின்வடிவத்தில் மக்களுக்குக் கிடைக்கச் செய்யும்வகையில், உரிய நடவடிக்கை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. எனவே, 2006–2007 ஆம் ஆண்டில் ரூ.5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



2006 ஆகஸ்ட் 23]

**9. தமிழ்க் கலை மற்றும் பண்பாட்டினைப் பல் ஊடகக் குறுந்தகட்டில் உருவாக்குதல் மற்றும் வெளியிடுதல்**

தமிழ் இணையப் பல்கலைக்கழகம், தமிழகத்தின் கட்டடக் கலை மற்றும் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் சிறந்த ஒலி ஒளிக் காட்சியகத்தைக் கொண்டுள்ளது. கிறித்தவ ஆலயங்கள் மற்றும் இசுலாமியப் பள்ளி வாசல்களும் இக்கட்டடக் கலையைப் பின்பற்றிக் கட்டப்பட்டுள்ளன. இவற்றையும் உட்படுத்தி மேலும் பல ஒலி, ஒளிக் காட்சிகள் தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இவை அனைத்தும் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் வலைத்தளத்தில் இடம்பெறுவதுடன் குறுந்தகடுகளிலும் தயாரிக்கப்பட்டு வெளியிடப்படவுள்ளன. எனவே, 2006–2007 ஆம் ஆண்டில் ரூ.5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முதலீட்டாளர்கள் ஆர்வத்துடன் வந்து முதலீடு செய்ய உகந்த இடமாக இம்மாநிலத்தை மாற்றவும், அதன்மூலம் இதற்கு முன்னர் எப்போதும் இல்லாத வகையில் பொருளாதார வளர்ச்சி காணவும், தமிழ்நாடு அரசு உறுதி பூண்டிருக்கிறது; அதேநேரத்தில், இந்தத் துறையைப் பொருளாதார வளர்ச்சிக்கும் ஊரகப் பகுதிகளின் மாற்றத்திற்கும் உரிய பெரும் உந்து சக்தியாகப் பயன்படுத்தவும் உறுதி மேற்கொண்டிருக்கிறது. கணினிப் புரட்சியின் வளர்ச்சி, சாதாரண குடிமக்களின் வாழ்க்கையில் வெளிப்படையான மாற்றத்தை உருவாக்கினாலன்றி, அது தன் முழு வளர்ச்சியை அடைந்ததாகக்கொள்ள இயலாது. இந்த இலக்கை எய்துவதே அரசின் நோக்கமாகும்.

———

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227430